

சங்க காலக் கொங்கு நாடு

புலவர் டாக்டர்.
இரா. வடிவேலன்

சங்க காலம் தொட்டு
கொங்கு நாட்டின் வரலாற்றை
விளக்கும் அற்புதமான நூல்

சங்க காலக் கொங்கு நாடு

புலவர், டாக்டர்
இரா. வடிவேலன்
எம்.ஏ., எம்.எட்., டி.லிட்.,

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை
சென்னை - 600 014.

நூல் விவரம்

நூல் தலைப்பு	:	**சங்க காலக் கொங்கு நாடு**
ஆசிரியர்	:	புலவர், டாக்டர் இரா. வடிவேலன், எம்.ஏ., எம்.எட்., டி.லிட்.
முதற் பதிப்பு	:	மே, 2001
நூலின் அளவு	:	**1 x 8** கிரவுன்
தாள்	:	11.6 சேஷசாயி வெள்ளைத்தாள்
பைண்டிங்	:	சாதா அட்டை பைண்டிங்
மொழி	:	தமிழ்
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	:	296
நூல் வெளியிடுவோர் & பதிப்புரிமை	:	அருணோதயம் 5/3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை சென்னை - 600 014.

விலை: ரூ.80.00

ஒளிஅச்சு	:	நம் பிராசஸ், போன்: 4331808
அச்சிட்டோர்	:	சேகர் ஆப்செட் பிரஸ் சென்னை-5.

அணிந்துரை

கயிலை மாமுனிவர்
தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
பேரூர் ஆதீனம், பேரூர், கோவை - 10

சாந்தலிங்கர் தாள் மலர் வாழ்க

நாட்டின் தொன்மைக்கும் வாழ்வியல் நெறிக்கும் வாய்ப்பாக விளங்குவன இலக்கியங்கள். தமிழகத்தின் தொன்மையை உணர்வதற்குச் சங்க இலக்கியங்கள் இலக்கணங்கள் துணை புரியும். மேலும் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொன்மைச் சின்னங்கள் பலவும் துணை நிற்பன. சங்கப் பாடல்கள் முதற் சங்கம் முதல் மூன்றாம் சங்கம் வரை வாழ்ந்த புலவர்களால் பாடப்பட்டவை. நயத்தக்க நாகரீக வாழ்வின் சிறப்புக்களை அப்பாடல்கள் மூலம் அறிகிறோம். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்களையும், வானுறையும் தெய்வத்துள் வயவன் ஏவா வான ஊர்தியில் சேர்ந்தவர்களையும் பற்றிய அரிய செய்திகளின் தாக்கத்தை அப்பாடல்களால் அறிகிறோம்.

அகப் பொருள், புறப் பொருள்களுடன், அருளிய லுக்குரிய பற்றற்ற உயர் வாழ்வு பற்றியும் சங்கப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

சங்கப் பாடல்களைப் பாடிய புலவர்கள், புரவலர்கள் பலர் கொங்கு நாட்டில் வாழ்ந்தவர்கள் என்பதை இந்நூலில் வகுத்து, வகைப்படுத்தியுள்ளார் முனைவர் திரு. இரா.வடிவேலன்.

கொங்கு நாட்டின் மேற்கு மலைத் தொடரில் குகை ஓவியங்கள், காலங் கடந்த தொன்மைக்கு எடுத்துக்காட்டு! கொடுமணல், முட்டம் ஆகிய அகழாய்வுகள் மக்கள் வளத்தோடு வாழ்ந்த நிலைக்கு அடையாளங்கள். இவை பற்றிய ஆய்வுகள் நடைபெற்றால் தொன்மையின் அரிய செய்திகள் கிடைக்கும். கொங்குநாடு சான்றோர் நெறி பேணிய பெரும் சிறப்புடையது என்பதை,

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆய்அலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்றவன் கைவண் மையே.

என்ற பாடல் ஆழ்ந்துரை செய்ய வேண்டிய ஒன்று!

திரு பாவலர், முனைவர் இரா. வடிவேலன் சிறந்த சிந்தனையாளர். எழுத்தாற்றல் மிக்கவர். நாட்டு நடப்புக்களை உருவகப்படுத்தும் திறன் படைத்தவர். அறநெறியிலும், அருளியலிலும் தம்மை இணைத்துத் தமிழ்ப்பணி ஆற்றும் இவரது சிந்தனை மலர்கள் மணம் பரப்ப வாழ்த்துகிறோம்.

சாந்தலிங்க இராமசாமி அடிகளார்



புலவர், டாக்டர்

இரா. வடிவேலன்

கவிஞர் இரா. வடிவேலன் அவர்கள் ஈரோடு வட்டத்தைச் சார்ந்த பேரோடு என்னும் சிற்றூரில் பிறந்தவர்.

பிறந்த நாள்: 20.6.1936. தந்தை இராமசாமித் தூரனார், தாயார் மாராயம்மாள்.

இவர் 1957 முதல் தொடக்க, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராக 38 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

1995 சூனில் ஓய்வு பெறும் போது அவல்பூந்துறை அரசு மேனிலைப்பள்ளியில் தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்றார். இவர் தமிழகத் தமிழாசிரியர்

கழகத்தின் மாவட்டத் தலைவராக 15 ஆண்டுகளும், மாநிலத் துணைத் தலைவராக 5 ஆண்டுகளும் பணியாற்றியுள்ளார்.

இவர் தமிழக அரசின் நல்லாசிரியர் விருது (1994), நல்லாசிரியர் செம்மல் (1992) அரிமா சங்கப் பாராட்டு விருது (1994) கொங்குக் கவிஞர் கோ, கொங்கு மாகவிஞர், கொங்குக் கவிக்குரிசில், பாட்டுச்சுடர் போன்ற பட்டங்கள் பெற்றுள்ளார். இவரது நாவல், கவிதைகள், பல்கலைக்கழகம் தன்னாட்சிக் கல்லூரிகளில் பாட நூலாக வைக்கப்பட்டுள்ளன.

'புல்லாங்குழல்' - கவிதைத் தொகுதிக்கு சேலம் தேன்தமிழ் அறக்கட்டளைப் பரிசும்; 'தமிழக விடுதலை மறவன் தீரன் சின்னமலை' - கவிதை நாடக நூலுக்குத் தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் முதற் பரிசும் (ரூ.10,000) பெற்றுள்ளார்.

இதுவரை இவர் 7 கவிதைத் தொகுதிகளும், 7 நாவல்களும், 2 நாடகங்களும், 2 சிறுகதைத் தொகுதிகளும், 5 கட்டுரைத் தொகுப்புகளும், 3 இலக்கண விளக்க நூல்களுமாக 26 நூல்கள் எழுதியுள்ளார்.

இவர் 'அருள்நிதி'ப் பட்டம் வேதாத்திரி மகரிசி அவர்களால் பெற்றுள்ளார். (1993)

இவரது துணைவியார் திருமதி பார்வதி அம்மையார் அவர்கள். இவரும் ஆசிரியையாக இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

நல்ல எழுத்தாளர்; நல்ல பண்பாளர் என அறிஞர் பெருமக்களால் பாராட்டப் பெற்றவர்.

முன்னுரை

இந்நூல் வரலாற்றுக் களத்தில் மட்டுமல்ல. இலக்கியக் களத்திலும் இயன்ற நூலாகும். இந்த நூலினை எழுதுவதற்குக் காரணம், தமிழகத்தின் சங்க காலப் பனுவல்களில் நூற்றுக்கணக்கான புலவர் பெருமக்கள் வாழ்ந்து, தங்கள் படைப்புக்களைத் தந்தும், சங்கத் தொகை நூல்களில் சேர்த்தும், புகழ் பொறித்துச் சென்றுள்ளதை அறிகிறோம். அவர்கள் வழி அந்நாள் வாழ்ந்திருந்த புரவலர்கள், வேளிர்கள், குறுநில மன்னர்களையும் அறிகிறோம்.

இப் புலவர் பெருமக்கள் மதுரையில் மட்டுமல்ல. தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்றும் அரசர்களை அண்டியும், ஓரிடத்தில் நிலை கொள்ளாது தமிழேந்தியும், இசையும் கூத்தும் ஏந்தியும் சென்றவர்கள். கொடுத்தவரைப் போற்றியும், கொடுக்காதவரை 'வந்த நேரம் சரியில்லை போலும்' என்று வையாது கூறிச் சென்றிருக்கும் உளப்பாங்கையும் காண்கிறோம்.

அன்றைய தமிழகத்தின் பல நாட்டுப் பிரிவுகளிலும் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். 'சங்கப் பாட்டும் தொகையும்' இதை நமக்குத் தெள்ளெனக் காட்டுகின்றன.

இத்தகு புலவர்கள் பாண்டிய, சோழ, சேர நாடு, வேங்கட மலைச் சாரல் முதல் ஈழம் வரைப் பரவியிருந்திருக்கின்றனர். இவர்கள் அனைவரும் ஒரு காலத்தினர் அல்லர். சங்கப் பனுவல்களில் இடைக் கழகக் காலத்துப் புலவர்கள் பாடலும், கடைக் கழக இறுதிக் காலத்துப் புலவர்கள் பாடல்களும் உண்டு.

இவை பரந்து விரிந்து இருப்பதால் ஒரு பகுதியில் வாழ்ந்த புலவர்கள் பற்றி ஆய்வு செய்யலாம் என்பதோடு, தமிழகத்தின்

கொங்குப் பகுதியை மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

எவருக்கும் தன் 'சொந்த ஊர் சொந்த மண்' என்றால் மகிழ்ச்சி ஏற்படும். சொந்த நாடு என்பதும் அது போன்றதே.

'ஈதென் சொந்தவூர், ஈதென் பிறப்பிடம்'

எனத் தன்னுள்ளே எப்போ தாயினும்

உன்னுதற் கொண்ணா தன்னுணர் வில்லா

ஒருவனேனும் உயிருடன் உளனோ?

என்னும் தாமஸ் கிரேயின் பாடல் சொந்த ஊர்ப்பற்று, நாட்டுப் பற்றினைக் காட்டும். இது இயல்பான மக்கட் பண்பாடு.

'சொந்த ஊர்ப்பற்றுத் துறவிக்கும் உண்டு' என்பது பழமொழி யாயினும் அதில் நிறைந்த பொருள் உண்டு. எவ்வுயிரும் தாம் பிறந்த பிறப்பிடத்தை மறத்தலும் இல்லை; செல்லும் போது மகிழாமலும் இல்லை.

அவார் மொழியையும், அம்மொழி வழங்கும் சிறு பகுதியையும் ருஷ்ய நாட்டிற்குள் இருப்பினும் அதனையே பெருஞ்சிறப்பாகக் கருதுகிறான், 'அவார்' மொழிக் கவிஞன். ரசூல் கம்சதோவ். இதுபோல் மண் பற்றும், நாட்டுப்பற்றும் உள்ள கவிஞர்கள் மிகப் பலர்!

தமிழகத்தின் கொங்குப் பகுதியில் சங்க காலப் புலவர்கள் பாடிய பாக்களால் கொங்கு நாடரின் பெருமை, வளமை, உயர்வு, வள்ளன்மை முதலியவற்றை அறிந்து கொள்ளவும், அவைகளைத் தொகுப்பாகத் தந்தால் படிப்பார்க்குச் சுவையும், பயனும் ஏற்படும் என்பதாலும் இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

இதற்குத் தூண்டுகோலாக இருந்தது, பேராசிரியர் டாக்டர் கா. அரங்கசாமி (கோபி) அவர்கள் 'இந்தியப் பல்கலைக் கழகத்

தமிழாசிரியர் கருத்தரங்க (1993) மலரில் எழுதிய புலவர்களின் தொகுப்பேயாகும். மேலும் சங்கப் புலவர்களை ஆய்வு செய்து, கல்வெட்டறிஞர் புலவர், டாக்டர் செ.இராசு (ஈரோடு) அவர்களிடம் காட்டிப் பட்டியலைச் செப்பம் செய்து கொண்டேன்.

'தமிழ் நாட்டு வரலாறு' அண்மைக் காலத்தே அரசால் ஒரு பதிப்புக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் சில அறிஞர்கள் எழுதியுள்ளனர்.

தமிழகத்தில், பண்டை, தனியாட்சி நாடாக இருந்த 'கொங்கு நாட்டின் வரலாற்றை, முதன்முதலில் கோவைக்கிழார் சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் தான் பெரும் முயற்சியுடன் எழுதி வெளிக் கொணர்ந்தார். அதன்பின் மயிலையார், கா. அப்பா துரையார், டாக்டர் மா.இராசமாணிக்கனார், புலவர் குழந்தை யார், ய. லட்சுமிநாராயணன் போன்றவர்கள் எழுதியுள்ளனர். இவர்களுடையவையும், மற்ற அறிஞர்களுடைய மேற்கோள் களும் நூல் முழுக்கப் பரக்கக் காணலாம். அவர்களுக்கெல்லாம் என் நன்றி உரித்தாகும்.

கொங்கு மண் பற்றின் காரணமாக மட்டுமே இந்நூல் எழுதப்படவில்லை. மிகச் சில கற்றறிந்த பெருமக்களைத் தவிர இலட்சக் கணக்கானோர் 'கொங்கின்' சிறப்பை அறியாமலேயே உள்ளனர். அவர்கள் தங்கள் முன்னோரின் பெருமைகளை வீரங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பதனாலும் இந்நூல் வரையப்பட்டது.

இதில் தமிழகம், கொங்கு வரலாற்றுடன் புலவர்கள் கொங்கின் எந்தெந்த ஊரினர், பகுதியினர் என்பதையும் பாரி வள்ளல் கொங்கு நாட்டினர் என்பதையும் இதில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

அறிஞர்கள், ஐயங்களுக்கும், மறுப்புக்களுக்கும் எழுதுங்கள்; சேர்க்கப்படும்.

இந்நூலிற்கு சிறந்ததோர் அணிந்துரை அளித்த கயிலை மாமுனிவர் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களுக்கு மிக்க நன்றியுடையேன்.

இந்நூலை அழகிய முறையில் பதிப்பித்து வெளிக்கொணர்ந்த பெரியவர் அருணோதயம் அருணன் அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைக் கனிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

69. தியாகி குமரன் தெரு
ஈரோடு 638004.

அன்புள்ள
இரா. வடிவேலன்

பொருளடக்கம்

முதற் பகுதி

இரண்டாம் பகுதி

நான்காம் பகுதி

சங்க காலக் கொங்கு நாடு

முதற் பகுதி

பழந்தமிழ் நாடு

தமிழகம் பழைமையும் பெருமையும் சீர்மையும் புகழும் கொண்டது. வட எல்லையாகத் திருவேங்கட மலையும், தென் எல்லையாகக் குமரிக் கடலும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களை எல்லைகளாகவும் கொண்டு விளங்கி வந்தது.

இந்த நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட பெருநிலப் பரப்பே தமிழ் வழங்கும் நிலமாயிற்று! இங்கு வாழ்ந்த மக்கள் பேசிப் பயின்ற மொழி 'தமிழ்' என்று வழங்கப்பட்டது. அதனால்தான் இந்நிலப் பரப்பைத் 'தமிழ் கூறும் நல்லுலகம்' என்று சான்றோர்களும் ஆய்வாளர்களும் போற்றினர்.

தமிழ் மொழியைப் பேசியும், கருத்துப் பரிமாற்றக் கருவியாகவும் கொண்டு வாழ்ந்தவர்கள் தமிழர்கள், தமிழை வெறும் கருத்துப் பரிமாற்றத்துக்கு மட்டும் கொண்டு வாழ்ந்தவரல்லர் தமிழர்கள்! மொழியைக் கலை வளர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் பயன்படுத்தியதோடு மட்டுமல்ல. தம் மொழியைத் 'தெய்வத் தமிழ்' என்றும் 'ஒண் தீந்தமிழ்' என்றும், இன்னும் பலப்பல அடைமொழிகள் கொடுத்துத் தமிழைப் பரவிப் போற்றிப் புரந்து இருக்கிறார்கள்.[1]

மொழியின் பழைமையே ஓர் இனத்தின் பழைமைக் காட்டும் என்று மொழி நூல் அறிஞர்கள் கூறுவர்.[2] இதனைக் கல்வெட்டுத் தொல்லியல் ஆய்வாளர்களும் மெய்யென விளம்பியுள்ளனர்.

---

1. கா.சு.பிள்ளை- தமிழ் இலக்கிய வரலாறு, 2. கால்டுவெல், குண்டர்ட் - ஒப்பிலக்கணம்

உலகின் பழைமையான மொழிகள் நூற்றுக்கும் குறைவாகவே இருந்தன என்றும், அவற்றுள்ளும் வழக்கிழந்து இறந்துபட்ட மொழிகள் சில என்றும் மக்கள் பேச்சு வழக்கில் உள்ள மொழிகள் மிகச் சிலவே உள்ளன என்றும் மொழிநூல் அறிஞர்கள் வரையறுத்துள்ளார்கள்.[3]

இவைகளில் பல திருந்திய மொழிகள் என்றும், பல திருந்தா மொழிகள் என்றும் குறிப்பிடுகின்றனர்.

திருந்திய மொழிகள் தமிழ், சமசுக்கிருதம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம் போன்றவை என்றும்

திருந்தா மொழிகள் பல இருந்தன என்றும் பலவற்றைக் குறிப்பிடுவர்.[4]

திருந்திய மொழிகளாகவும், உலகில் இன்றும் மக்கள் வழக்கில் பேசப்பட்டு வருவதாகவும் குறிப்பிடும் மொழிகள் நம் செந்தமிழ், சீனம் மட்டுமே. மற்றும் திருந்திய மொழிகளாகக் கூறப்பட்டு, பேச்சு வழக்கற்ற மொழிகள் ஹீப்ரு என்னும் எபிரேயம், இலத்தீன், கிரேக்கம் என்னும் மூன்று மொழிகளாகும். மேலும் வடமொழி என்னும் சமசுக்கிருதம் எப்பொழுதும் மக்கள் பேச்சு வழக்கில் இருந்ததில்லை என்றும், அது பொதுமக்களை ஏய்க்கவும், அதிகார இனம் தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றத்துக்கான கருவிமொழியாக - மறைத்துப் பேசுவதற்குப் பயன்பட்ட - மறைமொழியாகவும் கொண்டிருந்தனர் என்றும் கூறுவர்.[5]

தமிழ், சீனம் ஆகியஇரண்டு திருந்திய செம்மொழிகளில், தமிழில் முப்பது எழுத்துக்களான உயிரும் மெய்யும் கொண்டே உயிர் மெய்யைத் தோற்றுவித்த இயற்கையோடு இயைந்த தன்மையை நுணுகி ஆய்ந்து மொழிச் செப்பம் கண்டனர்.

3.தேவநேயப் பாவாணர்,

4. கால்டுவெல் - ஒப்பிலக்கணம்

5. மறைமலை அடிகள் -தமிழ்ப் பண்பாடு நாகரீகம்

முற்காலத்தில் கோலெழுத்து, கண்ணெழுத்து, வட்டெழுத்து, சித்திர எழுத்து போன்ற பல எழுத்து வரி வடிவ வளர்ச்சில் தமிழ் காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டே வந்திருக்கிறது என்பதைக் காணும் பொழுது, இயங்கியல் மெய்யியல்படி, ஒரு மொழியின் படிநிலை வளர்ச்சியையும் நாம் அறிய முடிகிறது.

ஆனால் சீனம் இன்றும் இந்த அறிவியல் நூற்றாண்டிலும் 'சித்திர எழுத்து'க்களையே பயன்படுத்தி வருகிறது! கால முன்னேற்றத்துக்கு ஏற்ப அது எழுத்துக்களில் மாற்றம் பெறவில்லை.

'உலகம் ஊமையாய் உள்ளவக் காலையே
பலகலைப் பயன் பாங்குறத் தாங்கியே
இலகி நின்ற மொழி...தமிழ்'

என்று[6] பெரும் புலவரும், வரலாற்றுக் காப்பிய ஆசிரியருமான புலவர் குழந்தை அவர்கள் கூறுவார்கள்.

திருந்திய செப்பமுடைய மொழி தமிழாதலின், 'செம்மொழி' என்றும் தமிழைப் போற்றிப் புகழ்ந்தனர்.

தமிழ் மொழிந்து வாழ்ந்தோர் 'தமிழர்கள்' என்று அழைக்கப்பட்டனர். தமிழ்மொழி வழங்கிய மண் பரப்பையும் 'தமிழ்நாடு' என்று கூறினர். பண்டைக் காலத்தில் தமிழ்நாடு 'தமிழகம்' என்றே ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும் குறிக்கப்பட்டு வந்திருக்கிறது.[7] 'தண்டமிழ் வேலித் தமிழ்நாடு' என்பது பரிபாடல்.[8]

உலக அளவில் சிறந்த மொழிகள் பலவற்றுள்ளும் தனிச் சிறப்புக்குரியவை இவை இவை என்று கூறுவர். நம் தமிழ்மொழியின் சிறப்பே அதன் 'இனிமைத்' தன்மையாகும்.

6. புலவர் குழந்தை -இராவண காவியம் -மொழி வாழ்த்து. 7. 'இமிழ் கடல் வேலித் தமிழகம்' (பதிற்.2 பதிகம்). 8. 'தண்டமிழ் வேலித் தமிழ்நாடு (பரிபா. பிற்சேர்க்கை,

'இனிமையும் நீர்மையும் தமிழ் எனவாகும்' என்பது பிங்கல நிகண்டு.[9] தமிழ் பேசுவதற்கும், உரைப்பதற்கும் வல்லிய, மெல்லிய, இடையொலிகளைக் கொண்டு விளங்குகிறது. பிற சில மொழிகளைப் போல் உறழ்த்தும், கனைத்தும், முக்கியும், முனகியும் சொல்லப்பட வேண்டியதில்லை.

தமிழ் என்றாலே இனிமை என்ற ஒரு பொருளும் உண்டு. உலகின் மொழிகளில் பேசும்போதே ஒருவித இனிமை நல்கும் ஓசையுடன் விளங்குவது தமிழ் என்றே சப்பான் மொழியியல் அறிஞர் கவாசகி என்பவர் கூறுவார்.[10]

ஒரு பெரு நிலப்பரப்பு மக்கள் பேசும் மொழியாலும். அம்மொழி வளங்கும் இனத்தாலும் வரையறுக்கப்படும். தமிழைப் பேசுவோர் தமிழர்கள். அம்மொழி பேசுவோர் வாழும் நிலப்பரப்பு தமிழ்நாடு என்று பண்டு தொட்டு வழங்கி வரும் மரபாகும். இச்சிறப்பு 'தமிழ்' மொழி ஒன்றிற்கே உரிய தனிப்பெரும் சிறப்பாகும். தமிழ் என்றாலே உடன் இனத்தையும், நாட்டையும் குறிக்கும்.

'அருந் தமிழ் ஆற்றல்' — தமிழ் ஆற்றல்[11]
'தென்றமிழ்ப் பாவை' — தமிழ் நாட்டுப் பாவை[12]
என்ற தொடர்களின் பொருளையும் அறிந்தால் நன்கு விளங்கும்.

எல்லைகள்:

தமிழகம் பண்டைக் காலத்தே (கி.மு. 5000-10,000) வடக்கே. வேங்கட மலையையும், மற்ற திசைகளான கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் கடல்களை எல்லைகளாகக் கொண்டு விளங்கி இருந்தது. பல்லாயிரம் (கி.மு. 10,000க்கு முன்) ஆண்டுகளுக்கு

9. இனிமையும் நீர்மையும் தமிழ் எனவாகும் (பிங்கலம்), 10. கவாசகி.
11. சிலப் : (26:161)
12. சிலப்: (12:48)

முன் தெற்கில் குமரியாற்றை எல்லையாகக் கொண்டிருந்தது[13] என்றும் அறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை கூறுவார்.

தொல்காப்பியப் பாயிரத்தில்,

'வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம்'[14]

என்று தமிழ் வழங்கும் நிலப்பகுதியைக் குறிப்பிடுவார், தொல்காப்பியர்.

"வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்

றிந்நான் கெல்லை தமிழது வழக்கே"[15]

என்பதும் சிகண்டியார் கூற்று.

வேங்கடம் - வடக்கு

குமரி - தெற்கு

தீம்புனற் பௌவம் (கடல்) - கிழக்கு - கீழ்கடல்

மேற்கு- மேலைக் கடல்

வடக்கில் உள்ள நிலப்பரப்பு வட வேங்கட மலைத் தொடரையும், அத்தொடர் வடபெண்ணை ஆற்றங்கரை வரை தொடர்ந்து தமிழகத்தின் வட எல்லையாக நிலவி நின்றது. வட வேங்கட மலை உள்ளடக்கிய இப் பெருநிலப் பரப்பைத் தமிழகக் குறுநில மன்னர்களே ஆண்டிருந்தனர். இதற்குச் சங்க இலக்கியச் சான்றுகளே உண்டு.[16]

வட வேங்கடம் முதல் மேற்கே வட பெண்ணை ஆற்றிலிருந்து மேற்காக கொண்கானப் பகுதியின் வடபால் ஒரு நேர் கோடாகச்

13. கடல் கொண்ட தமிழகம் - ந.சி. கந்தையா பிள்ளை

14. தொல். பாயிரம், 15. சிகண்டியார்.

16. புல்லி. (வேங்கடமலை ஆண்டவன் புறம்)

செல்லும் மேல் கடல் வரையுள்ள நிலப்பகுதி யெல்லாம் பழந்தமிழகத்தின் வட வெல்லையாகும்.

ஆனால், ஆற்றல் அற்ற தமிழர், தமிழ் மன்னர்களின் வலிமையின்மையினாலும், ஒற்றுமையின்மையினாலும் பிற மொழியினர் ஆட்சி வந்தேறியதாலும் இந்திய தேசியம் பேசிய சிறுமையினாலும் வடக்கெல்லையான வேங்கடமும், மேற்குக் கடல் வரை இருந்த நிலமும் தமிழின் திரிபு மொழியான மலையாளத்தால் தனி மாநிலம் ஆக்கப்பட்டு, அதுவும் தமிழகத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனிமாநிலம் ஆக்கப்பட, தமிழகம் வடக்கிலும், மேற்கிலும் தேய்ந்து தேய்ந்து இன்றுள்ள 'தமிழகம்' ஆனது! இதன் வடக்கெல்லை இன்று 'மாலவன் குன்றம் அல்ல. வேலவன் குன்றம்' என்று (திருத்தணி) வருந்திடச் சொல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.[17]

இமயமே எல்லை:

நம் பழந்தமிழ் நாட்டின் எல்லை வேங்கடமென்று தொல்காப்பியம், புறநானூறு முதலியவற்றில் கூறப்பட்டாலும் வரலாற்றுக்கு முந்திய கி.மு. 4000 காலந்தொட்டு இமயமே தமிழகத்தின் வட வெல்லையாக இருந்திருக்கிறது. இன்றைய மொகஞ்தாரோ, அரப்பா அகழ்வாய்விடங்களில் கிடைத்த பொருள்களே சான்றாகின்றன.[18]

மேலும் இலக்கியச் சான்றுகளும் இமயத்தை வடவெல்லையாகத் தமிழரசர் கொண்டிருந்தனர் என்பதும் தெரிய வருகிறது.

குமரியொடு வடவிமயத் தொருமொழி வைத்
துலகாண்ட சேர லாதன் (சிலப் 29)

17. ம.பொ.சி.வடவெல்லைப்போர் -அறிக்கை
18. இரா. மதிவாணன் -அரப்பா, மொகஞ்தாரோ வரிவடிவங்கள்

வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை ஆண்ட தென்னவன் (சிலப்: 11)

பொன்னிமயக் கோட்டில் புலிபொறித்து
மண்ணாண்டான்
மன்னன் வளவன் (சிலப்: 17)

என்னும் இளங்கோவடிகளின் வரிகளும் இதனை மெய்ப்பிக்கின்றன. கி.மு. 200க்கு முந்திய காலந்தொட்டே வேங்கடத்தின் வடபாலும் தமிழரின் முழு ஆட்சியும், நாவலந் தீவு என்று கூறப்படுகின்ற குமரி முதல் இமயம் வரை தமிழையே ஆட்சி மொழியாகக் கொண்டு ஒரு மொழி வைத்து உலகாண்டவர்களாக இருந்திருக்கின்றனர். இதனை,

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பெளவத்தின்குடக்கும்
உருவும் புகழும் ஆகி விரிசீர்[19] (புறம்: 6)

தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லை
ஒன்றுபட்டு வழிமொழிய
இடியென முழங்கு முரசின்
வரையா ஈகைக்குடவர்கோவே.[20] (புறம்: 17)

என்றும் காரிகிழார், குறுங்கோழியூர்க் கிழார் கூற்றுக்களாலும் இதனை அறியலாம்.

சேரனை 'இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்' என்பதனாலும் அவன் ஆட்சி இமயம் வரை பரவியிருந்ததை அறியலாம்.

வரலாற்றுக்கு முந்திய சிந்து சமவெளி நாகரிகம் பழந்தமிழர் நாகரிகமே என்றும், அவர்கள் உயர் நாகரீகத்தோடு வாழ்ந்து

19. காரிகிழார் -புறம் 6
20. குறுங்கோழியூர்க் கிழார் -புறம்: 17

வந்தனர் என்றும், ஆரியர்கள் வடமேற்குப் பகுதியிலிருந்த கைபர், போலன் கணவாய்களின் வழியே வருவதற்கு முன்பே சிறந்த நகரங்கள், அரசுகள் ஏற்படுத்தி ஆண்டவர்கள் பழந்தமிழ் மரபினரே என்றும்அவர்களைப் பிற்கால வரலாற்றாசிரியர்கள் திராவிடர்கள் என்றும், சிந்துவெளி நாகரீக காலம் கி.மு.4000-க்கு முந்தியது என்றும் டாக்டர் இராசமாணிக்கனார் போன்றோர் கூறுவர்.[21]

இந்தியாவில் முதன்முதல் குடியேறிய இனம் ஆரிய இனம். இவர்கள் கி.மு. 1500 ஆண்டுகளுக்குள் படையாலும், நடையாலும் புகுந்தவர்கள் ஆவர். அப்பொழுது 'இந்தியா' என்ற பெயரே இல்லை நாவலந் தீவு என்ற பெயரே இருந்தது. நாவலந் தீவில் வாழ்ந்த மக்கள் பேசிய மொழி தமிழே ஆகும். அன்றைய நிலையில் கொச்சை, திரிபு வழக்குகளோடு பேசப்பட்டு வந்தன.

தென் எல்லை:

தமிழகப் பெருநிலத்தின் தென் எல்லை தென் பெருங்கடல். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் (கி.மு. 15000 - 20000) பல கடற்கோள்கள் ஏற்பட்டு அப் பெருநிலப் பரப்பு கடலுக்குள் மூழ்கியது. அஃது இன்றைய குமரி முனையின் தெற்கில் 1800 கல்லுக்கு மேல் பரவியிருந்தது.இன்றைய ஆப்ரிக்காவின், தென் கீழ்ப் பக்கமுள்ள மடகாஸ்கர் தீவு முதல்ஜாவா, சுமத்ரா கீழைத் தீவுகள் உள்ளடக்கிய நிலம்அது. இலங்கை அதனுள் உள்ள ஏழ் தெங்க நாட்டுள் ஒன்றாக இருந்தது![22]

அப் பெருநிலப்பரப்பில் குமரிமலை, மணிமலை, பன்மலைத் தொடர்கள் முதலிய உயர்ந்தோங்கிய மலைகள் இருந்தன.

குமரியாறு, பஃறுளியாறு போன்ற பெரும் பேராறுகளும் அங்கிருந்தன.

21. டாக்டர் மா. இராசமாணிக்கனார் - சிந்துவெளி நாகரிகம்
22. டாக்டர் கா. அப்பாதுரை -1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்

இன்றுள்ள குமரி முனைக்குத் தெற்கில் 200 கல்தொலைவில் கிழக்கு நோக்கி ஓடிய ஆறு குமரியாறு. அதற்கும் 700 கல் தொலைவில் பஃறுளியாறு பாய்ந்து சென்றது.[23]

இதனை இராவண காவிய ஆசிரியர், வரலாற்றறிஞர் பெரும்புலவர் குழந்தை அவர்களும் தம் காப்பியத்தில் குறிப்பிடுவார்.[24]

குமரியாற்றுக்கும், பஃறுளி (பல்+துளி) ஆற்றுக்கும் இடைப்பட்டது, பெருவள நாடு என்பது. இவற்றுள் ஏழ் தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ் முன்பாலை நாடும், ஏழ் பின் பாலை நாடும், ஏழ் குன்ற நாடும், ஏழ் குணகரை நாடும், ஏழ் குறும்பனை நாடும் - என நாற்பத்தொன்பது நாடும், குமரி, கொல்லம் முதலிய பன்மலை நாடும் கடல் கொண்டொழிதலான்''[25] எனும் உண்மையானும் அறியலாம்.

தென்னையும், பனையும் மிக்கிருந்த நாடாதலின் அப்பெயர் பெற்றன. இன்றும் ஈழத்தில் பனை மரங்கள் மிக்கிருத்தலைக் காண்கிறோம். பாலை நிலமும் இருந்திருக்கிறது.[26]

பஃறுளி ஆற்றின் தென்பால் தென்கடல் வரை ஏறத்தாழ 500 கல்தொலைவு இருந்த நிலப்பரப்பு 'தென் பாலி நாடு எனப்பட்டது.''... அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வட வெல்லையாகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும்''[27] எனக்கூறும் அடியார்க்கு நல்லார் உரையும் இதற்குச் சான்றாகும்.

பஃறுளி ஆறு கடல் கொள்ளா முன் அப்பெரு வள நாட்டினை ஆண்டு வந்தவன் நெடியோன் என்னும் பாண்டியன். அவன் வழிவந்தவரே முதுகுடுமிப் பெரு வழுதி இவனை நெட்டிமையார்,

---

23. ந.சி.கந்தையா பிள்ளை- பழந்தமிழ் நாடு. 24. பெரும்புலவர் குழந்தை - இராவண காவியம். 25. இளங்கோவடிகள் : சிலம் : 8), 26. சிலம்பு : 11: 64-66), 27. சிலப் : 8 அடி யார்க்கு நல்லார் உரை.

எங்கோ வாழிய குடுமி...
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே[28] புறம் 9
என்பதாலும்,

குமரியம் பெருந்துறை...
வடமலைப் பெயர்குவை யாயின்[29] புறம்: 67
என்று பிசிராந்தையார் கூறுவதாலும் பஃறுளி யாறும் குமரியாறும்இருந்தமைக்கு அகச் சான்றாகின்றன.

முதுகுடுமிப் பெருவழுதியின் காலம் புறத்தில் தொகுத்த மன்னர்களின் காலத்திற்கு முற்பட்டவராக இருக்கலாம். அது கி.மு.1000 ஆண்டாகலாம். அல்லது கி.மு. 2000 ஆகலாம்.

குமரிக் கண்டம் என்பதை இன்றைய ஆராய்ச்சியாளர்கள் லெமுரியாக் கண்டம் என்பர். இந் 'லெமூர்' என்னும் மக்கட்கும், குரங்கிற்கும் இடைப்பட்ட ஒருவகை உயிர் - பெயராகும்.

தென்னிலம் கடலுள் மூழ்க, மூழ்க வடபெருங் கல்லான இமயம் தோன்றியது எனவும் கூறுவர். குமரிக் கண்டம் நிலநடுக்கோட்டுப் பகுதியில் அமைந்திருந்தது. உலகின் நடுக்கோட்டுப்பகுதியான குமரிப் பெருநிலத்தில் உயிர்கள் தோன்றின. பிறகு மனிதர் தோன்றினர் என்பர் ஆராய்ச்சியாளர். எனவே உலக முதன் மக்கள் தோன்றிய இடம் தென் நிலப் பரப்பே ஆகும்[30] என்பர் கா. அப்பாதுரையார்.

எனவே உலக முதல் நாடு தமழநாடு எனறும, உலக முதல மாந்தர் தமிழ் மக்கள் என்றும், உலக முதன் மொழி தமிழ்மொழி என்றும் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களும் கூறுவார்கள்.[31]

28. புறம் : 9, 29. பிசிராந்தையார் : புறம் : 67
30. கா. அப்பாதுரையார், குமரிக்கண்டம்.
31. தேவநேயப் பாவாணர் - உலகமுதன்மொழி

'குமரிக் கண்டத்தில் தோன்றிய இந்நாகரீகம் சிந்துவெளி நாகரீகமாக மலர்ந்து, நடுக்கடலை யடுத்த எகிப்திய, கிரேக்க, பாபிலோனிய, பினீசிய நாகரீகம் வளரக் காரணமாய் இருந்தது என்றும் வி.ஆர்.ஆர்.தீட்சிதர் அவர்களும் கூறுவார்.[32]

தென்னில மக்கள் உலகெங்கும் பரவி, அவ்வந்நில, தட்ப வெப்பத்திற்கேற்ப வடிவும், நிறமும் மாறுபட்டனர். பேசும் மொழிகளும் வெவ்வேறாயிற்று! மூலம் தமிழினமும் - தமிழும் என்பதொன்றே!

தொன் மதுரை கடல் கோளால் அழிந்தபோது பாண்டியர் அதன் வடபால் இருந்த குமரியாற்றங்கரையில் குடியேறினர். பஃறுளி ஆற்றின் கரையில் தொன் மதுரையில் முதற் தமிழ்ச் சங்கமும், இடைச் சங்கம் குமரியாற்றங்கரையில் அமைக்கப்பட்ட அலை வாய் என்னும் தென் மதுரைக் கூடலிலும் ஏற்படுத்தப்பட்டது.

இவ்விடைச் சங்கத்தே தான் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது.

அதன் பின்னர் மற்றுமொரு கடல் கோள் ஏற்பட,

பஃறுளி யாற்றொடு பன்மலை அடுக்கத்துக்

குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள[33]

(சிலப்: 11:91-20)

குமரி மலையையும் நிலத்தையும் கடல் கொண்டது. அதன்பின்னர் மன்னனோடு மக்கள் மணலூர் என்ற இடத்தில் தங்கினர். மதுரை நகரை அமைத்தனர். கோட்டை, கொத்தளம், நான்கு வாயிலிலும் மாடங்கள் கூடங்கள் அமைத்தனர். அது மாடக்கூடல், நான் மாடக்கூடல் எனப் பெயர் பெற்றது. இம்மதுரை

32. வி.ஆர்.ஆர். தீட்சிதர் - தென்னிந்திய வரலாறு ப.170
33. சிலம்பு : 8 - 12

இன்றுள்ள மதுரைக்குத் தென் கிழக்கில் ஆறுகல் தொலைவில் அமைக்கப்பட்டது.[34]

இங்கு அமைக்கப்பட்டதே மூன்றாம் தமிழ்ச்சங்கம். கடைச் சங்கத்தைத் தோற்றுவித்தவன் முடத்திருமாறன்[35] என்பர்.

முதற் சங்கம்-தொன்மதுரை - 4449 புலவர்கள்

(காலம்: 4440 ஆண்டுகள்). மன்னர்கள்: 89 பேர்

இரண்டாம் தமிழ்ச் சங்கம்.

(3700 ஆண்டுகள்) தென் மதுரை. அல்லது அலைவாய் 3700 புலவர்கள்.

மன்னர்கள் : 59 பேர்

கடைச்சங்கம் - மணலூர் அடுத்த வையைக் கரை - மதுரை - 449 புலவர்கள் 1850 ஆண்டுகள்.

மன்னர்கள் 49 பாண்டியர்கள்

மொத்த ஆண்டுகள்: 9990 - என இறையனார் அகப் பொருள் கூறும்.[36]

கி.பி. 250 இல் மதுரையில் அயலவர் ஆட்சி ஏற்பட்டதால் அதுவே கடைச் சங்க காலத்தின் இறுதி எனலாம்.

தமிழக எல்லையாக,

நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ் வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு[37]

என்பது கடல்கோள்களால் நில வெல்லை குறைந்து கொண்டே வந்தது. இன்று பிறவற்றாலும் குறைவு பட்டுள்ளது.

34. 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் - 26.பி.
35. இறையனார் அகப்பொருளுரை
36. இறையனார் அகப்பொருள் உரையாசிரியர்
37. சிலம் : 8-1.2.

தமிழக அரசுகள்:

தமிழ் மக்கள் உலகின் மூத்த குடிமக்கள் என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் முடிந்த முடிபாகக் கொள்கின்றனர். அதுபோலவே பழந்தமிழ் அரசுகளை ஏற்படுத்தி குடியாட்சியாயும், முடியாட்சி யாயும் ஆண்டவர்கள் தமிழரசர்கள். இவர்கள் சிற்றரசராயினும், வேளிராயினும், பேரரசர் ஆயினும் மக்களின் நலங் கருதியே ஆட்சி செய்திருக்கின்றனர். ஒரு வகையில் உலக அரசியலின் தோற்றுவாயே, கிரேக்க ரோமானியர்களுக்கு முற்பட்டதும், காலத்தின் முதன்மை உற்றதும் தமிழரசுகளே ஆகும்.

உலக மக்கள் ஓரிடத்தே நிலை கொள்ளாது கூட்டங் கூட்டமாகத் திரிந்து கொண்டிருந்த பொழுது, தமிழ் மக்கள் மிகச்சிறந்த நாகரீகத்துடன் நல்லாட்சி நடத்தி வந்திருக்கிறார்கள். கடல் கொள்ளாத் தமிழகத்திலும் குடியரசு செலுத்தியோர் ஆவார். பின்னர் முடியரசாகவும் ஆக்கி, முதுபேரரசாகக் கண்டவர்கள்.

நம் சங்க இலக்கியங்கள் தமிழ் மன்னர்களின் ஆட்சி, மக்கள் நலம், செங்கோன்மை, போர்நிலை, புலவர்கள் உறவு, பாராட்டும் பண்பு இவைகளைத் தெளிவாகக் காட்டுகின்றன.

புறநானூறு தமிழர்களின் புற வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் பாடல்களைக் கொண்டது. அகநானூறு, நற்றிணை போன்றவை மாந்தரின் ஒழுக்க வாழ்வைத் தெளிவாக வரையறுத்துக் கூறுவது. இவைகளுக்கு இலக்கணமாகத் திகழ்வது தொல்காப்பியம். திருக்குறளையே 'அறம் பாடிற்று'[38] என்று போற்றுவார்கள். திருக்குறளில் இல்லறம், துறவறம், அரசியல், அமைச்சியல், படையியல், கூழியல், குடியியல், களவியல், கற்பியல் - என வாழும் முறைக்கும் ஆளும் முறைக்கும் இலக்கணம் வகுத்துச் செல்கிறது. இந்த இலக்கணத்தின்றும் மாறுபட்டவைகள் பிற்காலக் கோட்பாடுகள்.[39]

38. புறம் : அறம் பாடிற்றே ஆயிழை கணவ!
39 அர்த்த சாத்திரம் - கவுடில்யர்.

பழந்தமிழரசர்கள் குடியரசையும் கண்டார்கள். முடியரசையும் கண்டார்கள். பொதுவுடைமை அரசையும் வகுத்தார்கள். தனியுடைமை அரசையும் ஏற்படுத்தினார்கள்.

செங்கோன்மை மிக்கவர்கள் தமிழரசர்கள். இதனைச் சிலம்பு, புறப் பாடல்களிலிருந்தே அறியலாம். பத்துப் பாட்டும், பதிற்றுப் பத்தும் இம்மன்னர்களின் சிறப்பினை எடுத்துக் கூறும்.

பசுவின் கன்றைக் கொன்றதற்குத் தன் மகனையே தேர்க்காலிலிட்டவன் ஒரு சோழன். அயலான் வீட்டுக் கதவைத் தட்டிய குற்றத்திற்குக் கையையே வெட்டிக் கொண்டவன் பொற்கைப் பாண்டியன்; ஆராயாது தீர்ப்புரைத்ததால் தன்னையே மாய்த்துக் கொண்டவன் பாண்டியன் நெடுஞ்செழியன்; 'குடி பழி தூற்றும் கோலேன் ஆகுக[40] என்று சூளுரைத்தவன் தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்; புலவர்க்கும், தமிழுக்கும் பெருமை கொடுக்கும் வகையில் 'புலவர்' பாடாது வரைக என் நிலவரை[41] என்று போற்றியவன் தமிழரசன், நாட்டை ஆளும் பொழுது ஏற்படும்,

'பிழையுயிர் எய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுரவுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்[42]
துன்பம் அல்லது தொழுதகவு இல்'

(சிலம்: 25.101-4)

என்ற செங்குட்டுவன் கூற்றும் தமிழ் மன்னர்களின் செங்கோன்மையைக் காட்டும்.

அன்றைய தமிழகப் பெருநிலத்தில் அரசு என்ற ஒன்று தோன்றிய போதே மூவேந்தர்கள் ஆட்சியைத் தான்

40. புறம் : 72
41. புறம் : 72
42. சிலம்பு : 25 :101 - 4

காண்கின்றோம். சேரன், சோழன், பாண்டியன் - முடியுடை மன்னர்களாகவும் மற்றவர்கள் குறுநில மன்னர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இவர்களை 'வண் புகழ் மூவர் தண் புகழ் பரப்பின்' என்று தொல்காப்பியமும் போற்றும்.[43]

மூவரசர்கள் தொன்று தொட்டு ஆண்டவர்கள். எந்தவித மாற்றமும் இன்றித் தொடர்ச்சியாக ஆண்டவர்கள். கி.பி. 3-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு அச்சுக் குலைந்தது.

இந்த மூவேந்தர்கள் மரபு என்பது தொன்று தொட்டு. தொடர்பாகப் பல்லாயிரக் கணக்காக ஆண்டுகள் ஆட்சி செய்து வந்ததைப் போல் உலகின் எந்த நாட்டு வரலாற்றிலும் காண முடியாது. இத்தகு பெருமை தமிழகத்திற்கும், தமிழக மூவேந்தர்களுக்கும் உரியதாகும்.

இவர்கள் பரம்பரையும் விட்டுப் போகாமல் வாழையடி வாழையாகத் தழைத்து வந்திருந்திருக்கிறது.

மூவேந்தரிலும் பாண்டியர் மரபே பழைமையுடையதாகும். பண்டு என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. பண்டு - பண்டையர் - பாண்டியர் என்பதே அது. பாண்டியர் பெருவள நாட்டை ஆண்டு வந்தபோது குமரியாற்றுக்கு வடக்கிலுள்ள தமிழகப் பகுதியினைச் சோழனும், சேரனும் ஆண்டு வந்தார்கள். பிறகு குமரியாற்றுக்கு வடக்கிலுள்ள நிலப்பகுதியும் கடலுள் போக, வட தமிழகப் பகுதி முத்தமிழகம் என்று அழைக்கப்பட்டது.

இம் முப்பெரும் நிலப்பகுதிகள் 'பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலை வைத்த ஒரு தனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்'[44] (சிலம்: 1:31-2) என்றவாறு ஒரு பழைய

43. தொல்:
44. சிலம் : 1:31-2

முதுகுடியிலிருந்து தோன்றி வளர்த்த குடியரசுகளிலிருந்து உயர்ந்த முடியரசுகளாகும்.

இம் மூவேந்தரும், பெரும்பாலும் தங்களுக்குள் பகைமையின்றியே நாடாண்டு வந்துள்ளனர். கி.மு. முதல் நூற்றாண்டு வரை இவர்கள் இங்ஙனம் இருந்திருக்கிறார்கள். தத்தம் நாட்டையும், மக்களையும் நன்கு பேணி இருக்கிறார்கள். போர்கள் வீரத்தைக் காட்டுவதற்காகவே ஏற்பட்டிருக்கின்றன. பிற்காலத்தில் அழிவு மேம்பட்டு ஒருவருடன் ஒருவர் பகைத்து, மண்ணாசை கொண்டு போரிட்டு அம் மூவரச மரபுகளும் அழிந்ததற்குக் காரணம் எனலாம்.

வீரம் காட்டுவதற்காகத் தோன்றிய போர், பின்னர் மண்ணாசை கொண்டது. பகை மேம்பட்டது.

குறுநில மன்னர்கள் அல்லது வேளிர்கள்

தமிழகத்தை முடியுடை மூவேந்தர்கள் தங்கள்பெரும் பெரும் பகுதிகளை ஆண்டு கொண்டிருந்த போதே, கொங்கு நாட்டிலும், தொண்டை நாட்டிலும் தனித்தனி குறுநில ஆட்சியாளரால் ஆளப்பட்டு வந்திருக்கிறது. இம்முறை சேர சோழ பாண்டிய நாடுகளிலும் குறுநில ஆட்சியாளர்களை ஏற்படுத்தி நாடாண்டு வந்திருக்கிறார்கள். இக் குறுநில மன்னர்களை ‘வேளிர்’ என்றழைத்தனர். இவர்கள் வேளாண் குடியைச் சார்ந்த செல்வமும், செல்வாக்கும் கொண்டவர்கள் ஆவர்.

வேளாண் குடியை ‘மன்னர் பாங்கிற் பின்னோர் ஆகுப [45] (அகம்: 30) என்று அகமும் கூறும். இவர்களே அரசர்களுக்குப் படைத் தலைமை, அமைச்சு நிலை, நாட்டுக் காவல் தலைமை முதலியவற்றை மேற்கொண்டிருந்தனர். இதனை,

45. அகம் : 30

வேந்துவிடு தொழிலிற் படையும் கண்ணியும்

வாய்ந்தனர் என்ப[46]

(மரபு: 81)

என்னும் தொல்காப்பியத்தாலும் அறிகிறோம்.

இவ் வேளாண் குடியினைச் சார்ந்த வேளாளர்கள் இரு வகையினர். தாமே நிலத்தில் உழுது வித்திட்டு வேளாண்மை என்னும் உழவுத் தொழிலைச் செய்து வாழ்பவர்கள் ஒருவகையினர். மறு வகையினர் உழுவித்து உண்போர். இவர்களை இக்காலத்தில் நிலச் சுவான்தார்கள் என்பர். அன்றைய நிலையில் அவர்கள் பெருநிலக் கிழார்கள். பிறருக்குத் தங்கள் நிலங்களைக் கொடுத்து குடிதாரர்கள் - அதனால் வரும் வருவாயைப் பெற்று ஆளுமையோடு வாழ்பவர்கள். இவர்களை இன்றைய மார்க்சீய முறையில் சொன்னால் 'நிலவுடைமைச் சமுதாய ஆதிக்கர்கள்'[47] எனலாம். இந்நிலை இங்கு மட்டுமல்ல. எல்லா நாடுகளிலும் இருந்திருக்கிறது.

'உழுவித்துண்ணும் இவர்கள் மண்டில மாக்களும் தண்டத் தலைவருமாவர். சோழ நாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கழாரும் முதலிய பதியிற் றோன்றி, வேள் எனவும் அரசு எனவும் உரிமை பூண்டவர்களும், பாண்டி நாட்டுக் காவிதிப் பட்டம் எய்தினோரும், குறு முடிக் குடிப் பிறந்தோர் முதலியோருமாய், முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாளர் ஆகுப[48] (அகம் 30-நச்) என்னும் நச்சினார்க்கினியர் கூற்றால் விளங்கும்.

46. தொல்கா: மர.81
47. கார்ல் மார்க்ஸ் - மூலதனம் - முதல்பாகம்
48. அகம். நச்/30

பெருநிலக்கிழார்களான இவ் வேளாளர்கள் நிலத்திற்கும், பரப்பிற்கும் அதனை ஆளுமை செய்வதற்கும் உரியவர்களாக இருந்தார்கள். இவர்கள் மூவேந்தர் குடிகளோடு கொள்வினை, கொடுப்பு வினைகளைக் கொண்டு உயர்ந்தோங்கிய பெருங்குடி வேளாண் செல்வராக விளங்கியிருக்கிறார்கள்.

சோழ நாட்டு அழுந்தூர் வேளின் மருமகன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி, அவர் மகன் கரிகால் சோழன் நாங்கூர் வேளின் மருமகன். வெளியன் வேண் மான் என்னும் வேளிரின் மருமகன் உதியஞ் சேரல். வேளாவிக் கோமான் பதுமன் என்னும் வேளிரின் மருமகன் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்; இளங்கோ வேளின் மருமகன் சேரன் செங்குட்டுவன். இவ் வேளிர்கள் உழுவித்துண்ணும் பெருநில, பெருங்குடிச் செல்வர்கள் ஆவர்.

இவ் வேளிர்களும் ஆண்டு வந்த பெருநிலப் பரப்பு 'நாடு' என்ற பெயரைப் பெற்றிருந்தது. மூவேந்தர் நாடுகள் உட்பகுப்பாகப் பகுக்கப் பட்டிருந்தது போலும் கொங்குப் பகுதியும் பகுக்கப்பட்டிருந்தது. அதில் தனித்தனி வேளிர்கள் ஆண்டு வந்தனர்.

வேளிர்கள் பேரரசர்களுக்குத் திரை (வரி) ஆண்டுதோறும் செலுத்தி வருவதும், படைத் துணையாவதும் ஆகச் செயல்பட்டு வந்தனர். பல வேளிர்கள் தத்தம் பகுதிகளை முழு உரிமையுடன் ஆட்சி செய்து வந்தனர்.

பேரரசர்கள், குறுநில மன்னர்கள், மற்றும் பேரூர்கள் தோறும் வேளாண் குடிச் செல்வர்களில் சிறந்தோர் - நிலக்கிழார்கள் - குடிமக்கள் தலைவர்களாக இருந்து ஊராட்சி, பேரூராட்சிகளை நடத்தி வந்தனர்.

எனவே தமிழ்நாட்டில் பண்டு, மூவேந்தர்கள் என்னும் பேரரசர்கள், குறுநில மன்னர்கள், ஊர்த்தலைவர்கள் என்னும்

வேளாண் குடிச் செல்வர்கள் என முத்திறத்து ஆட்சி நடைபெற்று, சிறந்த குடியரசு முறையைப் பின்பற்றி வந்தனர்.

தமிழகம் இம் மூவகை முறையிலும் ஆளப்பட்டு வந்தது. நானில வளம் வாய்ந்தது இத் தமிழகம். இது எல்லா நாடுகளிலும் வாய்ப்பது அரிது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை - என ஐவகைப் பகுப்பு இருந்தாலும், பாலை நிலம் - இன்றைய சகாரா முழுவதும் மணல் வெளிப்பகுதி போல இங்கு இல்லை. தமிழகம் மலை, காடு, வயல், கடல் பகுதி கொண்ட நாடு.

குறிஞ்சி — மலையும் மலை சார்ந்த இடமும்

முல்லை — காடும் காடு சார்ந்த நிலமும்

மருதம் — வயலும் வயல் சார்ந்த நிலமும்

நெய்தல் — கடலும் கடல் சார்ந்த இடமும்

பாலை — என்பது தமிழகத்தில் தனிநிலம்

இல்லாததால்,

முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்கு துயர் எய்திப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்[49]

என இளங்கோவடிகளும் பாலை நிலத்திற்கு விளக்கம் அளிப்பார்.

இந் நானிலத் தலைவர்களாப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தவர்களாகத் தொல்காப்பியம் குறிக்கும். அவை

சேயோன் — மலை நிலத் தலைவன்

மாயோன் — காடுறைத் தலைவன்

49. *சிலம்பு* : 11-64-6

வேந்தன் — வயல் நிலத் தலைவன்

வருணன் — கடல் நிலத் தலைவன்

எனப் பழம் பெரும் புலவர்களுள் ஒருவரான புலவர் குழந்தை குறிப்பிடுவார்.

இவர்களின் காலங்களை டாக்டர் நா. மகாலிங்கம் அய்யா அவர்கள் 50,000 ஆண்டுகளுக்கு முன்னரும் ஓரிலக்கம் ஆண்டுகளுக்கு முன்னது என்றும் (சேயோன்) பட்டியலிட்டுத் தமிழரின் தொன்முது வரலாற்றை ஆய்வு நெறியினின்றும் - குமரிக் கண்ட ஆய்வு[50] கூறுவார்கள்.

அரசு நிலைகளுக்கு உறுதுணையாகப் பல பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அமைச்சர்கள், யானை, குதிரை, மறவர் - பிரிவுப் படைத்தலைவர்கள், ஒற்றர்கள், தூதர்கள் போன்றவர்களும் முறையுற அமைத்து ஆண்டிருக்கிறார்கள். அரசர்க்கு அறிவுரை கூற அவையங்கள் இருந்திருக்கின்றன. இவற்றைச் சிற்றரையம், பேரரையம் என்பர்.

எட்டு வகை நுதலிய அவையகத்தானும்[51]

(தொல்: புறத்: 21)

என்பது தொல்காப்பியம். உறந்தை அவையகம், மோகூர் அவையகம் என்பது போலும் அவை.

தமிழகப் பிரிவுகள்

தமிழகம் பாண்டிய, சோழ, சேர நாடுகள் என முடியுடை வேந்தர்களால் ஆளப்பட்டு வந்தது என்பதை அறிந்தோம். அதுபோலவே கொங்கு நாடு, தொண்டை நாடு (அருவா நாடு) என்ற பிரிவுகளும் வேளிர்களால் ஆளப்பட்டு வந்தன.

50. டாக்டர் நா. மகாலிங்கம் - குமரிக்கண்ட ஆய்வு
51. தொல். புறத் : 21

சேரநாடு என்பது இன்று மேற்கு மலைத் தொடர்ச்சிக்கும், அப்பால் மேலைப் பகுதி முழுதும் மலையாள மொழி வழங்கும் நாடாகி விட்டது. குறைந்தது 450 ஆண்டுகளுக்கு முன்னர் அது கொங்குத் தமிழ் வழங்கும் நாடாகவே இருந்தது. இன்னும் மலையாள எழுத்தாளர், கவிஞர்களில் சிறந்தவரான - சச்சிதானந்தம் என்பவர் தம் முன்னோர்கள் சங்கப் புலவர்களே என்றும் அவர்களே சேரர்களின் (கேரளீயர்) ''ஆதி கவிகள்'' என்றும் குறிப்பிடுவார்.[52]

சேர நாட்டின் எல்லை, மேற்கு மலைத் தொடர் முதல் அரபிக் கடல் வரையுள்ள நிலப் பரப்பாகும். வடக்கே துளு நாடும், தெற்கில் பாண்டிய நாடும் அதன் எல்லைகள். அதன் தலைநகர் வஞ்சி என்பது. அது இந்நாள் திருவஞ்சைக்களம் என்று வழங்கப்படுகிறது. இது பேரியாற்றங் கரையில் இருந்ததாகக் கூறுவர். சிலர் இதனைக் கருவூர் என்றும் குறிப்பிடுவர்.[53]

இச் சேரரின் துறைமுகங்கள் மாந்தை, தொண்டி, முசிறி, காந்தளூர், விழிஞம் என்பனவாகும். சேரநாடு குடபுலம் (குடம் - மேற்கு) மலைநாடு, மலை ஞாலம் என்றும் வழங்கப்பட்டது. சேரரின் கொடிச் சின்னம் வில் மாலைபனம் பூமாலை. சேரலன், உதியன், பொறையன், குட்டுவன், பூழியர், வானவர், வில்லவர் - என்பன சேரரின் மரபுப் பெயர்கள்.

சோழ நாடு என்பது இன்றைய திருச்சி, தஞ்சை மாவட்டங்களும், தென்னார்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியும் சேர்ந்தது. இவை பல சிறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வடக்கே தென் பெண்ணை ஆறு முதல் தெற்கே புதுக்கோட்டைக்கு அண்மையில் உள்ள தென் வெள்ளாற்றுக்கும் இடைப்பட்டது

52. கவிஞர் சச்சிதானந்தம் - 'ஆதிகவிகள்' கவிதைத் தொகுப்பு
53. ரா. ராகவையங்கார் - பழந்தமிழ் நகரங்கள்

சோழ நாடு. கிழக்கில் வங்கக் கடலும் மேற்கில் கொங்கு நாடும் இதன் எல்லை. 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா' வளமுடைய காவிரியாற்றைக் கொண்டது.

சோழ நாட்டின் தலைநகர் உறையூரும் பூம்புகாரும் ஆகும். பூம்புகார் - காவிரிப்பூம்பட்டினம் என்று வழங்கப்படும். இன்று உறையூர் திருச்சிராப் பள்ளியை அடுத்ததோர் நகரம். பூம்புகார் நகரம் வணிகத்தில் சிறந்திருந்தது என்பதைப் 'பட்டினப் பாலை' பாடும்.[54]

சோழ நாட்டின் முக்கிய நகரங்கள் நாகை, திருவாரூர், பழையாறை, தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் என்பன. சங்க காலச் சோழரில் சிறப்புற்றவன் கரிகாலன். இவரை முடத்தாமக் கண்ணியாரும்,[55] கடியலூர் உருத்திரங் கண்ணனாரும் தம் பாக்களில் பாடியுள்ளனர்.

சோழ மன்னரின் இலச்சினை புலி இது கொடியுமாம். மாலை - அத்திமாலை சென்னி, கிள்ளி, செம்பியன், வளவன் - என்பன சோழரின் மரபுப் பெயர்கள்.

பாண்டிய நாடு என்பது இன்றைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலிப் பெரு மாவட்டங்கள். இது இக்காலத்தில் பல சிறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளன. கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியும், மேற்கு மலைத் தொடர்ச்சியின் தென் பகுதியும் இந்நாட்டில் இருக்கின்றன. இங்கு போற்றிப் புகழ்ந்த 'வையை என்னும் பொய்யாக் குலக்கொடி' - ஆறு ஓடுகிறது.

கி.மு. 5 நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பாண்டியன் பிற நாடுகளோடு தொடர்பும், வணிகமும் கொண்டிருந்தனர். பாடலிபுரத்தோடும் (பாட்னா) தொடர்பு கொண்டிருந்தனர்.

54. கடியலூர் உருத்திரங் கண்ணனார் - பட்டினப்பாலை
55. முடத்தாமக் கண்ணியார் -பொருநராற்றுப்படை

மதுரை, கொற்கை, காயல் இந்நாட்டின் சிறப்புக்குரிய ஊர்கள்.

பாண்டியரின் இலச்சினையும் கொடியும் மீன். இது கயல், கெண்டை எனவும் வழங்கப் பெறும். மாலை - வேப்பம்பூ மாலை. இவரைச் செழியன், வழுதி, மாறன், தென்னவன், மீனவன், பஞ்சவன் - என மரபுப் பெயர்களாலும் சுட்டுவர்.

கொற்கையில் முத்தெடுப்பது தொன்று தொட்டு வரும் தொழில். முத்துக்கள், சீனம், ரோமானிய நாடுகளுக்கு அனுப்பிப் பண்ட மாற்றுச் செய்தனர். பாண்டியர்கள் தாம் 'தமிழ்ச் சங்கம்' நிறுவித் தமிழை வளர்த்தனர்.

சங்க காலப் பாண்டியருள் சிறந்தவன் தலையாலங் கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பவன். இவன் சிறந்த புலவன், சேரர் சோழரொடு ஐம்பெரு வேளிரையும் ஒருங்கு களத்தே வென்றவன். இவன் அவைக்களப் புலவர்களுள் தலைமை சான்றவர் மாங்குடி மருதனார். மற்றொரு பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்.

தொண்டை நாடு என்பது இன்றைய சென்னை, செங்கற்பட்டு, வடார்க்காடு மாவட்டங்களும், தென்னார்க்காடு, சித்தூர் மாவட்டங்களின் ஒரு பகுதியும் கொண்டது. இவையும் இந்நாளில் வேறு சிறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இதன் வட எல்லை இன்று வேங்கட மலை இல்லை. வேலவன் குன்றும் எனப்படும் திருத்தணி மலை. தெற்கெல்லை தென் பெண்ணை ஆறு. மேற்கெல்லை கொங்கு நாடு, இதன் தலைநகர் காஞ்சி. மணிமேகலைக் காலத்திலேயே சோழர் ஆட்சிக்கு உட்பட்டது காஞ்சி மாநகரம். இது பிற்காலத்தில் பல்லவர் தலைநகரமாக இருந்தது. இதன் துறைமுகப் பட்டினம் கடல் மல்லை அல்லது மாமல்லபுரம் (மகாபலிபுரம்)

தொண்டைமான்கள் என்போர் சோழரின் படைத்தலைவர் களாக இருந்தவர்கள்.

இத்தொண்டை நாட்டிற்கு முன்பு அருவா நாடு என்று பெயர். அருவா வட தலைநாடு என்பன இன்றுள்ள வேங்கடமும் வடபாலும். அருவா நாட்டினை ஆண்ட தமிழர் - அருவாளர் எனப்பட்டனர். எனவே பிற்காலத்துத் தெலுங்கர் தமிழரை அரவாளு என்றும், தமிழை - அரவம் என்னும் கூறினர்.

வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து - பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற் றொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து![56]

தொண்டை நாட்டில் சான்றோர் மிக்கிருந்தனர் என்பர்.

நடுநாடு என்பது தொண்டை நாட்டிற்கும் கொங்கு நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியாகும். இது கடைச் சங்கத்தின் இறுதிக் காலத்தே ஏற்பட்ட பகுதியாகும். இதன் வட எல்லை - பாலாறு, தென் எல்லை - வடவெள்ளாறு, மேற்கெல்லை - கொங்கு நாடு. சோழ நாட்டின் வடபகுதியும், தொண்டை நாட்டின் தென்பகுதியும் கொண்டதே இந்நடு நாடு. இதைப் பிற்காலப் பெரிய புராணமும் கூறும். இதன் தலைநகர் திருக்கோவிலூர் மலையமான் மரபினர் இந்நாட்டை ஆட்சி புரிந்து வந்தனர்.

கொங்கு நாடு என்பது இன்றைய கோவை, நீலகிரி, ஈரோடு, சேலம், தருமபுரி, வடார்க்காடு மாவட்டத்தின் மேற்குப் பகுதியும், திருச்சி மாவட்டத்தின் மேல் பகுதியும், மதுரை மாவட்டத்தின் வட பகுதியும் சேர்ந்ததே ஆகும். வடக்கில் கொள்ளே கால் வட்டமும், எருமை நாடு எனப்படும் மைசூர்ப் பகுதியும், கொண்கானம் எனப்படும் கொங்கணப் பகுதியும் கொங்கு நாட்டைச் சேர்ந்த நிலப்பரப்பாகும்.

கொங்கு நாடு வேளிர் பலரால் ஆளப்பட்டு வந்தது. கொங்கின் வட கங்கில் (ஓரத்தில்) இருந்தவர்களை நம் தமிழர்கள் கங்கர்கள் என்றழைத்தனர். இவர்கள் தமிழின் திரிபினரே யாவர்.

56. பழம்பாடல்

கொங்கு வேளிர்களுடைய இலச்சினையும் கொடியும் ஏறும் ஏருமாகும். சிலர் தனிச் சின்னங்களையும் கொண்டிருந்திருக் கலாம்.

தமிழ்நாடு ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிந்திருந்தது என்பதற்குத் தண்டியலங்காரச் செய்யுள் சான்றாக உள்ளது:

நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியா னல்லன் - துறையின்
விலங்காமை நின்று வியன்தமிழ்நா டைந்தின்
குலங்காவல் கொண்டொழுகுங் கோ[57]

(தண்: 75)

தமிழ்நாட்டின் ஐந்து பிரிவுகள் என்பதையும், அவற்றுள் ஒன்று கொங்கு நாடு என்பதும் இதனால் அறிகிறோம். பாண்டியன் ஒரு காலத்தில் ஐந்து நாடுகளையும் ஆண்டிருக்கிறான் என்பது இதனால் விளங்கும்.

57. தண்டியலங்காரம் 75

2. கொங்கு நாடும் எல்லைகளும் பிரிவுகளும்

கொங்கு நாடு மலை வளம் மிகுந்த நாடு. குறிஞ்சியும், முல்லையும் செறிந்து விளங்கிய நாடு. ஆங்காங்கே வயல் வெளிகளும் தோட்டம், துரவுகளும் உண்டு. கொங்கு என்றால் பொன், பூந்தாது, தேன், மலர், மணம், மரம், நாடு என்ற பல பொருள் உடைய ஒரு சொல்.

இங்கு பொன் மிகுதியாகக் கிடைத்ததால் கொங்கு (பொன்) நாடு என்று கூறப்பட்டது என்றும் கூறுவர். கொங்கின் வட எல்லைப் பகுதியில் இன்றைய கோலார் இருந்ததும் அறியத் தக்கது.

'இயலெறி பொன்னிற் கொங்குசேர் புறைப்ப
உணிக்களப் பொற்றுகள் போல்[1]

(அகம்: 142)

தேன் துனித்து விழ - கொங்கு - பொன், தேன்.

மலையும் மலை சார்ந்த இடங்களிலும், காடும் காடு சார்ந்த இடங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட வகைப் பூக்கள் நிறைந்து பூந்தாது (கொங்கு) உதிர்ந்து கிடக்கும் நாடு என்பதனால் பெயர் பெற்றது.

'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'
கொங்கு - பூந்தாது[2]

(குறுந்: 21)

எனக் குறுந்தொகை குறித்தது.

மலை நிலத்திலும் (குறிஞ்சி) முல்லை நிலத்திலும் தேன்

1. அகம் : 142
2. குறுந் : 21

நிறைந்து குறிஞ்சித் தேன், காட்டுத் தேன் எனவாதலால் தேன் (கொங்கு) நாடு என்றும் தேனாடு என்றும் அழைக்கப்பட்டது.

குறிஞ்சியிலும், முல்லையிலும் மலர்கள் நிறைந்து பூத்துக் குலுங்க. மணத்தோடு விளங்கியதால் மலர் நாடு என்னும் மண நாடு (கொங்கு) என்றும் வழங்கியது.

'கொங்கலர் பூம்பொழில் குறுகினர்'[3] (சிலப்: 10:220)

கோங்கு என்ற நெடி துயர்ந்த மரங்கள் விளங்கியதால் கோங்க நாடு (கொங்கு) என்பது கொங்கு நாடு எனத் திரிந்து வழங்கியது.

கொல்லி மலைத் தேன் சொரியுங் கொற்றவா[4] (கம்பர்) என்கிறார். கொல்லி மலை கொங்குப் பகுதி. பூ நாடு, மண நாடு, தேன் நாடு என மூன்றையும் உள்ளடக்கியதே 'கொங்கு நா'டாகும்.

ஐவகைப் பெரும் பிரிவுகளில் ஒரு நாடாக விளங்கி வந்தது கொங்கு நாடு. நாடென்ற அளவில் இது கொங்கு நாடு என்று அழைக்கப்பட்டது.

ஒரு நாட்டின் முதலுறுப்பாகக் கூறப்படுபவை எல்லைகளும், இயற்கை அமைப்பும். எல்லைகள் இருப்பிடத்தையும், இயற்கை அமைப்பு வளத்தையும் காட்டுவனவாகும்.

கொங்கு நாட்டின் எல்லைகள் கீழ்வருமாறு:

வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்கு
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று - கிழக்கு
கழித்தண் டலைசூழுங் காவிரிசூழ் நாடா!
குழித்தண் டலையளவே கொங்கு[5]

— பழம் பாடல்.

3. சிலப் : 10:220
4. கம்பன் - இராமாயணம்
5. கொங்கு பழம் பாடல்

இதில் வடக்குத் தலை மலை என்றும், தெற்கில் வைகாவூர் (பழனி) என்றும், மேற்கில் வெள்ளி மலை என்றும், கிழக்கில் குளித்தலை எனவும் கூறப்படுகிறது.

கொங்கு மண்டலச் சதகப் பதிப்பில்,

வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - கிடக்கும்
களித்தண் டலைமேவுங் காவிரிசூழ் நாட்டுக்
குளித்தண் டலையளவு கொங்கு[6]

என்பதில் சிறு மாற்றங்கள் உள்ளன.

வடக்கில் பெரும்பாலை என்று கூறப்படுகிறது. வடக்கில் தலைமலை, பெரும்பாலை என்பன கொங்கு நாட்டின் வடக்கெல்லையாகவுள்ள மலைத் தொடர். இது நீல மலைத் தொடரோடு வடக்கில் அமைந்துள்ளது. பெரும்பாலை - பாலை மலை. மேல் கொங்குக்கு தலை மலையும், வட கொங்குக்குப் பாலை மலையும் எல்லைகள் ஆகும். கிழக்கில் உள்ள குளித்தலை - குளிர் தண்டலை எனவும் வழங்கப்படும். குளித்தலை, கருவூர் கொங்கு நாட்டுப் பகுதியைச் சேர்ந்ததாகும்.

மேலும் கொங்கு மண்டல சதகமும்,

மதிற்கரை கீட்டிசை தெற்குப் பழனி மதிகுடக்குக்
கதித்துள வெள்ளி மலைபெரும் பாலை கவின் வடக்கு
விதித்துள நான்கெல்லை சூழ வளமுற்றும் மேவி விண்ணோர்
மதித்திட வாழ்வு தழைத்திடு நீள்கொங்கு மண்டலமே![7]

என்று நான்கு எல்லைகள் கூறப்படுகிறது. இதில் மதிற்கரை என்பது மதில்கரை. இன்று மதுக்கரை என்று திரிந்து வழங்குகிறது. மதுக்கரைச் செல்லாண்டி அம்மன் ஆலயம் இங்கு உள்ளது. இங்கு

6. கொங்கு மண்டலச் சதகப் பதிப்பு
7. கொங்கு மண்டல சதகம்

ஒரு சமயம் சேரன், சோழன், பாண்டியனுக்கு எல்லைப் போர் ஏற்பட அதனைத் தவிர்த்தவன் பூந்துறைக் காடை குல வேளிர் ஒருவன் என்று செப்பேட்டுப் பட்டயம் கூறுகிறது.

கொங்கு நாட்டின் தெற்கெல்லை பழனி. எனினும் அதன் தொடர்ச்சியான வராகமலையும் கோடை மலைத் தொடரும் (கொடைக்கானல்) கொங்குப் பகுதியைச் சார்ந்ததேயாகும். பழனி, திண்டுக்கள் பெரு வட்டங்கள் கொங்குப் பகுதியைச் சார்ந்தவை களாகும்.

கோடை மலைத் தொடரின் தொடர்ச்சி ஆனைமலையும் கொங்கினைச் சார்ந்ததே. ஆனைமலை முடி 8850 அடி உயரம் உள்ளவை.

மேற்கெல்லை வெள்ளிப் பொருப்புக் குன்றம், வெள்ளிமலை, வெள்ளி மலை மேற்குத் தொடர்ச்சி மலையின் தொடர்ச்சி, நீலமலை (நீலகிரி) மாவட்டமும் கொங்கில் அடங்கும்.

பாலைக் காட்டுக் கணவாயும், அதனை அடுத்து வடக்கில் உள்ள வள்ளுவ நாடும் கொங்கு நாட்டைச் சேர்ந்ததே யாகும். ஆனைமலைத் தொடர், மேற்கு மலைத் தொடரின் பிளவே பாலைக் காட்டுக் கணவாயாகும். இப் பாலைக் காட்டு மாவட்டம் தமிழ் வழங்கும் கொங்குப் பகுதியே. இக்காலத்தில் இது கேரளத்தோடு சேர்க்கப்பட்டுள்ளது.

வடக்கில் உள்ள பாலை மலை கொங்கின் வடவெல்லை. இதன் தொடர்ச்சி தலைமலை, பிளிகிரி ரங்கன் மலை, மாதேசு வரன்மலை, பருகூர்மலை, தொப்பூர் மலை - கணவாய் கொங்குப் பகுதியைச் சார்ந்ததேயாகும்.

கொள்ளே காலம் வட்டத்தின் கிழக்கிலுள்ள சேலம் மாவட்டத்து ஓசூர், கிருஷ்ணகிரி வட்டங்கள் (இன்றைய தருமபுரி மாவட்டம்) கொள்ளே கால வட்டத்தின் வடக்கெல்லையைக் கடந்து வடக்கே

நெடுந்தொலை செல்கின்றன. தருமபுரி மாவட்டம் கொள்ளே கால் வட்டத்தின் வடக்கெல்லையைக் கடந்து வடக்கில் பாதிக்கு மேல் சென்றுள்ளது. இவையெல்லாம் கொள்ளே கால் பகுதி முழுதும் கொங்குப் பகுதியைச் சார்ந்ததேயாகும்.[8]

கிழக்கில் குளித்தலை, மதிற்கரை எல்லை, தொப்பூர் மலையிலிருந்து தென் கிழக்காக ஒரு தொடர் செல்கிறது. அதில் சேர்வராயன் மலை. கோதை மலை, கல்வராயன் மலை, தோகை மலை, பச்சை மலை (விச்சி மலை) கொல்லி மலை உள்ளன. இம்மலைகள் 1000 அடி முதல் 1500 அடி வரை உள்ளன. இவைகளில் சிறிதும் பெரிதுமான ஆறுகள் தோன்றிக் காவிரியுடன் கலக்கின்றன.

மலையரண் மிகுந்த கொங்கு நாட்டின் இடையே காவிரி பாய்கிறது. பின் சோழ நாட்டில் புகுகின்றது. வானத்திலிருந்து பார்த்தால் இந் நீர்க்கோல எழில் ஓர் அகல் விளக்கின் சுடர் அழகைப் போன்று தோன்றும்.

கொங்கின் இயற்கை அமைப்பு:

நீர்: கொங்கு நாட்டில் மலை வளம் சிறந்தது போன்றே நீர் வளம் நிறைந்தது. ஆற்று நீர், ஊற்று நீர் (கிணறு), மழை நீர் வளங் கொண்டு விளங்குவது. மாரிக் காலத்தில் உட்கொண்ட மழை நீரைக் கோடை காலத்தே அருவியாகக் காடுகள் தருகின்றன. காவிரி, வானி, ஆன் பொருனை போன்று பல ஆறுகள் கொங்கில் ஓடுகின்றன. ஆழியாறு போன்றவையும் உண்டு.

காவிரி: இது மேற்கு மலைத் தொடரில் தோன்றி மைசூர் நாட்டின் வழியாகக் கிழக்கு நோக்கி வருகிறது. கொங்கு நாட்டின் வடக்கெல்லையில் தருமபுரி மாவட்டத்து ஓகேனக்கல் (புகைக்கல்) என்னும் இடத்தில் நீர் வீழ்ச்சியுடன் தெற்காக வந்து ஈரோடு, சேலம் மாவட்டங்களின் இடையே பாய்ந்து, கரூர்க்கு அருகில் கிழக்கு

8. கொங்கு நாடு -புலவர் குழந்தை

நோக்கிச் செல்கிறது. இது பொன் துகள்களோடு வருவதால் பொன்னி எனப்படுகிறது. கீழ்ப் பூவானி ஆறு போலப் பல ஆறுகள் இதனுடன் சேர்கின்றன. கண்ணம்பாடி, மேட்டூர் அணை போல முப்பதுக்கும் மேற்பட்ட அணைகள் உண்டு.

பவானி ஆறு: இது நீலகிரியில் தோன்றுகிறது. கோவை, அவிநாசி, கோபி, பவானி வட்டங்களின் வழியாகக் கிழக்கு நோக்கிப் பாய்கிறது. பவானியில் காவிரியுடன் கலக்கிறது. கீழ் பவானி அணை, கொடிவேரி அணை இதில் உண்டு. வானி என்பது இதன் பழம் பெயர். இதில் சிறுவானி, பாய்கரை, கல்லாறு, குன்னூராறு, மாயாறு போன்றவை கலக்கின்றன.

நொய்யல்: இது வெள்ளி மலையில் தோன்றிக் கோவை, பல்லடம் வட்டங்களின் வழி கிழக்கு நோக்கிச் சென்று ஈரோடு தாராபுரம் வட்டங்களுக்கிடையே பாய்கிறது. காவிரியில் கொடிமுடி அருகில் கலக்கிறது. இதில் 32 அணைகள் உண்டு. காஞ்சி மாநதி என்னும் பழம் பெயர் இதற்குண்டு.

அமராபதி (ஆன் பொருனை) மேற்கு மலைத் தொடரில் மூணாறு என்னுமிடத்தில் தோன்றி உடுமலை தாராபுரம் வட்டங்களின் வழியாய் கிழக்கு நோக்கி ஓடிக் கரூர்க்குக் கிழக்கில் காவிரியில் கலக்கிறது. இதற்கு ஆன் பொருனை என்பது பழம் பெயர், குதிரையாறு, சண்முக நதி, உப்பாறு, குடவனாறு இதில் கலக்கும் சிற்றாறுகள்.

இன்றும் சேலம் மாவட்டத்தில் தென்பெண்ணை ஆறு. சனற்குமார ஆறு, பாம்பாறு, கம்பை நல்லூர் ஆறு, சுவேத நதி, வசிட்ட நதி, தொப்பை ஆறு, சரபங்க நதி, திருமணி முத்தாறு, பொன்னியாறு என்பன உண்டு. பொன்னியாறு கஞ்சமலையில் தோன்றி மகுடஞ் சாவடி வழி, காவிரியில் கலக்கிறது.

மலை: கொங்கு நாட்டைச் சுற்றிலும் நாற்புறமும் மலைகள். இவைகள் கோங்கு, வேங்கை, தேக்கு, ஈட்டி, கருங்காலி, மருது,

சந்தனம் போன்ற மரங்கள் விளைகின்றன. அகில், மா, பலா நிறைந்துள்ளன. காய்கறி கிழங்குகள் விளைகின்றன. வாழை ஆரஞ்சு முந்திரி பழவகைகள் மிகுதியும் கிடைக்கின்றன. இன்று காப்பியும் தேயிலை இன்ன பிற பொருள்களும் உற்பத்தி யாகின்றன.

கோடை மலையில் ஏலக்காயும், விருப்பாட்சி மலையில் மலை வாழையும், ஆனை மலையில் யானைகளும், நீலமலையில் காய்கறி கிழங்குகளும், பருகூர் ஆலம்பாடி மலையில் மாடுகளும், சேர்வராயன் மலையில் கனி வளமும், கொல்லிமலையில் தேனும் கிடைக்கின்றன.

கோடை மலையும் நீலமலையும் கோடை கால உறைவிடங்கள் கோடை மலை, ஆனைமலை, நீலமலை, கொல்லிமலை, விச்சிமலை, தோகை மலை இலக்கியப் பெருமை உடையன. உள்நாட்டிலும் பல மலைகள் உள்ளன.

மலைகள் [9]

1. மருதமலை, குருடிமலை, இரத்தினகிரி கணவாய் மலை, குமார மலை — கோவை
2. ஓதிமலை, குருந்த மலை, தோகை மலை — அவிநாசி
3. தென் சேரி மலை, அலகு மலை, முத்துக் குமாரசாமி மலை, மலையம்பாளைய மலை — பல்லடம்
4. பொன்மலை, ஆனைமலைக் காடு, கோலார் பட்டிமலை — பொள்ளாச்சி

9. கொங்கு நாட்டு வரலாறு - கோவைக்கிழார்

5. திருமூர்த்தி மலை, குதிரைமலை — உடுமலை
6. ஊதியூர் மலை, வட்டமலை, சிவன் மலை,
திருமான்கரடு — தாராபுரம்
7. சென்னிமலை, அறச்சலூர் மலை,
(நாக மலை) எழுமாத்தூர் மலை,
அரசண்ணா மலை, ஈட்டிமலை, கதித்த மலை,
மலைப்பாளைய மலை — ஈரோடு
8. பெருமாமலை, ஊராட்சிக் கோட்டை மலை,
பருவாய்ச்சி மலை, அந்தியூர் மலை — பவானி
9. தவளகிரி, பவளகிரி, நாகமலை, திட்ட மலை,
பறம்பு மலை, குன்னத்தூர் மலை,
அருளி மலை, ஒழலக் கோயில் மலை,
பச்சை மலை - கோபி
10. திருச்செங்கோடு மலை, சங்க மலை,
மோரூர் மலை, பெருமாள் மலை, கபிலை மலை,
பொன் மலை, சூரியன் மலை — திருச்செங்கோடு
11. கஞ்ச மலை, பெருமாமலை, சேர்வராயன்
மலை, கோதை மலை — சேலம்
12. பேளுக்குறிச்சி மலை, கொங்கண மலை,
போத மலை — இராசீபுரம்

13. நாமக்கல் மலை, கந்தமலை,
நயினார் மலை — நாமக்கல்

14. தீர்த்த மலை — அரூர்

ஓசூர், கிருஷ்ணகிரி வட்டங்களில் இன்னும் பல மலைகள் உள்ளன. சேலம் மாவட்டத்திலும் பல மலைகள் உண்டு.

15. அயிரை மலை (ஐவர் மலை) கொண்டறங்கி
மலை (கொண்டல் தங்கி மலை) — பழனி

16. பன்றி மலை — திண்டுக்கல்

17. புகழி மலை, தான் தோன்றி மலை,
வெண்ணெய் மலை[10] — கரூர்

10. கொங்கு வேளாளர் - பி.ஏ.ஆர்.சின்னுசாமிக்கவுண்டர்

3. கொங்கின் இயற்கை வளம்

மலை வளமும் ஆற்று வளமும் நிறைந்தது கொங்கு நாடு.[1] எனவே கொங்கு மலிந்தால் எங்கும் மலியும்' என்ற பழமொழியும் ஏற்பட்டது.[2] மலையும் ஆறுகளும் நிறைந்திருந்தால் அந்த நாடு சிறந்த வளத்தோடு விளங்கும் என்பதற்குக் கொங்கு நாடு சிறந்த சான்றாகும்.

மேற்கு மலைத் தொடர் காவிரியாற்றின் நற்றாய். கொங்கு நாட்டின் பிற மலைகளும் ஆறுகளும் அதன் செவிலித் தாயர்.[3]

காவிரியின் பழஞ்சிறப்பு:

'கோனிலை திரிந்து கோடை நீடினும்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை[4]
— (மணிமேகலை பதிகம் 24-5)

'தவாநீர்க் காவிரிப் பாவை[5] — (மணிமேகலை: 3-55)

'சுரந்து வரு காவிரி புரந்துநீர் பரக்கவும்[6]

— (மணிமேகலை 15:84)

முதுநீர்க் காவிரி முன்றுறை[7] (சிலம்பு: 25:123)

1. புறநானூறு.
2. பழமொழி ,
3. டாக்டர் மா. இராச மாணிக்கனார்
4. மணிமேகலைப் பதிகம் : 24-5.
5. மணிமே : 3-55
6. மணிமே : 15-84,
7. சிலம்பு : 25-123

எனக் காவிரி போற்றப்படுகிறது. வானியும் ஆன்பொருனையும் வற்றாத ஆறுகளே.

சோழநாடு தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்பர். குடகில் தோன்றி மைசூர் வழியாகப் பாயும் காவிரி 'கொங்கு நாட்டின் குலக்கொடி' ஆகும். புனல் நாடு என்றும், பொன்னி வள நாடு என்றும், 'சோற்றால்' மடையடைக்கும் சோணாடு என்றும், சோழ வள நாடு சோறுடைத்து என்றும் கூறுவார்கள்.

கொங்கு நாடு ஒரு நீர்க் களஞ்சியம். நெற்களஞ்சியமான சோழ நாட்டிற்கு. மேட்டூர்த் தேக்கம், கீழ்வாணித் தேக்கம், பரம்பிக் குளம் ஆழியாற்றுத் தேக்கம். அமராவதித் தேக்கம் (அணை) - ஆகியவை கொங்கு நாட்டின் ஆற்று வளமே ஆகும். நெல்லொடு, பருப்பு வகைகள், காய்கறி கிழங்கு வகைகள், தாது வகைகள், பருத்தி வகைகள், தானிய வகைகள் மிகுதியாகக் கொங்கில் விளைகின்றன.

ஊற்று நீரான கிணற்று வளத்தைக் கொங்கு, நாடு பெற்றிருப்பதைப் போல் வேறு எப்பகுதியும் பெறவில்லை.

சங்க காலம் முதற்கொண்டே கொங்கர்கள் ஆழக்கிணறு வெட்டி நீரிறைத்து வேளாண்மை செய்துள்ளனர் என்பதை.

கொங்கர்,
களைபொறி பிறப்ப நூறி வினைபட்ாந்து
கல்லுறுத் தியற்றிய வல்லுவர்ப் படுவில்
பாருடை மருங்கின் ஊறல்[8] **(அகம்: 79)**

என்னும் வரலாற்று வரிகளால் அறியலாம். இதனைக் குடவாயிற் கீரத்தனார் என்னும் கொங்கு நாட்டுப் புலவர் கூறுகின்றார்.

கொங்கு நாடு மலையும், காடும் நிறைந்து விளங்கிய நாடு. வயல் வெளிப் பகுதி போல் தோட்டம், துரவுகளைக் கொண்டது. கடல் வளம் போல் காவிரியையும், பிற ஆறுகளையும் கொண்டது.

ஒரு நாட்டின் வளத்திற்குக் கால்நடைச் செல்வங்களான ஆடுகள், மாடுகள், எருமைகளும் மிக முக்கியம். கி.மு. பல நூறு ஆண்டுகள் தொட்டு கால்நடைச் செல்வத்தில் சிறந்து விளங்கும் நாடு கொங்கு நாடு.

'ஆ கெழு கொங்கர் நாடு'[9] (பதிற்: 22)

'கொங்கர் ஆபரந் தன்ன செலவில்[10] (பதிற்: 77)

'வன்புலம் துமியப் போகிக் கொங்கர்
படுமணி ஆயம் நீர்க்கு நிமிர்ந்து செல்லும்
சேதா எடுத்த செந்நிலக் குரூஉத்துகள்[11]

(அகம்: 79)

'எருமை அன்ன கருங்கல் இடைதோறு
ஆனிற் பரக்கும் யானைய'[12]

(புறம்: 5)

'மாடும் பெருகி வளர்வதன்றோ
கொங்கு மண்டலமே[13]

(கொங்கு மண்டல சதகம்)

இதனால் கொங்கு நாடு கால்நடை வளம் நிறைந்தது என அறியலாம். காங்கய இனக் காளைகள், ஆலம் பாடி மாடுகள், பருகூர்ப் பசுக்கள் - என்பவை சில உதாரணங்கள்.

உழவுத் தொழிலுக்கு மிக இன்றியமையாதது மாடுகள் ஆடுகள் பட்டிக்கும், எருவுக்கும் மிகத் தேவை. எருமை பால் தயிர் வெண்ணெய்க்கு இன்றியமையாதது!

கொங்கு நாடர் கொண்டாடும் பொங்கற் புதுநாளில்,

பட்டி பெருக வேணும் பாற்பானை பொங்க வேணும்
மாடு பெருக வேணும் வீடு பொலிய வேணும்[14]

---

8. அகம் - 79
9. பதிற் : 22
10. பதிற் : 77
11. அகம் : 79
12. புறம் : 5, 13. கொங்கு மண்டல சதகம், 14. கொங்கு நாட்டுப் புறப்பாடல்

என்று தான் மாட்டு வளத்தையும், பட்டி வனத்தையும் பெரிதெனப் போற்றினர். கொங்கு வேளாளர்கள் ஆடு மாடுகளைப் பேணுவதில் தன்னிகரற்றவர்கள். கொங்கு நாட்டிலிருந்தே பாலும், வெண்ணெய்யும், நெய்யும் குடங்குடமாகத் தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளுக்கும், பிற மாநிலத்திற்கும் அனுப்பப்பட்டு வருவதை அறிவோம்.

4. கொங்கு நாட்டின் நாட்டுப் பிரிவுகள்

கொங்கு நாடு வட கொங்கு, தென் கொங்கு, மழகொங்கு (கிழக்கு) மேல் கொங்கு என்னும் பிரிவுகளைக் கொண்டிருந்ததாகக் கூறுவர்.

கோவையின் தென்பகுதி, பல்லட வட்டத் தென்பகுதி. பொள்ளாச்சி, உடுமலை, தாராபுரம், கரூர், பழனி, திண்டுக்கல் - தென் கொங்கு எனவும்,

கோவையின் கிழக்கு, பல்லடம் வட்ட வட பகுதி, அவிநாசி, கோபி, பவானி, ஈரோடு, கொள்ளே கால் வட்டங்கள் - வட கொங்கு எனவும், கோவையின் வடக்கு, அவிநாசிக்கு மேற்கேயுள்ள பகுதியை மேல் கொங்கு எனவும்,

மழ கொங்கு என்னும் கீழ் கொங்கு காவிரிக்கு கிழக்கில் உள்ள பகுதியைக் குறிக்கும் என்று கல்வெட்டாய்வாளர்கள் குறிப்பிடுவர். இதில் திருச்செங்கோடு, சேலம், இராசிபுரம், நாமக்கல் வட்டங்கள் அடங்கும். கருவூரின் கிழக்குப் பகுதியும் இதனொடு சேரும்.

'குடகக் கொங்கர்'...[15] (சிலம்பு 30-159)
'ஆரூரன் மீகொங்கில்...'[16] **(சுந்தரர் தேவாரம்)**
கோயிற்றிருப்பதிகம்
'மழ கொங்கம் அடிப்படுத்தும்'...[17]
(வேள்விக் குடிச் செப்பேடு)

---

15. சிலம்பு: 30-159
16. சுந்தரர் தேவாரம் கோயிற்றிருப்பதிகம்
17. வேள்கிக் குடிச் செப்பேடு

அதிக மானை ' மழவர் தலைவன்' என்றும் கூறுவர். அதிகமான் நாமக்கல் வரையிலும் ஆண்டிருக்கிறான். மழ கொங்கம், கொங்கு நாட்டுப் பகுதிக்குச் சேராது என்று கூறுவோரும் உண்டு.[18]

நால் வகையாக, வழக்கிற்குப் பிரிந்திருந்தாலும் 'கொங்கு நாடு' என்பதொன்றே. இதில் மக்கள் வேற்றுமையின்றி ஒற்றுமையாக மலை வாழ் மக்களிலிருந்து அடி வாழ்மக்கள் வரை வாழ்ந்து வந்திருக்கின்றனர்; இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

18. புலவர் குழந்தை

5. கொங்கின் உட்பகுப்புகள்

கொங்கு நாடானது, பழங்காலத்தில் 24 - நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. சில உள்நாட்டுப் பகுதிகளுக்கு இணை, துணை நாடுகளும் இருந்திருக்கின்றன. பழங்காலத்திலிருந்தே பூந்துறை நாடு தலைமை நாடாகக் கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. கொங்கு நாட்டின் 24 நாட்டுப் பிரிவுகள்:[1]

1. ஆறை நாடு	13. தலைய நாடு
2. பொன்கலூர் நாடு	14. கிழங்க நாடு
3. வாரக்க நாடு	15. தட்டைய நாடு
4. காவடிக்கா நாடு	16. ஒடுவங்க நாடு
5. ஆனைமலை நாடு	17. காஞ்சிக் கூவல் நாடு
6. நல்லுருக்க நாடு	18. குறும்ப நாடு
7. வையா(வி)புரி நாடு	19. வடகரை நாடு
8. அண்ட நாடு	20. அரைய நாடு
9. தென் கரை நாடு	21. பூந்துறை நாடு
10. காங்கய நாடு	22. வாழவந்தி நாடு
11. மணலூர் நாடு	23. இராசிபுர நாடு
12. வெங்கால நாடு	24. பூவானிய நாடு

என்பனவாகும்.

1. கொங்கு வேளாளர் வரலாறு - பி.ஏ.ஆர். சின்னுசாமி கவுண்டர்

24. நாடுகளின் பகுதிகள்:

1. **ஆறை நாடு** — கோவை, அவிநாசி வட்டங்கள் பல்லடம் வட்டத்தின் வடமேல் பகுதி (அவிநாசி வட்டம் 'வட பாரிச நாடு' எனப்படும்)

இதன் உட்பிரிவுகள் (6)

1. கோவங்க நாடு — கோவையைச் சுற்றி
2. மன்னி நாடு — அன்னூரைச் சுற்றி

(அன்னியூர் - அன்னூர் - அன்னிநாடு என்பதே பொருத்தம்.)

3. கவைய நாடு (கவசை நாடு— கவசை என்னும் கோயிற் பாளையத்தைச் சுற்றி
4. செம்பை நாடு — சேவூரைச் சுற்றி
5. தணக்கு நாடு — நடுவச் சேரியைச் சுற்றி
6. பழன நாடு — பெருமா நல்லூரைச் சுற்றி

2. **பொன்கலூர் நாடு** — பல்லடம் வட்டத்தின் கீழ் பாகமும் தாரை வட்டத்தின் மேல் பாகமும்

3. **வாரக்க நாடு** — பல்லடம் வட்டத்தின் மேல் பாகம் பொள்ளாச்சி வட்டத்தின் வட கீழ்ப்பாகம்.

4. **காவடிக்கா நாடு** — பொள்ளாச்சி வட்டத்தின் கீழ்ப்பாகம்

5. **ஆனைமலை நாடு** — பொள்ளாச்சி வட்டத்தின் தென் மேற்குப் பாகம்.

6. **நல்லுருக்க நாடு** — உடுமலை வட்டத்தின் மேல்பாகம்

7. வையா(வி)புரி நாடு	— உடுமலை - அமராவதிக்கரை, பழனி வட்டத்தின் மேல் பாகம்
இதில் கரைவழி நாடு	— கொழுமம் சூழ்ந்த அமராவதிக்கரை
8. அண்ட நாடு	— பழனி வட்டத்தின் தென் கீழ் திண்டுக்கல் வட்டம் பாகம்
9. தென்கரை நாடு	— தாராபுரம் வட்டத்தின் தென்பாகம்
இதில் நறையூர் நாடு	— கொழிஞ்சி வாடிப் பகுதி
10. காங்கய நாடு	— தாராபுரம் வட்டத்தின் வடபாகம்
11. மணலூர் நாடு	— கரூர் வட்டத்தின் தென் மேற்குப் பாகம்
12. வெங்கால நாடு	— கரூர் வட்டத்தின் கீழ் பாகம்
இதில் இடைப்பிச்ச நாடு	— முன்னூர், பரமத்திப் பகுதி
13. தலைய நாடு	— கருவூர் வட்டத்தின் தென்பாகம்
14. கிழங்க நாடு	— கருவூர் வட்டத்தின் குளித்தலை ஓரம், காவிரித் தென்கரைப் பகுதி
15. தட்டைய நாடு	— குளித்தலை வட்டத்தின் வடமேற்குப் பாகம்
16. ஒடு வங்க நாடு	— கோபி வட்டத்தின் வானியாற்றின் கரையோரப் பகுதி

இதில் தணநாயக்கன் நாடு	— சத்திப் பகுதியின் வானியாற்றின் கரை ஓரப்பகுதி
	அவிநாசி வட்டத்தின் வட கீழ்ப்பகுதி
இதில் பறம்பு நாடு	— நீலகிரி மலையின் வடபகுதி
இதில் படி நாடு	— கொள்ளே கால் வட்டம்
17. காஞ்சிக் கூவல் நாடு	— கோபி வட்டம், ஈரோடு வட்டம் சந்திக்கும் பகுதி
18. குறும்ப நாடு	— இது குறுப்பு நாடு என்றும் கல்வெட்டுக் கூறும். ஈரோடு வட்டத்தின் மேல் பாகம், கோபி வட்டத்தின் தென்பாகம்.
19. வடகரை நாடு	— வானியாற்றின் (பவானி) வடகரைப் பகுதி
20. அரைய நாடு	— ஈரோடு வட்டத்தின் தென் வட

1. (மேல் கரை அரைய நாடு) கீழ்ப் பாகம்
2. கீழ்கரை அரைய நாடு - நாமக்கல் வட்டத்தின் மேல் கோடிப் பாகம் (வாழவந்தி நாட்டுக்கு மேற்கில்)

21. பூந்துறை நாடு	— 1. மேல் கரைப் பூந்துறை நாடு - ஈரோடு வட்டத்தின் தென் வட நடுப்பாகம்

2. கீழ்கரைப் பூந்துறை நாடு - திருச்செங்கோடு வட்டத்தின் மேல் பகுதி.

கீழ்கரைப் பூந்துறை நாட்டின் இணை நாடுகள் பருத்திப் பள்ளி நாடும், ஏழூர் நாடும்.

1. பருத்திப் பள்ளி நாடு - நாமக்கல் வட்டத்தின் வடமேற்குப் பகுதியும்,

திருச்செங்கோடு வட்டத்தின் வட கிழக்குப் பகுதியும்

2. ஏழூர் நாடு - நாமக்கல் வட்டத்தின் (எழுகரை நாடு) வட, மேற்குப் பகுதி.

22. வாழ வந்தி நாடு — நாமக்கல் - வேலூர், மோகனூர் - வேலூர்ப் பெருவழிகளுக் கிடைப்பட்ட பகுதி

இதில் தூசூர், விமலை நாடுகளும் அடங்கும்.

1. தூசூர் நாடு - நாமக்கல் - துறையூர் வரை

2. விமலை நாடு - மோகனூரைச் சூழ்ந்த காவிரியாற்றங்கரைப் பகுதி

23. இராசிபுர நாடு — இராசிபுர வட்டம்

இதில் சேலம் நாடு அடங்கும். சேலம் நாடு - சேலம் வட்டம்

24. பூவானிய நாடு — திருச்செங்கோடு வட்டத்தின் வட பகுதியும், ஓமலூர், தருமபுரி, அரூர் வட்டங்களும், ஓசூர் கிருஷ்ணகிரி வட்டங்களின் தென் பகுதியும்.

இதில், நங்கை வல்லி நாடு. (வஞ்சி நாடு), பக்க நாடு, பெரும்பாலை நாடு அடங்கும்

1. நங்கை வல்லி நாடு — ஓமலூர் வட்டம் நங்க வள்ளியைச் (நங்கை வல்லி) சார்ந்தது.

2. பக்க நாடு (வெள்ளாறு நாடு) — சுவேத நதியும் வசிட்ட நதியும் சேரும் இடம்

ஆற்றூர் வட்டத்தின் கீழ்ப்பாகம்

3. பெரும்பாலை நாடு — தருமபுரி வட்டம் பெரும் பாலை எனும் ஊர் சூழ்ந்த பகுதி. கொள்ளே கால் பகுதியும் இதனுள் அடங்கும்.

1956-க்கு முன் கொள்ளே காலம் கோவை மாவட்டத்தோடு சேர்ந்திருந்தது. இன்று கன்னட நாட்டிற்குச் சேர்ந்துள்ளது.

இவை பழந்தமிழகத்தில் இருந்த நாட்டுப் பிரிவுகள் அல்ல. இடைக் காலத்திலும், கல்வெட்டுக் காலங்களிலும் ஏற்பட்ட பெயர்கள். கொங்கு மண்டல சதகமும், கல்வெட்டும் இப்பெயர்களில் சிலவற்றைத் திரித்தும், மாறுபடவும் கூறும்.[2]

2. கொங்கு நாட்டு வேளாளர் - எஸ்.ஏ.ஆர்.சின்னுசாமிக் கவுண்டர்.

6. பழைமையான கொங்கு மக்கள்

இருபத்து நான்கு நாடுகளாகப் பிரிக்கப்பட்ட கொங்கு நாடு, இன ஆட்சி முறைக்காகப் பின்னரும் உள் நாடுகளாகவும், இணை நாடுகளாகவும் பிரிக்கப்பட்டன. இந்நாடுகள் 'நாட்டுத் தலைவர்'களின் கீழ் ஆளப்பட்டு வந்தது. நாட்டுத் தலைவர்கள் 'நாட்டார்' எனப்பட்டனர். இவர்களின் வழி வழி அதிகாரம் கொங்கு வேளாளப் பெருங்குடி இனத்தைச் சேர்ந்ததே ஆகும். 'நாட்டார்' என்னும் பெருமை கருதி அழைக்கும் சொல்லைக் கொண்டு 'ஆறு நாட்டார் மலை' என்பது புகலூரை அடுத்து இன்றும் உள்ளது.[1]

கொங்கு வேளாளர் திருமணங்கள் குடித்தலைவர்களான 'நாட்டார்' முன்னிலையில் தான் நடந்திருக்கின்றன. கொங்கு நாட்டார் மங்கல வாழ்த்திலும்

'நட்டு முட்டுத் தான்முழங்க
நாட்டார் சபை விளங்க...[2]

என்று வருவதாலும், நாட்டார் வராத காலத்தில் 'நாட்டுக் கல்லை' நட்டு அவர்கள் முன் மணமக்கள் வாழ்த்துப் பெறும் சடங்கும் நிகழ்ந்தும் வருகின்றன.

இருபத்து நான்கு நாட்டு, நாட்டுத் தலைவர்களும் ஆண்டுக்கொரு முறை கூடியிருக்கிறார்கள். 'இந்திரன் ஓலக்கம் (கொலு மண்டபம்) போல் இருந்த பெரிய நாடே' என்பது ஏரெழுபது.[3]

---

1. ஆறு நாட்டார் மலை - புகலூர்க கல்வெட்டு, 2. கொங்கு நாட்டு வேளாளர் - மங்கல வாழ்த்து, 3. ஏரெழுபது.

கொங்கு வேளிராகிய வேளாளர்கள் கூட்டங்களுக் கேற்பக் காணி உரிமை பெற்றவர்களாவர். காணி உரிமை நாடாளும் உரிமை. இன்றும் தங்கள் காணியை விட்டு வேறிடங்களுக்குச் செல்கின்றவர்களும், சென்றவர்களும் ஆண்டுக்கொரு முறையாவது தங்கள் காணிக்குச் சென்று காணித் தெய்வமான அம்மனுக்கு வழிபாடு செய்து, காணி உரிமையைப் போற்றி வருகின்றனர். காணியைக் காப்போர் 'காணியாளர்' என்றும் 'காணியாளக் கவுண்டர்' எ ன்றும் அழைக்கப்பட்டனர்.

வே ள் — வேளாளன் — வேளிர்

வேள் என்றால் - உதவி, உதவுபவர் என்று பொருள். 'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' என்பது திரிகடுகம்[4]

வேளாளர் என்பது தொழில் பற்றிய பெயரே அன்றிக் குலம் பற்றிய பெயர் அன்று. குடித்தொழில்களான தச்சு, கொல், வெளுத்தல், மழித்தல் முதலியன தொழிலால் வேறுபட்டனரே அன்றிக் குலத்தால் வேறுபட்டனர் அல்லர். ஒவ்வொரு தொழிலும் ஒன்றுக்கொன்று உதவுந் தொழில்களே. எல்லாத் தொழிலாளரும் வேளாளரே (உதவி செய்பவரே) ஆவார்கள். உழுதுண்டு வாழ்வார் உழவர், வேளாளர் எனப்பட்டனர். உழவன் தொழிலால் சிறப்புக் கருதி வேளாளர் உயர்வு படுத்தப்பட்டனர்.

பண்டு கொள்வினை, கொடுப்பு வினைகள் எல்லாத் தொழில் செய்வோரிடையும் இருந்தது. பின்னர் அது குலப் பிரிவினையாக உருவாயிற்று! பின்னர் சாதியாய், நால் வருணமாய் வந்தேறிகளால் பாகுபடுத்தப் பட்டனர்.

பண்டைய அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பன தொழில் பற்றிய பிரிவுகள். ஏனைய மூன்று இனத்திலும் துறவு

4. திரிகடுகம்

பூண்டோரே அந்தணர் எனப்பட்டனர். அவர்கள் மூதறிஞராக விளங்கி இருந்தனர்.

வேளாளர் வணிகம் செய்வதும், அரசர்கள் உழவு செய்வதும், வணிகர்கள் உழவு செய்வதும் தொழில் மாற்றங்கள். இன்றைய சாதி போல நிலையான பாகுபாடு அல்ல.

எத்தொழிலிலும் இரண்டு நிலைகள் உண்டு. உழுதுண்டோர் - உழுவித் துண்போர்; வணிக முதலாளர் - தொழிலாளி. ஆட்சியர் - ஆளப்படுவோர் எனப்பட்டனர். அரச மரபு, வணிக மரபு, வேளாளர் மரபு என்று தந்தைக்குப் பின் மகன் என்ற மரபு முறை ஏற்பட்டது. எனினும் மண உறவு முறைகளில் வேற்றுமை இல்லாது இருந்தனர்.

'மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்
கீழோர்க் காகிய காலமும் உண்டே[5]

(கற்பு: 3)

என்னும் தொல்காப்பியர் கூற்றால் பெறப்படுகிறது. காலமும் உண்டே என்பதால் தொல்காப்பியருக்கு முன்னரே உழுதுண்டோரை - தொழிலாளரை ஏனைய மூவரும் விலக்கி, கொள்வினை கொடுப்பினை போன்ற மண முறைகளைச் செய்தனர். வள்ளுவரும் 'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்[6] என்றாலும் இவ் வேற்றுமை பின்னர் ஏற்பட்டு விட்டது.

பிற்காலத்தில் வேளாளர் கங்கை குலத்தினர் என்றும், ஆடை நெய்வோர் முதலியார், செங்குந்தர் என்று புராணம் தழுவியும், தச்சு, கொல் முதலிய தொழில் செய்வோர் புராண வழி மரபு கூறி, ஆச்சாரி போன்ற தமிழ் மரபுக் கொவ்வாத பட்டப் பெயரைச் சூடிக் கொண்டனர்.

5. திருக்குறள் : உழவு
6 திருக்குறள்· உழவு

இங்ஙனம் மாறுபட்ட, வேறுபட்ட குலங்களும் மண முறைகள் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. பிள்ளைமார் கருணீகர் என்னும் புராண மரபுப் பெயரை வைத்துக் கொண்டனர். கோயிற் பணி செய்வோர் பண்டாரம். பண்டாரம் என்றால் கோயில் கருவூலக் காப்பாளர் என்பது. இவர்களையும், கோயிலை ஆண்டு வந்ததால் ஆண்டி, கோயிலாண்டி என்னும் அழைக்கப்பட்டு வந்ததை பிற வேளாளர்கள் இழிவாக்கி, அவர் நிலை தாழ்த்தினர். இவர்களிடையேயும் மணத் தொடர்பு அறுந்தது!

கோயில் இறைபணி செய்து வந்தோர் குருக்கள் எனப்பட்டனர். இவர்கள் வேளாளரில் ஒரு பிரிவினர். வேளாளர்களைப் போலவே இவர்களுக்குக் குல தெய்வம் அத்தனூர் அம்மனைப் போன்ற அம்மன்களே! இந்தக் குருக்களின்றும் வேறுபட்டவர்கள் ஆரியப் பார்ப்பனர்கள் என்னும் பிராமணர்கள்.

இங்ஙனம் படிப்படியாக, ஒன்றுபட்டிருந்த தமிழினம் சாதி சாதியாகப் பிரிந்து, பிறப்பிலேயே வேறுபட்டவர் எனப் புராணங்கள் கூறி, சிதறச் செய்தனர்.

கொங்கு நாட்டுப் பழங்குடி மக்களாகிய வேளாளர், கவுண்டர் என்னும் பட்டப் பெயரை உடையது போலவே, இவரின் பங்காளிகளான வேட்டுவரும், படையாட்சியரும் கவுண்டர் என்னும் பட்டப் பெயரையே கொண்டிருக்கிறார்கள். கவுண்டர் - தலைவர்;[7] கவுண்டு, கவுண்டிக்கை - அதிகாரம். கவுண்டர் காணியாட்சி உரிமை உடையவர்கள். காவுண்டு வீரத்தைக் காட்டியவர்கள் என்றும் கூறுவார்கள். வேட்டுவர்களும் காணி உரிமை பெற்றவர்கள். கொங்கு நாட்டில் படையாட்சியர் காணி உரிமை பெறவில்லை.

7. கவுண்டர் - தலைவர் புலவர்குழந்தை (கொங்குநாடு பக்.70)

7. கொங்கு வேளிர் / வேளாளர்

'கொங்கு நாட்டுப் பூர்வீகக் குடிகளாக இருந்தவர்கள் கொங்கு வேளாளர்களே! சில வரலாற்று ஆசிரியர்கள் எண்ணுவது போல், இவர்கள் வேறிடத்திலிருந்து வந்து கொங்கு நாட்டில் குடியேறியவர்கள் அல்லர். சங்க காலத்திலிருந்தே கொங்குப் பிரிவு ஏற்பட்டதிலிருந்தே இங்கேயே வாழ்ந்து வருபவராவர். அப்பிரிவு ஏற்படா முன்னரும் இப்பகுதியிலேயே வாழ்ந்து வந்த பழந்தமிழ்க் குடிமக்களே ஆவர். கொங்கு தனி நாடாகத் திகழ்ந்ததன் பின் நிலைத்த குடிகள் ஆயினமையால் 'கொங்கு வேளாளர்' எனப் பட்டனர் எனக் 'கொங்கு நாடு' நூல் புலவர் குழந்தை அவர்கள் கூறுவார்.[8]

இன்றும் 'கொங்கு' என்று கூறும்போதே காணியாளர் சிறப்புக் கருதி 'வேளாளர்' என்னும் சொல் இயைந்து வருவதை அறியலாம். பிற குடியினரும் கொங்கு என்றாலே வேளாளர்க்கு உரியது என்று கருதுவர்.

இனிப் பிற சோழ, பாண்டிய, தொண்டை, துளு நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள் தங்களைச் சோழிய வேளாளர், பாண்டிய வேளாளர், தொண்டை மண்டல வேளாளர், துளுவ வேளாளர் என்றே கூறிக் கொள்வதால் கொங்கு வேளாளர் இம் மண்ணின் மைந்தர்கள் எனப் பெறும். மேலும் பிற மொழியினரான தெலுங்கரும், கன்னடரும் கொங்கு வேளாளரைக் கொங்கு வாளு, கொங்க வாடு - என்று அழைப்பதனாலும் இதை உறுதிப்படுத்தும்.

8. கொங்கு நாடு - புலவர் குழந்தை

கொங்கு நாட்டுக்குரிய வேளாளர்கள், 'வேளாளக் கவுண்டர்' என்றாலே இவர்களை மட்டுமே குறிக்கும்.

மேலும் கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்கப் பாடல்களில் கொங்கு, கொங்கர், கொங்கர் நாடு எனக் குறிக்கப்படுவதையும் காண்கிறோம்.

'கொங்கர் ஆபரந் தன்ன'[9] (பதிற்: 77)
'ஆகெழு கொங்கர் நாடு'[10] (பதிற்: 22)
'வன்புலம் துமியப் போகிக் கொங்கர்[11]
படுமணி ஆயம் நீர்க்குநிமிர்ந்து செல்லும்'
(அகம்: 79)

என நூற் சான்றுகளாலும் அறியக் கிடக்கிறது.

அதியன், பழையன், ஓரி, குமணன், பாரி, பேகன், விச்சிக்கோ என்போரெல்லாம் சங்க காலக் கொங்கு மன்னர்கள். இவர்கள் 'வேளிர்' என்னும் கொங்கு வேளிர் குடிக்கண் பிறந்த குறுநில மன்னர்களே ஆவர். கொண் கானங் கிழான், ஈர்ந்தூர்க்கிழான் - என்போரெல்லாம் கொங்கு வேளாளப் பழங்குடியினரே யாவர். கிழார் என்றாலே நிலத்திற்கு உரிமை உடையவர் என்பது பொருள். இவர்கள் 'கொங்கு வேளாண் மரபைச் சார்ந்தவர்களே!

வேழம் உடைத்து - சேர நாடு
சோறு உடைத்து - சோழ நாடு
முத்து உடைத்து - பாண்டிய நாடு
சான்றோர் உடைத்து - தொண்டை நாடு
ஆ. (பசுக்கூட்டம்) உடைத்து - கொங்கர் நாடு

9. பதிற் : 77
10. பதிற் : 22
11. அகம் : 79
12. தனிப்பாடல்

என்றும் ஐந்து நாடுகளின் சிறப்பைக் கூறுவார்கள். 'மேழிச் செல்வர்' என்பதே கொங்கு வேளிரைக் குறிக்கும். மேழி - கலப்பை. உழுவதற்கு எருதுகள் இன்றியமையாதது.

மற்றும் கொங்கு வேளாளரில் குலங்கள் — அதாவது கூட்டங்கள் தனிச் சிறப்புடையன. இவை பழைய மரபுப் பெயர்கள். தொன்று தொட்டு வழங்கி வருகின்றன. இவ்வகைக் கூட்டப் பெயர்கள் சங்க கால முதல் வழங்கி வ ரும் பெயர்களாகும்:

1. ஆந்தை
2. காடை - பறவைப் பெயர்கள்
3. அந்துவன் (கறையான்)
4. செல்லன் (செல்-உழு) - உயிரினப் பெயர்
5. மாடன் - விலங்குப் பெயர்
6. பயிரன்
7. தூரன்
8. பண்ணை
9. கீரன் (கீரை)
10. ஈஞ்சன் - மரப்பெயர்கள்
11. பொன்னன்
12. பவளன்
13. மணியன் - பொன் மணிப் பெயர்கள்
14. பில்லன் - நிறப் பெயர்கள்
15. வண்ணக்கன்
16. கண்ணன்

17. செங்கண்ணன் - உறுப்புப் பெயர்கள்
18. பூதன் - பெருமை குறிக்கும் பெயர்
19. சாத்தந்தை - சாத்தன்+தந்தை
20. கொற்றந்தை - கொற்றன்+தந்தை
21. கண்ணந்தை - கண்ணன்+தந்தை
22. கீரந்தை - கீரன்+தந்தை
23. பொருளந்தை - பொருளன்+தந்தை
24. பூந்தை - பூதன்+தந்தை

19-24 வரையுள்ள பெயர்கள் குடி வழியையும், முன்னோர் குறித்தும் வந்த தொடர் அல்லது கூட்டுச் சொற்கள் ஆகும்.

இவற்றுள் 1,3,8,9,15,16,17,18,19,22 என்பன சங்க காலப் புலவர்களின் மரபுப் பெயர்களாகும்.

1. அஞ்சில் ஆந்தையார், பிசிராந்தையார்
2. நல்லந்துவனார்
8. நப்பண்ணனார்
9. அந்தியினங் கீரனார் மூலங்கீரனார்
15. வடம வண்ணக்கன் வண்ணக்கன் - அறச்சலூர் கல்வெட்டு,
16. கண்ணனார், கொல்லிக் கண்ணனார், சேந்தங் கண்ணனார்

17. செங்கண்ணனார்

மதுரைச் செங்கண்ணனார்

18. இளம்பூதனார்

சேந்தம் பூதனார்

19. சாத்தந்தையார்

20. கீரந்தையார்

இளங்கீரந்தையார்[13]

இவர்கள் எல்லாம் கொங்கு வேளாண் குடிப் புலவர்களே ஆவர். அக்காலத்தில் புலவர்களின் வாழ்வியற்படி கொங்கு நாட்டினின்றும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்றும் வாழ்ந்தவராவர். கொங்கிலிருந்து சென்று, ஈழத்தில் வாழ்ந்து, மதுரைக்கு வந்தவர் மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் என்பர்.

வரலாற்றாசிரியர்கள் பலர் பழங்குடிகளை நோக்கிப் பார்க்காது 'எங்கிருந்து இவர்கள் வந்தவராக இருக்கலாம்?' என வினாவெழுப்பி ஆய்ந்ததன் காரணமாகவே 'கொங்கு வேளாளர்' வேற்று நிலத்தினர், குடியேறியவர்கள் எனப் பிழைபடக் கூறினர். இதற்கு இலக்கியச் சான்றோ, கல்வெட்டுச் சான்றோ பிற சான்றுகளோ இல்லை, இல்லை!

கொங்கு நாட்டு வேளாளர்கள் எல்லோரும் தமிழ் மரபினரே யன்றி, அயல் மரபினர் அல்லர் என்பதைக் கொங்கு நாட்டுப் பழங்குடி மக்கள் உய்த்துணர வேண்டும்.

13. சங்கப்புலவர்கள் ஆராய்ச்சி - ஔவை சு. துரைசாமி பிள்ளை

8. கொங்கு — தன்னாட்சி நாடு

பழங்காலத்திலிருந்தே சேர, சோழ, பாண்டியர் ஆண்டது தமிழகம். இத் தமிழகத்தில் கொங்குப் பகுதி பல குறுநில மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. பல சமயங்களில் இது சோழர்களாலும், பாண்டியர்களாலும், சேரர்களாலும் சில பகுதிகள் ஆளப்பட்டிருந்தாலும் பெரும் குறுநில வேந்தர்கள் தனித்த ஆட்சி உரிமை உடையவர்களாகவே இருந்திருக்கிறார்கள்.

பழங் கொங்கு, அதிக மான் நெடுமான் அஞ்சி போன்றவர்களால் ஆளப்பட்டது. இவன் ஆட்சிச் சிறப்பினை ஔவையார் பல படப் பாராட்டியுள்ளார்.[1]

சங்க காலக் கொங்கு நாட்டு மன்னர்கள் தம்முட் பகை கொண்டவரில்லை. மூத்த குடிமகன் போலச் செங்கோலாட்சி செய்து வந்தனர். மூவேந்தருடன் நட்பும், படைத் துணையும் நல்கி வந்ததோடு, பெண் கொடுத்தும், பெற்றும் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

பெரும்பாலைக் கணவாய் வழியே வந்த ‘வம்ப மோரியர்களை’ கொங்கு மன்னர்கள் தடுத்து நிறுத்தியிருக்கின்றனர். அதிகன் படைத் துணையே தாம் போரில் வெல்வதற்குக் காரணமாயிற்றென்று ஒரு சோழ மன்னன் கூறியிருக்கின்றான்.

பசும் பூண் பாண்டியன் கி.மு. இரண்டாம் நூற்றாண்டினன். இவன்,

1. ஔவையார் : 87,88,89,90,91,92,93,94 முதலியன.

வாடாப் பூவின் கொங்கர் ஒட்டி,

நாடு பல தந்த பசும் பூண் பாண்டியன்[2] என்று கூறப்படுகிறான்.

(அகம்: 253)

சேரன் செங்குட்டுவன் (கி.பி. 125-180) 'கொங்கர் செங்களத்திவ்[3] (சிலம்பு: 25:158) வென்றவன். (செங்களம் - இன்று செங்குளம்)

இளங்கோவடிகள்,

குடகக் கொங்கரும் மாளுவ வேந்தனும்[4]

(சிலம்: 30:159-60)

எனக் கொங்கு மன்னரைத் தனியாகவே குறித்துள்ளார்.

கொங்கே புகினும் கூறை கொண்டு

ஆறலைப் பாரிலை...[5]

(சுந்தரர்)

'கொங்கு நாடு கடந்துபோய்க்

குலவு மலைநாட் டெல்லையும்[6]

(பெரிய சேரமான்)

என இடைக்காலச் சுநதரரும், சேக்கிழாரும் கொங்கு நாடு தனி நாடு என்றே சுட்டியுள்ளதை அறியலாம்.

சங்க காலம் முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை கொங்கு தன்னாட்சிகள் உடைய நாடாகவே இருந்திருக்கிறது. சேரர்

2. அகம் : 253
3. சிலம் · 25-158 '
4. சிலம் : 30-159-60
5. சுந்தரர் - தேவாரம்
6. பெரிய - சேரமான் - சேக்கிழார்.

காலத்தில் சில போது வெற்றி பெற்றாலும் மீண்டும் தன்னாட்சி அமைத்தவர்களாகவே கொங்கு மன்னர்கள் இருந்திருக்கிறார்கள். இதுபோலவே சோழரும், பாண்டியரும் பிடித்தாலும் கொங்கு நாட்டை அவர்கள் நீண்ட காலம் ஆளவில்லை. மறு எழுச்சி பெற்றுப் போரிட்டு மீண்டும் கொங்கர் ஆட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பல் யானைச் செல் கெழு குட்டுவன், களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரல், சேரன் செங்குட்டுவன், பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை என்னும் சங்க காலச் சேர மன்னர்கள் கொங்கு மன்னர்களை வென்றதாகப் பதிற்றுப் பத்து[7] (22,32,8 பதிகம் 88) கூறுகிறது. கொங்கு மன்னர்கள் தனியாட்சியராக இருந்த போது தானே அவர்கள் வென்றிருக்க முடியும்.

வராக மிகிரர் தம் வடமொழி நூலில்,

'சேர சோழ பாண்டிய கொங்கு நாடுகள்[8] என்று

குறிப்பிட்டுள்ளார். (இவர் காலம் கி.பி:4 நூற்)

அசோகன் (கி.மு. 278-232) கல்வெட்டில் சோழர், பாண்டியர், கேரளர், சத்திய புத்திரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் சத்திய புத்திரர்.[9] என்போர் கொங்கு நாட்டு மன்னரே என்பார் வரலாற்று அறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் (சத்திய மங்கலம் - பெயர்க் காரணம் அறிக.) அத்தி, மத்தி போல சத்தி என்பவன் ஆண்டான். அவன் பெயரால் அமைந்த ஊர்.

கேரளோற்பத்தி என்னும் மலையாள நூலிலும், கேரள மான்மியம்[10] என்னும் வட நூலும் கொங்கு நாடு சேர நாட்டிற்குப் புறம்பான நாடு என்றே கூறுகிறது. திருவாங்கூர் சரித்திர ஆசிரியர்

7. பதிற்றுப் பத்து (22, 32, 8 பதிகம் 88)
8. வராகமிகிரர்
9. அசோகன் கல்வெட்டு - டாக்டர் இராசமாணிக்கனார் இலக்கிய வரலாறு
10. கேரள மான்மியம்

சங்குண்ணி மேனன் அவர்களும் கொங்கு நாடு தனி நாடு என்றே குறிப்பிட்டுள்ளார்[11] டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி என்பவரும் 'சேரன் வஞ்சி நூலி'ல் கொங்கு நாடு தனியாட்சி நாடென்று தக்க எடுத்துக்காட்டுக்களுடன் கூறியுள்ளார்.[12]

மேலும் சேர நாட்டுப் பழக்க வழக்கம், (கேரள மக்கள்) கொங்கு நாட்டுப் பழக்க வழக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்டது. எனவே அவர்கள் ஆட்சி வேறு; கொங்கு நாடர் ஆட்சி வேறு என்று உறுதியாகக் கூறலாம்.

11. சங்குண்ணி மேனன்
12. டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி

9. கொங்கு நாட்டின் பழமை

வரலாற்றுக்கு முந்திய காலம் (கி.மு. 2000 முன்) முதற்கொண்டு தமிழரும், தமிழரில் ஒரு பகுதியினரான கொங்கு நாடரும் வாழ்ந்து, ஆட்சி புரிந்திருக்கிறார்கள். இக்காலங்களைக் கற்காலம், செம்புக் காலம் (வெண்கலக் காலம்), இரும்புக் காலம் என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர்.

கொங்கு நாட்டுப் பகுதியில் மூன்றாம் கற்காலத் (இரும்புக் காலம்) திய பொருள்கள் நிரம்பக் கிடைத்துள்ளன. இவற்றின் வேலைப்பாடுகள் சிறப்பாக உள்ளன. உளி, சுத்தி, வாள், அம்பு போன்றவைகள் கிடைத்துள்ளன. கொங்கின் சேர்வராயன் மலை, கொல்லிமலை, கோதை மலை, பருகூர் மலையிலும் மேலும் கொடுமணல் போன்ற சமவெளிகள் பலவிலும் முதுமக்கட் தாழிகள் பல கிடைத்துள்ளன. அக் காலத்திலேயே நாகரீக முற்றவர்களாக விளங்கியுள்ளனர் என்பதை அகழ்வாராய்ச்சியால் அறிகிறோம். பல்வகை மணிகள், சாந்து, ஆடை முதலியவற்றையும் பயன்படுத்தி உள்ளனர்.

மேலும் இரும்புக் கருவிகளான கத்தி, குத்தீட்டி, மரப்பிடி கொண்ட ஈட்டி, அம்பு, மண்வெட்டியும்.

வெண்கலக் கருவிகளான கிண்ணம், செம்பு, கெண்டி, தட்டம், கரண்டி, சாடி, சலங்கை, வளையல், மாலையும், புலி போன்ற உருவங்களும், வேலைப்பாடுகளுடன் கூடிய மூடிகளும் கிடைத்துள்ளன.

இத்தகைய பழங் கற்கால மாண்டவர் குழிகளும், கற்கால மாண்டவர் குழிகளும் (முது மக்கட் தாழிகள்) பல இடங்களில்

கொங்கு நாட்டில் கிடைத்துள்ளன. பெருந் துறைக் கருகில் நல்லாம்பட்டியினும், அன்னூரை அடுத்த கஞ்சப் பள்ளியிலும், எல்லப்பாளையம், முத்துக் கோனான் பட்டியிலும், பேரூரிலும், போத்தனூருக்கருகில் வெள்ளலூரிலும், முட்டத்திலும் பல்லடத்துக்கருகில் கண்டியான் கோவிலிலும், உடுமலைக் கருகில் பூண்டியிலும், பொள்ளாச்சிக்கு அருகில் நாட்டுக்கல் பாளையத்திலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.[1]

சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் ப டுப்போர்

தாழ்வயின் அடைப்போர் தாழியில் கவிப்போர்[2]

(மணிமே: 6-66-7)

என்பது மணிமேகலை.

அக்காலத்தில் கணவனும் மனைவியும் ஒரே சமயத்தில் இறந்து பட்டால் ஒரே தாழியில் வைக்கும் வழக்கமும் இருந்திருக்கிறது.

நடுகல்:

வெட்சி முதலிய போர்களில் ஈடுபடும் போர் வீரர்களுக்கு, அவர் தம் புகழ் கருதி நடுகல் நட்டுவது பழம் வழக்கம். அக் கல்லில் அவ்வீரரின் உருவம் பொறித்து, பெயரும் பெருமையும் பொறித்து வந்தனர்.

'நல்லமர் கடந்த நாணுடை மறவர்

பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்

பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்[3]

(அகம்: 67)

1. கொங்கு நாடு - புலவர் குழந்தை பக்.90
2. மணிமே : 6-66-7
3. அகம் : 67

'நிரை (ஆநிரை) யிவட் டந்து நடுகல் ஆகிய
வெல்வேல் விடலை'[4]

(புறம்: 261)

'நெடுந்தகை
நடுகல் பிறங்கிய உவவிடு பறந்தலை'[5]

(புறம்: 134)

'என்னைமுன் நில்லன்மின் தெவ்விர், பலர் என்னை
முன்னின்று கல்நின்றவர்[6]

(குறள்:771)

இல்லிடு கள்ளின் நற்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லின் நாட்பலி யூட்டி
நன்னீராட்டி நெய்நறைக் கொளீஇ[7]

(புறம்: 329)

கன்நின்றான் எந்தை,
கணவன் களம்பட்டான்[8]

(புற.வெண் 176)

பழந்தமிழ் மக்கள் பத்தினிப் பெண்டிர்க்கு நடுகல் நாட்டி வழிபட்டனர் என்பது கண்ணகி வரலாற்றால் அறியலாம்.

4. புறம் : 261
5. புறம் : 134
6. குறள் 771
7. புறம் : 329
8. புற. வெண்: 176

கொங்கு நாட்டுத் தொல் குடியினர் வீரமாத்தி கோயில் கட்டி வழிபடுவது வீரக்கல் அல்லது மாசதிக் கல் என்கின்றனர். வீரமா பத்தினிக்கு எழுப்பப்பட்ட கோயிலே இது! 'ஆரஞருற்ற வீரபத்தினி' என்பது சிலப்பதிகாரம் (22-115)[9]

வணிகம்:

உள்நாட்டு வணிகர்கள் உப்பு போன்ற பல பொருள்களை வண்டிகளில் ஏற்றி ஊர்தோறும் விற்கச் சென்றுள்ளனர். இக் கூட்டங்களுக்குச் சாத்துக்கள் எனப்பட்டன. தமிழகத்திலும், குறிப்பாகக் கொங்கு நாட்டிலும் உழவு, கைத்தொழில் போலவே வணிகமும் சிறந்திருந்தது.

மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழர்கள், சீனம், சாவகம் முதலிய கிழக்கு நாடுகளுக்கும், பினிசியா, சிரியா, சால்டியா, எகிப்து, கிரேக்கம், பாபிலோன், உரோம், பாரசீகம், அரேபியா முதலிய மேற்கு நாடுகளுக்கும் வணிகத் தொடர்பும், கடல் தொடர்பும் கொண்டிருந்தனர்.

கொங்கு மலை நிலப்பகுதியிலிருந்து, தங்கம், வெள்ளி, இரும்பு, சங்கு, யானைத் தந்தம், மயில், தோகை, ஆமை, கிளி, குரங்கு, மாடு, தோல், ஆட்டு மயிர், ஆடை வகை, மிளகு, ஏலம், கிராம்பு, சாதிக்காய், இஞ்சி, திப்பிலி, அரிசி, வெல்லப்பாகு, தீம்புளி, பாக்கு, எண்ணெய் வகை, சந்தனம், அகில், கருங்காலி, மட்கலங்கள் - முதலிய பல்வேறு வகைப் பொருட்கள் தமிழகத்தின் கீழக்கரைத் துறைமுகங்களிலும், மேலைக் கடல் துறை முகங்களிலும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இன்றும் பல தமிழ்ச் சொற்கள் அங்கு வழக்கத்தில் உள்ளன:

தோகை - துகி - சிரியா

9. சிலப் : 22-115

அகில் - அகல் - எபிரேயம்

கவி - கபிம் - ஹீப்ரு

அரிசி - அரிஜா -

இஞ்சி - ஜிஞ்ஞர் - கிரேக்கம்

இஞ்சிவேர் - ஜிஞ்சிபார்

கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன் பாபிலோனியா நாட்டில் ஊர் ஏயா என்னும் மன்னனால் சால்டியா நாட்டின் தலைநகரான ஊர் (பக். 218) என்னும் நகரில் சேர, கொங்கு நாட்டுத் தேக்கு மரத்தினால் திங்கட் கோட்டம் கட்டப்பட்டதாக பி.டி.எஸ். அய்யங்கார் தம் தமிழ் வரலாற்றில் கூறுவார்.[10]

கொங்கு நாட்டுத் திமிலை உடைய எருதுகள் பாரசீக வளைகுடாவுக்கு அனுப்பப்பட்டதாக டாக்டர் இராசமாணிக்கனார் தம் இலக்கிய வரலாறு - கூறுவார்.[11]

கி.மு. 8000 ஆண்டுகளுக்கு முன்னரே, சேலத்து எஃகினால் செய்யப்பட்ட சுத்தி, உளி, கத்தி முதலியவற்றை எகிப்து நாட்டுச் சிற்பிகள் பயன்படுத்தினார்கள் என்று ஆராய்ச்சி வல்லுநர்களான ஜே.எம். கீத் என்பவரும், சர்.ஜே.ஜே. வில்கின்சன் என்பாரும் கூறியுள்ளனர்.[12]

தமிழ்நாட்டில், குறிப்பாகக் கொங்கு நாட்டில் கருவூரில் உரோமானிய நாணயங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. கி.மு. 4 ஆம் நூற்றாண்டு முதல் அலெக்சாண்டரால் உருவாக்கப்பட்ட அலெக்சாண்டிரியா நகர் வெளிநாட்டு வணிகத்தில் சிறந்திருந்தது. அகஸ்டஸ் மன்னன் காலத்திலும் இவ்வணிகம் தொடர்ந்தது. உரோமானியக் காசுகள், மண்பாண்டங்கள் சென்னிமலையை

10. பி.டி. எஸ். ஐயங்கார் - தமிழ் வரலாறு
11. டாக்டர் இராசமாணிக்கனார் - தமிழ் இலக்கிய வரலாறு - பக்.45
12. ஜே.எம்.கீத் - சர்.ஜே.ஜே.வில்கின்சன்

அடுத்த கொடுமணல் அகழ்வாய்விலும், கருவூர் ஆன் பொருளை நதிக்கரையிலும் மற்றும் வெள்ளலூர், முட்டம், காளியண்ணனூர், கஞ்சப் பள்ளி, இரும்பொறை போன்ற இடங்களிலும் கிடைத்திருப்பதே வெளிநாட்டு வணிகத்திற்குரிய சிறப்பு ஆதாரங்களாகும்.

அகஸ்டஸ் (கி.மு. 44-14) முதல் கான்சடான் (கி.பி. 323-337) வரையுள்ள உரோமானிய மன்னர்களின் (11) காசுகள் வெள்ளலூர், கருவூர், கலயமுத்தூர், கண்ணனூர் - முதலிய இடங்களில் கிடைத்துள்ளதாகக் கொங்கு நாட்டு வரலாற்றில் - கோவைக்கிழார் அவர்கள் கூறுவார்கள். [13] இவை பெரும்பாலும் பொன்னினால் ஆனவை. கிரேக்கர்களை - யவனர் என்றும், உரோமானியர்களை - சோனகர் என்றும் அழைத்தனர்.

13 கோவைக் கிழார் - கொங்கு நாட்டு வரலாறு

10. கொங்கு நாட்டின் பெருமை

எந்தவொரு நாட்டின் பெருமைக்கும், சிறப்புக்கும் அவ் வந்நாட்டில் தோன்றிய புலவர் பெருமக்களே காரணமாவார்கள். பழந்தமிழ்ப் புலவர் பெருமக்கள் தொன்று தொட்டு, வாழையடி வாழையாகத் தோன்றி காலந்தோறும் சமுதாயத்திற்காகப் பாடிக் கொடுத்துச் சென்றிருக்கிறார்கள். 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்னும் பாட்டுத் தொடர் சான்றோர் நிறைந்த நாடு தொண்டை நாடு என்கிறது.

புலவர்களைப் பெருஞ்சிறப்போடு போற்றியிருப்பதைச் சங்கப் பாடல்களால் அறியலாம். மன்னர்களும், வேளிர்களும் தங்கள் அவைக்களங்களில் புலவர் குழாமை வைத்துப் போற்றியிருக்கிறார்கள் என்பதை புறம், பத்துப்பாட்டு, பதிற்றுப் பத்தால் அறியலாம்.

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவ னாக

உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்

புலவர் பாடாது வரைகஎன் நிலவரை[1]

(புறம்: 72)

என்று தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் கூறிய கூற்றிலிருந்து, புலவர் தம் பாடல் பெறுவதையும், மாங்குடி மருதன்

1. புறம் : 72

புலமைக் களத் தலைவராக இருந்ததையும் அறிகிறோம். இவன் காலத்துத் தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவர் இவர்.

கடைச் சங்கத்தின் நடு, இறுதிக் கால நூல்களாகப் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூல்களைக் குறிப்பிடுவார்கள்.[2] இத்தொகுப்பு நூல்களுள் இடைச் சங்க காலத்துப் பாடல்களும் அடங்கியிருக்கின்றன. சங்க காலத்துப் புலவர்கள் தமிழகத்தின் பல ஊர்களிலும் வாழ்ந்தவராவர்.

அவர்களில் பெரும்பாலோரின் நாடு, ஊர்களை அறிய முடியாதவர்களாக இருக்கிறோம். பல புலவர்களுடைய இயற்பெயர் கூடத் தெரிய முடியவில்லை. இவர்களில் தேடிக் கண்டுபிடித்த அளவில் கொங்கு நாட்டில் 60-க்கும் மேற்பட்ட புலவர் பெருமக்கள் இருந்திருக்கிறார்கள். (அவர் தம் பட்டியலும் புறப்பாடல்களும் இந்நூலின் பிற்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. அப்பட்டியலால் யார், எவர் என அறியலாம்.)

தமிழகம் - கொங்கு இழந்தவை:

1956 - இல் சென்னை மாநிலமாக இருந்தது மொழி வழி மாநிலமாகப் பிரிக்கப்பட்டது. ஆந்திரம், கர்நாடகம், கேரளம் என மூன்றாகப் பிரிய தமிழகம் தனி மாநிலமாயிற்று.

தமிழகம் தனி மாநிலம் ஆயினும் தமிழகம் இழந்தவை மிகுதியான நிலப்பகுதிகள். தொன்று தொட்டு நம் தமிழகத்தின் வட எல்லை வேங்கடம். ஆனால் 1956-க்குப் பிறகு, எல்லைப் பிரிப்பால் வேங்கடத்திற்குத் தெற்கில் 300க்கும் மேற்பட்ட ஊர்களும் நிலமும் சித்தூர், காளத்தி உள்ளிட்ட பகுதி ஆந்திரத்திற்குச் சென்றன. வேலவன் குன்றம் வரைக்கும் அவர்கள் ஆக்கிரமித்தனர்.

2. டாக்டர் மா. இராசமாணிக்கனார் - கால ஆராய்ச்சி

கோவை மாவட்டத்தின் கொள்ளே கால வட்டப் பகுதி கர்நாடக மாநிலத்திற்குச் சென்றது. கொங்கு நாட்டிற்கு உடைமையான கொள்ளே காலம் மைசூர் மாநிலம் (பிறகு கர்நாடகம்) கொள்ளை கொண்டு விட்டது.

இது மட்டுமல்ல, பாண்டி நாட்டின் தென் மேற்குப் பகுதியான தேவி குளம், பீர் மேடு , செங்கோட்டையின் ஒரு பகுதி, தோவாளை போன்ற பகுதிகளும் மலையாள நாட்டிற்குச் (கேரளம்) சென்றது. பின் போராட வேண்டி வந்தது.

இப்படிப் பெருந்தன்மை கருதி இருந்த தலைவர்களால் நிலமிழந்த பகுதி மிகுதி.[3]

பழங்காலத்திய மைசூர்ப் பகுதி தமிழகத்தைச் சேர்ந்ததாகவே இருந்தது. மைசூர்ப் பகுதி கங்க நாடு என்று அழைக்கப்பட்டது. அது கொங்கு நாடு என்பதன் மறு வடிவமே ஆகும். நன்னன் ஆண்ட கொண்கானமே கொங்கணம் - கங்கணம் - கங்கநாடு ஆயிற்று! முன்பு, மைசூர்ப் பகுதியை விட கொங்குப் பகுதி என்றனர். தென் கன்னட மாவட்டம் அடங்கிய மேற்கடற்கரைப் பகுதி - மேல் கொங்கு நாடு என்று குறிக்கப்பட்டது. இன்றைய சேலம், கோவை பகுதி, வட ஆர்க்காட்டின் மேல் பகுதி ஆகிய மூன்று பகுதிகளும் சேர்ந்த பகுதிகளைப் 'பெருங்கொங்கு' நாடாக இருந்தது என்பர் கா. அப்பாதுரையார்.[4]

மைசூர் நாட்டின் பழம பெயா - எருமை நாடு. எருமையூா அதன் தலைநகர். தமிழ் கன்னடக் கல்வெட்டுக்கள் 'எருமை நாடு' என்றே கூறுகின்றன. எருமை வெளியனார் (புறம்: 273) இந்நாட்டுப் பகுதியைச் சார்ந்தவரேயாவர்.[5] எருமை - மருத

3. பல தமிழறிஞர்கள் மு.வ. போன்றவர்கள் அரசியல் தலைவர்கள் ரசீத, ம.பொ.சி. இ.நேசமணி போன்றவர்கள்.

4. அப்பாதுரையார் - ஹைதர் அலி - 7

5. புறம் : 273

நிலத்திற்குரிய விலங்கு, கால்நடை. மைசூர் மா நிலம காவிரியால் வளம் பெற்ற நாடு அல்லவா? மை - எருமை மை+ஊர் = மையூர் - மைசூர் எனவாயிற்று.

கொங்கு நாட்டிற்கும், சேர நாட்டிற்கும் இடையே உள்ள மேற்குத் தொடர்ச்சி மலை தெற்கே பொதிய மலையில் (பாண்டிய நாடு) தொடங்கி வடக்கே மராட்டிய மாநிலத் தபதி ஆற்றுவரை செல்கிறது. இது 1000 கல் நீண்டது. இம்மலைத் தொடரில் உள்ள பாலக்காட்டுக் கணவாய் 20 கல் அகலமுடையது. பாலக் காட்டுக்குத் தெற்கிலுள்ள மலை தென் மலை எனவும், வட பகுதியில் உள்ள மலை வடமலை எனவும் வழங்கி வந்தது. பாலக் காடு என்பது பாலைக்காடு என்பதாகும். இது முதல் மேலைக் கடல் படி ஞாயிறு வரைக்கும் இருந்த தமிழ் நிலம், வாழ்ந்த தமிழர்களே திரிந்ததால் மலையாளம் எனும் கேரள நாடாயிற்று. இங்ஙனமே கருநடம் - கன்னடம் ஆயிற்று.

11. கொங்கு நாடரின் வீரமும் புகழும்

தமிழ் நாடும் அதனுள் ஒரு பகுதியமான கொங்கு நாளும் வீரத்திற்குப் புகழ் பெற்றது. மறக்குடி மக்கள் நிறைந்த மண்ணகம். ஆடவர், பெண்டிரின் வீரம் இலக்கியத்தால் பாராட்டப்பட்டது.

ஒரு நாட்டு வரலாற்றில் வீரம் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளதை உலக வரலாற்றிலும், தமிழர், கொங்கு நாட்டு வரலாற்றிலும் பார்க்கிறோம். ஒரு நாட்டின் பெருமையும் புகழும் அந்நாட்டு மன்னர், மறவர்களின் வீரத்தாலேயே ஏற்பட்டுள்ளது. இத்தகு நாட்டையே 'நன்னாட்டின் முன்னாட்டும் நாடு'[6] என்று புலவர்கள் போற்றிப் புகழ்ந்தனர்.

பழந்தமிழ் நூல்களான புறநானூறு, பதிற்றுப்பத்து முதலியவை நம் முன்னோர்களின் வீரத்தை உள்ளங்கை நெல்லிக் கனியாகக் காட்டிக் கொண்டிருக்கின்றன. அக்காலத்தில் அகமல்லாத அனைத்தும் புறமாகவும், போரெடுப்பாகவும், அதனால் விளையும் பயனாகவுமே கண்டனர். புலவர்களும் புற வாழ்வின் பெருமையைப்' போரை விதந்துரைத்தனர்.

தொல் இலக்கணமான தொல்காப்பியத்திலேயே புறத்திணையியல்[7] கூறப்பட்டுள்ளதால் பழந்தமிழர் வீரமும் ஒழுக்கமும் அறியலாம். போரிலும் அறத்தைக் கடைப்பிடித்தனர். அக்காலத்தில் ஊர்கள் தோறும் களரி மேடையும், சிலம்பக் கூடமும் இருந்தன. பயிற்சியளிக்கும் ஆசான்கள் ஊர்கள் தோறும்

6. ஔவை
7. புறத்திணையியல்

இருந்தனர். யானை, குதிரை, வில், வேல், வாள் பயிற்சிகள் திறம்படச் செய்து பழகிப் போர்க்களம் சென்றனர். பெண்களும் ஆண்களுக்கு வீரத்தை ஊட்டினர். நாட்டைக் காப்பதற்குத் துணை நின்றனர். (புறம்: 89, 276, 312)[8]

தமிழ் மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், வேளிர்கள் படை வீரத்தில் மட்டுமல்ல கொடை மடத்திலும் சிறந்து விளங்கினர். புலவர்களுக்கு வாரி வழங்கினர். 'செல்வத்துப் பயன் ஈதல்' (புறம்:189)[9] ஈதல் இசைபட வாழ்தலையும் (குறள்) கொண்டொழுகினர்.[10]

சங்க கால வள்ளல்களாகத் திகழ்ந்தவர்கள் பலப் பலர். வரையாது கொடுத்தவர்கள் வள்ளல்கள். (1) முல்லைக்குத் தேர் கொடுத்தோன் பாரி. (2) மயிலுக்குப் போர்வை கொடுத்தோன் பேகன், (3) இரவலரை இனிய சொற்களால் வரவேற்றுப் புரந்த காரி, (4) நீல நாகம் நல்கிய கலிங்கத்தைச் சிவபெருமானுக்கு அளித்த ஆய், (5) ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த அதிகன், (6) இரப்பார்க்கு முட்டாது கொடுத்த நல்லி, (7) கூத்தர்களுக்கு நாடுகளைக் கொடுத்த ஓரி, (8) வந்த புலவர்க்குத் தலையைக் கொடுக்கத் துணிந்த குமணன் என்போர் எல்லாக் கொடையாளர்களிலும் உயர்ந்து விளங்கியோர் ஆவர்.

இவர்கள் தமிழகத்தின் பல பகுதிகளைச் சேர்ந்தவராயினும் கொங்கு நாட்டுப் பகுதியைச் சேர்ந்த கடையெழு வள்ளல்களுள் (1) அதியமான் நெடுமான் அஞ்சி, (2) பொதினி மலையை ஆண்ட ஆய், (3) இரப்பவர்க்கு இல்லை யென்னாது கொடுத்த நள்ளி, (4) கூத்தர்க்கும் பாணர்க்கும் ஊர்களும் நாடுகளும் கொடுத்த ஓரி,

8. புறம் : 89, 276, 312
9. புறம் : 189
10. குறள் : 231
11. புறம். கடையெழு வள்ளல்கள் டாக்டர் மா. இராசமாணிக்கனார்

(5) கொழுமம் பகுதியை ஆண்ட குமணன், (6) முன்னூறு ஊர்களை உடையதன் பறம்பு நாட்டைப் புலவர்க்கும் பாணர்க்கும் கொடுத்த பாரி, (7) மயிலுக்குப் போர்வை தந்த பேகன் - என்போர் எழுவரும் கொங்குப் பகுதியைச் சேர்ந்தவர்களே யாவர்.

இரண்டாம் பகுதி

12. கொங்கு நாட்டுப் புரவலர்கள் / வள்ளல்கள்

1. அதிகமான் நெடுமான் அஞ்சி

சங்க கால வள்ளல்களுள் ஒருவரான அதிகமான் நெடுமான் அஞ்சி, கொங்கு நாட்டின் வட பகுதியான தகடூர் நாட்டினன். இன்றைய தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், ஓசூர், கிருஷ்ணகிரி வட்டத்தின் தென்பகுதிகள் இவை. அதிகமான் காலத்தில் மைசூர்க்கோலார் வரையிலிருந்து, நாமக்கல் வரை பரவியிருந்தது இத்தகடூர் நாடு. தகடூர் என்பது இக்காலத்தில் தர்மபுரி என்று வழங்கி வருகிறது. தர்மபுரிக்குத் தெற்கில் அதமன் கோட்டை என்ற ஊரே 'அதிகமான் கோட்டை' என்பதன் சிதைவாகும்.[1]

சங்க கால முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை இவ் வதிகமான் மரபினர் தகடூர் நாட்டை ஆண்டு வந்தனர். இம் மரபினர் கொங்கு வேளிர் குடியினராவர். வடக்கெல்லையின் பொன்முடிக் கணவாய்ப் பகுதியைக் காத்தும், ஆண்டும் வந்தவர்கள் இவர்கள்.

இக்குடி மரபில் தனிச் சிறப்புற்றவன் அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவன். இவன் ஔவையாரிடத்து அளவு கடந்த அன்பும், பாசமும் உடையவன். அவைக்களத் தலைமைப் புலவராக இருக்கச் செய்தவன்.

அதிகமான், சேலத்தை அடுத்த கஞ்ச மலைக்கு வேட்டைக்குச் சென்றான். அங்கு உயர்ந்த பாறைப் பிளவின் உச்சியில் இருந்த நெல்லிக்கனியை அரிதின் முயன்று பெற்றான். அக்கனியை

1. தகடூர் - தர்மபுரி. அதமன் கோட்டை -அதிகமான் கோட்டை

உண்போர் உறுதியான உடல் வளமும், நீண்ட ஆயுளும் பெறுவர். கஞ்சமலை மருந்துப் பொருள்கள் நிறைந்த மலை. அம் மலையில் கிடைத்த அரிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாது, தமிழ்த் தொண்டு ஆற்றிவரும் ஔவையாருக்குக் கொடுப்பதே மேல் என எண்ணி ஔவையாருக்குக் கொடுத்தான். இதனால் அதிகன் புலவர் பாடும் புகழுக்கு உரியவன் ஆயினான். அஞ்சியின் தமிழ்ப் புலமையைப் போற்றும் உள்ளத்தை இதனால் அறியலாம்.

'மன்னுக பெரும நீயே, தொன்னிலம்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே[2]

(புறம்: 91)

என்று ஔவையார், தனக்கென வாழா அப் பெருந்தகையின் குணத்தினை மனமாரப் பாராட்டிக் கூறுகிறார்.

போரெடுத்துச் சண்டையிடுவதையே வீரக் குணமாகக் கொண்ட பழந்தமிழ் மன்னரிடையே அஞ்சி போரைத் தவிர்ப்பதற்கும், தடுப்பதற்கும் காஞ்சித் தொண்டைமானிடம் ஔவையைத் தூது அனுப்பிப் போர் நேரா வண்ணமும், அழிவு ஏற்படா வண்ணமும் செய்தான்[3] (புறம்: 95) பெண்டிரும் அக்காலத்தில் அரசியற் களத்திலும் ஈடுபட்டுள்ளனர் என்பதை இதனால் அறியலாம். நெடுஞ் செழியனின் பெரும்படை கண்டு அழிவு அதிகமாகு மெனவும் அவனுடன் போரைத் தவிர்த்தான்.

2. புறம் : 91
3. புறம் : 95

கொங்கு நாட்டின் கிழக்கில், பெண்ணை ஆற்றங் கரையிலுள்ளது திருக்கோவலூர். அதனைத் தலைமையாகக் கொண்டது நடு நாடு அது முற்காலத்தில் மலைநாடு என்றும் மலாடு என்றும் வழங்கி வந்தது. அதை மலையமான் மரபினர் ஆண்டு வந்தனர்.

மலையமான் திருமுடிக்காரி என்பவன் சங்க கால வள்ளல்களில் ஒருவன். இக்கால அதிகமானோடு பகை கொண்டு தகடூர் நாட்டின் மீது போர் தொகுத்தான். அதில் அதிகமான் வெற்றி பெற்றுக், கோவலூரையும் அழித்தான் என்று புறநானூறு கூறும்[4] (புறம்: 99)

பின்னர், தோற்ற காரி பெருஞ்சேரல் இரும்பொறை[2] (115-132) என்னும் சேர மன்னனொடு சேர்ந்து அதிகனை எதிர்த்து, தகடூரை முற்றுகையிட்டான். அதிகமான் அவர்களோடு போரிட்டு, வீரப் புகழ் எய்தினான்[6] (பதிற் - 8 பதிகம்). தகடூர் யாத்திரை என்னும் நூல் இப்போர் பற்றியதே.

அதிகமான் விழுப்புண் பட்ட போதும், இறந்த போதும் பெருந்துயருற்று ஔவையார் பாடி அழுத பாடல்கள் (புற: 235)[7] புறநானூற்றில் உள்ளன.[7]

இப்போருக்கு முன்னர், அதிகமானுக்கும் சேரன் இரும் பொறையும் கொல்லிமலைத் தலைவன் ஓரியும் பொருத போர்க்களத்தில் ஓரி இறந்தான்.

சேரன் வெற்றி பெற்ற அப்பகுதிக்குச் சேர அ;ரையன் மலை எனப்பட்டது. அது இன்று சேர்வராயன் மலை எனப்படுகிறது.

அஞ்சியும் பெருஞ்சித்திரனாரும்:

அஞ்சியிடம் பெருஞ்சித்திரனார் என்னும் பைந்தமிழ்ப் புலவர் பாடிப் பரிசில் பெற விரும்பினார். தகடூரை அடைந்தார்.

4. புறம் : 99, 5. புறம் : (115-132)
6. பதிற் : 8 - பதிகம்
7. புறம் : 235

அஞ்சியைக் காண்பதற்குப் பல நாள் ஆயிற்று. வறியார்க்கு ஈதலே தொழிலாகக் கொண்ட அஞ்சி, யாது காரணத்தாலோ புலவரை நேரில் காணவில்லை. ஏவலர் மூலம் பரிசில் கொடுத்து அனுப்பினான். புலவர்,

முற்றிய திருவின் மூவராயினும்

பெட்பின் றீதல் யாம்வேண் டலமே[8]

(புறம்: 237)

என்று கூறியதோடு,

'காணாது ஈத்த இப்பொருட்கு யானோர்

வாணிகப் பரிசிலன் அல்லேன்'[9]

(புறம்: 208)

என்று பெருமிதம் தோன்றக் கூறி அவ்விடம் விட்டகன்றார்.

அஞ்சியும் ஔவையாரும்:

ஔவையார் பட்டி என்பதும், அவ்வையாரம்மன் கோயில் என்பதும் கொங்கு நாட்டில் உள்ளது என்று கல்வெட்டறிஞர் முனைவர் செ. இராசு அவர்கள் குறிப்பிடுவார். டாக்டர் இராசமாணிக்கனார் குறிப்பிட்டது போல் அவர் சேர நாட்டினர் அல்லர்.

அவ்வையார் தம் வறுமையைக் கூறி அஞ்சியிடம் வேண்டினார். அவர் தம் புலமையை அறிந்த அஞ்சி அவரைத் தம் அரண்மனையிலே இருத்தல் வேண்டும் என்பதற்காகப் பரிசு கொடுக்கக் காலம் தாழ்த்தினான்.

8. புறம் 237

9. புறம் 208.

இதனால் சினம் கொண்ட ஔவை வாயிற் காப்போனிடம் ''எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே'' (புறம்: 206) என்று முனிவுடன் கூறிச் சென்றதாகப் புறம் கூறும். பின்னர் நேரில் அஞ்சி அவரைக் கண்டு 'இருத்தல் வேண்டிக் காலம் தாழ்த்தினன்' என, ஔவையாரும் பல திங்கள் இருந்து சென்றார். 'யானைக் கோட்டிடை வைத்த கவளம் போல' அஞ்சியின் பரிசில் நமது கையகத்ததே; அது தப்பாது (புறம்: 101) என்று அவ்னது அன்பையும், பரிசில் கொடுக்கும் திறத்தையும் பாராட்டினார்.

தூதாக அனுப்பப்பட்ட ஔவையார், மலையமான் திருமுடிக்காரியைக் கண்டார். மலையமானும் ஔவையாரை வரவேற்றான். பின்னர் தம் படைக் களக் கொட்டிலைக் காட்டினான். ஔவையார் வஞ்சப் புகழ்ச்சியாக அஞ்சியைப் பாராட்டியும், காரி போரின்றி இருத்தலையும் கூறித் தெருட்டினார் (புறம்: 95) காரி அஞ்சியின் மேல் போர் தொடுத்த போதும் போரைத் தவிர்க்க அறிவுரை கூறினார். (புறம்: எண்தேர்... 87) கரும்பை முதலில் கொணர்ந்தவன்:

'உன்னுடைய முன்னோர் தெய்வங்களைப் போற்றினர். அவற்றால் வேற்று நிலத்திலிருந்து பெறுதற்கரிய கரும்பை இங்கு கொணர்ந்தனன். கோவலூரை வென்றாய். அதனால் பரணரும் உன்னைப் புகழ்ந்தார்' என்று ஔவையார் அதிகமானைப் பெருஞ்சிறப்புடன் பாடியுள்ளார். (புறம்: 99)

அஞ்சியின் மகன் பொகுட்டெழினி

ஔவையார் அஞ்சியின் அரண்மனையில் இருந்த போது, அவன் மனைவி கருவுற்றாள். சில மாதங்களுக்குப் பின்னர் கோவலூர்ப் போர் தொடங்கியது. வெற்றி பெற்று மீண்டபோது அவன் மனைவி குழந்தை பெற்றாள். அக் குழந்தையைப் பார்க்க வந்தவன் கண்ணும், விழுப்புண்ணுடன் இருந்த உடலும் சினத்துடனே தோன்றிற்று என்கிறார் ஔவையார் (புறம்: 100)

புறம் : 206, புறம் : 101, புறம் : 95, புறம் : 87
புறம் : 99, புறம் : 100

அதிகமான், சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையுடன் செய்த போரில் விழுப்புண்கள் பட்டும், மார்பில் சேரமான் அம்பு பட்டும் வீழ்ந்த பிறகு அவன் மைந்தன் பொருட்டெழினிக்கு அரசுப் பட்டம் சிறு குழந்தைப் பருவத்திலேயே சூட்டினர். அவன் பின்னர் நற்குண, நற்செயல்களை உடையவனாய்க் குடிபுரவுண்டு, வறியோர்க்கு வழங்கிச் செங்கோல் செலுத்தினான்.

அதிகமான் மனைவியார் நாகையார் என்பவர். இவர் சிறந்த செந்நாப் புலவர் (புறம்: 352)[16] சங்க காலப் புலவரில் ஒருவராவார்.

2. ஆய்

வேள் ஆய் பொதியமலைத் தலைவன். இம்மலையை அடுத்த ஆய்குடி என்பது இவனது தலைமை ஊர். இவனை ஆய் என்றும், ஆய் அண்டிரன் என்றும், அண்டிரன் என்றும் அழைப்பார்கள். இவன் பகைவரால் தாக்க முடியாத உயர்ந்த மலைக்கு உரியவன். இவனது மாலை சுரபுன்னை மாலை. இவனது மலை கவிரம் என்பது. இங்கு பல சுளைகள் இருந்தன.

நீல நாகம் நல்கிய கலிங்கம்

ஆய் நாடு யானைக் கூட்டங்கள் நிரம்பிய நாடு. யானைகளைப் பரிசிலர்க்குத் தந்து மகிழ்ந்தவன் ஆய் வள்ளல். ஒரு சமயம் காட்டிற்குச் சென்றபோது நீலநாகம் ஒன்று ஒரு ஆடையினை விட்டுச் சென்றதாகவும், அதனை ஆய் எடுத்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது. இதனைத் தானே தனக்கென வைத்துக் கொள்ளாது தான் வழிபடும் சிவபிரானுக்குச் சாத்தினான் என்று கூறுவார்கள். (சிறுபா)[1]

16. புறம்: 352

1. நீலநாகம் நல்கிய கலிங்கம் ஆலமாச் செல்வற் கமர்ந்தனன் கொடுக்க (சிறுபா)

இவனது நெருங்கிய புலமைத் தோழர் முட மோசியார். ஏனைய புலவர்களும் இவனைப் பாடியுள்ளனர்.

ஆயும் ஓடைகிழாரும்:

ஓடைகிழார் ஆய் வேளைக் காணச் சென்றார். இவ் வோடை முன்னாள் பேரோடை என்று வழங்கியது. இக்கால் அது வழக்கில் பேரோடு என்று மருவியுள்ளது. இதன் அருகில் சிற்றோடை, ஈரோடை என்ற ஊர்களும் இருந்தன. சிற்றோடை என்பது சிற்றோடு, (சித்தோடு) என்றும், ஈரோடை என்பது ஈரோடு என்றும் மருவி வழங்குகின்றன.

ஓடைகிழார், தன் வறுமையையும், சுற்றம் உண்ணாமையால் விழிநீர் சிந்துதலையும் ஞாயிற்றின் வெம்மையையும் பொருட்படுத்தாமல் அவனிடம் வந்ததையும் எடுத்துக் கூறி வறுமை களைய வேண்டுகிறார். 'நின் துறையூரின் ஆற்றுத் துறை மணலினும் பன்னாள் வாழ்வாயாக! என்று வாழ்த்துகின்றார். (புறம்: 136)[2] வேள்-ஆய் அவருக்குப் பெருங்கொடை அளித்து, ஊருக்குச் செல்ல விடுத்தான்.

முடமோசியார்:

இவர் உறையூர் ஏணிச் சேரி முடிமோசியார் என்று அழைப்பார்கள். மோசி என்பது ஒரு குடிப் பெயராக இருக்கலாம். மோசி என்ற ஊர்ப் பெயராகவும் இருக்கலாம். இம் மோசி என்னும் ஊர் தாராபுரம் வட்டம் மூலனூர்க்கருகில் உள்ளதாகக் கூறுவர். பொதிய மலை ஆய் குடிக்கும் இவர் தம் மோசி வரைக்கும் தூரம் மிகச் சேய்மைத் தன்று. இவர் பாண்டிய நாட்டில் மோசி என்னும் குடியைச் சார்ந்தவர் என்று டாக்டர் இராசமாணிக்கனார் கூறுவார்கள்.

2. புறம் : 136

இவர் உறையூர்ச் சோழன் கோப் பெருநற்கிள்ளியிடம் தங்கியிருந்தவர். ஏணிச்சேரி என்ற ஊரில் வாழ்ந்தவர் என்பர்.

முடமோசியார் ஆயின் புகழைக் கேள்விப்பட்டு அவனைக் காணச் சென்றார். சென்று, 'நின் மலை புலி இயங்கும் குகைகளை யுடையது. ஏறுதற்குக் கடினமானது. என்னுடன் வரும் என் விறலி, யாழை ஒரு பக்கத்தே பிடித்துக் கொண்டு, என்னையும் அணைத்துக் கொண்டு நடந்து வந்தாள். உன்னிடம் யானையோ, குதிரையோ, தேரையோ வேண்டி வரவில்லை. 'நின்னைக் காண வேண்டும் என்ற விருப்பத்தால் வந்தேன்' என்றார்.

ஆயும் மோசியாரின் அருங்குணங்களை அறிந்து, தம் பக்கத்தே இருத்திக் கொண்டார். மோசியாரும் அவனிடம் நீங்கா நட்புக் கொண்டார்.

மோசியார் ஆயைப் புகழாமல் பிறரைப் புகழ்ந்ததற்காக வருத்தப்படுகிறார்[3] (புறம்: 132) 'ஆய் நாடு வானுற ஓங்கிய மலைகள், மரங்கள், தெள்ளிய அருவி, மலையின் உச்சியில் முகில்கள் நிறைந்த பலா மரங்கள்; பலாவின் கிளைகளில் மந்திகள்; பலா மரத்தின் கிளைகளில் கிணைப் பறைகள்; கிணைப் பறைகளை மந்திகள் தட்டப்படுதலால் மத்தள ஓசை போல் உள்ளது. ஆய் வேளிடம் விறலியர் பாட வரலாம், பிற மன்னர் அடைய முடியாது' என்று அவன் வீரம், கொடை, வளம் குறித்து மோசியார் கூறுகிறார்[4] (புறம்: 135)

யானை கூட்டங் கூட்டமாய் இருப்பதைக் கண்டு 'இக்காடு ஆய் அண்டிரனைப் பாடிப் பரிசிலாகப் பெற்றதோ இவ் யானைகள்' என்று வியந்து கூறுகிறார்.[5] (புறம்: 129)

3. புறம் : 132
4. புறம் : 135
5. புறம் : 129

'நீ மேலைச் சேரரை மேலைக்கடல் வரை ஓட்டிய ஞான்று விட்டுச் சென்ற வேலினும் மிக்க யானைகளைக் கொண்டுள்ளாய்' என்றும் ஆயைப் புகழ்கிறார். மேலும் 'ஆய் அறவிலை வணிகன் அல்லன்' என்று அவன் சிறப்பை எடுத்துரைக்கிறார்.[6] (புறம்: 134)

ஆயின் வறிய நிலை:

இவ்வாறு புலவர்களால் புகழப்பட்ட ஆய் கொடுத்துக் கொடுத்து வறுமை நிலை அடைந்தான். நாடும் அழகு குன்றியது. அவன்மனைவியர் மங்கல நாண் அன்றி, மகிழ்ச்சி அற்றனர். வருந்தி வந்தவர்க் கெல்லாம் வழங்கியோன் வருந்தும் நிலை ஏற்பட்டது.

ஆயின் மறைவு:

பின்னர் திங்கள்கள் சில கழிய ஆய் நோயுற்றான். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனான ஆய் மண்ணக வாழ்வை நீத்தான்.

'திண்டேர் இரவலர்க் கீந்த தண்டார்

அண்டிரன்...'[7]

(புறம்: 241)

வான் முழக்கம் எழ விசும்பு ஏறினான்

என்கிறார் மோசியார்.

குட்டுவன் கீரனாரும் இவன் மறைந்ததால் 'புலவர் சுற்றம் வறுமைப் பிணியால் வாடும் காலம் வந்து விட்டதே' என்கிறார்[8] (புறம்: 240)

6. புறம் : 134
7. புறம் : 241
8 புறம் · 240

3. ஓரி

இவன் கொல்லிமலைத் தலைவன். சங்க கால வள்ளல்களில் ஒருவன். வீரமும் புகழும் ஒருங்கே உடையவன். கொல்லி மலை மேல் 14 நாடுகள் உண்டு. அவை அவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இலக்கியங்கள் கூறும் கொல்லிப் பாவை இம்மலை மீதுதான் இருந்தது[1] (குறு: 100) கொல்லி மலையின் தேனும் மிகச் சிறப்புடையது[2] (அகம்: 209)

இவ்வோரி வலிமையான வில்லாற்றல் பொருந்தியவன். அதனால் 'வல்வில் ஓரி' எனப்பட்டான். ஆதன் ஓரி என்பது இவனது குடிப் பெயர்.

இவன் வில்லாற்றலுக்கு கீழ்வரும் நிகழ்ச்சியைக் கூறிப் பாராட்டுவார்கள்:

'ஒரு நாள் கொல்லிமலைச் சாரலின் கண் வேட்டையாடச் சென்றான் ஓரி. ஒரு யானையைக் கண்டு அம்பு எய்தான். அவ்வம்பு, அந்த யானையை வீழ்த்தி, யானை மேல் பாய்வதற்காக இருந்த புலியின் அகன்ற வாயில் தைத்து ஊடுருவிச் சென்று அதைக் கொன்று, அவ்வழியில் நின்ற ஒரு கலைமானை மாய்த்து, அதன் அருகில் இருந்த ஒரு காட்டுப் பன்றியின் மேல் பாய்ந்து, அதனையும் கொன்று அங்கே புற்றின் கண் பாய்ந்து புற்றிலிருந்த உடும்பையும் கொன்றது[3] (புறம்: 152) என்று வன்பரணர் என்னும் புலவர் அவனது வில்லாற்றலைப் பாராட்டுவார்

ஓரியைக் 'கொல்லி மலை ஆண்ட வல்வில் ஓரி' என்று[4] (புறம்: 156) பெருஞ்சித்திரனார் பாராட்டுவார்.

காட்டு வழியே வந்த பாணர் ஒக்கலை வல்வில் ஓரி கண்டான். அவர்கள் இவனைக் கண்டதும் யாழை மீட்டிப் பாடினர். ஓரி,

1. குறு: 100
2. அகம் : 209
3. புறம் : 152
4. புறம் : 156

வேட்டையாடிய மான் இறைச்சியைப் பக்குவப்படுத்தித் தேனும் தந்தான். மேலும் பொன்னும் மணியும் பரிசளித்தான். 'நீவிர் யார் எனக் கேட்ட போதும், ஊர் யாதெனக் கேட்ட போதும் நாணிக் கூறாது சென்றான்[5] (புறம்: 151)

காரியின் குதிரை காரி என்று பெயர் பெற்றதைப் போல இவன் குதிரையும் 'ஓரி' எனப் பெயர் பெற்றது.

இன்றைய திருச்செங்கோட்டில் குதிரை மேல் உள்ள ஓரியின் சிலை உள்ளது. இராசிபுரத்தில் கையில் வில்லுடன் ஓரி சிலை உள்ளது. இராசிபுரத்தின் அருகில் உள்ளதே கொல்லிமலை. அதிகமான் அஞ்சியும், ஓரியும் நண்பர்களாக இருந்து வந்தனர். பவானிக்கு மேற்கில் ஆறு கல் தொலைவில் 'ஓரிச்சேரி' என்னும் ஊர் உள்ளது. அது இக்கால் 'ஒரிச்சேரி' என்று வழங்கப்படுகிறது.

அதிகமான் வரலாற்றில் கூறியபடி, அதிகனும் ஓரியும் சேர்ந்து சேரனையும் காரியையும் எதிர்த்தனர். மலையமான் திருமுடிக்காரி, ஓரியைக் கொன்றான் (அகம்: 209, நற்: 320)

4. மலையமான் திருமுடிக்காரி

மலையமான் திருமுடிக்காரி கொங்கு நாட்டின் கீழ்ப்பால் உள்ள கொங்கு நாட்டைச் சேர்ந்த நடுநாட்டின் தலைமை ஊரான திருக்கோவலூரைத் தலைமை அகமாகக் கொண்டு ஆண்டு வந்தான்.

இவன் வீரமும் வேகமும் பொருந்திய குதிரைப் படை வைத்திருந்தான். இவன் பட்டத்துக் குதிரைக்குக் 'காரி' என்பது பெயர்.

இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன், பாணர்களுக்கும், புலவர்களுக்கும், கூத்தர்களுக்கும் பொன்னும் தேரும்

5. புறம் : 151
6. அகம் 209, நற்: 320

கொடுத்தவன். வறியவர்க்குக் கொடுக்கும் குணம் மிகுதியால் எல்லோராலும் பாராட்டப்பட்டான்.

ஒரு சமயம் காரி, அதிகமான் நாட்டின் மீது படையெடுத்தான். அப்போரில் காரி தோற்றனன். மறுபடியும் சேரமான் இரும்பொறையோடு சேர்ந்து அதிக மானைக் காரி எதிர்த்தான். இப்போரில் சேரனின் அம்பு பட்டு விழுப்புண்ணுற்று அதிகமான் மடிந்தான்.

இவ்வோரி, ஆய்வேளைப் போல் புலவர்க்கு யானைப் பரிசில் தந்தவன். அதிகமானின் பெரும்புகழ் கண்டும், பரந்து விரிந்த நாடு கண்டும் திருமுடிக்காரி அழுக்காறு கொண்டு சேரமான் கூட்டோடு சூழ்ச்சி செய்து அதிகமானைக் கொன்றான்.

5. பேகன்

கொங்கு நாட்டின் இருபத்து நான்கு நாடுகளில் ஒன்று வைகாவூர் நாடு என்பது. இது வையாவி நாடு என்றும் வையாபுரி நாடு என்றும் வழங்கப்படும். இந்நாட்டின் தலைநகர் பொதினி. பொதினி என்பதே பிற்காலத்தில் பழனி எனத் திரிந்தது.

பேகனும் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். இவன் ஆவியர் குடியினன். ஆவி என்பது அக்குடி முதல்வன். ஆவி நன்குடி என்றும், திரு ஆவி நன்குடி என்றும் இவ்வூர் பெயர் பெற்றது.

முருகனை 'ஆவி நன்குடி அசைதலும் உரியன்[1] (திருமு: 476) என்று நக்கீரரும் கூறுவார். ஆவி நன்குடி பழம்பெரும்பதி.

வேள் ஆவி என்பதே பின்னர் வையாவியாகத் திரிந்தது. சேர மன்னர்கள் உதியன், பொறையன் மரபைச் சார்ந்தவர்கள். அக் குடிகளோடு ஆவியர் குடியினர் மண உறவு கொண்டிருந்தனர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மனைவியும், செல்வக்

1. திருமு. 476

கடுங்கோ வாழியாதன் மனைவியும் வேள்ாவிக் கோமான் பதுமன் என்பவன் மகளிராவர். [2] (பதிற்: 4,8 பதிகம்)

அவ்விருவரும் சேரனின் தேவியர் என்றே பெயர். சேரன் தலைநகர் வஞ்சியிலும் 'வேளாவிக் கோ மாளிகை' ஒன்று இருந்தது.

வை என்றால் வீரத்தைக் குறிக்கும் வைநுனி வேல் காண்க. பேகனின் மனைவி பெயர் கண்ணகி. இவள் சிலப்பதிகாரக் கண்ணகிக்கு முற்பட்டவளாவாள்.

ஆய் என்னும் வள்ளலும் பழனிக்குப் பக்கத்தில் இருந்த ஆய்குடி நாட்டினர். இவனும் கொங்குப் பகுதியை ஆண்டவன். சேரநாடும் கொங்கர் நாடாக இருந்த போது அச்சேரரை இவன் வென்றதாக,

'குடகடல் ஓட்டிய ஞான்றை (புறம்: 130)[3] என்று கூறப்படுகிறது.

கார் காலத்தில் ஒருநாள், கார் மேகம் கண்டு களித்தாடிய மயில் கண்டு, கூதலுக்கு நடுங்குகிற தென்று, விலையுயர்ந்த தம் போர்வையை அம்மயிலுக்கு கொடுத்துப் பொன்றாப் புகழ் பெற்றவன் பேகன்.

'படாஅம் மஞ்ஞைக் கீத்த எங்கோ

கடாஅ யானைக் கலிமான் பேகன்[4]

(புறம்: 141)

எனப் பரணரும்,

2. பதிற் : 4, 8 பதிகம்
3. புறம் : 130
4. புறம் : 141

கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய

அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்

பெருங்கல் நாடன் பேகன்[5]

(சிறுபா: 85-7)

என, இடைகழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும் இச் செயலைப் பாராட்டியுள்ளனர். இத்தகு கொங்கு நாட்டு வேளிர்களால் வழங்கப்பட்டோர் புலவர்கள், பாணர்கள். அவர்களால் வளர்க்கப்பட்டது சங்கத் தமிழ்.

இத்தகைய அருளுள்ளம் படைத்த பேகன், மனைவி கண்ணகியைத் துறந்து, பழனிக்குப் பக்கத்தேயுள்ள நல்லூரில் உள்ள ஒருத்தி பால் சென்று தங்கி வருவானாயினன். இப்புறவொழுக்கத்தை அறிந்த கபிலர், பாணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்க்கிழார் என்னும் சான்றோர்கள் பேகனைப் பாடி[6] (புறம். 143, 145, 146, 147) அவனைக் கண்ணகியோடு சேர்த்தனர். புலவர்கள் தொண்டு போற்றுதற்குரியது அல்லவா?

6. குமணன்

இன்றைய பழனி வட்டத்து வடமேற்குப் பகுதியும் உடுமலை வட்டத்தின் தென் கிழக்குப் பகுதியும் கொண்டதே முதிரமலைப் பகுதியாகும். அது இக்காலத்தில் குதிரை மலை என்று அழைக்கப்படுகிறது. முதிரமலை நாட்டின் தலைநகர் முதிரம் என்பது

'நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்

மட்டார் மறுகின் முதிரத் தோனே'[1] (புறம்: 160)

என்பது புறம்.

5 சிறுபா 85-7

6 புறம் 143, 145, 146, 147

1 புறம் 160

உடுமலைப் பேட்டையின் தென்கிழக்கில் பத்துக் கல் தொலைவில் கொழுமம் என்ற ஊர் உள்ளது. இது குழுமம் என்றும் வழங்கும். இதற்குக் 'குழூஉர்' என்ற பெயரும் இருந்ததை அகம் (168) கூறும்.[2]

இன்று குதிரையாறு என்பது கொழுமத்தின் அருகில் ஓடுகிறது.

சங்க கால வள்ளல்களில் ஒருவனான குமணன் இம் முதிரமலை நாட்டை ஆண்டு வந்தான். இவன் காலம் பேகன், அதிகன், ஓரி, காரி காலத்துக்குப் பிற்பட்டதாகும். இவன் கொடைக் குணம் மிக்கவன். புலவர்களைக் கண்ணே போல் போற்றியவன்.

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் இவனுடைய முதிர மலைக்குச் சென்று பாடினார். புலவருடைய வறுமையை அறிந்த குமணன் சின்னாள் தம்மிடத்தே தங்க வைத்து, உடல் வளம் பெறச் செய்து, பெரும் பொருள் கொடுத்து, யானையைப் பரிசிலாகத் தந்து, அதன் மேல் ஏற்றி அனுப்பினார்.[3] (புறம். 159, 160, 161) குமணனின் கொடை வளம் இதனால் விளங்கும்

குமணனின் தம்பி இளங்குமணன். அவன் குமணன் மேல் பொறாமைப் பட்டான். நாட்டைக் கவர்ந்தான். குமணனைக் காட்டிற்கு ஓட்டினான். குமணனைக் கொல்வதற்கும் முயன்றான்.

பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் காட்டிலிருந்த குமணனிடம் சென்று பரிசில் பெற வேண்டினார். குமணனோ,

அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்! இந்த நாள் வந்து நீ நொந்தனை! தலைதனைக் கொண்டு போய்த் தம்பி கைக் கொடுத்து, விலைதனைப் பெற்று வறுமை நோய்களைக் என்று கூறப் புலவர் அவன் கொடுத்த வாளை வாங்கிக் கொண்டு

2 அகம. 168
3 புறம். 159, 160, 161

இளங்குமணனிடம் சென்று குமணனின் பேருள்ளத்தை எடுத்துரைத்தார். இளங்குமணனுக்கு அறிவுரை கூறினான். குமணனை பழையபடி நாட்டில் வாழுமாறு செய்தார்.[4] (புறம்: 161,165)

இப்பெருந்தலைச் சாத்தனார் பவானிக்கு அருகில் ஒன்பது கல் தொலைவில் மேற்கில் கவுந்தப்பாடி நகர்க்கு அண்மையில் உள்ளதோர் ஊரினர். அவ்வூர் பெருந்தலையூர் என்று இன்றும் வழங்குகிறது. புலவரும் புரவலருமான குமணனும் கொங்கு நாட்டினரே ஆவர்.

பெருஞ்சித்திரனார் பாடிய பாடலில்[5] 1. கொங்குப் பறம்பு நாட்டின் வேந்தன் பாரிவேள் மாண்டனன். 2. உயர்ந்த உச்சிமலைக்குத் தலைவன் கொல்லிப் பொருநன் ஓரிவேள் இன்றில்லை. 3. காரிக் குதிரையைக் கொண்ட மாரி போலும் வண்கையன் மலையமான் திருமுடிக்காரி மண்ணுலக வாழ்வை நீத்தான் 4. குதிரை மலைக்குத் தலைவனும் கூவினங் கண்ணியைக் கொண்டவனும் அதிகமான் மரபினனுமான பொகுட்டு எழினி விண்ணுலகிற் கெழுந்தனன் 5. பெரிய பெரிய குகைகளைக் கொண்ட, வலிமையுடைய மலை நாடனான பேகன் மறைந்தான். 6. திருந்திய சொல்லையுடைய ஆய்வேள் அண்டிரன் மேலுலகம் புக்கான். 7. தன்னை நினைந்து வருவாரது வறுமையைப் போக்கிய நள்ளி என்பான் பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பு எய்தினான்' என்று குறிப்பிடுவதால் குமணனும் புலவரும் அவர்கள் காலத்துக்குப் பின்னும் வாழ்ந்தவராவர்.

---

4. புறம் : 161, 165
5. புறம் : பெருஞ்சித்திரனார் : 158

7. நள்ளி

ஈரோடு வட்டத்தின், ஈரோடு நகரின் மேற்கில் 'நள்ளியம் பாளையம்' என்ற சிற்றூர் ஒன்று உண்டு. இவ்வூரினை வேள்-நள்ளி என்று கூறுவார்கள். கோபிக்கு அண்மையில் நள்ளி அண்ணன் பாளையம் என்ற ஊரும் வேள்-நள்ளி பெயரைத் தாங்கி நிற்கும். இன்றும் திருச்செங்கோடன் என்பது போல நள்ளியங்கோடன் என்ற பெயரைக் கொங்கு வேளிர் மரபினர் வைத்துக் கொள்வது வழக்கமாக உள்ளது. நள்ளியனூர் என பவானிக் கருகில் ஓர் ஊரும் உள்ளது.

நள்ளி மலை என்பது ஓய்மானாட்டைச் சேர்ந்தது என்பர். இது இன்றைய திண்டிவனப் பகுதியைச் சார்ந்தது என்பாரும் உளர். இவன் வறுமை உற்று வந்த புலவர்க்கெல்லாம் வரையாது கொடுத்தவன். பாணர்களையும் கூத்தர்களையும் ஆதரித்தவன்.

இவன் கண்டீரக் கோப்பெரு நற்கிள்ளி என்றும் கண்டீரக் கோ என்றும் கூறப்படுவான். இவன் தம்பி இளங்கண்டீரக்கோ எனப்பட்டான். இவன் புலவர்களுக்கு முட்டாது கொடுத்தவன்.

துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுங்கோட்டு

நளிமலை நாடன் நள்ளி...[1]

என்று சிறுபாணாற்றுப் படையிலும்

உள்ளி வருநர் உலைவு நனிதீரத்

தள்ளா தீயும் தகைசால் வண்மைக்

கொள்ளா ரோட்டிய நள்ளி...[2]

(புறம்: 158)

1. சிறுபாணாற்றுப் படை
2. புறம் 158

எனப் புறநானூறும் இவனைச் சிறப்பிக்கும்.

நள்ளி தோட்டி மலையின் தலைவன் இது பழனி மலையின் தென்கீழ்ப் பகுதியில் உள்ளது என்பர். எப்படியாயினும் நளி மலை நாடன் நள்ளி கொங்குப் பகுதியைச் சார்ந்தவன். இவன் வேட்டுவர் குலத் தலைவன். நள்ளியும், அவன் மனைவியும் இரவலர்க்கு ஏந்து கை வருந்தக் கொடுப்பவர்கள். 'வல்வில் இளையர் பெருமகன் நள்ளி[3] (புறம்: 150) என்பதால் இளையோர் படை கொண்டிருந்தான் என்பார் பரணர்.

வன்பரணர் என்னும் புலவரும் இவனைப் பாடிப் பரிசு பெற்றுள்ளார். 'கூதிர் பருந்தின் ஈர்ஞ்சிற கன்ன. . என்ற பாடல் நள்ளியின் கொடைப் பண்பினைக் கூறும்.[4] (புறம்: 150)

8. பாரி

பிற்கால நூலான பாண்டி மண்டல சதகம் 'வரிசைத் தமிழ்புனை பாரியும் பாண்டி மண்டலமே' என்று கூறுவதால் பாரியைப் பாண்டி மண்டலத்தைச் சேர்ந்தவர் என்று கூறுவார்கள். ஆனால் அது சரியன்று என்றும், பாரி கொங்கு நாட்டிற்குரிய வேள் என்றும்[1] துடிசைக்கிழார் புலவர் ஐ.இராமசாமி போன்றவர்கள் முடிவு செய்துள்ளனர் அதற்குரிய காரணிகளாகக் கீழ்வருமாறு கூறலாம்.

1. காரைக் குடிக்கும், குன்றக்குடிக்கும் அருகில் உள்ள இன்றைய பிரான் மலையே பழைய பறம்புமலை என்று ஔவை சு துரைசாமி பிள்ளை போன்றவர்கள் கூறுகிறார்கள்.[2]

ஆனால் அம்மலையின் அளவையும், உயரத்தையும் பார்க்கும் பொழுது, கொங்கு நாட்டில் சத்திய மங்கல வட்டமும், கோபி வட்டமும் சேரக்கூடிய பழைய பாளையம் என்னும் ஊருக்கருகில் உள்ள பகவதி அம்மன் கோவிலுக்கு அருகிலிருந்து ஏறும்

3 புறம 150

4 புறம 150

1 துடிசைக்கிழாா

2 ஔவை சு துரைசாமி பிளளை

மலைப்பகுதி 'பறம்பு மலை' என்று இன்றும் வழங்குவதாலும், அம்மலை இன்றைய கள்ளிப்பட்டிக்கு வடமேற்கே இருப்பதாலும் அக்கொங்கு நாட்டுப் பறம்பே 'பறம்பு மலை' எனலாம்.[3]

2. பிரான்மலை பாண்டிய சோழ சேரர்கள் படை எடுத்த போதும் வெல்ல முடியாத அரணோடு கூடியதாகத் தெரியவில்லை. கபிலர் கூறக்கூடிய மூங்கில் அரிசி, தேன், திணை மிகுதியாக விளைவது, இயற்கையாக இன்றளவும் கிடைப்பது கோபியின வடமேற்கேயுள்ள பறம்பு. இன்னும் ஊராளிகள், மலை ஆளிகள், குறவர்கள் போன்றவர்களின் பெயர்களில் பாரி, ஓரி, வேளா என்ற பெயர்கள் உள்ளன

3. பாரியின் பெயரில் அமைந்த ஊர்கள் பிரான் மலை அடிவானத்தில் ஒன்று கூட இல்லை. ஆனால் கொங்கின் பறம்பு மலை அடிவாரத்தில் 'பாரியூர்' என்ற ஊரும், பாரி வணங்கிய அம்மன் கோட்டமும் இன்றும் உள்ளது. பாரியூர் அம்மன் ஆலயத்தில் ஆண்டுதோறும் விழா நடைபெற்று வருவது கண்கூடு.

3. பாரியின் பறம்பு மலையை முன்னூறு ஊர்களைத் தன்னகத்தே கொண்டது என்று இலக்கிய வரலாறு கூறும பிரான் மலை அப்படிப்பட்ட பரப்புடையது அல்ல. ஆனால் கொங்கு நாட்டின் பறம்போ மலை மேலேயே இன்றளவும் சில நூறு ஊர்களை உடைத்ததாக இருக்கிறது. மலையடி வாரத்திலும் பலப்பல ஊர்களைக் கொண்டுள்ளது!

4 பாண்டிய நாட்டுப் பிரான் மலையாக இருந்தால் பாண்டியன் ஒருவனே போதும் அவனை வெல்வதற்கு ஆனால் கொங்கின் பறம்பு மலை மிக அரிதான உயரமும், வளமும், அரணும் உடையதாக இருந்ததால் சேரனையும், சோழனையும் சேர்த்துக் கொண்டு போரிட வந்தான்.

3 டாகடா பேரா க அரங்கசாமி

5. கபிலர், மூவேந்தர்களுக்கு அறிவுரை கூறிய போது பாணராகவும், விறலியராகவும் பாடி வந்தால், முந்நூறு ஊர்களைக் கொடுத்த பாரி தன் மலையையே உங்களுக்குத் தருவான் என்று கூறியதைக் கேட்டுப் பொறாமைப்பட்டு முற்றுகை இட்டிருந்த மூவேந்தர்களும் சூழ்ச்சியுடன் சென்று பாரியைக் கொன்றனர். வெல்லுதற்கரிய மலை கொங்குப் பறம்பே ஒழிய பிரான் மலை அல்ல!

6. கொங்கு நாடு வள்ளன்மை நிறைந்த நாடு. வேளிர்களும், புரவலர்களும் இன்றளவும் கொங்கில் உள்ளது போல் வேறு நால்வகை நாடுகளிலும் இல்லை. அதிகமான் ஆண்ட மலைப் பகுதியின் தென் மேற்கில் இப்பறம்பு மலையைப் பாரி ஆண்டிருக்கிறான். கொடை வளத்தால் சிறந்த பாரி கொங்கின் இயல்புக்குரியவன்.

7. கபிலர், பாரியின் மறைவுக்குப் பிறகு அவன் தம் மகளிரை அழைத்துக் கொண்டு கொங்கினைச் சார்ந்த கிழக்கில் உள்ள நன்றா என்ற குன்றின் வேளிர் குலத்தோன்றல் இளவிச்சிக் கோவையும், பின்னரும் தொலைவில் அழைத்துச் சென்று வேள் எவ்வி மரபினனான இருங்கோ வேளையும் வேண்டினன் என்று வரலாறு கூறும். ஆனால் பாண்டியப் பறம்பிலிருந்து இளவிச்சிக் கோவின் நாட்டையும், இருங்கோவேளின் நாட்டையும் கடுந்தொலைவுடைய அவைகளை அடைதல் அரிது. கொங்குப் பறம்பிலிருந்து அவைகளைப் பன்னாட் கடந்து அடைய முடியும்.

8. பிரான் மலை மலையரண் மிக்கது அன்று. கொங்குப் பறம்போ நினைக்கும் பொழுதே மலைத்தற்குரியது. மூவேந்தரும் வெல்வதற்கு அரிதாயிருந்தது.

9. 'களிற்றொடு நன்கலன் ஈயும் உரைசால் வண்புகழ்ப் பாரி'[1] என்பது அகம், களிறுகள் நிறைந்தது கொங்குப் பகுதி. அத்துடன் பொன், மணிகள் விளைந்த நாடு கொங்கு நாடு. எளிதாகப் பாரி கொங்கிலிருந்து வழங்கியிருக்க முடியும்.

1. அகம்

பாரியின் கொடை:

பாரி ஒருநாள் பொற்றேர் ஊர்ந்து வேட்டைக்குப் புறப்பட்டான். பல்வகை விலங்குகளையும் வேட்டையாடினான். ஆடிய பின்னர் தேர் மீது இவர்ந்து வந்து கொண்டிருந்தான். அவன் தன் நாட்டு வளப்பத்தைக் கண்டு மகிழ்வான் போலும் இரு பக்கங்களிலும் பார்வையிட்டு வந்தான். ஒரு கொழுங் கொடி முல்லை வெயிலாலும் காற்றாலும் துன்புறுவதைக் கண்டு, ஏறி வந்த தேரையே முல்லைக்கொடி படர அதன் அருகில் நிறுத்தினான். பிறர், பிற துயர் காணச் சகியாதவன் வேள் - பாரி. கால்கள் கொப்பளிக்க அரண்மனைக்கு நடந்து சென்றான். புலவர்கள் அவனைப் புகழ் மொழிகளால் வாழ்த்தினர்.

மூவேந்தரின் முற்றுகையாலும், போராலும், வஞ்சனையாலும் பாரி வேள் மறைந்தான். கபிலர் பாரி மகளிர்க்குத் துணை தேடலானார். அது இயலாததால் தீக்குளித்து உயிர் நீத்தார்.[2]

9. கடிய நெடுவேட்டுவன்

வளம் பொருந்திய மலை நாடு கோடைமலை. இது கொங்கு நாட்டின் தெற்கெல்லையாக விளங்குவது. இது முதிர மலைத் தொடரின் தென் கோடியாக உள்ளது.

கடியம் என்பது கோடை மலையின் தலைநகர். நெடுவேட்டுவன் என்பது அவன் பெயர். இவன் பெருவீரன்; கொடைக் குணம் கொண்டவன்; புலவர்களுக்கு இல்லை எனாது கொடுப்பவன்.

2. புறப்பாக்கள் பல

பெருந்தலைச் சாத்தனார் இவனிடம் சென்றார். பரிசில் நீட்டித்தான். அதனால் வருந்திக் கூறினார்.[1] (புறம்: 205) பின்னர் பரிசில் நல்கிப் பாராட்டினான்.

10. ஈர்ந்தூர்க்கிழான்

இன்றைய ஈரோடு மாவட்டத்தின் தலைநகர் ஈரோட்டிற்கு மேற்கில் 17-வது கல் தொலைவில், பெருந்துறைக்குத் தெற்கில் ஈங்கூர் உள்ளது. இது பழங்காலத்தில் ஈர்ந்தூர் எனப்பட்டது. ஈந்து - ஈச்ச மரம்; ஈச்சம்பள்ளி என்ற ஊரும் கொங்கு நாட்டில் உள்ளது. ஈங்கூர்க் காணியாளர் ஈஞ்ச குலத்தினர்.

சங்க காலத்தில் ஈர்ந்தூர் கிழான் என்னும் வேளிர் குலச் செல்வர் ஒருவர் இருந்தார். அவர் போரில் வல்லவர். மருந்துக்காகப் பட்டை வெட்டப்பட்ட மரத்தைப் போல வாள் வடுக்கன் மேனியெங்கும் நிரம்பப் பெற்றவராக இருப்பார்.[2] (புறம்: 180)

கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார், 'பாண்பசிப் பகைவன் ஒருவன் ஈந்தையில் உள்ளான்[3] (புறம்: 180) என்று பாராட்டிக் கூறியுள்ளார்

11. புன்றுறை

புன்றுறை என்னும் கொங்கு வேளிர்க் குறுநில மன்னன், மேல் கரைப் பூந்துறை நாட்டின் தலைநகரான பூந்துறையிலிருந்து ஆண்டு வந்தான். இவன் பெயராலேயே இவ்வூர் அமைந்தது என்பர். புன்றுறை - பூந்துறை. அகம்: 44 - வது பாடல் இப்புன்றுறையின் சிறப்பினைக் கூறும்.

1. புறம் : 205 பெருந்தலைச் சாத்தனார்
2. புறம் : 180
3. புறம் : 180
4. அகம் : 44

12. கொண்கானங் கிழான்

கொங்கண மலை என்பது சேலம் மாவட்ட இராசிபுர நாட்டில் உள்ளது. இது பழங்காலத்தில் கொண்கானம் என்று கூறப்பட்டது. பிற்காலக் கொங்கணச் சித்தர் இங்கு வாழ்ந்தவர்.

கொண்கானக் கிழார் என்னும் உழவர் குடிச் செல்வர் கொண்கானத்தில் வாழ்ந்தார். பெருஞ்செல்வம் இல்லாதவராயினும் பெருங் கொடை மனமும், தாளாண்மையும் உடையவராக இருந்தார். 'எறிபடைக் கோடா ஆண்மையன்.[1] (புறம்: 154) என்று புறம் அவரைப் பாராட்டும்.

மோசிகீரனார் என்னும் புலவரும் இவனைப் (புறம்: 155, 156)[2] பாடிச் சிறப்பிக்கின்றார். இவன் இல்லையெனாது கொடுக்கும் வள்ளியோன் ஆவான்.

13. தாமான் தோன்றிக் கோன்

கொங்கு நாட்டுக் கருவூர்ப் பக்கத்தே தான் தோன்றி மலை என்று ஒன்று உண்டு. அங்கு தாமான் தோன்றிக் கோன் என்பான் அம் மலைப்பகுதியை ஆண்டு வந்தான். தாமன் - தாமான்; தாமான் தோன்றி மலை பிற்காலத்தில் தான் தோன்றி மலையாயிற்று.

ஐயூர் முடவனார் இவனைப் பாடியுள்ளார். இவன் அவருக்கு வண்டியும் மாடும் கொடுத்தான்.[3] (புறம்: 399) இவர் ஐயூர் மலையைச் சார்ந்தவராக இருப்பார். ஐயூர் மலை என்பது இன்று ஐவர் மலை என வழங்குகிறது.

---

1. புறம் : 154
2. புறம் : 155, 156
3. புறம்: 309

14. நன்னன்

கொண்கான நாட்டு நன்னன், கொங்கண நாட்டின் - கொங்கு நாட்டின் - மைசூர் கிழக்குப் பகுதியினை ஆண்டவன். அந் நன்னன் மரபினர் சிலர் வெவ்வேறு பகுதிகளில் ஆட்சி புரிந்திருக்கின்றனர்.

இம்மரபினன் ஒருவன் நன்னன் சேய் நன்னன். திருவண்ணாமலைக்கு மேற்கில் உள்ள செங்கண்மா என்னும் ஊரிலிருந்து பல்குன்றக் கோட்டத்தை ஆண்டு வந்தான். இவன் மலைபடு கடாத்தின் பாட்டுடைத் தலைவன்.

இம்மரபில் வந்த ஒருவன், பொள்ளாச்சிக்கருகில் உள்ள ஆனைமலைப் பகுதியை ஆண்டு வந்தான். அவன் பெயரும் நன்னன். நன்னனூர் இவன் தலைநகர். இன்னும் இப்பகுதியில் நன்னனூர். நன்னன் பாறை, நன்னன் மூக்கு என்ற பகுதிகள் உள்ளன. ஆனைமலைச் சோமேசர் கல்வெட்டு 'நன்னனூர் என்றே இவ்வூரைக் குறிப்பிடுகிறது. (ஔவை சு.துரைசாமி சேரமன்னர் வரலாறு.)[1]

இந் நன்னன் கொண்கானத்து நன்னன் காலத்தவன். இந்த நன்னன், அத்தி, க(கொ)ங்கன், கட்டி, புன்றுறை ஆகியோர் பெரும்பூட் சென்னியின் படைத்தலைவன் பழையனோடு பொருது பழையனைக் கொன்றனர்.

நன்னன் சேரநாட்டின் மீது படை எடுத்துச் சென்று பாலைக் கணவாய் வழியாகச் சென்று பாலைப் பகுதியையும், அதன் தெற்கிலுள்ள பூழி நாட்டையும் வென்றனன். களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரல்[2] (பதிற்: 72-97) பெரும்படையுடன் வந்து நன்னனை வென்று தன்னாட்டை மீட்டனன்[3] (பதிற்: 4 பதிகம்) இந்நன்னன் மரபினர் பல தலைமுறை இந்நாட்டை ஆண்டனர்.

1. ஔவை சு.து. சேரமன்னர் வரலாறு
2. பதிற் : 72-97
3. பதிற் : 4 பதிகம்

15. விச்சிக்கோ

கொங்கு நாட்டுக் கொல்லிமலையின் வடபால் பச்சை மலை உள்ளது. அதன் முற்காலப் பெயர் விச்சிமலை என்பது. குறும்பூர் இதன் தலைநகர்.[1] (குறுந்: 328) இவ்விச்சி மலையை விச்சிக்கோ மரபினர் ஆண்டு வந்தனர். இம்மலையின் அடிவாரத்தில் விச்சியூர் என்ற ஊரும் இருந்தது. இன்று அது சிறுவாச்சூர் என்று வழங்குகிறது.

இவ்விச்சிக்கோ கொங்கு வேளிர் குடியினன். கொடைக் குணம் மிகுந்தவன். இவனைப் பரணர்[2] (குறு: 328) பாடியுள்ளார். இவனிடம் தான் பாரி மகளிரை அழைத்துக் கொண்டு கபிலர் சென்றார்.[3] (புறம்: 200) இளஞ்சேரல் இரும்பொறை இவனை வென்றதாகப் பதிற்றுப் பத்து[4] (9-பதிகம்) கூறுகிறது.

16. கட்டி

கட்டி மரபினர் தாரமங்கலப் பகுதியை ஆண்டு வந்தனர். சங்க காலத்தே இக்கட்டி மரபினர் சத்திய மங்கலம் முதல் கிழக்கே காவிரியாறும், மேற்கு மலைச்சாரலும் எல்லையாக ஆண்டு வந்தனர். பவானி யாற்றின் வடகரைப் பகுதியை ஆண்டு வந்தனர். கொள்ளே கால் பகுதியும் இக்கட்டி யாட்சியில் அடங்கும். இவர்கள் வடுகரை வென்றுள்ளனர்[5] (குறுந்: 11) அசோகர் காலத்துக் கல்வெட்டு[6] இவரைச் (கி.மு. 273-232) சத்திய புத்திரர் என்று கூறும். இவரைப் பரணரும்[7] (அகம்: 226) பாடியுள்ளார். கட்டியரைச் சேரன் செங்குட்டுவன் வென்றிருக்கிறான். கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின் இவர்கள் தங்கள் தலைநகரைத் தாரமங்கலத்துக்கு மாற்றிக் கொண்டனர்.

---

1. குறுந் : 328
2. குறுந் : 328
3. புறம் : 200
4 பதிற் : 9 பதிகம்
5 குறுந்· 11, 6. அசோகர் கல்வெட்டு, 7. அகம்: 226

17. பழையன்

மோகூர் என்பது கொங்கு நாட்டின் சேலம் மாவட்டத்தின் நாமக்கல்லுக்கு 11 - கல் தொலைவில் உள்ளது. இன்று மோகனூர் என்று அழைக்கப்படுகிறது. மோகூர் என்பதே மோகனூர் என்று திரிந்து வழங்குகிறது.

மழையொழுக் கறாஅப் பிழையா விளையுள்

பழையன் மோகூர்[1]

(மதுரைக்: 507-508)

இம் மோகூர் கரூர் குளித்தலை வட்டங்களில் வடபகுதியை உள்ளிட்டு, மேற்கே நொய்யலாற்றங் கரைப்பகுதி சேரக் காங்கயம் வரை பரவியுள்ளது.

பழையன் என்று கொங்கு வேள் மரபினன் இதனை ஆண்டு வந்தான். கரூர் கொடுமுடிக்கு எட்டுக்கல் வடமேற்கிலுள்ள தலைய நல்லூர், பழைய கோட்டை இப்பழையன் மரபினர் கட்டியதே ஆகும். பழைய கோட்டை ஈரோட்டிற்குத் தெற்கில் 23-வது கல்லில் உள்ளது. பழைய ஊர்.

இப்பழையன் மரபு வீரமும் புகழும் ஒருங்கே உடையது. மோகூர்ப் பழையன் இவர்களின் முன்னோர். அறுகை என்பவன் பழையனோடு போர் தொடுத்துத் தோற்றான். சேரன் செங்குட்டுவன் பழையனை வென்றான். இது கொங்கர் செங்களப் போர் எனப்பட்டது. செங்களம் - இன்று செங்குளம் ஆயிற்று.[2]

---

1. மதுரைக் : 507 - 508
2. புறம் : செங்களம்

18. மாவேள் எவ்வி

இவன் மிழலைக் கூற்றத்தின் தலைவன். காவிரி பாயும் நல்லூர் மன்னன்[1]. (புறம் 24) இருங்கோவேள் என்னும் வேளிர் மன்னன் இவனை வென்றான்[2] (புறம் 202) ''ஓம்பா ஈகை மாவேள் எவ்வி'' என்று மாங்குடிக் கிழார் பாடியுள்ளார். போரில் இவன் விழுப்புண் பெற்று, விடியலில் செய்தி பரவிய பொழுது வெள்ளெருக்கிலையார்[3] (புறம் : 233, 234) வருந்திப் பாடினார்.

19. பிட்டன் கொற்றன்

இப்பிட்டன் கொற்றன் நம்பியூரில் வாழ்ந்தவன். இவன் தந்தை நல்லாவியூரில் வாழ்ந்தான். மாந்தரஞ் சேரல் இரும்பொறையிடமும், பெருஞ்சேரல் இரும்பொறையிடமும் படைத் தலைவனாக இருந்தான். இவன் தமக்கை கொற்றி என்றும், மகள் கொற்றவை என்றும் கூறப்படுகிறது. ஆறு நாட்டார் மலையில் சமணப்படுக்கை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இது ஆறு நாட்டார் மலைக் கல்வெட்டுச் செய்தி.

கிள்ளியிடம் கருவூர்ப் போரில் பிட்டன் தோற்றான்[4] (புறம் 59) மாந்தரஞ் சேரல் துணை நின்று பிறகு கருவூரைப் பிட்டன் கொற்றனுக்குக் கொடுத்தான். முசிறி கழுவுள், கொல்லிமலை ஓரி, அதிகமான் மூவரையும் வென்றவன்.

இவனைக் கொல்லிக் கூற்றம் வேட்டம் பாடியினன் என்று கூறுவோரும் உளர். இவன் கொல்லி மலைத் தலைவன். காரிக்கண்ணனார், கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனார்[5] (புறம் : 168) இவனைப் பாடியுள்ளனர்.

1. புறம் : 24
2. புறம் : 202
3. புறம் : 233, 234
4. புறம் : 59
5. புறம் : 168

20. இருங்கோவேள்

இருங்கோ வேள் ஏர்க்காட்டு மலையை ஆண்டவன் என்று கூறுவர். இவனது நண்பனே விச்சிக்கோ. இவன் பச்சைமலையை ஆண்டவன். கபிலர் பாரி மகளிரை அழைத்துக் கொண்டு இருவரிடமும் பெண் கொள்ளுமாறு கேட்டனர். இருவரும் மறுத்து விடுகின்றனர்.

இன்னும் அந்துவன், ஆதனுங்கன், கடம்பன், படவூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தன் போன்ற வேளிர்களும் வள்ளல் தன்மையால் பெயர் பெற்றுள்ளனர்.

21. பண்ணன்

இவன் பண்ணை கூட்டத்தைச் சேர்ந்தவன். பசிப்பிணி மருத்துவன். இவனைச் சிறு கருந் தும்பியார் (புறம் 181) பாடியுள்ளார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' என்று ஒரு பேரரசனே வள்ளல் பண்ணனைப் பாடியுள்ளார்.

22. தித்தன்

வெல்போர்த் தித்தன் என்று இவனைப் போற்றுவர். உறந்தையை வென்றவன். மல்லன் ஒருவனை ஆமூரில் வெற்றி பெற்றான்[2] (புறம் : 80) தித்தன் பெருங்கொடைக் கையன்[3] (புறம் : 352) என்று புலவர் போற்றுவர். இவனை. மதுரை நக்கீரனாரும்[4] (புறம் : 395) பாடியுள்ளார்.

1. புறம் : 181
2. புறம்: 80
3. புறம் : 352
4. புறம்: 395

மூன்றாம் பகுதி

13. தமிழகத்தில் சங்கம் இருந்ததா?

தமிழ் நாட்டில் முதல், இடை, கடைச் சங்க காலத்தும், அதற்குப் பிற்பட்ட சங்கம் மருவிய காலத்தும்; கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்தும்; அதற்குப் பின் சமண பௌத்த சமய காலத்து வரைக்கும் 'தமிழச் சங்கம்' என்பதொன்று இருந்தது என்று ஏற்பாறும் மறுப்பாரும் இருந்தனர்.

தமிழகத்து அறிஞர் பெருமக்களும், ஆங்கில அறிவாளர்களும் சங்கம் இருந்ததற்கான கூறுகளை முழுவதும் ஆராயாது, ஓரோ வழி ஒரு சில கூறுகளையே ஆராய்ந்து, சங்கம் இருந்தது என்றும், சங்கம் ஒரு கற்பனை என்றும் கூறிப் போந்தனர்.

பேராசிரியர், டாக்டர் மு.பெரி.மு. இராமசாமி அவர்கள் ஆய்ந்த ஆராய்ச்சி முடிவில் 'சங்கம் இருந்ததும், வளர்ந்ததும் உண்மை' என்ற முடிவினை எடுக்கிறார்.

'தமிழ் எனப்படுவது சங்கத் தமிழே' என்பார் வ.சுப.மாணிக்கனார்.[2] இவர் சங்கம் இருந்தது என்பதை ஏற்பதோடு மட்டுமல்ல 'சங்கப் பனுவல்கள் பத்தரை மாற்றுத் தங்கக் கட்டிகள்' என்பார்.

'கே.என்.சிவராச பிள்ளை சங்கம் என்ற ஒன்று இருந்தது என்பது இயற்கைக்கு மாறானது என்றும்;[3]

---

1. டாக்டர் மு.பெரி.மு. இராமசாமி - 'தமிழ்ச்சங்கம்'
2. வ.சுப.மாணிக்கனார் - தமிழ்க்காதல்
3. கே.என்.சிவராச பிள்ளை - பழந்தமிழர் காலம்

டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார் 'முச்சங்கக் கதை ஒரு கற்பனை' என்றும்,[4]

கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார் 'மதுரையில் புலவர் அவையாகிய தமிழ்ச் சங்கம் கூடியிருக்கலாம். ஆனால் இறையனார் அகப்பொருள் உரை கூறும் சங்கம் வெறும் கற்பனை, கட்டுக் கதை என்றும் கூறுவார்.[5]

எம்.எஸ்.பூரணலிங்கம் பிள்ளை அவர்கள், 'மணி வேறு பதர் வேறு எனப் பிரித்து இலக்கியச் செம்மை காத்த குழு ஒன்று இருந்திருக்க வேண்டும்' என்கிறார்.[6]

பி.தி.சீனிவாச ஐயங்கார், 'மன்னர்கள் அவைக் களங்களில் புலவர்கள் போற்றப் பெற்றமை, நூல்கள் அரங்கேற்றப் பட்டமையை ஏற்கிறார். ஆயின் இறையனார் அகப்பொருள், உரை கூறும் சங்கச் செய்திகளைக் கட்டுக் கதை என மறுக்கிறார்.[7]

ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் 'சங்கம் என்ற சொல்லே தமிழ்ச் சொல் அல்ல என்றும் சங்கம் பற்றிய குறிப்பு சங்க இலக்கியத்துள் எங்கும் காணப்பட வில்லை யென்றும் கூறுவார்.[8]

இனிச் சங்கம் இருந்ததா என்ற வினாவெழுப்பி, விடை காண்போம்:

1.சங்கம் என்ற சொல் தூய தமிழ்ச் சொல் ஆகும். 'சகரக் கிளவி....' என்ற சூத்திரங்கொண்டு சகர வரிசைச் சொற்களையே நீக்குதல் கூடாது. சங்கம் என்றால் தமிழில் நெற்றி, சேனை, இலக்கம் கோடி என்றும் எண்ணிக்கை அளவில் முடிவாக 'சங்கம்' என்ற சொல்லைக் கூறுவது தமிழ் மரபு.

4. டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் - இந்தியப் பண்பாட்டிற்குத் தென்னிந்தியாவின் பங்களிப்பு
5. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் - தென்னிந்திய வரலாறு
6. எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை - தமிழ்க் கலைகள்
7. பி.டி. சீனிவாச ஐயங்கார் - தமிழர்கள் வரலாறு
8. ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் - தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரை

'வெள்ளம், ஆம்பல், தாமரை என்பதும் இந்த எண் வகைகளுள் பேரின எண்களைக் குறிக்கும். மேலும் சங்கு, கைவளை, அவை, கூட்டம் என்ற பொருளையும் குறிக்கும்.

2. 'ஆறு கடலொடு கடத்தல் 'சங்கமுகம்' என்பர். சங்கம் என்பது கடல் (கூடுதல்) ஆகும். புலவர்கள் தலைக் கூடல்' என்பது திருவள்ளுவம் என்பார், டாக்டர் மெ.சுந்தரம்.[9]

3. பாண்டியர் தலை நகராகிய மதுரையில் புலவர்கள் கூடித் தமிழ் ஆய்ந்த காரணத்தால் 'கூடல்' எனப் பெயர் பெற்றது. 'யாறுதலை மணக்கும் மலி ஓதத்து ஒலி, கூடல் என்னும் பட்டினப் பாலை வரிகளையும் நோக்குக.[10]

4. முதலில் புலவர்கள் கூடுதலை உணர்த்திப் பின் அவர்கள் கூடிய நகரம் 'மாடமலி மறுகிற் கூடல்' எனப்பட்டது.[11] பிற மன்னர்கள், வேளிர்கள் அவைக்களங்களில் புலவர்கள் கூடியிருப்பினும் அவை திட்டமிடாத கூடுதல் ஆகும்.

சங்கப் புலவர்களுள் 55 பேர் மதுரையிலேயே இருந்திருக்கின்றனர். பாண்டிய மன்னர்கள் 10 பேர் பாடல்கள் பாடியிருக்கின்றனர்.

5. உக்கிரப் பெருவழுதி அகநானூற்றையும், பூரிக்கோ குறுந்தொகையையும், பன்னாடு தந்த மாறன் வழுதி நற்றிணையையும் தொகுத்துள்ளதையும், (பாரதம் பாடிய) பெருந்தேவனார் தொகை நூல்களைச் சீர்படுத்தி இறை

9. சங்கம் - கட்டுரை கலைக்கதிர்
10. பட்டினப் பாலை - 95 - 99
11. திருமுருகாற்றுப்படை

வாழ்த்தோடு தொகுப்பித்ததையும்[12] பொன்னும் துகிரும் பாடல் காட்டி... ஒரு வழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர் சான்றோர் பாலராப என்று புறநானூற்று வரிகள் காட்டி விளக்குவார் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர்.[13]

6. 'எட்டு வகை நுதலிய அவையகம்' - என்பது தொல்காப்பியம்.[14]

'தோலா நாவின் மேலோர் பேரவை' என்பது ஆசிரிய மாலை.[15]

'நிலந்தரு திருவிற் பாண்டியன் அவை அகத்து' என்பது பனம்பாரனார் பாயிரம்.[16]

'பழுதில் கொள்கை வழுதியார் அவைக்கண்

அறிவு வீற்றிருந்த செறிவுடை மனத்து

வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ

அருந்தமிழ் மூன்றும் தெரிந்த காலை'[17]

என்பது அகநானூறும் (பழைய உரைப்பாயிரம்) அடியார்க்கு நல்லாரின் சிலம்பு உரைப்பாயிரமும் விளக்கும்.[18]

7. பாண்டியர்கள் மற்ற சோழர் சேரரினும் தமிழ் வளர்க்கச் சங்கம் வைத்தவர் என்பதும், தலையாலங்கானத்துச் செருவென்ற

12. பாட்டும் தொகையும்
13. டாக்டர் உ.வே.சா
14. தொல்காப்பியம்
15. ஆசிரியமாலை
16. பனம்பாரனார்
17. அகநானூறு - பழைய உரைப்பாயிரம்
18. அடியார்க்கு நல்லார் - சிலப் - பாயிரம்

பாண்டியன் நெடுஞ்செழியன் 'மாங்குடி மருதன் தலைவனாக இருக்கச் சங்கம் வளர்த்தான் என்பதும் அறிகிறோம்.[19]

8. கடுந்தேர்ச் செழியனின் காலத்திலும் 'தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நன்...' என்பதனாலும் சங்கம் இருந்தது (சிறுபா)[20] என்பதை அறிகிறோம்.

19. புறநானூறு 72:13-16
20. சிறுபாணாற்றுப் படை

14. மதுரையில் புலவர்கள் கூடும் காலம்

கலித்தொகையில் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தான் இளவேனிற் பருவத்தில் மீண்டு வருவதாகக் கூறினான். இதனைத் தோழி,

நிலனாவில் திரிதரும் நீண்மாடக் கூடலார்

புலனாவில் பிறந்தசொல் புதிதுண்ணும் பொழுதன்றோ?'[21]

திரும்பி வருவதாகக் கூறிச் சென்றார். இன்னும் வரவில்லையே! என்பதில் மாடக் கூடலில், இளவேனிற் பருவத்தில் (சித்திரை, வைகாசி) புலவர்கள் புதிய சொற்களால் புதிய புதிய பாடல்கள் புனைந்து கேட்டுண்டு மகிழ்வார்கள்.

9. தமிழ்ச் சங்கங்கள் சிறந்த கல்விக் கழகங்களாக இருந்திருக்கின்றது என்பார் பேராசிரியர் ரா.கிருஷ்ணமூர்த்தி[22]

10. கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் பிளாட்டோ கலைக் கழகம் (Academy) அமைத்தது போல அதற்கு முன்னரே பாண்டியரும் தமிழ்க் கழகம் அமைத்திருக்கிறார்கள்.

11. தமிழ்ச் சங்கங்கள் மூன்றினைப் பற்றிய வரலாற்றை முதன்முதலில் கூறியவர் நக்கீரரே. நக்கீரரின் பாடல்களில் பல வரலாற்றுச் செய்திகள் உண்டு.[23]

21. கலித்தொகை 35:17-18
22. பேரா.ரா.கிருஷ்ணமூர்த்தி - பண்டை இந்தியப் பல்கலைக் கழகங்கள்
23. திருமுருகாற்றுப்படை

சங்கம் மூன்று தோன்றியது ஏன்?

தேவநேயப் பாவாணர் அவர்கள்[24] 'தமிழகத்தில் நிகழ்ந்த கடல் கோள்கள் நான்கு என்பார்.

முதலது, தலைக் கழக (முதல்) இருக்கையாகிய தென் மதுரையைக் கொண்டது.

இரண்டாவது 'நாக நன்னாடு நானூறு யோசனை' கொண்டது (மணி 9.21)

மூன்றாவது, இடைக் கழக இருக்கையாகிய கபாடபுரத்தைக் கொண்டது.

நான்காவது, காவிரிப்பூம்பட்டினத்தையும், குமரியாற்றையும் கொண்டது.

இதனைப்,

பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்

குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு

தென்றிசை ஆண்ட தென்னவன் வாழி

என்று சிலப்பதிகாரம் கூறும்.

முதலூழி இறுதிக் கண் முதற் சங்கம்: தென்மதுரை - திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் குன்றெறிந்த குமர வேள், முரஞ்சியூர் முடிநாகரையர் தலைமைப் புலவர்கள் 4409 பேர் புலவர்கள். பரியும், முதுநாரையும், முதுகுருகும் பிறவும் நூல்கள். ஆண்டுகள் 4440. பாண்டிய மன்னர்கள் 89 பேர். 3700 ஆண்டுகள் ஆட்சி

24. தேவநேயப்பாவாணர் - தமிழ் வரலாறு முன்னுரை

காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை. கவியரங்கேறினர் எழுவர் பாண்டியர். இலக்கணம் அகத்தியம்.

இரண்டாம் ஊழியில் இரண்டாம் தமிழ்ச் சங்கம். தலைநகர் கபாடபுரம் (கொற்கை) ஏற்படுத்தியோன் மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன். அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர் கருங்கோழி மோசியார், வெள்ளூர்க் காப்பியனார், முதலியோர் உள்ளிட்ட 59 தலைமைப் புலவர்கள்; 3700 ஆண்டுகள். இருந்த புலவர் பெருமக்கள் 3700 பேர் தோற்றிய நூல்கள் கலியும் குருகும் வெண்டாளியும் முதலியன. பாண்டியர் வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் ஈறாக. கவியரங்கேறிய பாண்டியர் ஐவர். இலக்கணம் அகத்தியம், தொல்காப்பியம்.

மூன்றாம் ஊழியில் மூன்றாம் தமிழ்ச் சங்கம். இது கடைச் சங்கம். தலைநகர் மதுரை. சிறு மேதாவியார், சேந்தம் பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார் இளந்திருமாறன், ஆசிரியர் நல்லந்துவனார் மதுரை மருதனிள நாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரர் - முதலிய 49 தலைமைப் புலவர்கள். 449 பேர் இருந்த புலவர் பெருமக்கள். தோற்றிய நூல்கள் நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப்பத்து - என இத்தொடக்கத்தன. 1850 ஆண்டுகள் சங்கம் இருந்தது. முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக 49 பாண்டியர் இருந்தனர். கவியரங்கேறிய பாண்டியர் மூவர்[26] இவர்கள் நீண்ட பாடல்கள் எழுதியோர் போலும்.

கலியூழியின் தொடக்கம் கி.மு. 3101 - என்பார்[27] அறிஞர் இரா.மதிவாணன் கலியூழி என்னும் தமிழ்ச் சொல்லையே கலியுகம்

25. சிலப் : 11:19-22
26. இறையனார் அகப்பொருள் உரை
27. இரா. மதிவாணன்.

எனத் திரித்தனர் வடமொழியாளர் என்பார். முதற் சங்கமும், இடைச் சங்கமும் பலவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. அண்மையில் இலெமுரியாக் (குமரிக் கண்டம்) கண்டம் பற்றி ஆய்வு செய்த வள்ளல் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்களும் இடைக் கழகம் 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும், தலைக் கழகம் 70,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் கூறுவார்.[27]

தமிழகத்தின் பல பாகங்களில் வாழ்ந்த புலவர்கள் - பகை கொண்டு போரையே செய்து வந்த மன்னர்களின் நிழலில் வாழ்ந்த புலவர்கள் - மதுரையில் ஒரு கால இளவேனிற் பருவத்தில் கூடினர் என்பது பொருத்தமா? என பி.தி. சீனிவாச ஐயங்கார் வினா எழுப்புகிறார்.[28]

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என வாழ்ந்தவர்கள் சங்கப் புலவோர். 'யாதானும் நாடாமால், ஊராமால்' என வாழ்ந்தவர்கள். 'பழுமரம் தேடும் பறவை' போல எங்கும் சென்றவர்கள். இளவேனிற் பருவம் அறிந்து மதுரையும் சென்றிருப்பார்கள் என்கிறார் டாக்டர் மு.பெரி.மு.இராமசாமி அவர்கள்.

அது மட்டுமன்றி கொங்கு, சோழ, சேர, நடு வேங்கட (புல்லி) நாடுகளிலிருந்து புலவர்கள் சிலர் சேர்ந்து, தம் பாடல்களுடன் பிற புலவர்கள் பாடல்களையும் கொண்டு சென்று சங்கத்தில் சேர்த்திருக்கலாம். கபிலர், பரணரின் உழைப்பு இதனைக் காட்டுவதாய் அமையும்.

சில வேளிர் மன்னர்களும் தம்மைச் சார்ந்த புலவர்களை மதுரைக்கு அனுப்பியும் வைத்திருக்கலாம். புலவர்களே நீண்ட பயணங்கள் மேற்கொண்டு அரிதின் முயன்று ஆண்டின் இடையிலும் சென்றிருக்கலாம். தமிழ்ச் சங்கம் தொடர்ந்து இயங்கிக்

27. 'ஓம் சக்தி' இதழ்க் கட்டுரை -1998
28. பி.தி.சீனிவாச ஐயங்கார் - தமிழர்கள் வரலாறு

கொண்டுதானே இருந்திருக்கும். இளவேனிற் காலம் 'புலவர்கள் கூடும்' சிறப்புக் காலமாக இருந்திருக்கும்.

டாக்டர் ம.ரா.போ. குருசாமி அவர்கள், 'சங்கம் இருந்ததற்கான சான்றுகள், இலக்கியங்கள் பல கிடைக்கின்றன. அதன் உண்மையை மறுக்கும் சான்றுகள் ஒன்று கூடக் காணக் கிடைக்க வில்லை[29] என்னும் கூற்றால் நாம் தெளிவாக முச்சங்கங்கள் இருந்ததை ஆய்ந்து அறியலாம்.

இதில் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதிற்றுப் பத்தில் உள்ள புலவர், புரவலர் பெருமக்களைப் பற்றியும், இடை, கடைக் கழகத்துப் புலவர்களின் பாடல்கள், இசை பற்றியும் நாம் அறிந்து இன்புறுகிறோம்.

அவ்வகையில், சங்கப் புலவர்கள் தொகையிலிருந்து, கொங்கு நாட்டைச் சார்ந்த சங்க காலப் புலவர்கள் இவரிவர் என்ற ஒரு தொகுப்பினைக் கண்டறிய முயன்றோம். அத் தொகுப்பே பின்வரும் புலவர்கள் நிரையென அறியலாம்.

இன்னும் சில புலவர்கள், தொகுப்பில் விழுபட்டிருக்கலாம். அவைகளைக் கற்போர் அறிவிப்பின் பின்னர் சேர்த்துக் கொள்ளப்படும்.

அடுத்துள்ள பட்டியலில் புலவர்களின் புறநானூற்றுப் பாடல்கள் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவர்களின் அகப்பாடல்கள் நூற்றொகையிலிருந்து தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. அவை ஆய்வார்க்கு உதவும் என்பதால்.

29. டாக்டர் ம.ரா.யோ. குருசாமி - சங்ககாலம்

15. கொங்குப் பகுதியில் வாழ்ந்த புலவர்களும் அவர்கள் பாடிய சங்கப் பாடல்களும்

எண்	புலவர் பெயர்கள்	புறம் (புறநானூறு)	அகப்பாடல்கள்
1	அஞ்சில் ஆந்தையார்		நற்: 233
2	அஞ்சில் ஆந்தை		குறு: 294
3	அஞ்சி அத்தை மகள் நாகையார்		அகம்: 352
4	அதிகன் விண்ணத்தனார்		அகம்: 301
5	அந்தி இளங்கீரனார் (அந்தியூர்)		அகம்: 7
6	அரிசில் கிழார்	146, 230, 281, 285, 300, 304, 342	குறு: 193
7	ஆசிரியன் பெருங்கண்ணன்		குறு: 239
8	ஆலத்தூர் கிழார்	34, 36, 69, 225	குறு: 112, 350
9	ஆவூர் கவுதமன் தேவனார்	322	நற்: 264
10	ஆவியார்	298	
11	ஆவூர் மூலங்கிழார்	38, 40, 166, 177, 178, 196, 261, 301	
12	இடைக் குன்றூர்க் கிழார்	76, 77, 78, 79	
13	இரும்பிடர்த் தலையார்	3	
14	உம்பர்க்காட்டு இளங் (ஆனைமலை) கண்ணனார்		அகம்: 264
15	உமட்டூர் கிழான் மகனார்		அகம்: 69
16	(ஆறு நாட்டார் மலை - பிராமிக் கல்வெட்டு) உரோகடத்துக் கந்தரத்தனார் (ஒலகடம்)		நற்: 116, 146, 238, 306 குறு: 155 அகம்: 23, 95, 191
17	ஊட்டியார்		அகம்: 68, 388
18	எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார்	356, 397	நற்: 219

			அகம்: 105, 132, 213, 237
19	எருக்காட்டூர்த் தாயங் கண்ணியார்	250	குறு: 319
20	ஔவையார்	87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99, 100, 101, 102, 103, 104 140,187, 206,231,232, 235, 269, 286, 290, 295, 311, 315, 367, 390, 392	நற்: 129, 187 295 371, 381, 390, 394 குறு: 15, 23, 28, 29, 30, 43, 80, 91, 99,102, 158, 183, 200, 364, 388 அகம்: 11, 147, 273, 303
21	கண்ணகனார்	218	
22	கருவூர்க் கண்ணம்புல்லனார்		நற்: 79
23	கணியன் பூங்குன்றனார்	192	
24	கருவூர்க் கதப்பிள்ளையார்	380	நற்: 135
25	கபிலர் (கபிலமலை)	8, 14, 105, 166, 107, 108,109,110, 111, 113, 114,115, 116,117,118, 119, 120, 121, 122, 123, 124, 143,	

200, 201, 202,
236, 337, 347

குறு: 64, 265,
380
நற்: 1,13, 32,
59, 65, 77,
217, 222,
225,
253, 267,291,
307, 320,
336, 353,
359, 368,
373, 376
குறு: 13, 18,
25, 38, 42,
87, 95, 100,
106, 115,
121, 142,
153, 157,
187, 198,
208, 225,
241, 246
249, 264,
288, 291,
312, 355,
357, 361, 385
அகம்: 2, 12,
18, 42, 82,
118, 128,
158, 182,
203, 218,
238, 248,
278, 292,
318, 332, 382

26	கருவூர் ஓத ஞானி		குறு: 227,71
27	கருவூர் ஓதலாந்தையார்		குறு: 12, 21, 329
28	கருவூர்க் கண்ணம்பாலனார்		அகம்: 180, 263, நற்: 148
29	கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார்168		நற்: 343, அகம்: 309
30	கருவூர்க் கலிங்கத்தார்		அகம்: 183
31	கருவூர்க்கிழார்		குறு: 170
32	கருவூர்க் கோசனார்		நற்: 214
33	கருவூர்ச் சேரமான் சாத்தன்		குறு: 218
34	கருவூன் நன்மார்பன்		அகம்: 277
35	கருவூர்ப் பவுத்திரன் (கரூருக்கு அருகில் பவுத்திரம் ஊர் உள்ளது)		குறு: 162
36	கருவூர்ப் பூதன் சாத்தனார்		அக: 50
37	கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதன் நாதனார்		219
38	கள்ளிக்குடி பூதம் புல்லனார்		நற்: 333
39	கள்ளில் ஆத்திரையனார்	175, 389	குறு: 293
40	காக்கை பாடினியார் நச்செள்ளையார் (காகம்)	278	குறு: 210
41	காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்		அகம்: 85
42	காரி கிழார்	6	
43	குட்டுவன் கீரனார்	240	
44	குன்றூர்க் கிழார் மகனார் கண்ணத்தனார்	338	
45	கூடலூர் கிழார்	229	குறு: 166, 167, 214
46	கிள்ளி மங்கலங்கிழார்		குறு: 76, 110, 152, 181
47	குடவாயில் கீரத்தனார் (கொடுவாய் - கல்வெட்டு)	242	குறு: 281, நற்: 27, 212, 219

48	கூடலூர் பல்கண்ணனார்		நற்: 200, 380
49	கொல்லிக் கண்ணனார் (கொல்லிமலை)		குறு: 34
50	மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்		அக: 54
51	சாத்தந்தையார் (கொடுமணல் பிராமிக் கல்வெட்டு)	80,81,82,287	நற்: 26
52	சிறைக்குடி ஆந்தையார்		நற்: 16, குறு: 56, 57, 62, 132, 168, 222, 273, 300
53	சேந்தம் பூதனார்		நற்: 261
54	நரிவெரூஉத் தலையார்	5,195	
55	நொச்சி நியமங்கிழார்	293	நற்: 17, 208, 209, அக:52
56	படுமரத்து மோசி கீரனார்		குறு: 75, 33, 383
57	படுமரத்து மோசி கொற்றனார்		குறு: 376
58	பாரி மகளிர் (பாரியூர் - ஒடுவங்க நாடு - பறம்புமலை)	112	
59	புல்லாற்றூர் எயிற்றியனார்	213	
58	பெருங்குன்றூர்க் கிழார்	147,210,211, 266 ,318	நற்: 5, 112, 119, 347 குறு: 338, அக: 8
59	பெருஞ்சாத்தன்		குறு: 263
60	பெருஞ்சித்திரனார்	158,159,160,161,162, 163,207,208,237,238	

61	பெருந்தலைச் சாத்தனார்	151,164,165,205, 209,294 நற்:262, அக:13
62	வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார்	125
63	பொருந்தில் இளங்கீரனார்	53
64	பொன்முடியார்	299,310,312
65	மோசி கீரனார்	50,154,155,156,186 ந 342, 374 குறு: 59, அகம்: 392
66	வீரை வெளியனார் (விழியர் குலம்)	320

நான்காம் பகுதி

16. கொங்கு நாட்டுச் சங்க காலப் புலவர்கள்

1. அரிசில் கிழார்

ஆசிரியர் குறிப்பு: இவர் கொல்லிமலைப் பகுதியைச் சார்ந்தவர் சேலத்தின் ஒரு பகுதி பழங்காலத்தில் அரிசில் என்று அழைக்கப்பட்டது.

அது இக்கால் அரிசிப் பாளையம் என்று மரூஉ வழக்காகி உள்ளது அரிசிலாற்றங் கரை ஊரினர் என்றும் கூறுவர் இவர் வேளாண் குடித் தோன்றல்.

புறம்: 146

அன்ன வாகநின் னருங்கல வெறுக்கை
அவைபெறல் வேண்டேம் அடுபோர்ப் பேக!
சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னாடு பாட, வென்னை நயந்து
பரிசில் நல்குவை யாயிற் குரிசில்நீ,
நல்கா மையின் நைவரச் சாஅய்
அருந்துயர் உழக்குநின் திருந்திழை அரிவை
களிமயிற் கலாபம் கால்குவித் தன்ன
ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇத்
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே

திணை: பெருந்திணை

துறை: குறுங்கலி - தாபத நிலை

கருத்து: அடுபோர்ப் பேகனே! நீ நல்கிய செல்வமும் பிறவும் அவ்விடமே இருக்கட்டும். சீறி யாழில் செவ்வழிப் பண்ணை இசைத்து, உனது நாட்டை நாங்கள் பாடியதற்கு உவந்து பரிசில் தருவதாயின் குரிசிலே! நீ அருளாததால் கண்டார் இரங்க நலிந்தவளாகித் துயரால் வருந்தும் உன் அரிவையின் (கண்ணகி) கூந்தலில் நறும்புகை ஊட்டி, தண் மலர் சூடி, ஆடா திருக்கும் மயில் போல் உள்ள அவள் வருத்தம் தீர்க்க, இன்னே உன் தேரைக் குதிரைகள் பூண்பனவாகுக! இதுவே யாம் வேண்டும் பரிசில்.

வரலாற்றுக் குறிப்பு:

பேகனை அரிசில்கிழார் பாடியது. வையாவிக் கோப்பெரும் பேகன் ஒருக்கால் தம் மனைவி கண்ணகியுடன் உறையாது இருந்தான். வருந்தி வாழும் அவள் துயர் கண்டு சேர்ந்து வாழ வேண்டுமென்று புலவர் அறிவுறுத்துகிறார்.

புறம்: 230

அதிகமான் தகடூரில் பொருது வீழ்ந்த எழினியை, அரிசில்கிழார் பாடியது. திணை: பொதுவியல், துறை: கையறு நிலை

கன்றம ராயங் கானத் தல்கவும்
கவங்கால் வம்பிலர் வேண்டுபுலத் துறையவும்
களமலி குப்பை காப்பில வைகவும்
விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்
வையகம் புகழ்ந்த வயங்கு விளை யொள் வாய்
பொய்யா எழினி பொறாது களஞ் சேர
ஈன்றோள் நீத்த குழவி போலத்
தன்னமர் சுற்றந் தலைத்தலை யினையக்
கடும்பசி கலக்கிய விடும்பைகூர் நெஞ்சமொடு

நோயுழந்து வைகிய வுலகினு மிகநனி
நீயிழந் தனையே அறனில் கூற்றம்
வாழ்தலின் வரூஉம் வயல்வளன் அறியான்
வீழ்குடி உழவன் வித்துண் டாஅங்கு
ஒருவன் ஆருயிர் உண்ணா யாயின்
தேவரர் பல்லுயிர் பருகி.
ஆர்குவை மன்னோவிவ னமரடு களத்தே.

காட்டில் மேயும் ஆனினத்திற்குப் பிற விலங்குகள் துயர் செய்யாது. சுரத்தின் இடையில் தங்கிச் செல்ல வசதி உண்டு களத்தில் நெற்பொலி காவலின்றிக் கிடக்கும். எதிர்ப்பகை வெல்லும் ஆற்றல் உடையவன் சிறந்த செங்கோன்மையும், வையகம் புகழும் பேராண்மையும், வாய்மை கொண்டு விளங்கிய பொகுட்டெழினியும் போரிலே மடிந்தான். தாயற்ற குழவி போல் உறவினர் இடந்தோறும் பசியால் அழுது வருந்துவது போல நாட்டினர் வருந்துகின்றனர்.

அறமில்லாத கூற்றுவனே! உன் வருத்தந்தான் மிகப் பெரிது விதையினை விதைத்து அதனால் வரும் விளைச்சலை நினையாது விதை நெல்லையே உண்ணும் உழவனைப் போலப் பகைவர் பலரைப் போர்க்களத்தில் கொன்று, உனக்கு உணவாகத் தருபவனையே கொன்று விட்டாயே! நீயும் அறிவிலி!

புறம்: 281

தகடூர் அதிகமான் மகன் போரில் விழுப்புண் பட்டுக் கிடந்தது போல் ஒரு வீரன் விழுப்புண் பட்டான் அவனைப் பாடியது. திணை: காஞ்சி, துறை தொடாக் காஞ்சி

தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்க

கைபயப் பெயர்த்து மையிழு திழுகி

ஐயவி சிதறி ஆம்பல் ஊதி

இசைமணி யெறிந்து காஞ்சி பாடி

நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்

காக்கம் வம்மோ காதலந் தோழி!

வேந்துறு விழுமம் தாங்கிய

பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே.

இரவ இலையையும், வேப்பிலையையும் மனையின் இறப்பிலே செருகுவோம். பல இசைக் கருவிகளொடு யாழ் இசைப்போம். மெல்லக் கையை எடுத்துக் கண்ணுக்கு மை எழுதுவோம். ஆம்பற் குழல் ஊதி, வெண் சிறு கடுகு சிதறி, மணிகள் ஒலிக்கக் காஞ்சிப் பண்ணைப் பாடுவோம். வீடெல்லாம் அகிற்புகை மணம் சேர்ப்போம். அன்புத் தோழியே! வேந்தனுக்கு உற்ற துயர் தீர்த்தவன் இவன். எம் தலைவன்! வீரக்கழல் அணிந்த இவன் போரிலே பெரும் புண்பட்டான் அவனைக் காப்போம் வா!

அம்மை போன்ற கொடிய நோய் பரவிய போது இன்றும் கொங்குப் பகுதியில் இதுபோன்ற நடைமுறை நாட்டுப் புறப்பகுதியில் உள்ளது. பழங்காலத்தில் விழுப்புண் பட்ட வீரனுக்கு நிகழ்ந்தது.

புறம்: 285

நெற்கழனியும், கரம்பைச் சிற்றூரும் வழங்கிய வள்ளல் ஒருவன் மார்பில் வேல் பாய்ந்து மடிந்த பொழுது அரிசில் கிழார் பாடியது. திணை: வகை; துறை: சால்பு முல்லை.

பாசறை யீரே! பாசறை யீரே!

துடியன் கையது வேலே யடிபுணர்

வாங்கிரு மருப்பிற் றீந்தொடைச் சீறியாழ்ப்
பாணன் கையது தோலே, காண்வரக்
கடுந்தெற்று மூடையின்.....
வாடிய மாலை மலைந்த சென்னியன்
வேந்து தொழில் அயரும் அருந்தலைச் சுற்றமொடு
நெடுநகர் வந்தென விடுகணை மொசித்த
மூரி வெண்டோள் ... .
சேறுபடு குருதிச் செம்மலுக் கோஒ
மாறுசெறு நெடுவேல் மார்புளம் போக
நிணம்பொதி கழலொடு நிலஞ்சேர்ந் தனனே!
அதுகண்டு,
பரந்தோ ரெல்லாம் புகழத் தலைபணிந்து
இறைஞ்சி யோனே, குரிசில் 'பிணங்குகதிர்
அலமருங் கழனித் தண்ணடை யொழிய
இலம்பா டொக்கற் றலைவற்கோர்
கரம்பைச் சீறூர் நல்கினன் எனவே!

பாசறையில் உள்ளவர்களே. 'கேளுங்கள்! வேலும் கேடயமும் நம்மிடம் இருந்தென்ன? அவைகளைத் துடியனிடமும் பாணனிடமும் கொடுத்து விடுவோம். நெருக்கி அடுக்கிய மூட்டைகளைப் போலப் பகைவர்களைக் கொன்று, கொன்று குவித்தான் இவன். அதன் வெம்மையால் அவன் மாலையும் வாடிற்று. மிகப் பல பகைவர்கள் இவன் மீது அம்புகளையும், வேல்களையும் விட்டனர். வேல் நெஞ்சைப் பிளந்தது. கணைகள்

சூழத் தைத்தன. நிலம் குருதிபட இச்செம்மலும் வீழ்ந்தான். அதுகண்டு அங்கிருந்த சான்றோர் பலரும், 'நெற்கழனிகள் பலவும், கரம்பைச் சிற்றூர் பலவும் இரவலர்க்கு வழங்கிய வள்ளல் இவன்' எனப் புகழக் கேட்டு, வெட்கப்பட்டு, இவன் கவிழாத தலையும் கவிழ்ந்து விட்டதே! இவனன்றோ மா மறவன்!

புறம்: 300

ஒரு வீரனின் தானை மறம் உரைத்தது அரிசில்கிழார் பாடியது. திணை தும்பை துறை: தானை மறம்.

தோறா தோறா வென்றி தோலொடு

துறுகல் மறையினும் உய்குவை போலாய்

நெடுநல் எல்லைநீ யெறிந்தோன் தம்பி

அகற்பெய் குன்றியிற் கழலுங் கண்ணன்

பேரூர் அட்ட கள்ளிற்

கோரிற் கோயில் றேருமால் நின்னே.

'கேடயத்தைக் கொண்டு வா! கேடயத்தைக் கொண்டு வா! என்று ஏன் வீணாகக் கத்துகிறாய். (கேடயம் பண்டு தோலால் செய்யப்பட்டிருந்தது) நீ கேடயத்தோடு துறுகல்லின் (துறுத்திக் கொண்டு இருக்கும் நீண்ட உயர்ந்த கல்) பின்னே மறைந்து விட்டாலும் பிழைத்துப் போய் விடுவாயோ? நேற்றைய போரிலே நீ கொன்றாயே அவனுடைய தம்பி, அகலிலிட்ட குன்றிமணி போலச் சிவந்த கண்ணோடு, பேரூரிலே காய்ச்சிய கள் ஒரு வீட்டிலே இருப்பதறிந்த வேட்கையன் அங்கு சென்று கலயந் தேடுவது போன்ற வெறியோடு உன்னைத் தேடி அலைகிறான். நீ போரிட நினையாதே! ஓடி உய்வாயாக!

புறம்: 304

ஒரு மறவன் 'என் தமையனைக் கொன்றவனை அவன் தம்பியொடும் கொல்வேன்' எனச் சீறி எழுந்தானை அரிசில்கிழார் பாடியது.

திணை: தும்பை துறை: குதிரை மறத்துறை

கொடுங்குழை மகளிர் கோதை சூட்டி
நடுங்குபனிக் களைஇயர் நாரரி பருகி
வளிதொழில் ஒழிக்கும் வண்பரிப் புரவி
பண்ணற்கு விரைதி நீயே, நெருநை
எம்முற் றப்பியோன் தம்பியொ டொராங்கு
நாளைச் செய்குவென் அமரெனக் கூறிப்
புன்வயிறு அருத்தலுஞ் செல்லான், பன்மான்
கடவு மென்ப பெரிதே யதுகேட்டு
வலம்படு முரசின் வெல்போர் வேந்தன்
இலங்கிரும் பாசறை நடுங்கின்று,
இரண்டா காதவன் கூறிய தெனவே.

திணை: தும்பை

துறை: குதிரை மறம்

ஏவலா! மகளிர் கோதை சூட்டவும், நடுக்கம் தீரக் கள்ளை உண்டு காற்றினும் கடிது செல்லும் குதிரையை ஆயத்தம் செய்வாயாக! நேற்று என் தமையனைக் கொன்றவனை அவன் தம்பியோடும் கொல்வதற்கான போரை நாளை நானே செய்வேன்' என்று கூறியவனாக உண்ணாது, பல குதிரைகளையும் ஆய்ந்து கொண்டிருக்கிறான் ஒரு மாவீரன் அதனைக் கேட்ட பகையரசனும் அவன் பாசறையில் உள்ளோரும் 'அவன் சொன்னால் அது இரண்டாகாது' என எண்ணி, மறுநாளை நினைந்து நடு நடுங்கினர்.

புறம்: 342

மருத நிலத்தலைவனின் மகனை விரும்பிய ஒரு வீரனுக்கு அரிசில்கிழார் அறிவுறுத்தியது

திணை: காஞ்சி; துறை: மகட்பாற் காஞ்சி

கானக் காக்கைக் கலிச்சிற கேய்க்கும்
அயிலைக் கண்ணிப் பெருந்தோட் குறுமகள்
ஏனோர் மகள் கொல் இவளென விதுப்புற்று
என்னொடு வினவும் வென்வேல் நெடுந்தகை'!
திருநயத் தக்க பண்பினிவள் நலனே!
பொருநர்க் கல்லது பிறர்க்கா காதே
பைங்காற் கொக்கின் பகுவாய்ப் பிள்ளை
மென்சேற் றடைகரை மேய்ந்துண் டதற்பின்
ஆரல் ஈன்ற ஐயவி முட்டை
கூர்நல் இறவின் பிள்ளையொடு பெறூஉந்
தண்பனைக் கிழவனிவள் தந்தையும் வேந்தரும்
பெறாஅ மையிற் பேரமர் செய்தலிற்
கழிபிணம் பிறங்குபோர்பு அழிகளிறு எருதா
வாள்தக வைகலு முழக்கு
மாட்சி யவரிவள் தன்னை மாரே!

வெற்றி வேலைக் கையிலே ஏந்திய நெடுந்தகையே! 'கானகக் காக்கையின் சிறகு போன்ற கரிய விழியுடையாள். பெருந்தோள் குறுமகள். இவள் யாரோ?' என அவள் மேல் ஆசையுற்று

என்னிடம் கேட்கிறாய். கேள்! திருமகள் விரும்பும் பண்பினள் இவள். படைமறவர்க் கன்றிப் பிறர்க்குக் கிடைப்பதற்கரியன்!

மருதநிலத் தலைவனாகிய இவள் தந்தையும், மகள் மறுத்ததால் சினந்த வேந்தரும் நடத்திய போர்களோ பல இவளைப் பெற போரிலே வெற்றி பெறுவதும் எளிதன்று. இவள் தமையன்மார் நெற்போர் போலக் கொன்று குவித்த பகைவர் சடலங்களைப் போர் மிதிக்கும் எருதுகள் போலக் களிறுகள் துவைத்துச் செல்ல, வாள் கொண்டு நாளும் வாள் உழவு செய்யும் மாட்சியுடையவர். எனவே நின் ஆசையை விட்டுச் செல்வாயாக!

2. ஆலத்தூர் கிழார்

புறம்: 34

இவர் இன்றைய ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டத்தைச் சார்ந்த ஆலத்தூர் ஊரினர். வேளாளர் மரபினர். இவர் குளமுற்றப் போரிலே துஞ்சிய கிள்ளி வளவனைப் பாடிய பாடல் இது இவன் கருவூர்ச் சேரனை வென்றவன் வீரமும் அருளும் புலமையும் உடையவன். திணைப் பாடாண் துறை இயன்மொழித்துறை.

ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்

மாண் இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்

குரவர் தப்பிய கொடுமை யோர்க்கும்

வழுவாய் மருங்கில் கழுவாயும் உளஎன

நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்

செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென

அறம்பா டிற்றே ஆயிழை கணவ!

காலை அந்தியும் மாலை அந்தியும்
புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கம் தேனொடு மயக்கிக்
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த ஒக்கலொடு
இரத்தி நீடிய அகன்தலை மன்றத்துக்
கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி
அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு
அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன்
எங்கோன் வளவன்! வாழ்க! என்றுநின்
பீடுகெழு நோன்றாள் பாடே னாயின்
படுபறி யலனே பல்கதிச் செல்வன்
யானோ தஞ்சம் பெருமஇவ் வுலகத்துச்
சான்றோர் செய்த நன்றுண் டாயின்
இமயத்து ஈண்டி இன்குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பல் துளியினும் வாழிய பலவே!

ஆயிழை நல்லாள் கணவனே! ஆவின் மடியினை அறுத்தும், மகளிரின் கருச்சிதைத்தும், ஆசானைப் பழித்தும் கொடுமை செய்தவர்க்குக் கூடக் கழுவாய் உண்டு. செய்த நன்றியை அழிப்பவர்க்கு உய்வே இல்லை.

என் சுற்றத்தார் காலையும் மாலையும் வரகைப் பால் பெய்து சமைத்து தேனுடன் கலந்து, முயலின் சூடான இறைச்சியுடன்

உண்பர். பாணர்க்கு அழியாத செல்வத்தைத் தந்தவன் எம் கோமான் வளவன்! வாழ்க!

இவ்வுலகில் சான்றோர் செய்த நன்மைகள் நிலைக்குமானால், இமயச் சாரலில் பெய்த நுண்ணிய மழைத்துளிகளினும் பல ஆண்டுகள் நீ வாழ்வாயாக! பண்பாடு: இதில் பழந்தமிழர் பண்பாடு, பாணர் ஒக்கல் வாழ்வு, இமயச் சாரல் அறிவு - முதலியன கூறப்பட்டுள்ளன.

ஆலத்தூர் கிழார்

புறம்: 36

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் கருவூரை முற்றியிருந்த போது ஆலத்தூர் கிழார் பாடியது.

திணை: வஞ்சி துறை: துணைவஞ்சி

அடுநை யாயினும் விடுநை யாயினும்

நீ அளந் தறிதி! நின் புரைமை வார்கோல்

செறியறிச் சிலம்பின் குறுந்தொடி மகளிர்

பொலஞ்செய் கழங்கின் தெற்றி யாடும்

தண்ணான் பொருநை வெண்மணல் சிதையக்

கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்

நெடுங்கை நவியம் பாய்தலின், நிலையழிந்து

வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறும்

கடிமரம் தடியும் ஓசை தன்னூர்

நெடுமதில்வரைப்பின் கடிமனை இயம்ப

ஆங்கினி திருந்த வேந்தனொடு ஈங்குநின்

சிலைத்தார் முரசம் கறங்க

மலைத்தனை என்பது நாணுத் தகவுடைத்தே.

'நீ போரிடுவாயோ அல்லது விடுவாயோ, நீயே எண்ணி முடிவு செய்க. சிலம்பும் வளையும் அணிந்த மகளிர் விளையாடும் ஆன் பொருனையின் வெண் மணல் சிதறும்படியாக நின் வீரர்கள் காவற் காடுகளை வெட்டுகின்றனர். சேரனோ உள்ளே அமைதியாக இருக்கிறான். போருக்கு எழாமல் இருக்கும் வீரமற்றவனோடு நீ போர் தொடுக்கலாமா? அப்படிப் போரிட்டால் அது வெட்கம் தரும் செயல் ஆகும்.

வரலாறு: கருவூர் - ஆன் பொருனை (அமராவதி ஆறு)

ஆலத்தூர் கிழார்

புறம்: 69

அதே கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழார் பாடியது. பாடாண் திணை; பாணாற்றுப் படை, துறை.

கையது கடன் நிறை யாழே! மெய்யது

புரவலர் இன்மையின் பசியே, அரையது

வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்

ஓம்பி உடுத்த உயவல் பாண!

பூட்கை இல்லோன் யாக்கை போலப்

பெரும்புல் என்ற இரும்பேர் ஒக்கலை

வையகம் முழுதுடன் வளைஇப் பையென

என்னை வினவுதி ஆயின் மன்னர்
அடுகளிறு உயவும் கொடிகொள்பாசறைக்
குருதிப் பரப்பின் கோட்டுமா தொலைச்சிப்
புலாற்களம் செய்த கலாஅத் தானையன்
பிறங்குநிலை மாடத்து உறந்தை யோனே!
பொருநர்க்கு ஓக்கிய வேலன் ஒருநிலைப்
பகைப்புலம் படர்தலும் உரியன், தகைத்தார்
ஒள்ளெரி புரையும் உருகெழு பசும்பூண்
கிள்ளி வளவற் படர்குவை யாயின்
நெடுங்கடை நிற்றலும் இலையே, கடும்பகல்
தேர்வீசு இருக்கை ஆர நோக்கி
நீஅவன் கண்ட பின்னறப் பூவின்
ஆடும் வண்டு இமிராத் தாமரை
சூடாய் ஆதல் அதனினும் இலையே!

யாழ் கையிலே; பசி வயிற்றிலே; தைத்த பழங்கத்தை இடுப்பிலே; பாணனே! பெரிய சுற்றத்துடன் உலகமெலாம் சுற்றி வந்தோம். வறுமை தீர்ப்பவர் யார்? எனக் கேட்கின்றாய். நீ பகைவர் யானையைக் கொன்று வீழ்த்தும் வீரர் நிறைந்த படையுடையவன்; உறையூர் உயர்நிலை மாடத் துறைபவன். அவனிடம் செல்வீராக! அவன் பகல் வேளையிலே வரும் பரிசிலர்க்குத் தேரும் பொருளும் வழங்கிக் கொண்டே இருப்பான். அவனைக் கண்டால் நீ பொற்றாமரைப் பூச்சூடி மகிழும் பேறு பெறுவாய்!

வரலாறு: கிள்ளி வளவன் - உறையூர்; பரிசிலர்க்கு வாரி வழங்குவோன்.

ஆலத்தூர் கிழார்

புறம்: 225

சோழன் நலங்கிள்ளியை ஆலத்தூர் கிழார் பாடியது. சோழன் கவிபாடும் ஆற்றலும், போராற்றலும் பெற்றவன். புலவர் ஆலத்தூர்கிழார் நுண்ணறிவும், நெஞ்சுறுதியும் வாய்க்கப் பெற்றவர். கொங்கு நாட்டிலிருந்து உறையூர்ச் சோழனிடம் சென்றவர். புலவர்கள் பழுமரம் நாடிச் செல்லும் இயல்பினர் அல்லவா?

பொதுவியல் திணை; கையறு நிலைத்துறை.

தலை யோர் நுங்கின் தீஞ்சேறு மிசைய
இடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக்
கடையோர், விடுவாய்ப் பிசிரொடு
சுடுகிழங்கு நுகர
நிலமலர் வையத்து வலமுறை வளைஇ
வேந்துபீ டழித்த ஏந்துவேல் தானையொடு
ஆற்றல் என்பதன் தோற்றம் கேள்இனிக்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
முள்ளுடை வியன்காட் டதுவே, நன்றும்
சேட்சென்னி நலங்கிள்ளி கேட்குவன் கொல்லென
இன்னிசைப் பறையொடு வென்றி நுவலத்
தூக்கணாங் குரீஇத் தூங்குகூடு ஏய்ப்ப
ஒருசிறைக் கொளீஇய திரிவாய் வலம்புரி

ஞாலம் காவலர் கடைத்தலைக்

காலைத் தோன்றினும் நோகோ யானே!

நலங்கிள்ளியிடம் இருந்த படை மிகப்பெரிது! பனை மரத்திலே நுங்கு இருந்த காலத்து முன்னணி வீரர் அதனைக் கடக்கத் தொடங்கினால், இறுதியாக வருபவர் கடந்து செல்லும் போது பனங்கிழங்கினைச் சுட்டுத் தின்று செல்லுமளவு காலம் வரை தொடர்ந்து செல்லும் அளவு பெரியது! இப் பெரும்படையுடன் உலகை வெற்றி கொண்டு வலம் வந்தவன், இறந்தபின் கள்ளியோங்கிய களர் நிலமாகி, முள்ளும் நிரம்பிப் புறங்காடாகி விட்டதே! வெற்றியை முழங்கிய வலம்புரிச் சங்கம் அன்று தூக்கணங் குருவிக் கூடு போல் தூக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். அதே சங்கம் இன்றைய அரசனின் திருப்பள்ளி எழுச்சிக்காக முழங்குகின்றதே. அதைக் கேட்டு இறந்து படாது நொந்து கொள்ளும் அளவில் நிற்கின்றேனே, நான்!

வரலாறு: நலங்கிள்ளியின் படைப் பெருக்கம் - அவன் தோல்வி. வலம்புரிச் சங்கு தூக்கணங் குருவிக்கூடு போல் தொங்க விடப்பட்டுள்ளது!

3. ஆவூர் கிழார் (கௌதமன் சாதேவனார்)

புறம்: 322

ஆவூர் கொங்குப் பகுதியின் அவிநாசி வட்டத்தைச் சார்ந்தது. அதற்கு அண்மையில் சேவூர் என்ற ஊரும் இருக்கிறது. இவரை ஆவூர் அழகியார் என்றும், ஆவூர் மூலங்கிழார் என்றும் ஐயுறுவோர் உண்டு. கிழார் என்பதால் வேளாளர் மரபு. வாகைத் திணை; வல்லாண் முல்லைத் துறை.

உழுதூர் காளை யூழ்கோடு அன்ன

கவைமுள் கள்ளிப் பொரியரைப் பொருந்தி

புதுவரகு அரிகால் கருப்பை பார்க்கும்
புன்றலைச் சிறாஅர் வில்லெடுத்து ஆர்ப்பின்
பெருங்கண் குறுமுயல் கருங்கலன் உடைய
மன்றில் பாயும் வன்புலத் ததுவே
கரும்பின் எந்திரம் இலைப்பின் அயலது
இருஞ்சுவல் வாளை பிறழும் ஆங்கண்
தண்பணை யாளும் வேந்தர்க்குக்
கண்படை ஈயா வேலோன் ஊரே!

உழும் காளையின் கவட்டி போன்ற கொம்புகளைப் போல் கள்ளியின் அடிப்பாகத்தில் விளைந்த புது வரகினை அரியும் போது பால் பிடித்த வரகினை உண்ணும் மகிழ்ச்சியில் சிறுவர் வில்லொலி இசைப்பர். அவ்வொலி கேட்டு குறுமுயல்கள் மன்றிலே ஓடும். கரும்பினைப் பிழியும் ஒலி செய்ய, அவ்வொலி கேட்டு வாளை மீன்கள் பிறகும் மருத நிலத் தலைவனும் அஞ்சும் வேல்வீரன் ஊர் அது!

செய்தி: கரும்பினைப் பிழியும் எந்திர ஒலி.

4. ஆவியார்

புறம்: 298

ஆவியார் பழனிக் கண் இருந்தாண்ட வேளிர் மரபினர். ஆலியார் என்றும் கூறுவர்.

கரந்தைத் திணை: நெடுமொழித் துறை

எமக்கே கலங்கள் தருமே, தானே

தேறல் உண்ணும் மன்னே நன்றும்

இன்னான் மன்ற வேந்தே இனியே

நேரார் ஆரெயில் முற்றி

வாய்மடித்து உரறிநீ முந்துஎன் னானே.

தெளிந்த கள்ளைத் தானுண்டு, சுவைமிக்க கலங்கலை எனக்குத் தரும் இனிய பண்பினன். இப்பொழுது பகைவரின் காவல் அரண்களை முற்றுகை இட்டவனாக, உதடுகளை மடித்து முழக்கமிட்டவனாக நீ முந்திச் செல் என்று கூறாது, தானே முந்திச் செல்கின்றானே! வேந்தே! இதுவோ இவன் பண்பு!

5. ஆவூர் மூலங்கிழார்

புறம்: 38

கொங்குத் தென்பகுதியின், தாராபுரத்தின் கிழக்கே ஆவூர் என்ற சிற்றூரும் உள்ளது. மூலனூர் என்ற பேரூரும் உள்ளது. இவர் அவ்வூரைச் சார்ந்தவர். மூலன் மரபைச் சார்ந்தவர். கொங்கு வேளிர் மரபில் ஒரு பிரிவு மூலன் கூட்டம் என்பது. இவர்தம் பாடல்கள் புறத்தில் மட்டும் 38,40,166,177,178,196,261,301 ஆக 8 பாடல்கள் உள்ளன.

பாடாண் திணை: இயன்மொழித் துறை

வரைபுரையும் மழகளிற்றின்மிசை

வான் துடைக்கும் தகையபோல

விரவு உருவின கொடிநுடங்கும்

வியன் தானை விறல் வேந்தே!

நீ, உடன்று நோக்கும் வாய் எரிதவழ
நீ, நயந்து நோக்கும்வாய் பொன்பூப்பச்
செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
வெண்திங்களுள் வெயில் வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை ஆகலின்
நின்நிழல் பிறந்து நின்நிழல் வளர்ந்த
எம்மளவு எவனோ மற்றே, இன்னிலைப்
பொலம்பூங் காவின் நன்னாட் டோரும்
செய்வினை மருங்கின் எய்த லல்லதை
உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
கடவ தன்மையின் கையறவு உடைத்தென
ஆண்டுச்செய் நுகர்ச்சி ஈண்டும் கூடலின்
நின்னாடு உள்ளுவர் பரிசிலர்
ஒன்னார் தேஎத்தும் நின்னுடைத் தெனவே.

குன்றுகளைப் போன்ற ஆற்றல் மிக்க யானைப் படைத்தலைவனே, வேந்தனே! நீ சினந்து பார்க்குமிடத்து எரிபரக்கும். நீ நயந்து பார்க்குமிடத்தில் பொன் பொலியும்! ஞாயிற்றிலே நிலவையும், நிலவிலே வெயிலையும் உண்டாக்கும் ஆற்றல் வாய்ந்தவன் நீ! செல்வர் ஈதலும், இல்லோர் இரத்தலும் அங்கு இல்லை. பகைவர் நாட்டுப் பரிசிலரும் உள் நாட்டையே நினைந்து வருவர்.

வரலாறு: குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆலூர் மூலங்கிழார் பாராட்டியது.

ஆவூர் மூலங்கிழார்

புறம்: 40

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

பாடாண் திணை: செவியறிவுறூஉ துறை

நீயே, பிறர்ஓம் புற்ற மன்னெயில்

ஓம்பாது கடந்தட்டவர் முடிபுனைந்த

பசும்பொன்னின் அடிபொலியக்

கழல்தைஇய வல்லாளனை

வயவேந்தே யாமேநின்,

இகழ்பாடுவோர் எருத்தமடங்கப்

புகழ்பாடுவோர் பொலிவு தோன்ற

இன்று கண்டாங்குக் காண்குவம் என்றும்,

இன்சொல் எண்பதத்தை ஆகுமதி பெரும!

ஒருபிடி படியும் சீறிடம்

எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே!

பெருமானே! ஒரு பிடியானை படுத்துக் கிடக்கும் அளவுள்ள சிறிய இடத்தில், அதன் வளம் பெருக்கி ஏழு களிறு யானைகளைப் பாதுகாக்கும் சோழ நாட்டுத் தலைவனே! பகைவரை வென்றாய். அவர் தம் மகுடத்துப் பொன்னால் வீரக் கழல் செய்து அணிந்தாய். உன்னை இகழ்வோர் கழுத்து இறைஞ்சி வணங்கவும், உன்னைப் புகழ்வோர் இன்பப் பொலிவு தோன்றவும் இன்று கண்டோம். இனியும் காண்போம்.

ஆவூர் மூலங்கிழார்

புறம்: 166

கௌணியன் விண்ணந்தாயன் என்னும் வள்ளலை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

நன்றாய்ந்த நீள்நிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகாது
ஒன்று புரிந்த ஈரிரண்டின்
ஆறுணர்ந்த ஒருமுதுநூல்
இகல்கண்டார் மிகல் சாய்மார்
மெய் அன்ன பொய்யுணர்ந்து
பொய் ஓராது மெய்கொளீஇ
மூவேழ் துறையும் முட்டின்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோர் மருக!
வினைக்கு வேண்டி நீபூண்ட
புலப்புல்வாய்க் கலைப் பச்சை
சுவல்பூண் ஞாண் மிசைப் பொலிய
மறங்கடிந்த அருங்கற்பின்
அறம் புகழ்ந்த வலைசூடிச்
சிறு நுதல்பேர் அகல்அல்குல்
சிலசொல்லின் பலகூந்தல் நின்
நிலைக் கொத்த நின் துணைத் துணைவியர்

தமக்கமைந்த தொழில்கேட்பக்
காடென்றா நாடென்றாங்கு
ஈரெழின் இடம் முட்டாது
நீர்நாண நெய்வழங்கியும்
எண்நாணப் பலவேட்டும்
மண்நாணப் புகழ் பரப்பியும்
அருங்கடிப் பெரும்காலை
விருந்து உற்றநின் திருந்து ஏந்துநிலை

என்றும்,

காண்கதில் அம்ம யாமே குடாஅது
பொன்படு நெடுவரைப் புயல்ஏறு சிலைப்பின்
பூவிரி புதுநீர் காவிரி புரக்கும்
தண்புனல் படப்பை எம்மூர் ஆங்கண்
உண்டும் தின்றும் ஊர்ந்தும் ஆடுகம்
செல்வல் அத்தை, யானே செல்லாது
மழைஅண் ணாப்ப நீடிய நெடுவரைக்
கழைவளர் இமயம் போல
நிலீஇயர் அத்தைநீ நிலமிசை யானே!

அறிவுடை மரபில் வந்தவனே! யாகங்கள் பலவேட்டும், விருந்தினரைப் போற்றியும் புகழொடு வாழ்பவனே! நீ இமயம் போல நிலை பெறுவாயாக! உன் பரிசிலைப் பெற்ற யாமும் எம்மூர்

சென்று உண்டும் தின்றும், ஊர்ந்தும் சுற்றத்தோடு ஆடியும் மகிழ்ச்சி கொண்டாடுவோம்.

ஆவூர் மூலங்கிழார்

புறம்: 177

மல்லிகிழான் காரியாதி என்னும் குடநாட்டானை ஆவூர் மூலங்கிழார் பாடியது. இவரும் வேளாண் குடியினைச் சேர்ந்தவர். காரி கூட்டத்தினன். மல்லி என்னும் ஊரினர்.

பாடாண் திணை; இயன்மொழித் துறை

ஒளிருவாள் மன்னர் ஒண்சுடர் நெடுநகர்
வெளிறுகண் போகப் பன்னாள் திரங்கிப்
பாடிப் பெற்ற பொன்னணி யானை
தமர்எனின் யாவரும் புகுப, அமர்எனின்
திங்களும் றுழையா எந்திரப் படுபுழைக்
கண்மாறு நீட்ட நணிநணி இருந்த
குறும்பல் குறும்பின் ததும்ப வைகிப்
புளிச்சுவை வேட்ட செங்கண் ஆடவர்
தீம்புளிக் களாவொடு துடரி முனையின்
மட்டுஅறல் நல்யாற்று எக்கர் ஏறிக்
கருங்கனி நாவல் இருந்துகொய் துண்ணும்
பெரும்பெயர் ஆதி பிணங்களில் குடநாட்டு
எயினர் தந்த எய்ம்மான் எறிதசைப்
பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் அமலை

வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய

இரும்பனங் குடையின் மிசையும்

பெரும்புலர் வைகறைச் சீர்சா லாதே

அவனுக்கு வேண்டியவர் எளிதில் செல்லலாம். திங்களும் நுழையாப் பொறிகள் பல கொண்டது அவனது இட்டி வாயில்! அரண்கள் பல கொண்டது அவன் ஊர். கள்ளுண்டு களாப்பழமும், துடரிப் பழமும் தின்பர். கரு நாவற் பழமும் தின்பர். அவ்வூரில் தலைவன் புகழ்பெற்ற ஆதி. குடநாட்டு மறவர் பன்றித் தசையுடன் சோறுங் கலந்து, பனங்குடையிலே உண்பர். இவைகளை விடியலிலேயே இரவலர்க்கு இவன் கொடுத்து மகிழ்வான். இது யானைக் கொடையினும் சிறந்ததாகும்.

ஆவூர் மூலங்கிழார்

புறம்: 178

பாண்டியன் கீரஞ் சாத்தன் என்றும், பாண்டிக் குதிரைச் சாக்கையன் எனவும் வழங்கப்படுபவன். இவன் பாண்டியர்க்கு அடிப்பட்டதோர் குறுநிலத் தலைவன்

திணை: வாகை; துறை: முல்லை

கந்துமுனிந்து உயிர்க்கும் யானையொடு பனைமுனிந்து

கால்இயல் புரவிஆலும் ஆங்கண்

மணல்மலி முற்றம் புக்க சான்றோர்

உண்ணார் ஆயினும் தன்னொடு சூளுற்று

உண்மென இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்

ஈண்டோ இன்சாயலனே! வேண்டார்

எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பில்

கள்ளுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய

நெடுமொழி மறந்த சிறுபே ராளர்

அஞ்சி நீங்கும் காலை

ஏம மாகத் தான்முந் துறுமே

யானையும் குதிரையும் கட்டியிருக்கும் முற்றத்தில் சான்றோர் புகுவர். அவ்வேளை அவன் உண்ணான் எனினும் இரவலர்களை 'உண்க' என்று கூறும் பெற்றியன் சாத்தன். கள்ளால் மயக்கத்துடன் வீரம் பேசியவர் அஞ்சிப் புறங்கண்ட போதும் பகைப் படையை வெற்றி கொள்பவன்.

ஆவூர் மூலங்கிழார்

புறம்: 196

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் கொடுப்பதை நீட்டித்தான். அப்பொழுது ஆவூர் மூலங்கிழார் பாடியது.

பாடாண் திணை; பரிசில் கடாநிலைத் துறை

ஒல்லுவது ஒல்லும் என்றலும் யாவர்க்கும்

ஒல்லாது இல்லென மறுத்தலும் இரண்டும்

ஆள்வினை மருங்கின் கேண்மைப் பாலே!

ஒல்லாது ஒல்லும் என்றலும் ஒல்லுவது

இல்லென மறுத்தலும் இரண்டும் வல்லே!

இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர்

புகழ்குறை படூஉம் வாயில் அத்தை

அனைத்தா கியர்இனி இதுவே எனைத்தும்
சேய்த்துக் காணாது கண்டனம் அதனால்
நோயிலர் ஆகநின் புதல்வர், யானும்
வெயிலென முனியேன் பனியென மடியேன்
கல்குயின், றன்னவென் நல்கூர் வளிமறை
நாணலது இல்லாக் கற்பின் வாணுதல்
மெல்லியல் குறுமகள் உள்ளிச்
செல்வல் அத்தை சிறக்கநின் னாளே!

கொடுக்கும் பொருளை மனம் ஓம்பிக் கொடுத்தலும், கொடுக்காதிருப்பதும் தாளாண்மையுடையார் பால் இயல்பு. இயலாததனை இயலும் என்றலும், இயன்றதனையும் இல்லை என மறுத்தலும் இரப்போரை மெலிவித்தும் 'ஈயும் இயல்பு இல்லாதவரோ இவர்' எனப் புகழ் குறைபடச் செய்தும் விடுவதாம். நீ என்பாற் செய்தலும் அவ்வாறே ஆயிற்று! இதுவரை காணாத ஒன்றைக் கண்டேன். வெயிலோ, பனிலோ எதனையும் பொருட்படுத்தாது கல்லாகிக் கரையாது நிற்கும் என் வறுமையோடு நாண் அல்லது வேறில்லாத என் மனைவியின் நிலையை நினைந்து நான் போகின்றேன்! உன் வாழ்நாள் சிறப்பதாகுக! நோயற்று உன் புதல்வர்கள் வாழ்வாராக!

செய்தி: தம்மை ஒதுக்கியவனை மனம் நொந்து சொல்லும் புலவரது உள்ளம் காண்க!

ஆவூர் மூலங்கிழார்

புறம்: 261

ஒரு வள்ளல் இறந்து பட்டானாக, அவன் பெரிய இல்லம் வறிதே கிடந்தது கண்டு ஆவூர் மூலங்கிழார் பாடிய பாடல்.

கரந்தைத் திணை; கையறு நிலைத்துறை

அந்தோ எந்தை அடையாப் பேரில்
வண்டுபடு நறவின் தண்டா மண்டையொடு
வரையாப் பெருஞ்சோற்று மூரிவாய் முற்றம்
வெற்றியாற்று அம்பியின் எற்றுஅற்று ஆக
கண்டனன் மன்ற சோர்கஎன் கண்ணே!
வையங் காவலர் வளங்கெழு திருநகர்
மையல் யானை அவாவுயிர்த் தன்ன
நெய்யுலை சொரிந்த மையூன் ஓசை
புதுக்கண் மாக்கள் செதுக்கண் ஆரப்
பயந்தனை மன்ஆல் முன்னே இனியே
பல்லா தழீஇய கல்லா வல்வில்
உழைக்குரல் கூகை அழைப்ப ஆட்டி
நாகுமுலை அன்ன நறும்பூங் கரந்தை
விரகுஅறி யாளர்மரபிற் சூட்ட
நிரையிவண் தந்து நடுகல் ஆகிய
வென்வேல் விடலை இன்மையின் புலம்பிக்
கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய
கழிகலம் மகடூஉப் போல
புல்லென் றனையால் பல்லணி இழந்தே.

எம் தலைவனின் பெரிய இல்லமே! நின் முற்றம் நீரற்ற ஆற்றிலே கிடந்த ஓடம் போலப் பொலிவழிந்து கிடக்கக் கண்டேன். மதுவும் சோறும் வழங்கிய சிறப்பெல்லாம் மறைந்ததே. என் கண்மணிகள் சோர்ந்து வீழ்வதாகுக!

நெய் சொரிந்த ஆட்டிறைச்சியை முன்பு இரவலர்க்கு வழங்கினாய். அது கழிந்தது. பகைவர் கவர்ந்த ஆநிரைகளை மீட்டுத் தந்தும், போரிலே நீ மடிந்தாய். நடுகல்லும் ஆயினாய்.

அவனது இல்லமே! கைம்மைக் கோலம் மேற்கொண்டு பொலிவழிந்து தோன்றும் அவள் மனைவியைப் போல நீயும் நின் பொலிவு அழிந்தனையோ?

ஆவூர் மூலங்கிழார்

புறம்: 301

ஒரு வேந்தனின் படை வீரத்தைப் பாராட்டிக் கூறியது. ஆவூர் மூலங்கிழார் பாடல்.

பல்சான் றீரே! பல்சான் றீரே!

குமரி மகளிர் கூந்தல் புரைய

அமரின் இட்ட அருமுள் வேலிக்

கல்லென் பாசறைப் பல்சான் றீரே!

முரசு முழங்கு தானைநும் அரசும் ஓம்புமின்!

ஒளிறுஏந்து மருப்பினும் களிறும் போற்றுமின்!

எனைநாள் தங்கும்நும் போரே! அனைநாள்

எறியார் எறிதல் யாவணது எறிந்தோர்

எதிர்சென்று எறிதலும் செல்லான், அதனால்
அறிந்தோர் யார்அவன் கண்ணிய பொருளே
பலம்என்று இகழ்தல் ஒம்புமின்! உதுக்காண்,
நிலன்அளப் பன்ன நில்லாக் குறுநெறி
வண்பரிப் புரவிப் பண்புபா ராட்டி
எல்லிடைப் படர்தந் தோனே! கல்லென
வேந்தூர் யானைக் கல்லது
ஏந்துவன் போலான்தன் இலங்கிலை வேலே.

பல்சான்றீரே! குமரி மகளிர் கூந்தலைப் போல முள்வேலியிட்டு, பாசறைக்குள் இருக்கும் பல் சான்றீரே! உன் அரசனைக் காத்துக் கொள்ளுங்கள். களிறுகளைக் காப்பாற்றுங்கள். எத்தனை நாட்கள் உங்கள் பாசறை இங்கே இருக்கும். தனக்கு நிகரில்லாதவரோடு எம் தலைவன் போரிடான். அவன் என்ன எண்ணியுள்ளானோ? அதனை அறிந்தார் யாரோ? பலமுடையோம் என்று தருக்கியும் இகழாதீர். இதோ பாருங்கள். வேகமாகச் செல்லும் குதிரை ஏறி எம் தலைவர் இரவிற்குத் தம் இல்லம் சென்றுள்ளான். உங்கள் வேந்தனோடு மட்டுமே அவன் போரிடுவான். எனவே நாளைக் காலை உம் வேந்தனை வரவிடுங்கள்! இல்லையெனில் ஓடி உய்யுங்கள்.

6. இடைக்குன்றூர்க் கிழார்

புறம்: 76

இப்புலவர் சேலம் மாவட்டத்துக் குன்றத்தூரை சார்ந்தவர். அது இக்கால் சங்க கிரி என்றும் சங்கமலை என்னும் வழங்கப்படுகிறது. கல்வெட்டுக்களில் இவ்வூர் 'குன்றத்தூர்' என்றே வழங்கப்பட்டு வந்துள்ளது.

மற்றும் ஈரோடு மாவட்டத்தின், ஈரோடு நகரிலிருந்து நாற்பத்தைந்தாவது கல் தொலைவில் உள்ள குன்னத்தூர் என்ற பேரூர் பண்டு குன்றத்தூர் என்றும் இடைக்குன்றூர் என்றும் வழங்கப்பட்டு வந்துள்ளதால் அவர் இவ்வூரைச் சார்ந்தவராவர். கல்வெட்டால் இடைக்குன்றூர் என வழங்கும் இவ்வூர். கிழார் - உழவுத் தொழிலுக்கு உரிமையான வேளாண் குடியினர்.

பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர் கிழார் பாடியது.

வாகைத் திணை; அரசவாகைத் துறை

ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்

புதுவ தன்று; இவ்வுலகத் தியற்கை!

இன்றின் ஊங்கோ கேளலம் திரளரை

மன்ற வேம்பின் மாச்சினை ஒண்தளிர்

நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிடைந்து

செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி

ஒலியல் மாலையொடு பொலியச் சூடிப்

பாடின் தெண்கிணை கறங்கக் காண்தக

நாடுகெழு திருவின் பசும்பூண் செழியன்

பீடும் செம்மலும் அறியார் கூடிப்

பொருதும் என்று தன்தலை வந்த

புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க

ஒருதான் ஆகிப் பொருதுகளத் தடலே.

ஒருவனை ஒருவன் கொல்லுவதும், ஒருவனுக்கு ஒருவன் தோற்பதும் இவ்வுலகத்தில் புதுமை அல்ல; இயற்கையானதே! ஆனால், நெடுஞ்செழியனின் வலிமை அறியாதவராகத், தாம் ஒன்றாகக் கூடி இரு பெரு வேந்தரும், ஐம்பெரும் வேளிரும் போரிட்டு நின்றனர். அவர்களைத் தான் ஒருவனாகவே நின்று போரிட்டு வென்றானாக! அதுதான் புதுமை!

இடைக்குன்றூர்க் கிழார்

புறம்: 77

தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர்க் கிழார் பாடியது.

வாகைத்திணை; அரச வாகைத்துறை

கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய, நின்றோன்
யார்கொல் வாழ்க! அவன் கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்றும் இலனே பால்விட்டு
'அயினியும்' இன்றுஅயின் றனனே, வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே, அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பெழக்

கவிழ்ந்து நிலம்சேர அட்டதை

மகிழ்ந்தன்றும், மலிந்தன்றும் அதனினும் இலனே

காலில் சிறு பருவத்தே அணிந்த கிண்கிணிச் சதங்கையைக் களைந்து, வீரக் கழல் அணிந்து, வேப்ப மாலை சூடி, கையிலே வில்லினைக் கொண்டு தேரிலே அழகுற நின்றவன் யாரோ? அவன் யாராயினும் அவன் கண்ணி வாழ்க! அவன் ஐம்படைத் தாலி களையவும் இல்லை; பால் குடித்தலை மறந்து இன்றே உணவுண்டான் போலும் இளையன்; வெகுண்டு மென்மேலும் வரும் வீரரை வியக்கவும், இகழவும் செய்யவில்லை. அவர்களை மண் கவ்வச் செய்து வெற்றி கொண்டதற்கும் மகிழவும் இல்லை; தன்னைப் பெருமையாக நினைக்கவும் கூட இல்லை! வாழ்க அவன் பெருமை!

இடைக் குன்றூர்க்கிழார்

புறம்: 78

அதே தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனை இடைக்குன்றூர் கிழார் பாடியது. இவன் சேர, சோழ இரு பெரு வேந்தர்களும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மாண், பொருநன் என்னும் வேளிர் ஐவரும் சேர்ந்து எதிர்த்த போதும் தலையாலங் கானப் போரில் (இன்று காளையார் கோவில் என்றும் முன்பு கானப் பேரெயில் என்றும் வழங்கப்பட்டு வந்த இடம்) வெற்றி பெற்றவன்.

வாகைத்திணை; அரச வாகைத்துறை

வணங்கு தொடைப் பொலிந்த வலிகெழு நோன்றாள்

அணங்கருங் கடுந்திறல் எனைமுணங்கு நிமிர்ந்து

அளைச் செறி உழுவை இரைக்குவந் தன்ன

மலைப்பரும் அகலம் மதியார் சிலைத் தெழுந்து
விழுவியம் பெரியம் 'யாமே நம்'மிற்
பொருநனும் இளையன் கொண்டியும் பெரிதென
எள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
ஈண்டவர் அடுதலும் ஒல்லான் ஆண்டவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மூர் ஆங்கண்
தெண்கிணை கறங்கச்சென்று ஆண்டு அட்டனனே!

எம் வேந்தன், போரில் நிலைதடு மாறாத கால்களும், பெரும் வலிமையும் உடையவன். 'இவனை எளிதாக வெற்றி கொள்ளலாம்; கொள்ளையும் பெரிதாகக் கிடைக்கும்' என்று இகழ்ந்து கூறி, பகைவர் பெரும்படையுடன் வந்தனர். அவர்களைப் போர்க்களத்திலே கொல்ல எண்ணாதவனாக, அவர்கள் ஊர்வரை ஓட ஓட விரட்டி அங்கங்கே போர்ப்பறை முழக்கி வெற்றி கொண்டவன் அவன்.

இடைக்குன்றூர்க் கிழார்

புறம்: 79

அதே தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை இடைக் குன்றூர்க் கிழார் பாடியது.

வாகைத்திணை; அரசவாகைத் துறை

மூதூர் வாயில் பணிக்கயம் மண்ணி
மன்ற வேம்பின் ஒண்குழை மலைந்து

தெண்கிணை முன்னர்க் களிற்றின் இயலி
வெம்போர்ச் செழியனும் வந்தனன் எதிர்ந்த
வம்ப மள்ளரோ பலரே
எஞ்சுவர் கொல்லோ பகல்தவச் சிறிதே!

தம் பழமையான நகரத்து வாயிலில் உள்ள குளிர்ப் பொய்கையில் (கன்னிப் போருக்காக நீராடி) நீராடியும், மன்ற வேம்பின் தளிர் சூடியும், பறை யொலிக்கவும், களிறு போன்ற பெருமித நடையுடன் கடும்போர்ச் செழியன் வந்தான்! எதிர்ந்த படை மறவர் பலர்! பகல் நேரம் சிறிது! ஆதலால் அவருள் சிலர் உயிர் தப்பிப் பிழைக்கவும் கூடும்.

7. இரும்பிடர்த் தலையார்

புறம்: 3

இப் புலவர் பெருந்தகை இரும்பிடர்த் தலையார் என்று தம் பாட்டின் நயமிக்க வரியால் அழைக்கப்படுகிறார். கொங்குப் பகுதியிலிருந்து சோழ மன்னன் மறைந்தபொழுது பட்டத்து யானையால் தேர்ந்து எடுத்துச் செல்லப்பட்ட வேளிர் குலக் கொடுந்தே முதலாம் கரிகாலன். இவரைக் கொங்கு வேளிர் மரபின் கூட்டத்துள் ஒன்றான சாத்தந்தை கூட்டத்தினர் என்று கூறுவர். இவர் கரிகால் வளவனுக்கு அம்மான் (மாமா) முறையினர் என்றும் கூறுவார்கள். இன்றைய வெள்ளோடை (வெள்ளோடு)க்கு அருகில் இவர் வாழ்ந்ததாகக் கூறுவர். சாத்தந்தை மரபினர் 'உலகுடையான் சாத்தந்தை' என்ற சிறப்பொடு வெள்ளோடைப் பகுதியில் வாழ்ந்திருந்தனர்; வாழ்ந்து வருகின்றனர்.

கொங்குக் கூட்டத்தினர் பலர்க்கும் 'கரிய காலி அம்மன் குலதெய்வமாக விளங்கும். இது வழி வழியாக 'கரிகாலன்' புகழொடு பொருந்திய பெயராகும்.

இப் புலவர் கருங்கை ஒள்வாட் பெரும் பெயர் வழுதியைப் பாராட்டி இப்பாடலில் கூறுகிறார். கரிகாலன் இவரிடம் கல்வி கற்றான் என்றும் முன்றுறையரையனார் கூறுவர். கரிகாலனைப் பேரரசனாக்கும் பேரறிவும், ஆட்சியியலும், மிகப்பெரும் நயன்மையும் உடையவர்.

பாடாண் திணை; செவியறிவுறூஉத் துறை

உவவுமதி உருவன் ஓங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணகம் நிழற்ற
ஏம முரசம் இழுமென முழங்க
நேமி உய்த்த நேரா நெஞ்சின்
தவிரா ஈகைக் கவுரியர் மருக!
செயிர்தீர் கற்பின் சேயிழை கணவ!
பொன்னோடைப் புகரணிநுதல்
துன்னருந் திறல் கமழ கடாஅத்து
எயிறு படையாக எயிற்கத விடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கை யானை இரும்பிடர்த் தலையிருந்து
மருந்தின் கூற்றத்து அருந்தொழில் சாயாக்
கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி
நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்
பொலங் கழற்கால் புலர்சாந்தின்
விலங்ககன்ற வியன்மார்ப!
ஊரில்ல உயவரிய
நீரில்ல நீளிடைய
பார்வல் இருக்கைக் கவிகண் ணோக்கிற்

செந்தொடை பிழையா வன்கண் ஆடவர்
அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை
நின்னசை வேட்கையின் இரவலர் வருவரது
முன்ன முகத்தின் உணர்ந்தவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே!

காவல் முரசம் 'இழும்' என முழங்க அருளோடு ஆட்சி புரிந்து வருபவர் பாண்டிய மரபினர். கற்பின் செல்வியின் கணவன்; யானையின் பெரும் பிடரியின் மீது அமர்ந்து போர் செய்யும் ஆற்றல் மிக்கவன். உலகமே பிறழ்ந்தாலும் சொல் மாறாதவன். வீரக் கழல் அணிந்த விரிந்தமார்பை உடையவன். ஊரும் இடை வழியில் இல்லை கானலோ பொறுத்தற்கு அரியது! நீரோ காண்பதற்கு அரிது! வழியோ தொலைவோ நீண்டது. இத்தகு வழியினைக் கடந்தும் இரவலர் உன்னைத் தேடி வருவர். ஆறலைக் கள்வர் அங்கே இருப்பர். அவர்கள் கொடியவர்கள், வழியில் வருவோரைக் கொன்று, அவர்கள் உடல் மீது கற்குவியல் போட்டிருப்பர். உன்ன மரத்தில் கழுகுகள் அமர்ந்து உணவினை இழந்ததற்கு வருந்திக் கொண்டிருக்கும் கொடிய இவ்வழியில் இரவலர் உன்னை விரும்பி வந்து கொண்டிருப்பர். அவர் குறிப்பறிந்து வறுமையைத் தீர்க்கும் வள்ளன்மையால் இவ்வாறு வருகின்றனர் என்று வழுதியின் சிறப்பைக் கூறுகின்றார்.

8. எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்

புறம்: 356

எருக்காட்டூர் என்பது கோபி வட்டத்தின் கீழ்பால் உள்ளதோர் ஊர். தாயங்கண்ணன் என்பது இவரது பெயர். கண்ணன் கூட்டம் என்பது கொங்கு வேளிர் மரபில் ஒன்று. அக்குடிவழித் தோன்றியவர், இவர்.

களரி பரந்து கள்ளி போகிப்

பகலும் கூவும் கூகையொடு பிறழ்பல்

ஈம விளக்கின் பேஎய் மகளிரொடு

அஞ்சுவந் தன்றுஇம் மஞ்சுபடு முதுகாடு

நெஞ்சமர் காதலர் அழுத கண்ணீர்

என்புபடு சுடலை வெண்ணீறு அவிப்ப

எல்லார் புறனும் தான்கண்டு உலகத்து

மன்பதைக் கெல்லாம் தானாய்த்

தன்புறம் காண்போர்க் காண்பறி யாதே!

முதுகாடு, களர் நிலம், கள்ளிகள் மிகுந்து, கூகை குழற, இருள் அடர்ந்து, ஈமத்தீப் புகையுடன் விளங்குவது! காதலர் அழுத கண்ணீர், சுடலையை நனைக்கும். உலக உயிர்களுக்கெல்லாம் தானே முடிவிடமாய் விளங்குவது. புறங்கண்டு மீள்வோரை என்றும் கண்டறியாதது!

மகள் மறுத்தலால் ஏற்படும் பேரழிவினைக் கூறியது.

எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்

புறம்: 397

முன்னய குறிப்புக் காண்க.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடியது.

பாடாண் திணை; பரிசில் விடைத்துறை.

வெள்ளியும் இருவிசும் பேர்தரும் புள்ளும்
உயர்சினைக் குடம்பைக் குரல்தோற் றினவே
பொய்கையும் போதுகண் விழித்தன, பைபயச்
சுடரும் சுருங்கின்று ஒளியே மாடெழுந்து
இரங்குகுரல் முரசமொடு வலம்புரி ஆர்ப்ப
இரவுப் புறங்கண்ட காலைத் தோன்றி
எஃகு இருள் அகற்றும் ஏமப் பாசறை
வைகறை அரவம் கேளியர், பலகோள்
செய்தார் மார்ப எழுமதி துயல்எனத்
தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றி
நெடுங்கடைத் தோன்றி யானே அதுநயந்து
உள்ளி வந்த பரிசிலன் இவன் என
நெய்யுறப் பொரித்த குய்புடை நெடுஞ்சூடு
மணிக்கலன் நிறைந்த மணநாறு தேறல்

பாம்புரித்தன்ன வான்பூங் கலிங்கமொடு
மாரியண்ண வண்மையிற் சொரிந்து
வேனில் அன்னஎன் வெப்புநீங்க
அருங்கலம் நல்கியோனே, என்றும்
செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை
அறுதொழில் அந்தணர் அறம்புரிந்து எடுத்த
தீயொடு விளங்கு நாடன் வாய்வாள்
வலம்படு தீவின் பொலம்பூண் வளவன்
எறிதிரைப் பெருங்கடல் இறுதிக்கண் செலினும்
தெறுகதிர்க் கனலி தென்திசைத் தோன்றினும்
என்னென்று அஞ்சலம் யாமே வெள்வேல்
அருஞ்சமம் கடக்கும் ஆற்றல் அவன்
திருந்துகழல் நோன்றாள் தண்ணிழ லேமே!

மாலை அணிந்த மார்பனே! வைகறையில் உன் பாசறையின் முன்னே தடாரி கொட்டி நின்றேன். நம்மை நினைந்து வந்தான் இரவலன் என்று எழுந்து வரவேற்றான். நெய்யில் பொரித்த, தாளிதத்துடன் கூடிய சூடான இறைச்சியும், கள்ளும் உண்ணத் தந்தான். பாம்புரி போன்ற மெல்லிய ஆடை தந்தான். வறுமை தீர மழை போலச் செல்வங்களை வழங்கினான். அந்தணர் அறம்புரி செந்தி வேட்பவன். ஊழி வந்து உலகம் அழியினும் அஞ்சுவம் அல்லோம். அவன் நிழல் எங்களைக் காக்கும்.

9. எருக்காட்டூர்த் தாயங் கண்ணியார்

புறம்: 250

எருக்காட்டூர்த் தாயங் கண்ணனாரின் துணைவியார் இவர். பாணர் ஒக்கலொடு பரிசில் வேண்டிக் குடும்பமாகச் சென்றவர். செய்யுள் இயற்றும் வன்மை மிக்கவர். கணவனுக்குற்ற துணையாய் இருந்தவர்.

பொதுவியல் திணை; தாபத நிலைத் துறை

குய்குரல் மலிந்த கொழுந்துவை அடிசில்
இரவலர்த் தடுத்த வாயிற், புரவலர்
கண்ணீர்த் தடுத்த தண்ணறும் பந்தர்க்
கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி உணவின் மனைவியோ டினியே
புல்லென் றனையால் வளங்கெழு திருநகர்
வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்
முனித்தலைப் புதல்வன் தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே!

செல்வம் நிரம்பி இருந்த அழகிய நகரே! தீம்பால் வேண்டி யழும் புதல்வர், தந்தையை வைத்த புறங்காட்டிற்கு வான் சோறு கொண்டு அடைந்தனர். இரவலர்க்காக வாயில், அருளிய பந்தர் உடைய மனையே! கூந்தலைக் கொய்து, வளையல்கள் களைந்து அல்லி அரிசி உணவு உண்ணும் அவன் மனையாளைப் போல, நீயும் பொலிவிழந்து விட்டாயே!

10. ஔவையார்

புறம்: 87

அதிகமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது. ஔவையார், தகடூர் அதிமான் அவைக்களத் தலைமைப் புலவராக விளங்கினவர். இவர் பல புரவலர்களைப் பற்றிப் பாடியிருந்த போதும் கொங்கு நாட்டைச் சார்ந்தவர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. (S.1.1.IV: 457)

ஆத்தூர்க் கருங்காட்டில் அவ்வையாரம்மை சுவாமிகள் கோயில் உள்ளதாலும், கொங்குப் பகுதிக்குள் உள்ள ஆத்தூரும், தகடூரும் (தருமபுரி) கடுந்தொலைவு இல்லாததாலும் ஔவையார் அதிகமானொடு அடிக்கடி பழகும் வாய்ப்பும், அறிவுரை கூறும் அறிஞராகவும் இருந்திருக்கிறார். இச்சங்க காலப் புலவர் ஔவையாருக்கும், இடைக்காலத்தில் தோன்றிய ஔவையார் பெயருடைய சிலர்க்கும் வேறுபாடு உண்டு.

களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போர்எதிர்ந்து
எம்முளும் உளன்ஒரு பொருநன் வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே.

பகைவர்களே! போர்க்களம் நாடுங்கள்! எதிர்த்துப் போரிடும் ஆற்றலுடையவன் எம்முளும் ஒருவன் இருக்கிறான். ஒரு நாளைக்கு எட்டுத் தேர் செய்யும் தச்சன் ஒரு மாதம் கூடிச் செய்த தேர்க்காலைப் போன்ற வலிமையுடையவன் அவன்.

புறம்: 88

இதுவும் அது.

யாவிர் ஆயினும் கூழை தார் கொண்டு
யாம் பொருதும் என்றல் ஓம்புமின் ஓங்குதிறல்

ஒளிறிலங்கு நெடுவேல் மழவர் பெருமகன்

கதிர்விடு நுண்பூண் அகம்பட்டு மார்பின்

விழவு மேம்பட்ட நற்போர்

முழவுத்தோள் என்னையைக் காணா ஊங்கே

நீர் எப்படிப் பட்டவராயினும் அவனோடு போரிடுவோம் என்று மட்டும் சொல்லாதீர். உயர்ந்த வலியன்; வேலுடை படைக்குத் தலைவன். பூணணி பரந்த மார்பினன். முழாப் போன்ற தோளினன், அவன் எம் இறைவன், அதிமான் நெடுமான் அஞ்சி. காணா முன் சொன்னது சரி! அவனைக் கண்டபின் அவ்வாறு கூறாதீர்கள்!

புறம்: 89

அஞ்சியை ஔவையார் பாடியது.

இழையணி பொலிந்த ஏந்துகோட் டல்குல்

மடவரல் உண்கண் வாள்நுதல் விறலி!

பொருநரும் உளரோ நும்அகன்றலை நாட்டென

வினவல் ஆனாப் பொருபடை வேந்தே!

எறிகோல் அஞ்சா அரவின் அன்ன

சிறுவன் மல்லரும் உளரே, அதா அன்று

பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை

வளிபொரு தெண்கண் கேட்பின்

அதுபோர் என்னும் என்னையும் உளனே!

வஞ்சியே! 'உன் பெரிய நாட்டிலே என்னொடும் போரிடுவோர் உளரோ?' என என்னைக் கேட்ட படைபலம் உடைய வேந்தனே! எம் நாட்டிலே அடிக்கும் கோலுக்கும் எதிரே சீறிப் பாயும் பாம்பு

போன்ற வலிமையுடைய வீரர்கள் கணக்கற்றோர் பலர். முழவிலே காற்று மோத, எழுந்த ஓசையையே போர்ப்பறை என்று மகிழ்ந்து எழும் தலைவன் எம் தலைவன்! இவை கண்டுமோ நீ கேட்கிறாய்?' என்று பகைவரை நோக்கிக் கேட்கின்றார், புலவர்.

புறம்: 90

அதிகமானை ஔவையார் பாடியது

உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடைமல்கு குளவியொடு கமழும் சாரல்
மறப்புலி உடலின் மான்கணம் உளவோ?
மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய
இருளும் உண்டோ ஞாயிறு சினவின்
அச்சொடு தாக்கிப் பாருற்று இயங்கிய
பண்டச் சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய
அரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ?
எழுமரம் கடுக்கும் தாள் தோய் தடக்கை
வழுவில் வன்கை மழவர் பெரும!
இருநில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரும் உளரோ நீகளம் புகினே!

புலிசீறினால்; எதிரே நிற்கும் மானினம் உளவோ?

ஞாயிற்றின் முன் ஓடாத இருளும் உளதோ? ஆற்றல் மிக்க கடா போதற்கரிய துறையும் உண்டோ? தாள் தோள் தடக்கையனே! நின்

நாட்டைக் கைப் பற்றிப் போரிடும் வீரரும் உளரோ? நீ களம் புகுந்தால் நின்னை எதிர்ப்பார் உண்டோ?

புறம்: 91

அதிகமானிடம் நெல்லிக்கனி பெற்ற போது, ஔவையார் பாடியது.

வளம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்

களம்படக் கடந்த கழல் தொடித் தடக்கை

ஆர்கலி நறவின் அதியர் கோமான்

போரடு திருவின் பொலந்தார் அஞ்சி

பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி

நீல மணிமிடற்று ஒருவன் போல

மன்னுக பெரும நீயே, தொன்னிலைப்

பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட

சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது

ஆதல் நின்னகத் தடக்கிச்

சாதல் நீங்க எமக்கீந் தனையே!

வீரவளை அணிந்தவனே! அஞ்சியே! மலைச் சரிவில் கடும் முயற்சியுடன் பெற்ற நெல்லியின் இனிய கனி அது. அது பெறுதற்கு அரிது என்றும் கருதாது; அதனால் விளையும் பேற்றினையும் கூறாது உன் உள்ளத்தே அடக்கிக் கொண்டு, நாம் சாதல் ஒழிய எமக்குத் தந்தனையே! பெருமானே! நீல மணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும, நீயே!

புறம்: 92

அஞ்சியை ஔவையார் பாடியது

யாழொடும் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா ஆயினும் தந்தையர்க்கு
அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை
என் வாய்ச் சொல்லும் அன்ன, ஒன்னார்
கடிமதில் அரண்பல கடந்த
நெடுமான் அஞ்சி! நீ அருளல் மாறே.

புதல்வர்களின் மழலை, யாழிசையும் அன்று; காலத்தோடும் கூடியிராதன; பொருளும் அறிய முடியாதது. எனினும் தந்தையர்க்கு அதுவே பேரின்பம். என் சொற்களும் அத்தகையனவே! பகைவரின் அரண் பல கடந்த நெடுமான் அஞ்சியே! அவ்வாறே நீயும் எனக்கு அருள்கிறாய்!

புறம்: 93

அஞ்சி போரிலே புண்பட்ட போது ஔவையார் உருகிப் பாடியது.

திண்பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்றுஅமர் கடத்தல் யாவது வந்தோர்
தார்தாங் குதலும் ஆற்றார் வெடிபட்டு
ஓடல் மரீஇய பீடுஇல் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்தவர் தீதுமருங் கறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி

மறம்கந்து ஆக நல்லமர் வீழ்ந்த

நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென

வாள்போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ!

வரிஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து

அண்ணல் யானை அடுகளத் தொழிய

அருஞ்சமம் ததைய நூறிநீ

பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே.

பெருந்தகையோய்! போரில் நீ விழுப்புண் பட்டாய் உன்னை எதிர்த்தோர் போரிலே வீழ்ந்தனர். மதநீர் ஒழுகும் யானையையும் வெட்டி வீழ்த்தும் ஆற்றல் உடையவனே! இனி முரசம் முழங்கச் சென்று உன்னை எவர்தாம் போரில் வெல்லப் போகின்றனர். பசும்புல் பரப்பிய கிடப்பில் விழுப்புண்ணொடு கிடந்தனையே?

புறம்: 94

அஞ்சியை ஔவையார் பாடியது.

ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்

நீர்த்துறை படியும் பெருங்களிது போல

இனியை பெரும எமக்கே! மற்றதன்

துன்னருங் கடாஅம் போல

இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே.

நீர்த்துறையின் யானையின் வெண்கோட்டைப் பிடித்துக் கழுவுகின்றனர். அப் பெருங்களிறு அவர்களுக்கு எளிதாய், இனிதாய் உள்ளது. அவ்வாறே பகைவர் நெருங்குதற்கு அரிய வலிமை உடையையாயினும், நீ எமக்கு இனியை?

புறம்: 95

தொண்டைமானிடம் அஞ்சிக்காகத் தூது வந்த ஔவையார், அவனது படைக்கலக் கொட்டிலைக் கண்டு கூறியது.

இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திமெய் அணிந்து
கடியுடை வியநகர் அவ்வே அவ்வே!
பகைவர்க் குத்தி கோடுநனி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைநுதி வேலே!

இவை பீலி அணிந்து, மாலை சூடி, அழகுடன் நெய் பூசப்பட்டுக் காவலையுடைய நின் அரண்மனையிலே உள்ளன. உண்டாயின் உணவளித்தும், இல்லையாயின் உள்ளதைப் பகிர்ந்து மகிழும் வறியோர் தலைவன் அஞ்சியின் வேல்களோ, பகைவரைக் குத்துதலால் நுனி முரிந்தும், மடங்கியும் கொல்லன் உலைக்களத்திலன்றோ கிடக்கின்றன.

புறம்: 96

அதிகமான் நெடுமான் அஞ்சியின் மகன்
பொகுட்டெழினி. இவனை ஔவையார் பாடியது.

அலர்பூந் தும்பை அம்பகட்டு மார்பின்
திரண்டு நீடு தடக்கை என்னை இளையோர்க்கு

இரண்டுஎழுந் தனவால் பகையே ஒன்றே
பூப்போல் உன்கண் பசந்துதோள் நுணுகி
நோக்கிய மகளிர்ப் பிணித்தன்று ஒன்றே
விழவின்று ஆயினும் படுபதம் பிழையாது
மைஊன் மொசித்த ஒக்கலொடு துறைநீர்க்
கைமான் கொள்ளுமோவென
உறையுள் முனியும் அவன் செல்லும் ஊரே!

இனையோனான இவன், எம் இறைவன் அஞ்சியின் மகன். இவனுக்கு இரண்டு பகைகள் உள்ளன.ஒன்று இவனைக் கண்டு காதல் கொண்ட கன்னியர். மற்றொன்று நீர்த்துறையில்நீரினை யானைகள் வந்து உண்ணுமோ என அஞ்சி, அவ்விடம் வாழ்வதை அவன் செல்லும் ஊரினர் வெறுப்பது.

புறம்: 97

அஞ்சியை ஔவையார் பாடியது

போர்க்கு உரையிப் புகன்று கழித்தவாள்
உடன்றவர் காப்புடை மதில அழித்தலின்
ஊனுற மூழ்கி உருஇழந் தனவே
வேலே, குறும்படைந்த அரண் கடந்தவர்
நறுங் கள்ளின் நாடு நைத்தலின்
சுரை தழீஇய இருங்கா ழொடு
மடை கலங்கி நிலைதிரிந் தனவே
களிறே, எழூஉத் தாங்கிய கதவு மலைத்தவர்

குழூஉக் களிற்றுக் குறும்பு உடைத்தலின்
பரூஉப் பிணிய தொடிகழிந் தனவே.
மாவே. பரந்தொருங்கு மலைந்த மறவர்
பொலம் பைந்தார் கெடப் பரிதலின்
களன்உழந்து அசைஇ மறுக்குளம்பினவே!
அவன் தானும், நிலந்திரைக்கும் கடல்தானைப்
பொலந்தும்பைக் கழல்பாண்டில்
கணைபொருத துளைத்தோ லன்னே
ஆயிடை, உடன்றோர் உய்தல் யாவது தடந்தாள்
பிணிக்கதிர் நெல்லின் செம்மல் மூதூர்
நுமக்கு உரித்து ஆகல் வேண்டிற் சென்று அவற்கு
இறுக்கல் வேண்டும் திறையே மறுப்பின்
ஒல்வான் அல்லன் வெல்போ ரான்எனச்
சொல்லவும் தேறீர் ஆயின் மெல்லியல்
கழல்கனி வகுத்த துணைச்சில் லோதிக்
குறுந்தொடி மகளிர் தோள்விடல்
இறும்பூ தன்று அஃது அறிந்து ஆகுமினே!

வாள்கள் பகைவரை வெட்டி வீழ்த்துவதால் கதுவாய் ஓடிய வடிவிழந்தன. வேல்கள் ஆணிகள் கழன்றன. களிறுகளோ பகைவர் அரணை முற்றுவதால் கிம்புரிகள் கழன்றன. குதிரைக் குளம்புகள் குருதி தோய்ந்தன. அவன் பெரும்படை வென்று அம்புபட்டுத் துளைத்த மார்பினன் ஆனான். அவன் சினம் முன் எதிர் நிற்பார் யார்? உங்களூர் உங்களுக்கே வேண்டுமெனில் போய்த் திறை

செலுத்திப் பணிவீராக! யாம் சொல்லவும் செய்யீராயின் உம் மனைவியர் உம்மை இழத்தல் உறுதி. இதனை ஆய்ந்து போருக்கு வருக!

புறம்: 98

அஞ்சியை ஔவையார் பாடியது.

முனைத்தெவ்வர் முரண் அவியப்
பொரக் குறுகிய நுதி மருப்பின்
இனக் களிறு செலக் கண்டவர்
மதிற்கதவம் எழுச் செல்லவும்
பிணன் அழுங்கக் களன் உழக்கிச்
செலவு அசைஇய மறுக்குளம்பின்
இனநன்மாச் செலக் கண்டவர்
கவைமுள்ளின் புழை யடைப்பவும்
மார்புறச் சேர்ந் தொல்காத்
தோல் செறிப்பினின் வேல்கண்டவர்
தோல் கழியாது பிடி செறிப்பவும்
வாள்வாய்த்த வடுப்பரந்த நின்
மறமைந்தர் மைந்து கண்டவர்
புண்படுகுருதி அம்பு ஒடுக்கவும்
நீயே, ஐயவி புகைக்கவும் தாங்காது ஒய்யென
உறுமுறை மரபின் புறம்நின்று உய்க்கும்
கூற்றத் தனையை ஆகலின் போற்றார்

இரங்க விளியது கொல்லோ வரம்பணைந்து

இலங்குகதிர் அலம்வரு கழனிப்

பெரும்புனல் படப்பை அவர் அகன்றலை நாடே

உன் யானைகள் போகக் கண்டு பகைவர் புதிய கணைய மரமும், கதவும் செய்வர். உன் குதிரைகள் போகக் கண்டால் காட்டு வாயில்களை முன்னால் அடைப்பர். வேல்கள் செல்லுவதைக் கண்டு வாளை உறையிலிடுவர். இவ்வாறு உன் படை ஆற்றல் உள்ளது. நீயோ கடுங்கோபத்தன். போரில் கூற்றுவன், பகைவர் உயிர் பறிப்பவன். நின்னைப் பகைத்தால் பகைவர் நாடு கெடும்.

புறம்: 99

அஞ்சியை ஔவையார் பாடியது. அஞ்சி திருக்கோவலூர் மீது படை கொண்டு சென்று காரியை வென்ற போது பாடியது.

அமரர்ப் பேணிவும் ஆவுதி அருத்தியும்

அரும்பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்

நீரக இருக்கை ஆழி சூட்டிய

தொன்னிலை மரபினின் முன்னோர் போல

ஈகையம் கழற்கால் இரும்பனம் புடையல்

பூவார் காவின் புனிற்றுப் புலால் நெடுவேல்

எழுபொறி நாட்டத்து எழாத் தாயம்

வழுவின்று எய்தியும் அமையாய் செருவேட்டு

இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிக்

சென்று அமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய

அன்றும் பாடுநர்க்கு அரியை, இன்றும்

பரணன் பாடினன் மற்கொல் மற்றுநீ

முரண்மிகு கோவலூர் நூறிநின்

அரண் அடு திகிரி ஏந்திய தோளே!

நின் முன்னோரைப் போலக் கழல் புனைந்த காலும், பனந்தாரும், பூந்தொடையலும், வேலும், வழிபாடும், யாகமும் கொண்டு விளங்கினை! கரும்பு நின்னாட்டிற்குக் கொண்டு வந்தாய். அரசுரிமையோடு அமைந்திராமல் ஏழரசரோடு பகைத்து மேற்சென்று வெற்றியும் பெற்றாய். அதனால் பாடுவார்க்கு அரியவனாக விளங்கினாய். இன்னும் நீ கோவலூரை அழித்த வெற்றியைப் பரணர் பாடினார். வாழ்க நீ பெரும!

புறம்: 100

அதிகமான் நெடுமான் அஞ்சி தன் மகன் பொகுட்டெழினியைக் காணச் சென்றபோது, உடனிருந்த ஔவையார் பாடியது.

கையது வேலே காலன புனைகழல்

மெய்யது வியரே! மிடற்றது பசும்புண்

வட்கர் போகிய வளர்இளம் போந்தை

உச்சிக் கொண்ட ஊசி வெண்தோடு

வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்

சுரி இரும்பித்தை பொலியச் சூடி

வரிவயம் பொருத வயக்களிறு போல

இன்னும் மாறாது சினனே, அன்னோ

உய்ந்தனர் அல்லர் இவன் உடற்றி யோரே

செறுவர் நோக்கிய கண்தன்

சிறுவனை நோக்கியும் சிவப்புஆ னாவே.

கையில் வேல்! காலில் வீரக்கழல்! உடம்பில் வியர்ப்பு, கழுத்தில் பசும்புண். பனம்பூ, வெட்சி மாலை, வேங்கைப் பூவைச் சூடியவனே! புலியடன் சண்டையிட்ட யானை சினமடங்காது வந்து நிற்பது போல நிற்கிறாய். ஐயோ! உன்னைச் சினப்பித்தவர் பிழைத்திரார், இப்புதல்வனைக் கண்டும் உன் கண்ணின் சினம் மாறவில்லையே?

புறம்: 101

அதிகமானை ஔவையார் பாடியது.

ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூண் அணிந்த யானை இயல்தேர்
அதிகமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானை தன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் தது அது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்க அவன் றாளே!

ஒருநாள் இருநாள் அல்ல. பலநாள் சென்றாலும் தலைநாள் போலவே வரவேற்பான். யானை, தேர் உடையவன். யானைக் கோட்டிடை வைத்த கவனம் போல பரிசில் நம் கையில் உள்ளது போலவே மகிழலாம். நெஞ்சே நீ வருந்தாதே! வாழ்க அவன் தாள்!

புறம்: 102

பொகுட்டெழினியை ஔவையார் பாடியது.

எருதே இளைய நுகம் உணராவே
சகடம் பண்டம் பெரிது பெய்தன்றே
அவல் இழியினும் மிசை ஏறினும்
அவணது அறியுநர் யார்என உமணர்
சீழ்மரத்தி யாத்த சேம அச்சன்ன
இசைவிளங்கு கவிகை நெடியோய் திங்கள்
நாள்நிறை மதியத் தனையை யிருள்
யாவண தோநின் நிழல்வாழ் வோர்க்கே

எருதுகள் புதியன, நுகம் பூண்டதை மதியாது செல்வன. வண்டி பெரும்பாரம் ஏற்றப்பட்டது. வழியில் பள்ளங்களில் யாதாகுமோ என சேம அச்சும் கட்டிச் செல்வர் உப்பு வணிகர். அவ்வச்சுப் போன்றவன் நீ. உன்னைச் சேர்ந்தோர் பால் துன்ப இருள் நீக்கும் நிலவு போன்றவன் நீ!

புறம்: 103

அதிகமானை ஔவையார் பாடியது

ஒருதலைப் பதலை தூங்க ஒருதலைத்
தூம்புஅகச் சிறுமுழாத் தூங்கத் தூக்கிக்
கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யார்எனச்
சுரன்முதல் இருந்த சில்வளை விறலி
செல்வை யாயின் சேணோன் அல்லன்
முனைசுட வெழுந்த மங்குல் மாப்புகை

மலைசூழ் மஞ்சின் மழகளிறு அணியும்

பகைப்புலத் தோனே பல்வேல் அஞ்சி

பொழுது இடைப் படாஅப் புலரா மண்டை

மெழுகு மெல் அடையிற் கொழுநிணம் பெருப்ப

அலத்தற் காலை யாயினும்

புரத்தல் வல்லன் வாழ்கவன் தாளே.

விறலியே! அதிகன் நெடுந்தொலைவு இல்லை. பகைவர் நாட்டில் உன்னான் உலகம் வறுமை உற்றாலும் பாதுகாக்கும் இயல்பினன். அவள் பால் நீ தாராளமாகச் செல்லலாம். அவன் தான் வாழ்க!

புறம்: 104

அதிகமானை ஔவையார் பாடியது

போற்றுமின் மறவீர்! சாற்றுதும் நும்மை

ஊர்க்குறு மாக்கள் ஆடக் கலங்கும்

தாள்படு சின்னீர் களிறுஅட்கு வீழ்க்கும்

ஈர்ப்புடைக் கராஅத் தன்ன என்னை

நுண்பல் கருமம் நினையாது

இளையன்என்று இகழினும் பெறலரிது ஆடே

ஊர்ச் சிறுவர் ஆடும் சிற்றோடை நீராயினும் அதனுள் வந்த யானையையும் முதலை வென்று வீழ்த்தி விடும். அதுபோல் எம் இறைவனின் ஆற்றலையும், நுண்ணிய அறிவையும் அறியாது, இளையன் என்று இகழ்ச்சியாகக் கருதினால் உம் எண்ணம் ஈடேறுதல் அரிது!

புறம்: 140

நாஞ்சில் வள்ளுவனை ஔவையார் பாடியது.

தடவுநிலைப் பலவின் நாஞ்சிற் பொருநன்

மடவன் மன்ற செந்நாப் புலவீர்!

வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த

அடகின் கண்ணுறை ஆக யாம்சில

அரிசி வேண்டினெம் ஆகத் தான்பிற

வரிசை அறிதலின் தன்னும் ஊக்கி

இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்

பெருங்களிறு நல்கி யோனே, அன்னதோர்

தேற்றா ஈகையும் உளதுகொல்

போற்றார் அம்ம பெரியோர்தம் கடனே!

செந்நாப் புலவர்களே! பலா மிகுந்த இந்த நாஞ்சில் நாட்டு வேந்தன் அறியாமையே உடையான் போலும். விறலியர் பறித்த இலைமேல் தூவுவதற்குச் சில அரிசியே வேண்டினோம். அவனோ எம் வறுமையை எண்ணாது தன் பெருமையை எண்ணியவனாக யானையைப் பரிசாக அளித்தான். இவ்வாறு தெளியாது கொடுக்கும் கொடையும் உளதோ? பெரியோனான அவன் முறையறிந்து செய்யானோ?

புறம் : 187

பொதுவியலாக ஔவையார் பாடியது.

நாடா கொன்றோ காடா கொன்றோ

அவலா கொன்றோ மிசையா கொன்றோ

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே!

நாடாயினும், காடாயினும் என்ன? மேடாயினும் பள்ளமானாலும் என்ன? எவ்விடத்தே ஆடவர் நல்லவராக விளங்குகின்றனரோ அவ்விடத்தே, நிலனே! நீயும் நன்றாக விளங்குவாய். நிலத்தைப் பொறுத்தன்று வாழ்வும், தாழ்வும்; அவ்வந் நிலத்து வாழ் ஆடவரைப் பொறுத்ததே என்றது.

புறம்: 206

அதிகமான் நெடுமான் அஞ்சியை ஔவையார், அவன் பரிசில் நீட்டித்த போது பாடியது. பலமுறை இருந்து, தங்கிச் சென்ற வராயினும் ஒருமுறை பரிசில் நீட்டித்தான்.

வாயிலோயே! வாயி லோயே!

வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்

உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து

வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கைப்

பரிசிலர்க்குஅடையா வாயி லோயே!

கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி!

தனிஅறி யான்கொல் என்னறி யவன்கொல்

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென

வறுந்தலை உலகமும் அன்றே, அதனால்

காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை

மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்

மழுவுடைக் காட்டகத்து அற்றே

எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே.

வாயிற்காவலனே! வள்ளன்மை உடையோர் செவிகளில் விளங்கிய சொற்களை விதைத்துப் பரிசில் பயன் கொண்டு வாழும் பரிசிலர்க்கு அடையாத வாயிலோயே! அஞ்சி, தன் தர மறியானோ? அல்லது என் தர மறியானோ? அறிவும் புகழும் உடையவர் பசியால் இறந்தார் என்னும் வறுமையுற்ற உலகம் அன்று இது. அதனால் இசைக் கருவிகள் கொண்ட என் காவினைத் (காவடி) தூக்கினேன். மூட்டைகளைக் கட்டினேன். மரந்துணிக்கும் தச்சர் காட்டகத்துச் சென்றால் ஏதாவது ஒரு மரம் கிடையாது போகுமோ? அதுபோல் பரந்த இந்த உலகத்தில் எங்கு சென்றாலும் அத்திசையில் எமக்குச் சோறு தட்டாது கிடைக்கும்.

புறம்: 231

அதிகமான் நெடுமான் அஞ்சி இறந்தபோது ஔவையார் வருந்திப் பாடியது.

எரிபுனக் குறவன் குறையல் அன்ன

கரிபுற விறகின் ஈம ஒள்ளழல்

குறுகினும் குறுகுக குறுகாது சென்று

விசும்புற நீளினும் நீள்க! பசுங்கதிர்த்

திங்கள் அன்ன வெண்குடை

ஒண்ஞாயிறு அன்னோன் புகழ்மா யலவே

எரியூட்டப் பட்ட தினைக் கொல்லையிலே குறவன் தறித்த துண்டம் போன்ற கரிந்த புறத்தை உடைய விறகடுக்கிய ஈமத்தீயிலே அஞ்சியின் உடல் உள்ளது. இனி அவ் வீமத்தீ அவனது உடலைச் சிதையாமல் சிறுகினும் சிறுகுக. அல்லது வானம் முட்டச் சென்று நீளினும் நீள்க! ஞாயிறன்ன அஞ்சியின் புகழ் என்றும் அழியாது.

தன் நண்பன் உடலை எரியூட்டக் கண்ட ஒளவையார் கசிந்து பாடிய பாடல் இது.

புறம்: 232

இதுவும் அதிகமான் இறந்த ஞான்று ஒளவையார் பாடியது.

இல்லா கியரோ காலை மாலை

அல்லா கியர்யான் வாழும் நாளே

நடுகல் பீலி சூட்டி நார்அரி

சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ?

கோடுயர் பிறங்குமலை கெழீஇய

நாடுடன் கொடுப்பவும் கொள்ளா தோனே!

கோடுகள் உயர்ந்த மலைபலவும் கொடுத்தாலும் கொள்ளாத இயல்புடையவன் அஞ்சி. அவனுக்காக நடுகல் நாட்டி, பீலி சூட்டி, நாரால் அரிக்கப்பட்ட மதுவைச் சிறிய கலத்தால் விடுகின்றீர்களே! அதனை அவன் கொள்வானோ? அவனோ மறைந்தான். காலையும் மாலையும் இனி இல்லையாகுக. என் வாழ்நாளும் இனி இல்லாது மறைவதாகுக.

புறம்: 235

இதுவும் அதிகமானை ஒளவையார் பாடியது. அதிகமான் மறைந்த போது, தன் பழநினைவுகளைக் கூறிப் பாடியது.

சிறிய கள் பெறினே எமக்கீயும் மன்னே

பெரியகள் பெறினே

யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே!

சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே?

பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே!

என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தானிற்கும் மன்னே
நறந்தம் நாறும் தன் கையால்
புலவுநாறும் என் தலை தைவரு மன்னே
அருந்தலை இரும்பாணர் அகண் மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல்நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழ்ந் தன்று அவன்
அருநிறத்து இயங்கிய வேலே
ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநரும் இல்லைப் பாடுநர்க்கொன்று
ஈகுநருமில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைகொள் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கொன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே!

ஐயகோ! அஞ்சியின் மார்பிடத்தே தைத்தவேல் பாணரின் உண்கலங்களைத் துளையிட்டதே. இரப்பவர் கைகளை ஊருவியதே. பாணர் சுற்றத்தின் கண்ணொளியை மங்கச் செய்ததே. அறிவர் நாவில் சென்று தைத்ததே.

சிறிய அளவு மதுப் பெற்றாலும் அதை எமக்கே தந்து விடுவான். பெரிய அளவு கிடைத்தால் யாம் பாட எமக்கும் அளித்து அவனும் உண்பான். சிறிது சோறு எனினும் மிகப் பலரோடு உண்பான். எலும்பும் தசையும் உள்ள வேட்டைப் பொருள் எல்லாம்

எமக்களித்து அம்பும் வேலும் நுழையும் இடமெல்லாம் அவன் இருப்பான்! நரந்தம் நாறும் தன் கையால் புலவு நாறும் என் தலையை அன்போடு தடவி விடுவான். அவனோ பட்டனன்? எமக்குந் தந்தையாகிக் காத்தவன் எங்கே உள்ளனன்? இனிப் பாடுவார்க்கு ஒன்று தருவாரும் இல்லை. நீர்த்துறைப் பகன்றைப் பெரும்பூ எவர்க்கும் பயன்படாது கழிவது போல, வறிதே மாய்ந்து போகும் உயிர்களே இனிப் பலவாகும்.

புறம்: 269

ஔவையார் பாடியது. பாடப் பட்டோரின் ஒரு வாள் வீரன். அவன் கைவாளைச் சுட்டி விதந்து கூறியது.

குயில் வாய் அன்ன கூர்முகை அதிரல்
பயிலாது அல்கிய பல்காழ் மாலை
மையிரும் பித்தை பொலியச் சூட்டிப்
புத்தகல் கொண்ட புலிக்கண் வெப்பர்
ஒன்றுஇரு முறையிருந்து உண்ட பின்றை
உவலைக் கண்ணித் துடியன் வந்தெனப்
பிழிமகிழ் வல்சி வேண்ட மற்றிது
கொள்ளாய் என்ப கள்ளின் வாழ்த்திக்
கரந்தை நீடிய வறிந்துமாறு செருவின்
பல்லான் இனநிரை தழீஇய வில் லோர்க்
கொடுஞ்சிறைக் குரூஉப் பருந்து ஆர்ப்பத்
தடிந்துமாறு பெயர்த்தது இக்கருங்கை வாளே!

வெங்கள்ளை இருமுறை உண்டனை! வெட்சிப் போர்க்கு எழுந்தனை! கரந்தையரோ மிகப்பலர். மறைந்திருந்தும் போர் செய்தனர். எனினும் அம்மறவர்கள் அனைவரையும் வெட்டி வீழ்த்தினாய். ஆநிரை கொண்டு மீண்டாய். பெருமானே! நீ அவரைத் தடிந்த வாள் இதுதானோ?

புறம்: 286

போரில் மடியாது வெற்றி பெற்று வந்த வீரன் ஒருவனை ஔவையார் பாடியது!

வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்

தன்னோர் அன்ன இளையோர் இருப்பப்

பலர்மீது நீட்டிய மண்டைஎன் சிறுவனைக்

கால்கழி கட்டிலிற் கிடப்பித்

தூவள் ளறுவை போர்ப்பித் திலதே!

என் மகன் ஒத்த இவன் வெள்ளை உள்ளம் கொண்ட வெள்ளாட்டுக் கிடாய் போன்றவன். வீர மறவர் பலர் சூழ வேந்தனொடு கள்ளினைத் தானும் பெற்ற இவன், அவரெல்லாம் போரில் மடிய, இவன் வெற்றியுடன் வந்தனன். இது ஒப்பற்ற நிலையதாகும்.

புறம்: 290

பாசறையில் வேந்தனொருவன் மதுவைப் படை வீரர்களுக்குச் சிறப்புக் கருதிக் கொடுப்பது வழக்கம். அங்ஙனம் ஒரு வீரனை அழைத்துக் கொடுத்த போது, அதனை மறுத்து, தன்னினும் புகழ்மிக்க மற்றோர் வீரனுக்குத் தருமாறு கூறியது. ஔவையார் பாடல்.

இவற்கு கீத்து உண்மதி கள்ளே! சினப்போர்

இனக்களிற்றி யானை இயல்தேர்க் குரிசில்

நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை

எடுத்துஎறி ஞாட்பின் இமையான் தச்சன்

அடுத்துஎறி குறட்டின் நின்றுமாய்ந் தனனே!

மறப்புகழ் நிறைந்த மைந்தினோன் இவனும்

உறைப்புழி ஓலை போல

மறைக்குவன் பெருமநிற் குறித்து வருவேலே!

வேந்தே! உன் பாட்டனுக்கு இவன் பாட்டன் மெய்க் காவலாயிருந்தவன். உன் பாட்டன் மீது எறிந்த வேலை இவன் பாட்டன்மார்பிலே தாங்கியவன். ஆர்க்காலோடு தச்சன் வடிக்கும் குடம் போல இவன் பாட்டன் மீது அம்புகள் பாய்ந்து மாண்டனன். இவனும் மறப்புகழ் நிறைந்த வலிமை உடையவன். வெங்கதிர் உறைக்கும் போது ஓலைக்குடைக் காத்தலைப் போல, நின்னைக் குறித்து வரும் வேலையும் மறைத்துக் காக்கும் ஆற்றலன். ஆதலால் இவனுக்கே முதலில் கள் தருக! அதன் பின் நீ உண்க!

புறம்: 295

ஔவையார் பாடியது. போர்க் களத்தில் ஒரு வீரன் மடிந்தான். அவனுடல் கண்டு ஒரு தாய் மகிழ்ந்தது.

கடல்கிளர்ந் தன்ன கட்டூர் நாப்பண்

வெந்துவாய் வடித்த வேல்தலைப் பெயரித்

தோடு உகைத்து எழுதரூஉத் துரந்து எறிஞாட்பின்

வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி

இடைப்படை அழுவத்துச் சிதைந்துவே றாகிய

சிறப்புடையாளன் மாண்புகண் டருளி

வாகுமுலை ஊறிச் சுரந்தன

ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே!

போர்க்களத்தில்பகைப்படை எதிர்த்து அழித்தான் வேற்படை மறவன் ஒருவன். இறுதியில் அவன் சிதைந்தனன். அஞ்சி ஓடாத அவன் நிலை கண்ட தாய் உள்ளம் மகிழ்ந்தது. வற்றிய முலைகளில் பால் ஊறிச் சுரந்தது.

புறம்: 311

ஔவையார் பாடியது. போராற்றல் படைத்த ஒரு தலைவனைக் குறித்துப் பாடியது.

களர்ப்படு கூவல் தோண்டி நாளும்

புலைத்தீ கழிஇய தூவெள் ளறுவை

தாதெரு மறுகின் மாசுண இருந்து!

பலர்குறை செய்த மலர்தார் அண்ணற்கு

ஒருவரும் இல்லை மாதோ! செருவத்துச்

சிறப்புடைச் செங்கண் புகையவோர்

தோல் கொண்டு மறைக்கும் சார்புடை யோனே!

ஊர் நிலத்தில் கிணறு தோண்டி, புலைத்தி துவைக்கின்ற தூய ஆடையை அணிந்து செல்பவன். மன்றத்தில் அவ்வாடைகள் அழுக்குப் படிய, கருதாது பலர் குறைகளைத் தீர்ப்பவன். அவன் போர்க்கு எழுந்தால் அவன் தானே தன்னைக் காத்துக் கொள்பவன். அவனுக்கு இணை வேறு யாரும் இல்லை.

புறம்: 315

அதிகமானை ஔவையார் பாடியது.

உடையன் ஆயின் உண்ணவும் வல்லன்

கடவர் மீதும் இரப்போர்க்கு ஈயும்

மடவர் மகிழ்துணை நெடுமான் அஞ்சி

இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போலத்

தோன்றா திருக்கவும் வல்லன் மற்றதன்

கான்றுபடு கனையெரி போலத்

தோன்றவும் வல்லன்தான் தோன்றுங் காலே

உணவு இருந்தால் தன்பால் வருபவர்க்கு ஈந்து உண்பவன். இரவலர்க்குத் துணையாக விளங்குபவன். தீக்கடை கோலினைப் போல தன் ஆண்மை தோன்றாது இருப்பவன். கடை கோயினின்றும் தோன்றும் தீ போலத் தோன்றி அழிக்கவும் வல்லன்.

புறம்: 367

சேரமான் மாரி வெண்கோ, பாண்டியன் கானப் பேர் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய மூவேந்தர்களும் நண்பர்கள். இவர்கள் ஒரு சமயம் ஓரிடம் ஒருங்கிருந்த போது கண்டு மகிழ்ந்த ஔவையார் பாடியது.

நாகத் தன்ன பாகார் மண்டிலம்

தமவே யாயினும் தம்மொடு செல்லா

வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்

ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்

பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
நார்அரி தேறல் மாந்தி மகிழ்சிறந்து
இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை அல்லது
ஆகுங் காலைப் புணைபிறிது இல்லை
ஒன்றுபுரிந்து அடங்கிய இருபிறப் பாளர்
முத்தீப் புரைய காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்
யான்அறி அளவையோ இதுவே வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும் இம்மென
இயங்கும் மாமழை உறையினும்
உயர்ந்துமேந் தோன்றிப் பொலிக நுந் நாளே!

நிலவுலகம் தம்முடையது என்று எந்நாளும் சொல்வதற்கில்லை. இரப்போர் இரக்கப் பூவும் பொன்னுடன் நீர் வார்த்துத் தருக. மகளிர் தேறல் உண்டு இரவலர்க்கு வழங்குக. ஆராய்ந்தால், இவ்வுலகில் உயிரோடு இருக்கும் வரைக்கும் புகழுடம்புடன் இங்கே நிலைத்து வாழச் செய்யும் நல்வினைகள் அன்றி, வேறு எதுவும் நமக்குப் புணையாக உதவாது. இரு பிறப்பாளர் செய்யும் யாகம் கண்ட வேந்தே! யான் அறிந்த வரை வாழ்வின் இலக்கணம் இதுவேயாகும். வானத்து மீனினம், மழைத்துளிகள் போல் நெடுநாள் வாழ்வாயாக!

புறம்: 390

அஞ்சியை ஔவையார் பாடியது

அறவை நெஞ்சத்து ஆயர் வளரும்
மறவை நெஞ்சத்து தாய்இ லாளர்
அரும்பலர் செருந்தி நெடுங்கான் மலர்கமழ்
விழவணி வியன்களம் அன்ன முற்றத்து
ஆர்வலர் குறுகின் அல்லது காவலர்
கனவினும் குறுகாக் கடியுடை வியனகர்
மலைக்கணத் தன்ன மாடஞ் சிலம்பவென்
அரிக்குரல் தடாரி இரிய ஒற்றிப்
பாடிநின்ற பன்னாள் அன்றியும்
சென்ற ஞான்றைச் சென்றுபடர் இரவின்
வந்ததற் கொண்டு நெடுங்கடை நின்ற
புன்தலைப் பொருநன் அளியன் தானெனத்
தன்னுழைக் குறுகல் வேண்டி என்னரை
முதுநீர்ப் பாசி யன்ன உடைகளைந்து
திருமலர் அன்ன புதுமடிக் கொளீஇ
மகிழ்தரல் மரபின் மட்டே யன்றியும்
அமிழ்தன மரபின் ஊன்துவை அடிசில்
வெள்ளி வெண்கலத்து ஊட்டல் அன்றி
முன்னூர்ப் பொதியில் சேர்ந்த மென்னடை
இரும்பேர் ஒக்கல் பெரும்புலம் பகன்ற
அகடுநனை வேங்கை வீகண் டன்ன

பகடுதரு செந்நெல் போரொடு நல்கிக்
கொண்டி பெறுகவென் றோனே,உண்டுறை
மலையலர் அணியுந் தலைநீர் நாடன்
கண்டாற் கொண்டுமனை திருந்தடி வாழ்த்தி....
வானறி யலவென்பர் அகுபசி போக்கல்
அண்ணல் யானை வேந்தர்
உண்மையோ அறியலர் காண்பறி யலரே.

ஆயரும் சிறுகுடியினரும் அஞ்சியின் அரண்மனை முற்றத்தில் கூடிப் பாடி மகிழ்வர். பகைவர் அணுகுதல் அரிது. நான் அவன் குன்றை அடைந்து தடாரிப் பறையை முழக்கினேன். வந்த அன்றே என்னை வரவேற்றான். புதுமலரன்ன திருமடி உடுத்தச் செய்தான். கள்ளும் ஊனும் ஊட்டினான். என் சுற்றம் மகிழப் போரோடு செந்நெல் அளித்தனன். அவனை அறியாதவரே 'மழையும் பெய்திலதே' என்று வாடுவர்.

புறம்: 392

அதிகமான் மகன் பொகுட்டெழினியை ஔவையார் பாடியது.

மதியேர் வெண்குடை அதியர் கோமான்
கொடும்பூண் எழினி நெடுங்கடை நின்றியான்
பசலை நிலவின் பனிபடு விடியல்
பொருகளிற் றடிவழி யன்ன என்கை
ஒருகண் மாக்கிணை ஒற்றுபு கொடாஅ
உருகெழு மன்னர் ஆரெயில் கடந்து
நிணம்படு குருதிப் பெரும்பாட்டு ஈரத்து
அணங்குடை மரபின் இருங்களந் தோறும்

வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்
வைகல் உழவ! வாழிய! பெரிதெனச்
சென்றியான் நின்றன னாக அன்றே
ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி
வேர்புரை சிதாஅர் நீக்கி நேர்கரை
நுண்ணூற் கலிங்கம் உடீஇ உண்மெனத்
தேட்கடுப்பன்ன நாட்படு தேறல்
கோண்மீன் அன்ன பொலங்கலத்தளைஇ
ஊண்முறை ஈத்த லன்றியும் கோண்முறை
விருந்திறை நல்கி யோனே, அந்தரத்து
அரும்பெறல் அமிழ்த மன்ன
கரும்பியவண் தந்தோன் பெரும்பிறங் கடையே

அதியர் கோமான் பொருட்டு எழினியின் நெடுங்கடை வாயிலில் கிணைப் பறையை ஒலித்து நின்றேன். 'போரில் கடும் போரிட்டு, பகை நிலத்தைக் கழுதை பூட்டி உழச் செய்தோன்! பெரும் வெற்றி கொண்டோன்! நீ வாழ்க' என்று வாழ்த்தினேனாக! அப்பொழுதே எம்மை அழைத்து, பாசி வேர் போன்ற கிழிந்த ஆடையை அகற்றி மெல்லிய நூலால் அமைந்த தூய ஆடை தந்தனன். புளிப்பேறிய கள்ளினை வள்ளத்தில் பெய்து தந்தனன். முறைப்படி விருந்தும் ஊட்டினான். பிற நாட்டிலிருந்து கரும்பை இந்நாட்டிற்குக் கொணர்ந்தோனின் வழித் தோன்றலாகிய எழினி! அவன் வாழ்க!

11. கண்ணகனார்

புறம்: 218

கண்ணகனூர் என்பது கருவூர்க்கு பதினைந்தாவது கல்லில் உள்ளதோர் ஊர். இந்நாளில் இது கண்ணம்பாளையம் என்று வழங்கப்படுகிறது. இவரும் கொங்கு மரபின் ஒரு கூட்டமான கண்ணன் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறுவர்.

திணை: பொதுவியல்; கையறு நிலைத் துறை

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய

மாமலை பயந்த காமரு மணியும்

இடைபடச் சேய ஆயினும் தொடைபுணர்ந்து

அருவிலை நன்கலம் அமைக்கும் காலை

ஒருவழித் தோன்றியாங்கு என்றும் சான்றோர்

சான்றோர் பாலர் ஆப

சாலார் சாலார் பாலர்ஆ குபவே.

பொன், பவளம், முத்து, மணி என்பன ஒவ்வொன்றும் வெவ்வேறு தொலைவிடங்களிலே கிடைப்பன. ஆயினும் ஒன்றாகத் தொகுத்துக் கோவையாக்கும் பொழுது ஓரிடத்திலே அணியாகிச் சிறப்புப் பெறும்.

அதுபோலவே, சான்றோர் சான்றோர் பக்கமே சேர்வர். சால்பில்லாதவர் சால்பில்லாதார் பக்கமே சேர்வர். இதுவே உலக இயல்பு; அதனை இங்குக் கண்டோம்.

வரலாறு

கோப்பெருஞ் சோழனுடன் பிசிராந்தையார் உடன் வடக்கிருக்கக் கண்ட கண்ணகனார் பாடியது.

12. கணியன் பூங்குன்றனார்

புறம்: 192

கணியக் கலை (சோதிடம் — வானியல்) வல்லவரான இவரைக் கணியன் பூங்குன்றனார் என்றும் கணி பூங்குன்றனார் என்றும் கூறுவர்.

இவர் ஊர் கணியூர். கோவை மாவட்டத்தின் கீழ்பால் (சூலூருக்குக் கிழக்கில்) அமைந்துள்ளது. அவர்தம் தொழில் சிறப்பின் காரணமாக அமைந்ததால் கணி ஊர் என்று இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது.

இவ்வூரினர் தாம் தமிழக அமைச்சர்களாக இருந்த மதியழகன், கிருட்டினசாமி ஆகியோர்.

ஔவை சு.துரைசாமி பிள்ளை போன்றோர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இன்றைய மகிபாலன் பாட்டியைக் குறிப்பிடுவர்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே, வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானம் தண்டுளிதலைஇ யானாது
கல்பொருது இரங்கு மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூவம் என்பது திறவோர்

காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!

எந்த ஊரும் நம் ஊரே! எவரும் நம் உறவினரே! தீதும் நன்றும், நோதலும் தணிதலும் பிறரால் வருவதல்ல. நம்மாலேயே விளைவதாகும். சாதல் புதியதல்ல. வாழ்தல் இனிது என மகிழ்வதும், வெறுத்து அதனை இன்னாதென ஒதுக்குவதும் இல்லை.

பேரியாற்று நீரிலே செல்லும் மிதவையான எம் அரிய உயிரானது முறையாகச் சென்று கரை சேரும் என்பதனைத் திறனுடையோர் நூல்களால் அறிந்தோம். எனவே செல்வத்தாற் பெரியோரை மதித்தலும் செய்யோம்; சிறியோரை இகழ்தலும் செய்யோம் அவரவர் நல்லுள்ளப் பான்மை ஒன்றே கருதுவோம்.

13. கருவூர்க் கதப் பிள்ளைச் சாத்தனார்

புறம் : 168

பிட்டங் கொற்றனை இவர் பாடியது. இவன் சேரரின் படைத் தலைவர்களுள் ஒருவன்.

அருவி ஆர்க்கும் கழைபயில் நனந்தலைக்
கறிவளர் அடுக்கத்து மலர்ந்த காந்தள்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கண் கேழல் உழுத பூழி
நன்னாள் வருபதம் நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பருஉக்குரல் சிறுதினை
முந்துவிளை யாணர் நாள்புதிது உண்மார்
மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்

மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வான்கேழ் இரும்புடை கழாஅது ஏற்றிச்
சாந்த விறகின்னு வித்த புன்கம்
கூதளங் கவினிய குளவி முன்றில்
செழுங்கோள் வாழைஅகல்இலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ! கூர்வேல்
நரைநார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி
வடிநவில் அம்பின் வில்லோர் பெரும!
கைவள் ஈகைக் கடுமான் கொற்ற!
வையக வரைப்பில் தமிழகம் கேட்பப்
பொய்யா செந்நா நெளிய ஏத்திப்
பாடுப என்ப பரிசிலர் நாளும்
ஈயா மன்னர் நாண
வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே.

பன்றி உழுத புழுதியிலே விதைத்த திணை கதிர் முற்றியது. விழாநாளில் குறவர் மானிறைச்சியை மரையாவின் பாலை உலையிட்டு, சந்தன விறகால் எரித்துத் திணையைச் சமைத்து வாழையிலையில் பலரோடும் உண்பர். வில் வீரர் தலைவனே! கொடாதவர் நாணக் கொடுக்கும் கொற்றவனே! நின் பெரும் புகழ் அறிந்து பரிசிலர், தமிழகம் முழுதும் நின் புகழ்பரவப் பாடுவர். யானும் பாடுவேன்! எனக்கும் அருள்க!

14. கருவூர்க் கதப்பிள்ளையார்

புறம்: 380

கருவூர் என்னும் இன்றைய கரூரே இவர்தம் ஊர். 'கருவூர் வஞ்சி' என்று கொங்கு நாட்டினரால் வழங்கப்பட்டு வந்தது. இது

சில போது சேரர் ஆட்சிக்கும், சோழர் ஆட்சிக்கும் உட்பட்டிருந்திருக்கிறது. கதப்பிள்ளை என்றும் கந்தப் பிள்ளையார் என்றும் இவர் வழங்கப்பட்டு வந்திருக்கிறார்.

நாஞ்சில் மலைக்கும் அது சார்ந்த நாட்டுக்கும் உரியவனான நாஞ்சில் வள்ளுவனைக் கருவூர்க் கதப் பிள்ளையார் பாடிய பாடல். (பாடல் சிதைவுடையது)

தென்பவ் வத்து முத்துப் பூண்டு

வடகுன்றத்துச் சாந்தம் உரீஇ

.... பெருங்கடல் தானை

இன்னிசைய விறல்வென்றித்

தென்னவர் வயமறவன்

மிசைப் பெய்தநீர் கடல்பரந்து முத்தாகுந்து

நாறிதழ்க் குளவியொடு கூதளம் குழைய

வெறுபெ....த் துந்து

தீஞ்சுளைப் பலவின் நாஞ்சிற் பொருநன்

துப்பு எதிர்ந்தோர்க்கே உள்ளாச் சேய்மையின்

நட்பு எதிர்ந்தோர்க்கே அங்கை நன்மையன்

வல்வேற் கந்தன் நல்லிசை யல்ல

.....த் தார்ப் பிள்ளையஞ் சிறாஅர்

அன்ன னாகன் மாறே இந்நிலம்

இலம்படு காலை யாயினும்

புலம்பல்போ யின்று பூத்தஎன் கடும்பே!

தென் கடல் முத்தும், வட குன்றச் சாந்தமும், கடல் போன்ற தானையும், புகழார்ந்த ஆண்மையும் வெற்றிச் சிறப்பும் உடையவன் பாண்டியரின் படைத்தலைவன். மழைநீர் கடலுக்குள் சென்று முத்தாகும். மணமல்லி, கூதாளி, தீஞ்சுளைப் பலா நிறைந்தது நாஞ்சில் நாடு. பகைவர்க்கோ நெடுஞ் சேய்மையன். நட்பினர்க்கே அண்மையன். முருகனைப் போன்ற ஆண்மையுடையவன். சிறு பிள்ளையைப் போன்ற இயல்பினன். உலகம் வறுமை அடைந்தாலும் எம் சுற்றம் இனி வறுமை அடையாது.

15. கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூத நாதனார்

புறம்: 219

கருவூரிலுள்ள பெருஞ்சதுக்கம் என்ற நாற்சாலை கூடுமிடக் குடியிருப்புடைய புலவர் ஆதலின் கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூத நாதனார் என்றும் ஊரும் இடமும் இயற் பெயரும் கொண்டவராயினார்.

வரலாறு:

மக்களுடன் கலாய்த்து, போரைத் தவிர்த்து, கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த பொழுது பூத நாதனார் அவனைப் பாடியது!திணை: பொதுவியல்; துறை: கையறு நிலை.

உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்

முழூஉ வள்ளூரம் உணக்கும் மள்ள!

புலவுதி மாதோ நீயே

பலரால் அத்தைநின் குறியிருந் தோரே!

ஆற்றின் இடைக்குறை பட்ட இடத்தில், புள்ளி புள்ளியான மர நிழலின் கீழிருந்து உடம்பை வாட்டி உயிர் விடத் துணிகின்ற

வீரனே! உன்னோடு கூடி வடக்கிருந்த சான்றோர் பலர். (பிசிராந்தையார் போன்று) யானும் அவர்களைப் போல் உடனிருக்க வாராது பிற்பட்டு வந்திருப்பதற்கு வருந்துகின்றாயோ?

அவரையும் உடன் வடக்கிருக்க இசையாததால் இவ்வாறு கூறி வருந்தினார் போலும்!

16. கள்ளில் ஆத்திரையனார்

புறம்: 175

கள்ளில் என்பது கொங்கு நாட்டு ஊர். இக்கால் அது கள்ளிப்பட்டி என்று வழங்குகிறது. கோபி செட்டி பாளையத்திற்கு வடமேற்கில் அமைந்துள்ளது இவ்வூர். இவரைத் தொண்டை நாட்டினர் என்று கூறுவோரும் உண்டு.

எந்தை வாழி! ஆத நுங்க!

என்னெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே

நின்னியான் மறப்பின் மறக்குங் காலை

என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்

என்னியான் மறப்பின் மறக்குவென் வென்வேல்

விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்

திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த

உலக இடைகழி அறைவாய் நிலைஇய

மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்

பலர்புரவு எதிர்ந்த அறத்துறை நின்னே!

என் தலைவனே வாழி! ஆதனுங்க! என் நெஞ்சத்தைத் திறந்து பார்ப்போர் உன்னையே காண்பர். உன்னை எப்பொழுது நான் மறக்கிறேனோ, அப்பொழுதே என் உயிர்பிரியும்.

விண் அளாவிய நெடுங்கொடி கொண்ட மௌரியர் தென்பால் தமிழகம் நோக்கிப் படை எடுத்த பொழுது வேங்கட மலைத் தொடர் குறுக்கிடவே அதன் ஒரு கணவாய்ப் பகுதியை வெட்டி வழிசெய்து படைக்கருவிகளையும், பிறவும் கொணரும் சகடங்களையும் கொணர்ந்தனர். அந்த இடைகழிப் பகுதியில் எழுந்து வரும் கதிரவன் போல் யாவரையும் காத்தலே கடமையாகக் கொண்டவன் நீ! நீ நிலைத்த புகழோடு வாழ்க!

வரலாறு: வேங்கட மலைத் தலைவன் ஆதனுங்கன். அவன் காலத்தில் வடக்கேயிருந்து மௌரியர்கள் படையெடுத்துள்ளனர். இப்படையெடுப்பு கொங்கு நாட்டின் வட எல்லையான பெரும்பாலை - மலைக் கணவாயிலும் நடந்திருக்கிறது. (புறம்:175) ஆதலால் ஆதனுங்கள் கொங்கின் வடபால் ஆண்டவனாகவும் இருக்கலாம். ஆதி - அதன் கொங்குக் கூட்ட மரபில் ஒன்று.

கள்ளில் ஆத்திரையனார்

புறம்: 389

நல்லேர் முதியனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடியது. ஆதனுங்கனின் வழித் தோன்றலாக இந்நல்லேர் முதியன் இருந்திருக்கிறான்.

பாடாண் திணை; இயன்மொழித் துறை.

நீர்நுங்கின் கண்வலிப்பக்

கானவேம்பின் காய்திரங்கக்

கயங்களியும் கோடையாயினும்

ஏலா வெண்பொன் போகுறு காலை
எம்மும் உள்ளுமோ பிள்ளையம் பொருந!
என்றீத் தனனே யிசையால் நெடுந்தகை
இன்றுசென்று எய்தும் வழியனும் அல்லன்
செலினே காணா வழியனும் அல்லன்
புன்தலை மடப்பிடி இனையக் கன்றுதந்து
குன்றக நல்லூர் மன்றத்துப் பிணிக்கும்
கல்லிழி யருவி வேங்கடக் கிழவோன்
செல்வுழி எழாஅ நல்லோர் முதிய
ஆத னுங்கன் போல நீயும்
பசித்த ஒக்கல் பழங்கண் வீட
வீறுசால் நன்கலம் நல்குமதி பெரும!
ஐதகல் அல்குல் மகளிர்
நெய்தல் கேளன்மார் நெடுங்கடை யானே!

நீர்நிறைந்த நுங்கின் கண்கள் கல் போல வலுப்பட்டுப் போக, வேம்பின் காய் உலர, குளங்கள் நீர் வற்ற, கோடையிலும் எம்மை நினைந்து வருக என்று கூறிக் கொடுத்தாய். அப்படிப்பட்ட ஆதனுங்கள் இன்றில்லை. அவன் வழித் தோன்றலான குன்றாத நல்லூர்த் தலைவனே! நல்லேர் முதியனே! ஆதனுங்கனைப் போல நீயும் பசித்த சுற்றத்தின் துயரம் நீங்கச் சிறந்து கொடை வழங்குவாயாக! நின் பெண்டிர் எம் நெய்தற் பறை முழங்கக் கேளாதார் ஆகுக!

17. கபிலர்

புறம்: 8

சேரமான் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது. வேள் பாரியின் உற்ற நண்பர் கபிலர். குறிஞ்சித் திணை பாடுவதில் வல்லவர். கலித்தொகைக் குறிஞ்சிக் கலி பாடியது இவரே. இச் சேரமான் பொறையன் பெருந்தேவி ஈன்ற மகன் எனவும் கூறப்படுகிறான். நூறாயிரம் காணம் பொன்னும், நன்றா என்னும் குன்றேறி நின்று கண்ணிற் கண்ட நாடு முழுதும் கபிலர்க்கு அளித்த பெருவள்ளல் இவன்.

நன்றா என்னும் குன்று, இக்கால் பவானிக்கு அருகில் உள்ள ஊராட்சிக் கோட்டை மலை என்று புலவர் குழந்தை, கா. அப்பாதுரையார் புலவர் செ.இராசு போன்றோர் குறிப்பிடுவர்.

வையம் காவலர் வழிமொழிந் தொழுகப்

போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாஅது

இடம்சிறி தென்னும் ஊக்கம் துரப்ப

ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்

கடந்தடு தானைச் சேர லாதனை

யாங்கனம் ஒத்தியோ? வீங்குசெலல் மண்டிலம்

பொழுதென வரைதி, புறங்கொடுத் திறத்தி,

மாறி வருதி, மலைமறைந்து ஒளித்தி,

அகலிரு விசும்பி னாலும்

பகல்விளங் குதியால் பல்கதிர் விரித்தே!

உலகம் காக்கும் மன்னர் பலரும், தத்தம் ஆணைக்கு உட்பட்டது என்னும் பொதுச் சொல்லைப் பொறாதவர்கள். தன் நாடு சிறிது

என்று கூறுவதைக் கேட்க விரும்பாதவர்கள். நாட்டை விரிவுபடுத்தி தனியாட்சி நடத்தி வருபவன் சேரன்! கதிரவனே நீ எப்படி இவனுக்கு ஒப்பாய்! பகற் பொழுதில் மட்டும் வருபவன் நீ! திங்களுக்கு முதுகிடுபவன். தெற்கும், வடக்கும் தோன்றி ஒரு நிலையில் நில்லாதவன். மலைக்குப் பின் மறைபவன். நீ எப்படிச் சேரனுக்கு ஒப்பாவாய்.

புறம்: 14

சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது. புலவரின் கையைப் பற்றி 'உம் கை மிக மெல்லியது' என, அக்கபிலர் பாடியது.

கடுங்கண்ண கொல்களிற்றால்

காப்புடைய எழுமுருக்கிப்

பொன்னியல் புனைதோட்டியால்

முன்புதுரந்து சமந்தாங்கவும்

பார்உடைத்த குண்டகழீ

நீர் அழுவம் நிவப்புக் குறித்து

நிமிர்பரிய மாதாங்கவும்,

ஆவம் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்

சாவ நோன் ஞாண் வடுக்கொள வழங்கவும்,

பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும், குரிசில்

வலிய ஆகும்நின் தாள் தோய் தடக்கை

புலவு நாற்றத்த பைந்தடி

பூ நாற்றத்த புகை கொளீஇ ஊன்துவை

கறிசோறு உண்டு வருந்துதொழில் அல்லது

பிறிது தொழில் அறியா ஆகலின், நன்னும்

மெல்லிய பெரும தாமே நல்லவர்க்கு

ஆரணங் காகிய மார்பின் பொருநர்க்கு

இருநிலத்து அன்ன நோன்மைச்

செருமிகுசேஎய்நின் பாடுநர் கையே!

நீ போரில் யானை, குதிரை, தேர் மீது நன்று அடக்கிப் பிடித்துச் செலுத்துகிறாய். பரிசிலர்க்கு வாரி வாரி வழங்குகிறாய். நீ போரில் மிக்க ஆற்றல் காட்டுபவன். உன் கை உரம் வாய்ந்தது. எம் கைகள் ஊனும், சோறும், துவையும், கறியும் உண்பதல்லால் வேறெதும் இல்லை. அதனால் மெல்லிது! எம்போல் வார் கைகளும் இத்தகையதே!

புறம்: 105

இதுவும் வேள் பாரியைக் கபிலர் பாடியது. பாரி கடையெழு வள்ளல்களுள் ஒருவன். பாரியின் அவைக்களத் தலைமைப் புலவராக விளங்கியவர்.

சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி

தடவு வாய்க் கலித்த மாஇதழ்க் குவளை

வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்

பெய்யினும் பெய்யா தாயினும் அருவி

கொள்ளுழு வியன்புலத்து உழைகால் ஆக

மால்புஉடை நெடுவரைக் கோடுதொறு இழிதரும்

நீரினும் இனிய சாயல்

பாரி வேள்பாற் பாடினை செலினே!

விறலியே! சுனையிலே மலர்ந்த நீல மலரின் தேன், கொள் என்னும் தானியத்திற்கு விதைத்த நிலத்தில் ஓடும் வளம் நிறைந்த நாடன்; இனிய பண்பினன். அவனைப் பாடிச் சென்றால் சிறந்த அணிகலன்களைப் பரிசாகப் பெறுவாய்.

புறம்: 106

இதுவும் வேள்பாரியைக் கபிலர் பாடியது

நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப்

புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை

கடவுள் பேணேம் என்னா ஆங்கு

மடவர் மெல்லியர் செல்லினும்

கடவுன் பாரி கைவண் மையே!

நல்லதாயினும், தீயதாயினும் உள்ளன்புடன் ஒருவன் சூட்டினால் தெய்வமும் விரும்பி ஏற்கும். அதுபோல் அறிவற்ற, புல்லிய குணம் கொண்டோர் சென்றாலும் பாரி உவந்து பரிசு நல்குவான்.

புறம்: 107

இதுவும் வேள் பாரியைக் கபிலர் பாடியது.

பாரி பாரி என்றுபல ஏத்தி

ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்

பாரி ஒருவனும் அல்லன்

மாரியும் உண்டுஈண்டு உலகுபுரப் பதுவே

சிறந்த நாவன்மை உடைய புலவர் பலரும் பாரி பாரி என்று அவனையே புகழ்கிறார்களே? பாரி ஒருவன் மட்டுமா வழங்குகிறான்! மாரியும் பெய்தல்லவா உலகத்தைக் காக்கிறது.

புறம்: 108

இதுவும் வேள் பாரியைக் கபிலர் பாடியது.

குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி

ஆரம் ஆதலின் அம்புகை அயலது

சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்

பறம்பு பாடினர் அதுவே, அறம்பூண்டு

பாரியும் பரிசிலர் இரப்பின்

வாரேன் என்னான் அவர்வரை யன்னே!

குறத்தி மூட்டிய கொள்ளி சந்தனக் கட்டை யாதலின் அதன் புகை வேங்கைப் பூங்கொத்திலும் பரவும். அத்தகைய வளம் உடையவன் பறம்பிற் கோமான். பரிசிலர்க்குக் காலம் தாழ்த்தாது அவ்வப் பொழுதே வழங்கி மகிழ்பவன்.

புறம்: 109

வேள் பாரியைக் கபிலர் பாடியது. பறம்பு மலையை முற்றுகையிட்ட மூவேந்தருக்குக் கூறுவது போன்று பாரியின் மலைவளம், ஆற்றல் பற்றிக் கூறியது.

அளிதோ தானே பாரியது பறம்பே!

களிகொள் முரசின் மூவிரும் முற்றினும்

உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே

ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளையும் யும்மே! !

இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே

மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே.

நான்கே, அணிநிற ஓரி பாய்தலின், மீது அழிந்து

திணி நெடுங் குன்றம் தேன்சொரி யும்மே

வான்கண் அற்று அவன் மலையே வானத்து

மீன்கண் அற்று அதன் சுனையே யாங்கு

மரந்தொறும் பிணித்த களிற்றினர் ஆயினும்

புலந்தொறும் பரப்பிய தேரினர் ஆயினும்

தாளில் கொள்ளலிர் வாளில் தாரலன்

யான் அறி குவன்அது கொள்ளு மாறே

சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி

விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர

ஆடினிர் பாடினிர் செலினே

நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே!

மூங்கில் நெல்லும், பலாப்பழமும், வள்ளிக் கிழங்கும் தேனும் ஆகிய நான்கு விளைவுகள் உழவின்றிக் கிடைப்பது பறம்பு நாடு. வானளவு உயரமும் நீளமும் கொண்டது பறம்பு மலை. மலையின் சுனை வான் மீன் போன்றது. மரத்திற்கு ஒரு யானை வீதம் கட்டியும், தேரால் நிறைத்திருப்பீராயினும் பாரியை வெல்லல் அரிது! முரசுடை மன்னர் மூவருமாகிய நீங்கள் பாரியை வெல்லுதல் அரிது. அவனை வெல்ல வழி ஒன்று உள்ளது. நீங்கள் பாடியும் பாணராகவும், விறலியராகவும் சென்றால் அவன் நாட்டையும், மலையையும் வழங்கி விடுவான்.

புறம்: 110

இதுவும் வேள்பாரியைக் கபிலர் பாடியது

கடந்தடு தானை மூவிரும் கூடி

உடன்றனிர் ஆயினும் பறம்புகொளற் கரிதே

முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு

முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்

யாமும் பாரியும் உளமே

குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே!

வஞ்சனையால் அல்லாது நீங்கள் மூவரும் எதிர்த்து நின்று பாரியை வெல்லல் அரிது. முந்நூறு ஊர்களை உடையது பறம்பு நாடு. அத்துணையும் பரிசில் பெற்றனர். நானும் பாரியும் உள்ளோம். நீங்கள் பாடி வந்தால் மலையைத் தருவான்.

புறம்: 111

இதுவும்பாரியைக் கபிலர்பாடியது.

அளிதோ தானே பேரிருங் குன்றே

வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே

நீலத்து இணைமலர் புரையும் உண்கண்

கிணைமகட்கு எளிதாற் பாடினள் வரினே!

பெரிய கருங்குன்றம் பறம்பு மலை. வெல்வதற்கு அரிது. வேலால் வெல்லுதல் வேந்தர்களுக்கரிது. ஆனால் விறலிக்கு அவள் பாடி வந்தால் எய்துவதற்கு மிகவும் எளிது.

புறம்: 113

இதுவும் பாரியைக் கபிலர் பாடியது. பாரியின் பறம்பு வீழ்ந்தது. அவன் பெண் மக்களைத் தக்கவர் பால் ஒப்படைத்து விட எண்ணிப் பொறுப்பேற்ற கபிலர், பறம்பினை விட்டு வெளியேறும் போது அப் பறம்பு நோக்கி உள்ளம் நொந்து கூறியது இது.

மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டு ஆன்றுஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்
பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே இனியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும் பெயர்ப் பறம்பே!
கோள்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறு இருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே

பறம்பே! முன்னர் இருந்த உன்வளம் எத்தகையது. மதுவும், ஊனும் சோறும் வேண்டிய மட்டும் அளிப்பார் பலர். அத்தகைய வளத்தோடு இருந்தாய் அப்போது உனக்கு நான் நண்பனானேன். ஐயகோ! இன்று பாரி வீழ்ந்தனன். அவன் மக்களை மணக்க உரியவரைத் தேடிச் செல்கிறேன். பெருமை பெற்ற பறம்பே! கலங்கிச் செயலிழந்தவனாய்க் கண்ணீர் சோர, உன்னை வாழ்த்திச் செல்கிறேன்.

புறம்: 114

இதுவும் பாரியைக் கபிலர் பாடியது.

ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும் சிறுவரை
சென்றுநின் றோர்க்கும் தோன்றும் மன்ற!
களிறுமென்று இட்ட கவளம் போல
நறவுப் பிழிந் திட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுகு முன்றில்
தேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே.

மதுப் பிழிவார் எறிந்த கோதுகளிலிருந்தும் மதுச்சிதறும். மது சேறாகும். வளமிக்க மலையே! அங்கே நிற்பார்க்கும், தூரத்தில் சென்று பார்ப்பவர்க்கும் தோன்றுவாய். தேர் வழங்கிச் சிறந்த பாரியின் சிறப்பால் நீ பெருமை பெற்றாய்!

புறம்: 115

இதுவும் பறம்பு மலைப் பாரியைப் பற்றிக் கபிலர் பாடியது.

ஒருசார் அருவி ஆர்ப்ப ஒருசார்
பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்
வாக்க உக்க தேக்கள் தேறல்
கல்லலைத் தொழுகும் அன்பே! பல்வேல்
அண்ணல் யானை வேந்தர்க்கு
இன்னா னாகிய இனியோன் குன்றே!

ஒரு பக்கத்தில் அருவி ஒலி! மறுபக்கத்தில் பாணர் மதுவுண்டு மகிழும் ஒலி. தேறல் கல்லை உருட்டும் ஒலி எல்லாம் பறம்பில் அன்று கண்டேன். யானைப் படையுடைய வேந்தர்க்கு இன்னான் ஆயினன். எனக்கு இனியவன் ஆயினன்.

புறம்: 116

இதுவும் பாரியை நினைந்து கபிலர் பாடியது.

தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக்...
கூம்பவிழ் முழுநெறி புரள்வரும் அல்குல்
ஏந்தெழில் மழைக்கண் இன்னகை மகளிர்
புல்மூசு கவலைய முள்மிடை வேலிப்
பஞ்சி முன்றில் சிற்றில் ஆங்கண்
பீரை நாறிய சுரை இவர் மருங்கின்
ஈத்திலைக் குப்பை ஏறி அமணர்
உப்புஓய் ஒழுகை எண்ணுப மாதோ!
நோகோ யானே தேய்கமா காலை
பயில்பூஞ் சோலை மயில்எழுந் தாவவும்
பயில்இருஞ் சிலம்பில் கலை பாய்ந் துகளவும்,
கலையும் கொள்ளா ஆகப் பலவும்
காலம் அன்றியும் மரம்பயம் பகரும்
யாணர் அறாஅ வியன்மலை அற்றே
அண்ணல் நெடுவரை ஏறித் தந்தை
பெரிய நறவின் கூர்வேல் பாரியது
அருமை அறியார் போர் எதிர்ந்து வந்த
வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா எண்ணு வோரே!

மயிலினம் சோலையிலாட, குரங்கினம் முகடுகளில் விளையாட, தீராத கனிவகைகள் நிறைந்து விளங்கியது பறம்புமலை. இம் மலை மேல் போர் தொடுக்க வந்த குதிரைகளை, எண்ணும் இயல்பினர் இவர்கள். இன்றோ வேலி சூழ்ந்த சிற்றில் முற்றத்தில் குப்பை மேட்டில் நின்று உப்பு வண்டிகளை எண்ணுகின்றனர். நான் வருந்துகிறேன். என் உயிர் இப்போதே கெடுவதாகுக!

புறம்: 117

இதுவும் பாரியை நினைந்து கபிலர் பாடியது.

மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்

தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்

வயல்அகம் நிறையப் புதற்பூ மலர

மனைத்தலை மகவை ஈன்ற அமர்கண்

ஆமா நெடுநிரை நன்புல் ஆரக்

கோஓல் செம்மையின் சான்றோர் பல்கிப்

பெயல் பிழைப்பு அறியாப் புன்புலத்து ததுவே.

பிள்ளை பெருகின் முள்ளெயிறு புரையப்

பாசிலை முல்லை முகைக்கும்

ஆய்தொடி அரிவையர் தந்தை நாடே

மலை நிலத்தில் பாரியின் செங்கோல் ஆட்சி நடந்தது. மழை பொய்ப்பினும் விளைவு மிகுந்தது. புதரிடத்துப் பூ மலர்ந்தது. பசு நல்ல புல்லை மேய்ந்தது. மக்களும் பலராயினர். முல்லை அரும்பு போன்ற அரும்பு வளையணிந்த இம் மகளிரின் தந்தை நாடு, முன்னிருந்த நிலையதாகும்.

புறம்: 118

இதுவும் பாரியின் பறம்பினைக் கபிலர் பாடியது.

அறையும் பொறையும் மணந்த தலைய
எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ
கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
தேர்வண் பாரி தண்பறம்பு நாடே

கூர் வேல் ஏந்தியோன்; தேரோட்டுவதில் சிறந்தவன் பாரி. இவன் பறம்பில், எட்டாம் பக்கப் பிறை போன்ற குளம் தூர்ந்தேதான் போயிற்றுப் போலும்.

புறம்: 119

இதுவும் அவனை அவர் பாடியது

கார்ப்பெயர் தலைஇய காண்புஇன் காலைக்
களிற்றுமுக வரியின் தெறுழ்வீ பூப்பக்
செம்புற்று ஈயலின் இன் அளைப் புளித்து
மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லோ
நிழலில் நீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை இறந்தும்
இரவலர்க் கீயும் வள்ளியோன் நாடே

கார் பெய்து மாறியது. எங்கும் புதுமலர் பூத்தன. செம்புற்றின் ஈசலை இனிய மோரோடு கூட்டிச் சமைத்த புளிங்கறியை உண்போம். சிறு தினை வருவாய் மிக்குளது. எல்லாம் முன்பு! நிழலற்ற நெடிய வழியில் தனி மரம் போல் இன்று உள்ளது.

புறம்: 120

இதுவும் அவனை அவர் பாடியது

வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவல்
கார்ப்பெயல் கலித்த பெரும்பாட்டு ஈரத்துப்
பூமி மயங்கம் பல்உழுது வித்திப்
பல்லி ஆடிய பல்கிளைச் செல்விக்
களைகால் கழாலின் தோடுஒலிபு நந்தி
மென்மயில் புனிற்றுப்பெடை கடுப்ப நீடிக்
கருந்தாள் போகி ஒருங்குபீள் விரிந்து
கீழும் மேலும் எஞ்சாமைப் பலகாய்த்து
வாலிதின் விளைந்த புதுவரகு அரியத்
தினை கொய்யக் கவ்வை கறுப்ப, அவரைக்
கொழுங்கொடி விளர்க்காய் கோட்பத மாக
நிலம்புதைப் பழுநிய மட்டின் தேறல்
புல்வாய்க் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து
நறுநெய்க் கடலை விசைப்பச் சோறட்டுப்
பெருந்தோள் தாலம் பூசல் மேவர
வருந்தா யாணர்த்து நந்துங் கொல்லோ
இரும்பல் கூந்தல் மடந்தையர் தந்தை
ஆடுகழை நாலும் சேட்சிமைப் புலவர்
பாடி யானாப் பண்பின் பகைவர்

ஓடுகலை கம்பலை கண்ட

செருவெஞ் சோய் பெருவிறல் நாடே

இக் கருங்கூந்தல்மகளிரின் தந்தையின் நாடு உயர்ந்த கோடுகள் உடையது. வீரக் கழல்கள் ஒலி எங்கும் கேட்கும். பலவர் போற்றும் இயல்பினன் எம் பாரி. வரகு, தினை, எள், அவரை, எங்கும் அறுவடை நடக்கும். மலை நாட்டவர் வருவார்க்கு மதுக் கொடுப்பர். நெய்யில் கடலை வறுத்துச் சோறாக்கி உண்ணத் தருவர். இவ்வாறெல்லாம் முன்னர் இருந்த பறம்பு, புதுவருவாயும் இனிக் கெட்டுவிடும் போலும்!

புறம்: 121

மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது. இவன் திருக்கோவலூர் நாட்டின் வேந்தன் காரிக் குதிரை இவனது பட்டத்துக் குதிரை. அதில் ஏறிப் போரிடுவதில் வல்லவன்.

ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்

பலரும் வருவர் பரிசின் மாக்கள்

வரிசை அறிதலோ அரிதே பெரிதும்

ஈதல் எளிதே மாவண் தோன்றல்

அதுநற்கு அறிந்தனை யாயின்

பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே

வள்ளன்மையில் சிறந்தவனே! உன் ஒருவனை நினைந்தே பரிசிலர் வருவர். அவர் தகுதியை அளவிட்டு அறிதல் இயலாது. உனக்கு வழங்குவது எளிய செயல். புலவர்களிடத்துப் பொது நோக்கம் கொள்ளாது தகுதிக்குத் தக்கவாறு வழங்குவாயாக!

புறம்: 122

மலையமான் திருமுடிக் காரியைக் கபிலர் பாடியது.

கடல்கொளப் படாஅது உடலுநர் ஊக்கார்
கழல்புனை திருந்தடிக் காரிநின் னாடே!
அழல்புறம் தரூஉம் அந்தண ரதுவே
வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவருள் ஒருவன் துப்பா கியர் என
ஏத்தினர் தரூஉங் கூழே நும்குடி
வாழ்த்தினர் வரூஉம் இரவல ரதுவே!
வடமீன் புரையும் கற்பின் மடமொழி
அரிவை தோள் அளவு அல்லதை
நினதுஎன இலைநீ பெருமிதத் தையே!

கடல் கொள்ளவோ, பகைவர் கொள்ளவோ முடியாதது காரியின் நாடு. அது முழுவதும் செந்தண்மை பூண்ட அந்தணர்க்குரியது. மூவேந்தருள் ஒருவர்க்குத் துணையாக நின்று பெற்ற பரிசினைப் பரிசிலர்க்கு வழங்கியவன் நீ. கற்பிற் சிறந்த மனைவியை மட்டும் உடையவன் நீ. நின் பெருமிதம் வாழ்வதாகுக.

புறம்: 123

காரியைக் கபிலர் பாடியது. பாடாண் திணை, இயன்மொழித் துறை.

நாட்கள் உண்டு நாள்மகிழ் மகிழின்
யார்க்கும் எளிதே தேர்ஈ தல்லே!
தொலையா நல்லிசை விளங்கு மலையன்

மகிழாது ஈத்த இழையணி நெடுந்தேர்

பயன்கெழு முள்ளூர் மீமிசைப்

பட்ட மாரி உறையினும் பலவே!

மதுவுண்டு மயங்கினோர் நாளோலக்கத்தில் மகிழ்வுடன் இருக்கும்போது, தேரையும் அறியாது வழங்கி விடுவர். ஆனால் காரியோ மதுமயக்கம் இன்றியே முள்ளூர் மலையில் வீழும் மழைத்துளியினும் பலவாய்த் தேர்களை வழங்குகிறான்.

புறம்: 124

இதுவும் மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது.

வாளன்று போகிப் புள் இடைத் தட்பப்

பதன் அன்று புக்குத் திறன் அன்று மொழியினும்

வறிது பெயர்குநர் அல்லர் நெறிகொளப்

பாடாஅன்று இரங்கும் அருவிப்

பீடுகெழு மலையன் பாடி யோரே!

நாளும் நல்ல நாளன்று. புள் நிமித்தமும் தீதாகத் தோன்றும். சந்திக்கும் சமயமும் சரியன்று. இவ்வாறு சென்றும் முள்ளூர் மலைக்குரிய காரியைக் கண்டு பாடி வருவோர் வெறுங்கையோடு திரும்பார். அவன் வள்ளன்மை அத்துணை பெரிது.

புறம்: 143

வையாவிக் கோப்பெரும் பேகனைக் கபிலர் பாடியது.

மலைவான் கொள்கஎன உயிர்ப்பலி தூஉய்

மாரி ஆன்று மழைமேக்கு உயர்க எனக்

கடவுள் பேணிய குறவர் மாக்கள்

பெயல்கண் மாறிய உவகையர் சாரல்
புனத்தினை அயிலும் நாட! சினப்போர்க்
கைவள் ஈகைக் கடுமான் பேக!
யார்கொல் அளியர் தானே நெருநல்
சுரன் உழந்து வருந்திய ஒக்கல் பசித்தெனக்
குணில்பாய் முரசின் இரங்கும் அருவி
நளி இருஞ் சிலம்பின் சீறூர் ஆங்கண்
வாயில் தோன்றி வாழ்த்தி நின்று
நின்னும்நின் மலையும் பாட இன்னாது
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைய விம்மிக்
குழல்இனை வதுபோல் அழுதனள் பெரிதே.

மழை பெறவும், பெருமழை பெய்தலை நிறுத்தவும் குறக்குடியினர் தெய்வம் வாழ்த்துவர். வெல்போர் வண்கைப் பேகனே! நேற்று ஒரு சிற்றூரில் என் சுற்றத்துடன் நின்னையும், நின் மலையையும் பற்றிப் பாடினேன். அப்போது கண்ணீர் இடையறாது சோரப் பொருமிக் குழல் இளைவது போல் அழுதனள் ஒருத்தி. (கண்ணகி) யாவளோ அவன்? எம்மினும் அவளுக்கு முதலில் நீ அருள வேண்டும்.

புறம்: 200

சிற்றரசர்களுள் ஒருவனான இளவிச்சிக் கோவைக் கபிலர் பாடியது. பாரி மகளிரை மணம் செய்து கொள்ளக் கபிலர் வேண்டினார். சேரமான் குட்டக்கோச் சேரல் இரும்பொறையால் வெல்லப்பட்டவன் இவன்.

பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனி கவர்ந்து உண்ட கருவிரல் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்து சேண் விளங்கி
மழைமிசை அறியா மால்வரை அடுக்கத்துக்
கழைமிசைத் துஞ்சும் கல்லக வெற்ப!
நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவல்
களங்கொண்டு கனலும் கடுங்கண் யானை
விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே!
இவரே, பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும்பு இருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்துஓங்கு சிறப்பின் பாரிமகளிர்!
யானே, பரிசிலன் மன்னும் அந்தணன், நீயே
வரிசையில் வணக்கும் வாண்மேம் படுநன்
நினக்குயான் கொடுப்பக் கொண்மதி சினப்போர்
அடங்கா மன்னரை அடக்கும்
மடங்கா விளையுள் நாடுகிழ வோனே!

பலாக்கனி உண்ட கடுவன், மந்தியுடன் மலை முகட்டில் மூங்கிலுச்சியில் துயிலும் வளம் நிறைந்த நாடனே!

நெடுவேலும் யானையும் உடையவனே! விச்சிக் கோவே! கொடி முல்லை, பாடிப் பரிசில் பெறாதாயினும் 'கொள்க' எனச் சொல்லித் தேரையே தந்து புகழ்பெற்ற வள்ளல் பாரியின் மக்கள்

இவர்கள். யான் பரிசிலன்; மேலும் அந்தணன். மாற்றாரை அடக்கும் ஆற்றல் வாய்ந்தவனே! இவரை நினக்குத் தருகிறேன். மனைவியராக ஏற்று, மணங் கொண்டு வாழ்வாயாக!

புறம்: 201

இருங்கோ வேளைக் கபிலர் பாடியது. இவன் 'புலிகடிமால்' எனப் பெயர் பெற்றவன். ஒரு பெரியவருக்காகப் புலியைக் கொன்றவன். இவன் பாரி மகளிரை மணக்க இசையாதவன். கபிலரால் வெறுக்கப்பட்டவன்.

இவர்யார் என்குவை யாயின், இவரே
ஊருடன் இரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசை
படுமணி யானைப் பறம்பின் கோமான்
நெடுமாப் பாரி மகளிர்! யானே
தந்தை தோழன் இவர்என் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே.
நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்பு புனைந்து இயற்றிய சேணெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே! விறல் போர் அண்ணல்!
தாரணி யானை சேட்டிருங் கோவே!
ஆண்கடன் உடைமையின் பாண்கடன் ஆற்றிய
ஒலியல் கண்ணிப் புலிகடி மாஅல்

யான்தர இவரைக் கொண்மதி, வான்கவித்து

இருங்கடல் உடுத்தஇவ் வையகத்து அருந்திறல்

பொன்படு மால்வரைக் கிழவ! வென்வேல்

உடலுநர் உட்கும் தானைக்

கெடல்அருங் குரைய நாடுகிழ வோயே!

ஊர் அனைத்தும் இரவலர்க்கு வழங்கியவன். தேரையே முல்லைக் கொடிக்குத் தந்தவன். புகழும், களிற்றுப் படையும் உடையவன், பறம்பிற் கோமான் பாரி. இவன் பாரியின் மகளிர். யான் அந்தணன், புலவன். இவர் தந்தையின் தோழன் யான். ஆதலின் இவர் என் மகளிரே!

வடபால், துவரை மாநகரை யாண்ட நாற்பத் தொன்பதுதலைமுறையாக வந்த வேளிருள் வேள்! பாணர்க்கு உதவும் புலிகடிமாலே! பொன்படு மால்வரை யோனே! இவரை உனக்கு மணம் முடித்துத் தருவேன்! மணந்து கொண்டு வாழ்வாயாக!

புறம்: 202

இருங்கோவேள் பாரி மகளிரைக் கொள்ளாது மறுத்த போது கபிலர் பாடியது.

வெட்சிக் கானத்து வேட்டுவர் ஆட்டக்

கட்சி காணா கடமா நல்வேறு

கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக்

கடிய கதழும் நெடுவரைப் படப்பை

வென்றி நிலைஇய விழுப்புகழ் ஒன்றி

இருபால் பெயரிய உருகெழு மூதூர்க்

கோடி பல அடுக்கிய பொருள்நுமக்கு உதவிய
நீடுநிலை அரையத்துக் கேடும் கேள் இனி
நுந்தை தாயம் நிறைவுற எய்திய
ஒலியல் கண்ணிப் புலிகடி மாஅல்!
நும்போல் அறிவின் நுமருள் ஒருவன்
புகழ்ந்த செய்யுள் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே இயல்தேர் அண்ணல்
எவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றிவர்
கைவண் பாரி மகளிர் என்றவென்
தேற்றாப் புன்சொல் நோற்றிசின் பெரும!
விடுத்தனென் வெலீஇயர்நின் வேலே அடுக்கத்து
அரும்புஅற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட்குஒள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறம் கடுக்கும்
பெருங்கல் வைப்பின் நாடுகிழ வோயே!

உன் முன்னோரின் சிற்றரையம், பேரரையம் என்னும் பழைய ஊர்கள் புலவர் கழாஅத் தலையாரை இகழ்ந்ததால் கேடுற்று அழிந்தன. புலிகடிமாலே! இவர் எவ்வி வேளின் பழைய குடியிலே சேர்ந்தவராகப் பாரி மகளிர் என்று உன்பாற் சொன்ன, உன்னைத் தெரியாத என் உரையைப் பொறுப்பாயாக! யான் சென்று வருவேன்.

புறம்: 236

வேள் பாரியைக் கபிலர் பாடியது. பாரி இறந்தபின் அவன் மகளிரை இருங்கோவேளிடமும் இளவிச்சிக்கோவிடமும் சென்று மணந்து கொள்ளக் கேட்டும் மறுத்ததால், மகளிரைப் பார்ப்பார் பால் விடுத்து வடக்கிருந்த போது கபிலர் பாடியது.

கலையுணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்
சிலைகெழு குறவர்க்கு அல்குமிசை வாகும்
மலைகெழு நாட மாவண் பாரி
கலந்த கேண்மைக்குஒவ்வாய் நீஎற்
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே
பெருந்தகு சிறப்பின் நட்பிற்கு ஒவ்வாது
ஒருங்குவரல் விடாஅது ஒழிகெனக் கூறி
இணையை ஆதலின் நினக்குமற்றியான்
மேயினேன் அன்மை யானே ஆயினும்
இம்மை போலக் காட்டி உம்மை
இடையில் காட்சி நின்னொடு
உடன்உறைவு ஆக்குக உயர்ந்த பாலே

பெரிய பலாப்பழம்! குரங்கு கிழித்துண்ணும் பலா கிழிந்த முழவு போலக் காட்சி தரும் மலைநாட்டின் வேந்தனே! எனக்கு உதவி செய்து உன்னோடு பழகிய ஆண்டுகளில் 'கலந்த நட்பிற்கு ஒவ்வாதவன் நீ' என்று என்னை வெறுத்தவனாக ஆகிவிட்டாய். உன்னுடன் ஒருங்கு மாய என்னை விடவில்லை. 'இங்கே தவிர்க' எனச் சென்றாய்! இருப்பினும் இங்கிருந்தது போலவே அங்கும்

இடைவிடாது உன்னுடன் இருந்து கண்டு வாழும் நிலையையேனும் தருக.

புறம்: 337

பாரியைக் கபிலர் பாடியது. சோழ வேந்தன்பாடிச் சென்று பாரி மகளிரை வேட்ட போது, பாரி அதனை மறுத்துப் போர்க்கு எழுந்தது பற்றிய பாடல். காஞ்சித்திணை, மகட்பாற் காஞ்சித் துறை.

ஆர்கலி யினனே சோணாட் டண்ணல்
கவிகை மண்ணாள் செல்வ ராயினும்
வாள்வலத்து ஒழியப் பாடிச் சென்றாஅர்
வாறொக் கமலர...
ஈதல் ஆனா இலங்கு தொடித் தடக்கைப்
பாரி பறம்பின் பனிச்சுனை போலக்
காண்டற் கரிய ளாகி மாண்ட
பெண்மை நிறைந்த பொலிவொடு மன்னிய
துகில்விரி கடுப்ப நுடங்கித் தண்ணென
அகிலார் நறும்புகை ஐது சென்றுஅடங்கிய
கபில நெடுநகர்க் கமழும் நாற்றமொடு
மனைச் செறிந்தனளே வாணுதல்! இனியே
அற்றன் றாகலின் தெற்றெனப் போற்றிக்
காய்நெல் கவளம் தீற்றிக் காவுதொறும்
கடுங்கண் யானை காப்பனர் அன்றி
வருத லானார் வேந்தர் தன்னையர்

பொருசமம் கடந்த உருகெழு நெடுவேல்

குருதி பற்றிய வெருவரு தலையர்

மற்று இவர் மறனும் இற்றாற் றெற்றென

யாரா குவர்கொல் தாமே நேரிழை

உருத்த பல்சுணங்கு அணிந்த

மருப்பிள வனமுலை ஞெமுக்கு வோரே!

வீரக் கழல் அணிந்தவன் சோழன். பாணரைப் போலப் பாடி வந்தனன். பாரிமறுத்ததால் போர் மேற்கொண்டு படைகளுக்கு உணவூட்டிக் காடுகளில் முற்றுகையிட்டனர். இவளின் அண்ணன் மாரோ பெருஞ்சமர் வென்றவர். குருதி தோய்ந்த வேலைக் கொண்டவர். என்னே, இவர் வீரம் இருந்தவாறு! பெண் கேட்டு வருபவரோடெல்லாம் மறுத்துப் போர் செய்தால், இவளை மணம் புரிய வருபவர் தாம் யாரோ? தெளிவாகக் கூறுக!

புறம்: 347

இதுவும் கபிலர் பாரியை முன்னிட்டுப் பாடியது.

உண்போன் தான்நறுங் கள்ளின் இடைச்சில

நாஇடைப் பஃறேர்பு கோலச் சிவந்த

ஒளிறுஒள் வாள்அடக் குழைந்த பைந் தும்பை

எறிந்து இலை முறிந்த கதுவாய் வேலின்

மணநாறு மார்பின் மறப்போர் அகுதை

குண்டுநீர் வரைப்பின் கூடல் அன்ன

குவை இருங் கூந்தல் வருமுலை சேப்ப...

என்னா வதுகொல் தானே....

விளங்குறு பராரைய வாயினும் வேந்தர்

வினைநவில் யானை பிணிப்ப

வேர்துனங் கினநம் ஊருள் மரனே!

இறைச்சியும், மதுவும் உண்பான் ஒருவன், பல்லில் சிக்கிய துணுக்கை நாவல் துழாவி எடுத்தனன். அதனால் நாவும் சிவந்தது! வெம்போர் செய்து வெற்றி பெற்றவன் அகுதை மன்னன்! அவன் தலைநகர் கூடல் நகர்க் கண் உள்ள ஆழ்ந்த நீர்நிலைகளைப் போல் கருத்தடர்ந்த கூந்தலை உடையவள் இவள். இவளை மணம் புரி பவன் யாரோ? தந்தையும் மகட்கொடை கேட்டு வந்தவன் மேல் போர் தொடுத்தான். நம்மூர் மரங்கள் வலுவுள்ள தாயினும், யானைகள் கட்டுதலால் வேர் கிளம்பினவே! என்னாகுமோ இனி.''

18. காக்கை பாடினியார் நச்செள்ளையார்

புறம்: 278

இவர் ஈரோட்டின் தென்பால் உள்ள சிவகிரிக்கு அருகில் உள்ள காகம் என்ற ஊரைச் சார்ந்தவர். செள்ளை என்பது பெண்பாலார் சிறப்புப் பெயர்! செள்ளாயி என்ற கொங்கு வழக்குச் சொல்லைக் காண்க. ஆடு கோட்பாட்டுச் சேரலாதனைப் பதிற்றுப் பத்துள் ஆறாம் பத்தில் பாடியுள்ளார். அதற்காக ஒன்பது துலாம் பொன்னும், நூறாயிரம் பொற்காசுப் பரிசும் பெற்றவர். பாடினி - பாடுபவள், காக்கை கரைவதனைப் பாடியதால் (குறுந்: 210) இவர் இப்பெயர் பெற்றார் என்றும் கூறுவர். 'காக்கை பாடினியம்' என்ற செய்யுள் இலக்கண நூலும் செய்தவர் இவர். இவர் சிறப்புக் கருதியும் இவ்வூர் (காகம்) தோன்றியிருக்கலாம்.

நரம்பெழுந்து உலறிய நிரம்பா மென்றோள்

முளரி மருங்கின் முதியோள் சிறுவன்

படையழிந்து மாறினன் என்றுபலர் கூற

மண்டமர்க்கு உடைந்தனை ஆயின் உண்டவென்

முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்

கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்

செங்களம் துழவுவோள் சிதைந்துவே றாகிய

படுமகன் கிடக்கை காணூஉ

ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே!

நரம்புகள் புடைத்துத்தோன்ற, வற்றி உலர்ந்த தோள்களும், தாமரை இலை போல் வற்றிய அடிவயிறும் உடைய முதிய தாய் ஒருத்தி, 'உன் மகன் போரிலே புறங்கொடுத்து ஓடினன்' என்று அறியாதார் பலரும் வந்து கூறக் கேட்டு, மனம் கொதிப்படைந்தாள். 'அவ்வாறு என் மகன் புறங்கொடுத் திருந்தால் அவனுக்குப் பாலூட்டி வளர்த்த என் முலையையே அறுத்தெறிவேன்' என்று வஞ்சினம் கூறிப் போர்க்களம் சென்று, கையில் வாளும் கொண்டவளாகப் பிணக்குவியலைத் தேடினாள். அங்கே ஒருபால் அச் செங்களத்திலே சிதைந்து வேறாகி வீழ்ந்து கிடந்த மகனைக் கண்டாள். அவனைப் பெற்ற போது பெற்ற மகிழ்ச்சியை விடப் பெரிதும் பெற்றாள்.

19. காரி கிழார்

புறம்: 6

இவர் கொங்கு நாட்டின் சேலம் மாவட்டத்தில் தென்கிழக்கே உள்ள அம்மன் கோயில்பட்டி என்னும் காரியூரைச் சேர்ந்தவர். அம்மன் கோயில் பட்டியில் கிடைத்த பிராமிக் கல்வெட்டே இதற்குச் சான்று. இவனைத் தொண்டை நாட்டினன் என்று கூறுவதற்குச் சான்றில்லை. இவரைக் கோகூர்க் கிழார் என்றும் கூறுவர்.

பாண்டியன் பல் யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியை இக்காரி கிழார் பாடியுள்ளார். குமரி மலையும், பஃறுளி ஆறும் தெற்கில் இருந்த பொழுது இவரைக் காரி கிழார் பாடியுள்ளார். கி.மு. ஐயாயிரத்துக்கும் முந்திய பாடல் இது!

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்

தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்

குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்

குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்

கீழது,

முப்புணர் அடுக்கிய முறைமுதல் கட்டின்

நீர்நிலை நிவப்பின் கீழும், மேலது

ஆனிலை உலகத் தானும், ஆனாது

உருவும் புகழும் ஆகி, விரிசீர்த்

தெரிகோல் ஞமன்ன் போல, ஒருதிறம்

பற்றல் இலீயரோ நிற்றிறம் சிறக்க!

செய்வினைக்கு எதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்

கடற்படை குளிர்ப்ப மண்டி அடர்புகர்ச்

சிறுகண் யானை செவ்விதின் ஏவிப்

பாசவற் படப்பை ஆர்எயில் பலதந்து

அவ்வெயில் கொண்ட செய்வுறு நன்கலம்

பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கிப்

பணியிய ரத்தைநின் குடையே! முனிவர்

முக்கண் செல்வர் நகர்வலம் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி! சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே
வாடுக இறைவநின் கண்ணி! ஒன்னார்
நாடுசுடு கமழ் புகை எறித்த லானே!
செலீயிய ரத்தைநின் வெகுளி வால்இழை
மங்கையர் துளித்த வாள்முகத்து எதிரே
ஆங்க,
வென்றி எல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா ஈகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னுக பெருமநீ நிலமிசை யானே!

இமயமே வடவெல்லையாகவும், குமரிக் கோடே தென் எல்லையாகவும், கீழ் பாற்கடல் கிழக்கெல்லையாகவும், மேல் கடல் மேற்கெல்லையாக அமைந்தது, இவன் நாடு. இப்பெருநாட்டின் அரசன் இவன் நிலம், வான், பாதாளம், சுவர்க்கம் (ஆனிலை) எல்லாம் பரவிய புகழ் உடையவன்.

நின் அறம் தழைக்க! படைகுடி சிறக்க! பகை அழித்து, பரிசிலர்க்கு வழங்கும் வள்ளல் நீ! முக்கண்ணன் (சிவன்) கோயிலை வலம் வரும் போது மட்டும் உன் தலை தாழ்ந்து வணங்கும். மறையாளர் வாழ்த்தும் போது உன் தலை தாழ்க! நின் சினம் நின் தேவியர் புன்சிரிப்பால் தவிர்க. வெற்றி பல பெற்றும் அடக்கத்துடன் இருப்பவனே! குடுமியே! தண் கதிர் நிலவு போலும் வெங்கதிர் ஞாயிறு போலும் நீ நிலை பெறுக!

20. குட்டுவன் கீரன்

புறம்: 240

வேள் ஆய் என்னும் கடை எழு வள்ளலுள் ஒருவனைக் குட்டுவன் கீரனார் பாடியது. குட்டுவன் என்பது குடிப் பெயர். கீரன் மரபினர் சங்கறுக்கும் தொழிலை உடையவர் என்று கூறுவார்கள். ஆனால் கொங்கு நாட்டில் கீரன் கூட்டம் என்ற ஒரு கூட்டப் பிரிவினரே பண்டு முதல் இருந்து வருகிறார்கள். கீரன் என்பது கீரை என்றும் வழங்கப்பட்டு வருகிறது கீரன் - வேளாண் குடியினர்.

ஆய் வேள் இறந்த பின்னும் அவனை இப்புலவர் பாடியுள்ளார். ஆதலின் அந்நாள் வரை வாழ்ந்தவர் இவர் என அறிக!

திணை: பொதுவியல்; துறை: கையறு நிலை.

ஆடுநடைப் புரவியும் களிறும் தேரும்

வாடா யாணர் நாடும் ஊரும்

பாடுநர்க்கு அருகா ஆஅய் அண்டிரன்

கோடேந்து அல்குல் குறுந்தொடி மகளிரொடு

காலன் என்றும் கண்ணிலி உய்ப்ப

மேலோர் உலகம் எய்தினன் எனாஅப்

பொத்த அறையுள் போழ்வாய்க் கூகை

சுட்டுக் குவியெனச் செத்தோர்ப் பயிரும்

கள்ளியம் பறந்தலை ஒருசிறை அல்கி

ஒள்ளெரி நைப்ப உடம்பு மாய்ந்தது

புல்லென் கண்ணர் புரவலர்க் காணாது

கல்லென் சுற்றமொடு கையழிந்து புலவர்

வாடிய பசியர் ஆகிப்பிறர்

நாடுபடு செலவினர் ஆயினர் இனியே!

போர்க் குதிரைகள், யானைகள், தேர்கள், நாடு, ஊர்கள் ஆகியவற்றை மகிழ்வுடன் அளித்தவன் ஆய் அண்டிரன். அவனையும் அவன் களிரையும் கண்ணோட்ட மில்லாத கூற்றுவன் தேவருலகுக்குக் கொண்டு போயினன்; அவன் உடம்பும் பேராந்தை அலரும் 'சுட்டுக் குவி' என்னும் செத்தாரைக் கூவும் கள்ளிப் புறங்காட்டில் ஈமத் தீச்சுட மாய்ந்து விட்டது. புலவர்கள் கண்ணீரோடும், சுற்றத்தோடும் அழுது, பசி வாட்டுதலான் வேற்று நாடுகள் நோக்கிச் செல்லவும் தொடங்கி விட்டனர்.

21. குடவாயில் கீரத்தனார்

புறம்: 242

குடவாயில் என்பது திருப்பூருக்குக் கிழக்கேயுள்ள கொடுவாய் என்னும் ஊரே ஆகும். இவ்வூரில் கிடைத்த கல்வெட்டு ஒன்று கொடுவாயைக் குடவாயில் என்றே கூறுகிறது. இவரும் கீரன் அல்லது கீரை கூட்டத்தைச் சேர்ந்தவராகலாம். இவரைக் குடவாயில் நல்லாதனார் என்றும் குறிப்பர். குடவாயில் (குட வாசல்) சோனாட்டு ஊர் என்றும் குறிப்பிடுவர்.

முடிமன்னர் மூவராலும், நன்னனாலும் இப்புலவர் ஆதரிக்கப் பெற்றவர்.

பெருந்துறைக்கு அருகில் இருந்த ஒல்லையூரில் (இன்று ஓலையூர், ஓலைப்பாளையம் என்று மருவி வழங்குகிறது.) வேளாண் குடியில் பிறந்தவர் பெருஞ்சாத்தன். சாத்தன், கீரன் என்பது கொங்கு வேளிர் மரபின் கூட்டங்களாகும்.

திணை: பொதுவியல்; துறை: கையறு நிலை.

இளையோர்சூடார் வளையோர் கொய்யார்

நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்

பாணன் சூடான் பாடினி அணியாள்

ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த

வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை

முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே!

ஒல்லையூர்நாட்டகத்தே இளைய பருவத்தினர் கண்ணி சூடார்; மங்கல மகளிர் மலர் கொய்யார், பாணனும் மலர் சூடான். பாடினியும் மலர்அணியாள்; வலிய வேலோனான சாத்தன் இறந்ததனால் இவ்வாறு யாவருமே மலர்சூடாராக இருந்தும், முல்லைக் கொடியே நீ மட்டும் பூப்பாயோ?

22. குன்றூர்க் கிழார் மகனார் கண்ணத்தனார்

புறம்: 338

இக்குன்றூர் சங்ககிரி மலையைக் குறிக்கும் அல்லது பெருந்துறைக்கு மேற்கில் உள்ள குன்னத்தூரையும் குறிக்கும். அவ்வூர் உழவர் குடியில் தோன்றியோன் மகன் கண்ணத்தனார் என்பவர். இவர் கண்ணங் கூட்ட மரபினராக இருக்கலாம்.

திணை: காஞ்சி; துறை: மகட்பாற் காஞ்சி

ஏர்பரந்த வயல் நீர்பரந்த செறுவின்

நெல்மலிந்த மனைப் பொன்மலிந்த மறுகில்

படுவண்டு ஆர்க்கும் பன்மலர்க் காவின்

நெடுவேள் ஆதன் போந்தை யன்ன

பெருஞ்சீர் அருங்கொண் டியளே கருஞ்சினை

வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும்

மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்

கொற்ற வேந்தர் வரினும் தன்தக

வணங்கார்க்கு ஈகுவன் அல்லன்வண் தோட்டுப்

பிணங்குகதிர்க் கழனி நாப்பண் ஏமுற்று

உணங்குகலன் ஆழியின் தோன்றும்

ஓர்எயில் மன்னன் ஒருமட மகளே!

முற்றிய கதிர்கள் நிறைந்த விளை வயல்களின் நடுவே, கம்பீரமாகக் கடல் நடுவே தோன்றும் மரக்கலம் போன்ற அரண்மனைக்கு உரிய மன்னனின் மகள் இவள்! ஏரும் நீரும் நிறைந்த வயல்கள், நெல் மலிந்த மனைகள், அழகு நிறைந்த தெருக்கள், வண்டு பாடும் பூங்காக்கள் உடைய ஊரினள்.

நெடுவேள் ஆதனின் போந்தை (பெருந்துறை என்றும் கூறுவர்) நகரைப் போன்று பெருஞ்சீரும், பொருளும் உடையவள். அவளை விரும்பி வருவோர் வேம்பு, ஆர், போந்தை (பனை) சூடிய மூவேந்தரே யாயினும் மற்ற கொற்ற வேந்தரே யாயினும் தன் தகுதிக்கு ஏற்ப வணங்கிக் கேட்டாலன்றி, இவன் தந்தை இவளை அவர்க்கும் தருவானல்லன். தந்தையின் ஊர் வலமும், மறமும் மகட்கும் உடையதாகச் சொல்லப்பட்டது. மூவேந்தர்க்கு தாரானாயின் நீ எம்மட்டோ? என்றது இது.

23. கூடலூர் கிழார்

புறம்: 229

இவர்இன்றைய நீலமலை மாவட்டம் (மாவட்டத்தின் மேற்கு), கூடலூர் பகுதியைச் சேர்ந்தவர்.

கொங்குப் பகுதியில் மேற்கு மலைத் தொடர்ச்சியில் உள்ளது இவ்வூர். இங்கு வாழ்ந்தவர் கூடலூர் கிழார். வான நூலிலும் . கணியக் கலையிலும் தேர்ந்தவர். வானத்திலிருந்து எரிகொள்ளி வீழ்ந்ததைக் கண்டு கோள் நிலை அறிந்து பாடியவர்.

வரலாறு: 'கோச் சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை, இந்த நாளில் துஞ்சுமென அஞ்சி, அவன் துஞ்சிய விடத்துப் பாடியது:

ஆடியல்அழற்குட்டத்து

ஆரிருள் அரையிரவில்

முடப்பனையத்து வேர்முதலாக்

கடைக் குளத்துக் கயங்காயப்

பங்குனி உயரழுவத்துத்

தலைநாண்மீன் நிலைதிரிய

நிலைநாண்மீன் அதனெதிர் ஏர்தரத்

தொன்னாண்மீன் துறைபடியப்

பாசிச் செல்லாது ஊசித் துன்னாது

அளக்கர்த்திணை விளக்காகக்

கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி

ஒருமீன் வீழ்ந்தன்றால் விசும்பி னானே

அதுகண்டு,

யாமும் பிறரும் பல்வே றிரவலர்
பறையிசை அருவி நன்னாட்டுப் பொருநன்
நோயில னாயின் நன்றுமற் றில்லென
அழிந்த நெஞ்சம் மடியுளம் பரப்ப
அஞ்சின மெழுநாள் வந்தன் றின்றே
மைந்துடை யானை கைவைத்துறங்கவும்
திண்பிணி முரசங் கண்கிழித் துருளவும்,
காவல் வெண்குடை கால்பரிந் துலறவும்
காலியற் கலிமாக் கதியின்றி வைகவும்
மேலோ ருலக மெய்தின னாகலின்
ஒண்டொடி மகளிர்க் குறுதுணை யாகித்
தன்துணை ஆயம் மறந்தனன் கொல்லோ?
பகைவர்ப் பிணிக்கும் ஆற்றல் நசையவர்க்கு
அளந்துகொடை யறியா ஈகை
மணிவரை யன்ன மாஅ யோனே!

ஆடு (மேடம்) இராசி (இயல்)யில் கார்த்திகை நாளின் முதற்காலின் கண், முடப்பனை போலும் வடிவுடைய அனுடநாளில் அடியின் வெள்ளி முதலாக, கயமாகிய குளத்தின் வடிவு போலும் வடிவுடைய புனர்பூசத்துக் கடையில் வெள்ளி எல்லையாக விளங்க, முதற் பதினைந்தின் கண் உச்சமாகிய உத்திரம் நிலை மாறுபட, அதற்கு எட்டாம் மீனாகிய மூலம் நேர் எதிர்பட, அந்த உத்தரத்திற்கு முன் செல்லப்பட்ட எட்டாம்

மீனாகிய மிருகசீரிடமாகியது நிற்க, கீழ்த்திசையிலும் செல்லாது, வடதிசையிலும் செல்லாது, கடல் சூழ்ந்த இப்பூமியில் ஓர் எரி (நட்சத்திரம்) மீன் காலிறங்கி விழுந்தது, விசும்பில்!

அது கண்டு யாமும் பிறரும் 'எம் வேந்தன் நோயுடையவனாகாது இருந்தானாயின் 'நன்று' என உள்ளங் கலங்கி அச்சம் கொண்டோம். அவ்வாறு நாங்கள் அஞ்சிய ஏழாவது நாளிலே அவன் வாழ்நாளும் முடிந்தது. பகைவரைப் பிணித்து வெற்றி கொள்ளும் மலை நாட்டு வேந்தன், யானை படுத்துக்கிடக்கவும், முரசம் கண்கிழிந்து இருக்கவும், வெண்குடை சாயவும், பரிகள் இயக்கம் இல்லாமல் இருக்கவும் மேலோர் உலகம் எய்தினன். விரும்பி வந்தவர்க்கு அளந்தறியாதவன். எம்மைத் தான் மறந்தான். அவனுக்குத் துணையாகிய காதல் மகளிரையும் மறந்து விட்டனன் போலும்!

24. சாத்தந்தையார்

புறம்: 80

முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனைப் பொருது வெற்றியுடன் நின்ற சோழன் போர்வைக் கொப்பெரு நற்கிள்ளியைச் சாத்தந்தையார்பாடியது.

இப்புலவர் ஐந்திணை ஐம்பது இயற்றிய கண்ணன் சேந்தனாரின் தந்தையாவார். கொங்கு நாட்டுக் கொடுமணல் இலக்கியத்திலும், ஆங்கு கிடைத்த பிராமிக் கல்வெட்டிலும் இவர் கொங்கு நாட்டினர் என்பது புலனாகிறது. சாத்தந்தை மரபினர். 'உலகுடையான் வெள்ளோடு சாத்தந்தை' என்ற பெரும் மரபில் வந்தவராகக் கூறுவார்கள்.

போர்வைக் கோப்பெரு நற்கிள்ளி, தித்தன் என்னும் சோழன் மகன். தந்தையொடு மாறுபட்டு வெளியேறியவன்.

இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பொதுங் கின்றே, ஒருகால்
வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே!
நல்கினும் நல்கான் ஆயினும் வெல்போர்ப்
போரருந் தித்தன் காண்கதில் அம்ம!
பசித்துப்பணை முயலும் யானை போல
இருதலை ஒசிய எற்றிக்
களம்புகும் மல்லல் கடந்தடு நிலையே!

ஆமூருக்குச் சென்றபோது, வலிவுடைய மல்லனின் மதவலியை முறுக்கி அழித்தாய். ஒரு கால் அவன் மார்பிலும், ஒருகால் அவன் தந்திரங்களைத் தடுத்துப் பின்புறமாக அமைந்து இருந்தது. அவன் ஆற்றலைக் கண்டு மகிழ்ந்தாலும், மகிழாது போனாலும் தித்தனே! இக் காட்சியைப் பாராய்! பசி கொண்ட யானை எதிர்ப்பட்ட மூங்கில் தண்டினை எளிதே ஒடித்துத் தள்ளுவதைப் போலக் களம் புகுந்த மல்லனை நின்மகன் வெல்லும் காட்சியைக் காணாய்!

சாத்தந்தையார்

புறம்: 81

சோழன், போரவைக் கோப்பெரு நற்கிள்ளியை சாத்தந்தையாா பாடியது.

திணை: வாகை; துறை: அரச வாகை

ஆர்ப்புஎழு கடலினும் பெரிது அவன்களிறே
கார்ப்பெயல் உருமின் முழங்கல் ஆனாவே

யார்கொல் அளியர் தாமே ஆர்நாரச்

செறியத் தொடுத்த கண்ணிக்

கவிகை மள்ளன் கைப்பட் டோரே!

கடல் ஆரவாரத்திலும் அவன் படை ஆரவாரம் பெரிது. கார் கால இடி முழக்கினும் அவன் களிறு முழக்கம் செய்வது. ஆத்தி மாலையும் வழங்கும் கொடைக் கையும் உடையவன். அவ் வீரனின் கையால் வீழ்ந்தவரில் எவர்தாம் இரங்கத்தக்க நிலையில் இல்லாது போயினர்!

சாத்தந்தையார்

புறம்: 82

சோழன் போர்வைக் கோப்பெருஞ் சோழனைச் சாத்தந்தையார் பாடியது.

திணை: வாகை; துறை: அரச வாகை

சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ
ஊர்கொள வந்த பொருநனொடு
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே!

ஊரிலே விழா! அதற்குப் போக வேண்டும். மனைவிக்குப் பேறு காலம்! அவளுக்கும் சென்று உதவ வேண்டும். மாலை வேளை, மழையும் பெய்து கொண்டிருக்கிறது. கட்டிலைக் கட்டிக் கொண்டிருக்கிற அத் தொழில் வல்லான் கை ஊசி எவ்வளவு வேகமாக வாரைச் செலுத்துமோ அவ்வளவு விரைவிலே

முடிந்தது, இந் நெடுந்தகையின் ஊரைக் கொள்ள எண்ணி வந்த வீரனுடன் இவன் நடத்திய பெரும்போர்!

சாத்தந்தையார்

புறம்: 287

சாத்தந்தையார் குறிப்பு முன்னர் கூறப்பட்டது. பாடப்பட்டோர் பெயர் தெரிந்திலது!

திணை: கரந்தை; துறை: நீண்மொழித் துறை

துடி எறியும் புலைய!

எறிகோள் கொள்ளும் இழிசின!

கால மாரியின் அம்பு தைப்பினும்

வயல் கெண்டையின் வேல் பிறழினும்

பொலம்புனை ஓடை அண்ணல் யானை

இலங்குவான் மருப்பின் நுதிமடுத்து ஊன்றினும்

ஓடல் செல்லாப் பீடுடை யாளர்

நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை

நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதற் புரளும்

தண்ணடை பெறுதல் யாவது படினே

மாசில் மகளிர் மன்றல் நன்றும்

உயர்நிலை உலகத்து நுகர்ப, அதனால்

வம்ப வேந்தன் தானை

இம்பர் நின்றும் காண்டிரோ வரவே.

துடி அடிப்பவனே! எறிகோல் வீசுவோனே! கேண்மின்! கார் கால மழை போல அம்புகள் வந்து தைப்பினும், வயலின் கெண்டை மீன்களைப் போல வேல்கள் மார்பிலே பாய்ந்து கிடந்தாலும் பட்டம் கட்டிய யானையானது தன் கொம்புகளால் குத்திக் கால்களால் துவைத்தாலும் அஞ்சாத வீரர்கள் இவர்கள்! இவர்கள் மருத நில ஊர்களைப் பெற்று வாழ்வதினும், போரிலே வீழ்ந்து வீர சுவர்க்கம் எய்துவதே சிறந்தது என்று எண்ணும் பெற்றியர். இவர்கள் போரிடப் போகின்றனர்; அதோ பகைப் படையும் வந்து கொண்டிருக்கிறது. இங்கிருந்தே அதன் வரவைக் காணலாம் வா!

25. நரிவெரூஉத் தலையார்

புறம்: 5

இவர், நரிவெருவிப் பாளையம் என்றும் நரிப்பாளையம் என்றும் வழங்கப்பட்டு வரும், கொங்கு நாட்டின் காஞ்சிக் கூவலுக்கு மேற்கில் உள்ளதோர் சிற்றூரினர்

நரியே அச்சப்படும் தலைமயிர் உடையவர் என்றும் இவர் உடம்பு தோற்றப் பொலிவின்றி நோயுற்ற போது சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை இவருக்கு உதவி நோய் தீர்த்தார் என்னும் கூறுவர்.

திணை: பாடாண்; துறை: செவியறிவுறூஉ

எருமை யன்ன கருங்கல் இடைதொறு
ஆனிற் பரக்கும் யானைய முன்பின்
கானக நாடனை நீயோ பெரும!
நீயோர் ஆகலின், நின்னொன்று மொழிதல்,
அருளும் அன்பும் நீக்கி, நீங்கா
நிரயங் கொள்பவரொடு ஒன்றாது காவல்

குழவி கொள்பவரின் ஓம்புமதி

அளிதோ தானேஅது பெறல் அருங் குறைத்தே.

எருமை போன்ற கரிய பாறைகள் நிறைந்த, மந்தை மந்தையாக யானைகள் உலவும் நாட்டிற்குரிய சேர மன்னனே! நீயோ பெருமகன். ஆகலின் ஒன்று சொல்வேன் கேட்பாயாக! அருளையும், அன்பையும் தம் வாழ்விலிருந்து நீக்கி விட்டவர் நீங்காத துன்பத்தைப் பெறுவர். அத்தகையோர் பால் சேராதிருப்பாயாக! பெற்ற தாய் குழந்தையைப் பேணுவது போல நாட்டைப் பேணிப் பாதுகாத்து வருவாயாக! நாட்டு அரசு எளிதில்வாய்ப்பதன்று! எனவே அருளோடு காவல் நடத்துக!

புறம்: 195

புலவர் குறிப்பு முன்னைய பாடலில்

திணை: பாடாண்; துறை: பொருள் மொழிக் காஞ்சி.

பல்சான் றீரே! பல்சான் றீரே!

கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்

பயனில் மூப்பின் பல்சான் றீரே!

கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்

பிணிக்கும் காலை இரங்குவிர் மாதோ!

நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்

அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்

எல்லாரும் உவப்ப தன்றியும்

நல்லாற்றுப் படூஉம் நெறியுமற் றதுவே.

சிறந்த குணங்கள் பலவும் உடையீர்! மீன் முள் போன்ற நரை முதிர்ந்த கன்னங்களை உடையீர்! பயனற்று முதிரும் மூப்பினையும்

உடையீர்! கடுந்திறலுடன், கூற்றுவன் பாசத்தால் கட்டி இழுத்துச் செல்லும் காலத்தே நீர் உம் நிலைக்கு இரங்குவீர்! நல்வினைகள் செய்ய மாட்டீராயினும் தீவினைகளாவது செய்யாது விலக்குங்கள். உம்மை யாவரும் புகழ்வதற்கும் உம்மை நல்வழியிலே செலுத்தி உய்யுமாறு செய்வதற்கும் அதுவே சிறந்த வழியாகும்.

26. நொச்சி நியமங் கிழார்

புறம்: 293

இக்காலத்தில் நொச்சியூர் என்றும் நொச்சிப் பாளையம் என்றும் வழங்கி வரும் ஊர் பூந்துறை நாட்டின் சிற்றோடைக்கு மேற்கில் உள்ளதோர் ஊர். கருவூருக்குக் கிழக்கில் உள்ள நொச்சியம் என்ற ஊரையும் இவர்தம் ஊராகச் சுட்டுவர் உளர்.

திணை: காஞ்சி; துறை: பூக்கோள் வஞ்சி!

நிறப்புடைக்கு ஒல்கா யானை மேலோன்
குறும்பர்க்கு எறியும் ஏவல் தண்ணுமை
நாண்உடை மாக்கட்கு இரங்கும் ஆயின்
எம்மினும் பேரெழில் இழந்து வினையெனப்
பிறர்மனை புகுவள் கொல்லோ
அளியள் தானே பூவிலைப் பெண்டே!

குத்துக் கோலுக்கும் அமையாது காயும் கொடிய யானையின் மேலிருப்போன், பகைவரை வெல்லக் காஞ்சிப் பூச்சூடி வருமாறு தண்ணுமை ஒலித்தான். அவ்வொலி நாணுடைய மாக்கட்கு இரங்குமாயின், எம் கணவன் போர்க்குச் செல்லப் பூச்சூடாது வருந்தும் எம்மினும், பூ வாங்கு வாரின்றித் தன் எழில்

குன்றியவளாகச் செல்லுகின்றாளே பூவிலைப் பெண்டு! அவட்கு இரங்குக!

எம் வீட்டைப் போன்று பிறர் மனையும் புகுந்து அவள் துயரடைவாளோ? அவள்தான் இரக்கத்திற் குரியவள்!

27. பாரி மகளிர்

புறம்: 112

பாரி ஆண்ட நாடு பறம்பு நாடு என்பதும் அது இக்கால் 'பிரான் மலை' என்று வழங்கப்படுகிறது என்றும் பலரால் கூறப்பட்டு வரும் செய்தி. ஆனால் அது உண்மை இல்லை என்பதும் பாரி ஆண்ட பறம்பு நாடு என்பது கொங்கு நாட்டின் ஒரு பகுதியான ஒடு வங்க நாடு என்பதில் உள்ள பாரியூர்த் தலைநகரும், அதனைச் சார்ந்து மேற்கில் நீண்டு விரிந்து பல தெண்ணீர்ச் சுனைகள், அருவிகள் பல உடையதும்; மூங்கில் நெல், தீஞ்சுனைப் பலா, வள்ளிக்கிழங்கு, தேன் என்னும் உழவுப் பயனின்றி கிடைக்கும் பொருள்கள் நான்கும், மிகுதியாகக் கிடைப்பது என்றும் கூறும் 'பறம்பு' மலை கொங்குப் பகுதியில் உள்ள மலையே யாகும். இது இன்றைய கோபி வட்டத்தின் மேற்கிலும் சத்தியமங்கல வட்டத்திலும் பரந்து அகல நீள உயர வகையில் உள்ளது. பறம்பு மலை வானத்தை ஒக்கும். ஆனால் பிரான் மலை என்று கூறப்படுவது இதுபோல் அகலமும், நீளமும், உயரமும் உடையது அல்ல. இதனினம் மிகச் சிறியது.

பாரியொடு கபிலர் மிக்க தோழமையும் நட்பும் பூண்டிருந்தார். கபிலர்க்குச் சேர மன்னன் என்பான் இன்றைய சேலம் மாவட்டத்திலுள்ள கபிலர் மலையையும் அதில் ஏறிக் கண்ணுக்குத் தெரியும் நிலப்பரப்பையும் புலவர்க்குக் கொடுத்தான் என்பதாலும் கபிலரும் கொங்கு நாட்டில் மிகுதியாக வாழ்ந்தவர் என்பதாலும் அவர் பெயராலே அமைந்த மலை கொங்கு நாட்டுப் பகுதியில்

உள்ளதாலும் கபிலரும் அவரை ஆதரித்த பாரி வள்ளலும் கொங்கு நாட்டினைச் சார்ந்தவர் என்று கல்வெட்டறிஞர் புலவர், முனைவர் செ. இராசு, பேரா. கா.அரங்கசாமி, புலவர் ஐ. இராமசாமி போன்றோர் ஆய்வின் முடிவில் கூறியுள்ளனர். இதற்குக் கல்வெட்டுச் சான்றும் உள்ளது.

மூவேந்தரும், மகட்கொடை மறுத்தலைக் காரணமாகக் கொண்டு புகழ் பூத்த பாரி வேளின் மீது பகை கொண்டு சூழ்ச்சியால் பாரி வேளை மாய்த்தனர். சான்றோராகிய கபிலர் அவன் மகளிரை வேறொரு நல்ல வாய்ப்புள்ள இடத்தே சேர்த்துவிட அழைத்துச் சென்றபோது ஓரிடத்தில் நெடுநாள் தங்கியிருந்தனர். ஒருநாள் இரவு முழு நிலவின் தோற்றத்தைக் கண்டு தன் தந்தையையும், பறம்பையும் நினைந்தவராய்ப் பெரும் கலக்கம் கொண்டு வருந்திப் பாடிய பாடல், இது.

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்

எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்

இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்

வென்றெறி முரசின் வேந்தர்எம்

குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே.

மூவேந்தர் முற்றியிருந்த அற்றைத் திங்களின் வெண்ணிலவில் எந்தையும் உடன் இருந்தார். எம் பறம்பு மலையும் பிறரால் கவரப்படவில்லை. இத் திங்களின் முழு நிலவில் வென்றறைந்த முரசினை உடைய அரசர் எமது பறம்பு மாலையையும் கொண்டார். எம் தந்தையையும் கொன்றார். நாங்கள் இப்பொழுது தந்தையை இழந்தவராக உள்ளோம்.

28. புல்லாற்றூர் எயிற்றியனார்

புறம்: 213

கோப் பெருஞ் சோழன் மக்கள் மேல் சினந்து படை எடுத்துச் சென்றபோது புல்லாற்றூர் எயிற்றியனார் அவனுக்கு அறிவுறுத்தப் பாடியது.

புல்லாற்றூர் என்பது இந்நாளில் சேலம், நாமக்கல் வட்டத்தில் உள்ளதோர் ஊர். ஆற்றூர் என்பது அவ்வூர். ஆத்தூர் என்பது இக்கால வழக்கு எயிற்றியனார் இவ்வூரைச் சார்ந்தவர்.

திணை: வஞ்சி; துறை: துணை வஞ்சி

மண்டு அமர் கடந்த மதனுடை நோன்றாள்
விண்குடை விளக்கும் விறல்கெழு வேந்தே!
பொங்குநீர் உடுத்தஇம் மலர்தலை உலகத்து
நின்றலை வந்தஇருவரை நினைப்பின்
தொன்றுறை துப்பின்நின் பகைஞரும் அல்லர்
அமர்வெங் காட்சியொடு மாறுஎதிர்பு எழுந்தவர்
நினையுங் காலை நீயும் மற்றவர்க்கு
அனையை அல்லை அடுமான் தோன்றல்!
பரந்துபடு நல்லிசை எய்தி மற்றுநீ
உயர்ந்தோர் உலகம் எய்திப் பின்னும்
ஒழித்த தாயம் அவர்க்குரித் தன்றே!
அதனால்,
அன்னது ஆதலும் அறிவோய் நன்றும்

இன்னும் கேண்மதி இசைவெய் யோயே!
நின்ற துப்பொடு நிற்குறித்து எழுந்த
எண்ணில் காட்சி இளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே
அமர்வெஞ் செல்வ! நீ அவர்க்கு உலையின்
இகழுநர் உவப்பப் பழியெஞ் சுவையே!
அதனால்,
ஒழிகதில் அத்தைநின் மறனே, வல்விரைந்து
எழுமதி வாழ்கநின் உள்ளம், அழிந்தோர்க்கு
ஏமம் ஆகும்நின் தாள்நிழல் மயங்காது
செய்தல் வேண்டுமால் நன்றே, வானோர்
அரும்பெறல் உலகத்து ஆன்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே.

வெண்குடை வேந்தே! உன்னோடு போர்க்கு வருபவர் உன் பகைவர் அல்லர். நினைத்துப் பார்த்தால் நீயும் அவர்க்குப் பகைவன் அல்லன்.

பகைவரை அழிக்கும் யானைப் படைத் தலைவனே! இவ்வுலகில் நீ மறைந்த பின் ஆட்சிக்குரியவர் அவரே யன்றோ? அதனை நீயும் அறிந்தவன். இன்னும் கேள்! உன் புதல்வர் தோற்றால் உன் செல்வத்தை யாருக்குத் தரப் போகிறாய். நீ தோற்றால் பழிதான் மிஞ்சும். ஆகவே, நீ உன் முயற்சியை நிறுத்தி விடுக! உன் மறச் செயல் போதுமானது! இனி நற்செயல்களால் புகழ் பெற முயல்க! எழுக கோமானே! வாழ்க நின் புகழ்!

29. பெருங்குன்றூர் கிழார்

புறம்: 147

இப்பெருங்குன்றூர் என்பது சேலம்மாவட்டத்திலுள்ள சங்ககிரி என்றும், திருப்பூரின் வடபால் உள்ள குன்றத்தூர் என்றும், நீலமலை மேல் உள்ள குன்றூர் என்றும்; சேலம், வட ஆர்க்காடு, மாவட்டத்தில் இன்றும் சில குன்றூர்கள் உள்ளதாகத் தெரிய வருகிறது. கிழார் என்பதால் இவர் வேளாண் மரபினர் ஆவார். இவர் கபிலர் பால் மிக்க மதிப்புடையவர். கபிலர் போல வையாவிக் கோப்பெரும் பேகனை இவரும் தெருட்டுகின்றார்.

கன்முழை அருவிப் பன்மலை நீந்திச்

சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்

கார்வான் இன்னுறை தமியள் கேளா

நெருநல் ஒருசிறைப் புலம்புகொண்டு உறையும்

அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை

நெய்யொடு துறந்து மையிருங் கூந்தல்

மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்

புதுமலர் கஞல இன்று பெயரின்

அதுமன்எம் பரிசில் ஆவியர் கோவே!

ஆவியர் கோவே! யாம் செவ்வழிப் பண் இசைத்து வர, கார் மழை போலக் கண்களில் நீர் சோரத் தனித்து நின்று கேட்டனள். தனிமையில் கலங்கிய கண்ணினள். அவள் அழகிய கூந்தலில் பூச்சூடி மகிழும் வண்ணம் இன்றே நீ எழுந்தால், அதுவே எம் பரிசிலாகும். பிற பரிசில் வேண்டேம்!

ஆவியர் குடியில் தோன்றியோன் பேகன். வையாவிக் குளம் என்பது பழனிமலை அடிவாரத்தில் உள்ளது. இப்பகுதியைப்

பண்டு ஆண்டவன் பேகன். கொங்கு மரபின் ஆவியர் குடியினைச் சேர்ந்தவன்.

பெருங்குன்றூர் கிழார்

புறம்: 210

சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது. பெருங்குன்றூர்க் கிழார், பதிற்றுப் பத்தில் ஒன்பதாம் பத்தில். இவ் விரும் பொறையைப் பாடியுள்ளார். அதற்கு முப்பத்தினாயிரம் காணம் பரிசில் பெற்றார். இரும்பொறை என்னும் ஊர் புளியம்பட்டியிலிருந்து அன்னூருக்குச் செல்லும் வழியில் உள்ளது. நீலமலைக் குன்றூரும் (புலவர் ஊர்) இதற்கு அருகிலேயே உள்ளது.

மன்பதை காக்கும்நின் புரைமை நோக்காது
அன்புகண் மாறிய அறனில் காட்சியொடு
நும்ம னோரும் மற்று இனையர் ஆயின்
எம்ம னோர்இவண் பிறவலர் மாதோ
செயிர்தீர் கொள்கை எம்வெங் காதலி
உயிர்சிறிது உடையள் ஆயின் எம்வயின்
உள்ளாது இருத்தலோ அரிதே, அதனால்
அறனில் கூற்றம் திறனின்று துணியப்
பிறனா யினன்கொல் இறீஇயர் என்உயிரென
நுவல்வுறு சிறுமையள் பலபுலந்து உறையும்
இடுக்கண் மனையோள் தீரிய இந்நிலை
விடுத்தேன் வாழியர் குருசில், உதுக்காண்

அவல நெஞ்சமொடு செல்வல்நிற் கறுத்தோர்

அருங்கடி முனையரண் போலப்

பெருங்கை யற்றஎன் புலம்புமுந் துறுத்தே

இறைவனே! மக்களைக் காக்கும் நின் போல் பலரே! உன் போல் அருள் மறந்தனீராயின், எம் போலும் இரவலர் இனி உலகில் இல்லாது போக! எம் மனைவி உயிரோடிருந்தால் என்னை நினையாமல் இருக்க மாட்டாள். 'கூற்றுவன் இறந்தானோ? எம் உயிர் அழிகிறதே' என்று வருந்திக் கூறுபவளின் துயரை இன்றே சென்று துடைக்க வேண்டும். வறுமையை முன் போக விட்டு நான் பின் செல்லுகின்றேன்.

29. பெருங்குன்றூர் கிழார்

புறம்: 211

சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர்க் கிழார் பாடியது.

திணை: பாடாண்; துறை: பரிசில் கடாநிலை.

அஞ்சுவரு மரபின் வெஞ்சினப் புயலேறு

அணங்குடை அரவின் அருந்தலை துமிய

நின்றுகாண் பன்ன நீள்மலை மிளிரக்

குன்றுதூ வெறியும் அரவம் போல

முரசு எழுந்து இரங்கும் தானையொடு தலைச் சென்று

அரைசுபடக் கடக்கும் உரைசால் தோன்றல்நின்

உள்ளிவந்த ஓங்குநிலைப் பரிசிலென்

வள்ளியை ஆதலின் வணங்குவன் இவனெனக்
கொள்ளா மாந்தர் கொடுமை கூறநின்
உள்ளியது முடித்தோய் மன்ற முன்னாள்
கையுள் ளதுபோல் காட்டி வழிநாள்
பொய்யொடு நின்ற புறநிலை வருத்தும்
நாணாய் ஆயினும் நாணக் கூறியென்
நுணங்கு செந்நா வணங்க ஏத்திப்
பாடப் பாடப் பாடு புகழ் கொண்ட நின்
ஆடுகொள் வியன்மார்பு தொழுதனென் பழிச்சிச்
செல்வன் அத்தை யானே வைகலும்
வல்சி இன்மையின் வயின்வயின் மாறி
இல்எலி மடிந்த தொல்சுவர் வரைப்பின்
பாஅல் இன்மையின் பல்பாடு சுவைத்து
முலைக்கோள் மறந்த புதல்வனொடு
மனைத் தொலைந் திருந்தவென் வாணுதல் படர்ந்தே.

புகழ்சால் தோன்றலே! நீ வள்ளல் எமக்குத் தாழ்ந்து பரிசில் நல்குவாய் என உயர்ந்த நோக்குடன் வந்த தகுதிமிக்க பரிசிலன் யான். எம்மை எதிரேற்றுக் கொள்ளா மாந்தர் பற்றியும் கூறினேன். அதனைக் கேட்டு நீ நினைந்ததையே செய்தாய்! முதல் நாள், கையிலே பரிசில் வந்து விட்டது போலக் காட்டினாய். அது பொய்யாகப் போயிற்று. அதற்கு நீ வருந்தவும் இல்லை. உன் புகழ் பலபடப் பாடக் கேட்டு நாணம் கொண்டாய். நான் வறிதே செல்கின்றேன்.

உணவின்றி வருந்தி, சுவரில் எலிப் பொந்துகள் நிறைந்த வீட்டிலே பால் காணாது பால் குடித்தலையே மறந்து விட்ட பிள்ளையுடன் என்னை எதிர்பார்த்து வாடி நிற்பாள் என் மனைவி. நீ வாழ்க!' (இது வஞ்சப் புகழ்ச்சியாகக் கூறிய புலவர் பாடல்.)

பெருங்குன்றூர் கிழார்

புறம் : 266

சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியைப் பெருங்குன்றூர்க்கிழார் பாடியது இச்சோழன் பெரு வளத்தான் தந்தை யாவார். அழுந்தூர் வேளிடைப் பெண் கொண்டவன்.

திணை: பாடாண்; துறை: பரிசில் கடாநிலை

பயங்கெழு மாமழை பெய்யாது மாறிக்
கயங்களி முளியும் கோடை ஆயினும்
புழல்கால் ஆம்பல் அகலடை நீழல்
கதிர்க்கோட்டு நந்தின் சுரிமுக ஏற்றை
நாகிள வளையொடு பகல்மணம் புகூஉம்
நீர்திகழ் கழனி நாடுகெழு பெருவிறல்
வான்தோய் நீள்குடை வயமான் சென்னி
சான்றோர் இருந்த அவையத்து உற்றோன்
ஆசாகு என்னும் பூசல் போல
வல்லே களைமதி அத்தை, உள்ளிய
விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கைப்
பொறிப்புணர் உடம்பின் தோன்றியென்
அறிவுகெட நின்ற நல்கூர் மையே!

வானம் பொய்க்க, கனிகள் வெடிக்கத் தோன்றும் கடுங்கோடையிலும் நீர் வளம் உடைய நாடனே! குதிரையும், குடையும் கொண்ட சென்னியே! அறிவுடையார் அவையிலே அஃது இல்லான் சென்று 'யானுற்ற துயருக்கு நீரே துணை' என்ன, அவர் விரைந்து அத்துயர் தீர்ப்பார். இன்று எமக்கு உடலையும் அறிவையும் வருத்தும் வறுமை மிகுதி. விருந்தினருக்கு உதவும் வகை இல்லேன். அறிவு கெடுக்கும் வறுமையே! நீ என்பால் நில்லாது போவாயாக!

பெருங்குன்றூர் கிழார்

புறம்: 318

பெருங்குன்றூர்க் கிழார் பாடிய பாடல். ஒரு பெருந்தகையின் ஊர் வளம் பாடியது.

திணை: வாகை; துறை: வல்லாண் முல்லை

கொய்யடகு வாடத் தருவிறகு உணங்க
மயிலம் சாயல் மாஅ யோளொடு
பசித்தன்று அம்ம! பெருந்தகை யூரே!
மனையுறை குரீஇக் கறையணற் சேவல்
பாணர் நரம்பின் கதிரொடு வயமான்
குரல்செய் பீலியின் இழைத்த குடம்பைப்
பெருஞ்செய் நெல்லின் அரிசி ஆர்ந்துதன்
புன்புறப் பெடையொடு வதியும்
யாணர்த் தாகும் வேந்துவிழும முறினே!

கொய்த இலைகள் சமைப்பாரற்று வாடி வதங்க, விறகும் கிடந்து காய, நங்கையரோடு மகிழ்ந்துறையும் அப் பெருந்தகையின் ஊர். அவனுக்கு ஒரு துன்பம் என்றால் ஊரே வருந்தும். உலவும் ஊர்க் குருவிச் சேவல், நெல்லரிசியை விளை வயலிலே பெடையொடு உண்டு மனை யிறப்பிலேயுள்ள தன் கூட்டிலே வந்து தங்கி மகிழும்! அது அத்தகு வளஞ்செறிந்த ஊர் என்பதாகும்.

30. வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தன் (அ) வடம வண்ணத்தன் பேரி சாத்தன்

புறம்: 125

சோழன் இராச சூயம் வேட்ட பெருநற் கிள்ளியும், சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறையும் போரிட்டனர். சோழர்க்கு உதவியாய் மலையமான் நின்றனன். அவனை வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடியது!

'வண்ணக்கன் சாத்தன்...' என்பது அறச் சாலையூர் பிராமிக் கல்வெட்டிலே வருந்தொடர். வண்ணக்கம் என்பது தொழிற் பெயர். வண்ணமும் சுண்ணமும் தீட்டுபவராக இருக்கலாம்.. கொங்கு வேளாளக் குடிப் பிரிவில் ஒன்று வண்ணக்கன் கூட்டம் என்பது. எனவே இவர் கொங்கு நாட்டுப் புலவரே ஆவார். பாடப் பட்டவனும் கொங்கு நாட்டினன்.

வாகைத் திணை; அரச வாகைத் துறை.

பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன

நெருப்புச் சினம்தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை

பரூஉக்கண் மண்டையொடு ஊழ்மாறு பெயர

உண்கும் எந்தைநிற் காண்குவந் திசினே

நள்ளாதார் மிடல்சாய்த்த
வல்லாளநின் மகிழ்விருக்கையே
உழுத நோன்பகடு அழிதின் றாங்கு
நல்அமிழ் தாகநீ நயந்துண்ணும் நறவே
குன்றத் தன்ன களிறு பெயரக்
கடந்தட்டு வென்றோனும் நிற்கூ றும்மே!
வெலீஇயோன் இவனெனக்
கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு
விரைந்து வந்து சமந்தாங்கிய
வல்வேல் மலையன் அல்ல னாயின்
நல்லமர் கடத்தல் எளிதுமன் நமக்குஎனத்
தோற்றோன் தானும் நிற்கூ றும்மே!
தொலைஇயோன் இவன்என,
ஒருநீ ஆயினை பெரும! பெருமழைக்கு
இருக்கை சான்ற உயர்மலைத்
திருத்தகு சேஎய்நிற் பெற்றிசி னோர்க்கே

ஊனும் கள்ளும் உண்டு மகிழும் தலைவனே! உழுது வரும் மாடு, வைக்கோலை உண்டு நெல்லைப் பிறர்க்குத் தருவது போலச் செல்வத்தைத் தருபவனே! வென்றவன் வெற்றிக்கு நீயே காரணம், என்றும், தோற்றவனும் 'நீயே அவன் வெற்றிக்குக் காரணம்' என்றும் கூறுவர். இரு திறத்தாரும் நின்னைப் புகழும் புகழுக்குரியவன் நீயே! மலையனே வாழ்க!

31. பெருந்தலைச் சாத்தனார்

புறம்: 151

பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் பெருந்தலை ஊரைச் சேர்ந்தவர். இவ்வூர் கொங்கின் கவுந்தப் பாடிக்கு வடபால் இரண்டு கல் தொலைவில் உள்ளது. இவர் ஆலூர் மூலங்கிழார் மகன் (அக: 224). ஆலூர் என்பது இன்றைய ஆனூர் (காங்கயம் வட்டம்) என்பதும் தந்தையும், மகனும் ஊர் பெயர்ந்துள்ளார்கள் என்பதும் தெரிய வருகிறது. இவரே இளங்குமணனுக்கு அறிவுரை கூறிக் குமணனின் தலை காத்தவர். குமணன் முதிர மலைத் தலைவன்.

விச்சி என்னும் மலைக்குத் தலைவன் விச்சிக்கோ என்பவன். இவன் தம்பி இளவிச்சிக்கோ. இவனுடன் இளங்கண்டீரக்கோ என்னும் இளவரசன் ஒருங்குடன் இருந்தபோது அவனைத் தழுவி, இவனைத் தழுவாமல் இருந்த புலவரை இவன் கேட்க அவர் கூறியது:

பாடாண் திணை; இயன்மொழித் துறை.

பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப

விண்தோய் சிமைய விறல்வரைக் கவாஅன்

கிழவன் சேட்புலம் படரின் இழையணிந்து

புன்றலை மடப்பிடி பரிசிலாகப்

பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்க்

கண்டீரக் கோன் ஆகலின் நன்றும்

முயங்கல் ஆன்றிசின் யானே! பொலந்தேர்

நன்னன் மருகன் அன்றியும், நீயும்

முயங்கற்கு ஒத்தனை மன்னே வயங்குமொழிப்

பாடுநர்க்கு அடைத்த கதவின் ஆடுமழை

அணங்குசால் அடுக்கம் பொழியும் நும்

மணங்கமழ் மால்வரை வரைந்தனர் எமரே!

மலைப் பக்கத்துத் தங் , கணவர் நெடுந்தொலைவு சென்றிருக்கவும் வந்து பாடுவோர்க்குக் களிறும், பரிசும் வழங்கும் பண்புடையவள் கண்டீரக் கோவன் மனைவி. அதனால் கண்டீரக் கோவின் தம்பியைத் தழுவினேன். நீயோ நன்னன் மரபினன் (பெண் கொலை புரிந்த நன்னன்) மேலும் உன்னைத் தழுவலாம் என்றால் எம்போலும் பாடுவார்க்கு அடைத்த கதவு உடையவன். பாடா தொழிந்த நிலையும் உடையது உன் மலை. எனவே யாமும் உன்னைத் தழுவவில்லை.

பெருந்தலைச் சாத்தனார்

புறம்: 165

பெருந்தலைச் சாத்தனார் முதிர மலைத்தலைவன் குமணனைப் பாடியது. முதிரைமலை பழனித் தொடரில் உள்ளதோர் மலை. உடுமலை வட்டத்தில் உள்ளது. கொங்குப் பகுதியைச் சார்ந்தது. புலவரும் கொங்கு நாட்டினரே!

காட்டில் கு^ணன் தந்த வாளை, இளங்குமணனிடம் காட்டிக் கூறியது.

பாடாண் திணை; பரிசில் விடைத் துறை.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்

தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே!

துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்

இன்மையின் இரப்போர்க்கு ஈஇ யாமையின்
தொன்மை மாக்களின் தொடர்புஅறி யாரே!
தாள்தாழ் படுமணி இரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றனென் ஆகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடு இழந்ததனினும் நனிஇன் னாதுஎன
வாள்தந் தனனே தலைஎனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன்று இன்மையின்
ஆடுமலி உவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோன் கண்டே.

இவ்வுலகத்தில் நிலைபெறக் கருதினோர் தம் புகழை இங்கே நிறுத்தி இருந்தனர். ஈயாத பெருஞ்செல்வர் இதனை அறியார். பாவலர்க்கு யானைப் பரிசு கொடுக்கும் தலைவனை நான் பாடி நின்றேன். 'பரிசிலன் வாடிச் செல்லுதல் தான் நாடிழந்ததினும் மிகவும் இன்னாதது' என எண்ணித் தன் தலையை எனக்குத் தருவானாக அவன் வாளை என்னிடம் தந்து கூறினான். இத்தகைய சிறந்த உன் தமையனைக் கண்டு, வெற்றி மிக்க பெருமைகளோடு உன்பால் வந்தேன். இதோ அவ்வாளினைக் காண்பாயாக!

பெருந்தலைச் சாத்தனார்

புறம்: 164

குமணனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது. முதிர மலை உடுமலை வட்டத்தைச் சார்ந்தது.

பாடாண் திணை; பரிசில் கடாநிலைத் துறை

ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி உழவாப்
பாஅ லின்மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறு அழூந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண்என்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண!
என்னிலை அறிந்தனை யாயின் இந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலென் அடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப்பிறந் தோயே

அடுப்பில் காளான் பூத்து விட்டது. பசியால் வருந்திய குழந்தை சுவைக்கும் தோறும் பால் காணாது அழ அதன் முகத்தைப் பார்த்து கண் நீர் நிரம்பி நின்றாள் என் மனைவி. அந்த வருத்தம் தீர உதவுபவன் நீயே! அதனால் உன்பால் வந்தேன். போராற்றலை உடைய குமணனே! கூத்தருக்கு வறுமை நோய் தீர்ப்பவனே! நின்னிடம் பரிசில் பெறாது பேகன்.

பெருந்தலைச் சாத்தனார்

புறம்: 205

கோடை மலைக்குத் தலைவன் கரிய நெடு வேட்டுவன். இவன் வேடர்களின் தலைவன். இக் கோடைமலை பழனியை அடுத்துள்ளது. இன்றைய கோடைக் கானல் மலைப் பகுதி பண்டு கொங்கு நாட்டைச் சேர்ந்திருந்தது.

பாடாண் திணை; பரிசில் துறை

முற்றிய திருவின் மூவ ராயினும்

பெட்பின்றி ஈதல் யாம் வேண்டலமே!

விறல்சினம் தணிந்த விரைபரிப்புரவி

உறுவர் செல்சார்பு ஆகிச் செறுவர்

தாளுளம் தபுத்த வாள்மிகு தானை

வெள்வி வேலிக் கோடைப் பொருந!

சிறியவும் பெரியவும் புழை கெட விலங்கிய

மான்கணம் தொலைச்சிய கடுவிசைக் கதநாய்

நோன்சிலை வேட்டுவ! நோயிலை ஆகுக!

ஆர்கலி யாணர்த் தரீஇய கால்வீழ்த்துக்

கடல்வயிற் குழீஇய அண்ணலங் கொண்மூ

நீரின்றி பெயரா ஆங்குத் தேரொடு

ஒளிறுமருப்பு ஏந்திய செம்மல்

களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே!

மூவேந்தரே யாயினும் எம்மைப் பேணி மதியாது கொடுப்பின் அதனை யாம் வேண்டுவம் அல்லேம். அஞ்சியவர்க்குப் புகலிடமாய், பகைவர்க்கு வலிவுடையவனாக விளங்கும் முல்லை வேலிக் கோடை மலைத் தலைவனே! சின நாயும், வில்லும் ஏந்தியவனே? கடலைச் சார்ந்த முகில்கள் நீர் முகந்தன்று மீளா, அதுபோலப் பரிசிலர் சுற்றம், நீ வழங்கும் கோடு உயர்ந்த களிறும் பரிசுகளும் பெற்றாலன்றிச் செல்லார். அறிவாயாக!

பெருந்தலைச் சாத்தனார்

புறம்: 209

பரிசில் நீட்டித்த மூவன் என்பானைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது.

பாடாண் திணை; பரிசில் கடாநிலைத்துறை.

பொய்கை நாரை போர்வில் சேக்கும்

நெய்தல்அம் கழனி நெல்லரி தொழுவர்

கூம்புவிடு மென்பிணி அவிழ்ந்த ஆம்பல்

அகல்அடை அரியல் மாந்தித் தெண்கடல்

படுதிரை இன்சீர்ப் பாணி தூங்கும்

மென்புல வைப்பின் நன்னாட்டுப் பொருந!

பல்கனி நசைஇ அல்குவிசும்பு உகந்து

பெருமலை விடரகம் சிலம்ப முன்னிப்

பழனுடைப் பெருமரம் தீர்ந்தெனக் கையற்றுப்

பெறாது பெயரும் புள்ளினம் போலநின்

நசைதர வந்துநின் றிசைநுவல் பரிசிலேன்

வறுவியேன் பெயர்கோ வாள்மேம் படுந!

ஈயாய் ஆயினும் இரங்குவேன் அல்லேன்

நோயிலை ஆகமதி பெரும! நம்முள்

குறுநணி காண்குவ தாக நாளும்

நறும்பல் ஒலிவரும் கதுப்பின் தேமொழித்

தெரியிழை மகளிர் பாணி பார்க்கும்

பெருவரை அன்ன மார்பின்

செருவெம் சேஎய்நின் மகிழிருக் கையே!

பொய்கையிலே மேய்ந்த நாரை, போரில் வந்து உறங்கும். நெல்லறுக்கும் உழவர் ஆம்பல் இலையிலே மதுவுண்பர். பெண்டிர் குரவை யாடுவர். அத்தகை வள நாட்டின் தலைவனே! பழமரம் தேடிச் சென்ற பறவையினம், பழமற்ற மரத்தைக் கண்டு வருந்தித் திரும்புவது போல் உன் பரிசில் வேட்டு வந்து வறிதே திரும்புவதோ? வாள் வல்ல மூவனே! எமக்கு எதுவும் தாராயாயினும் நீ நோயின்றி வாழ்க! நம்மிடையே இனியேனும் நெருக்கம் காண்பதாக!

பெருந்தலைச் சாத்தனார்

புறம்: 294

பெருந்தலைச் சாத்தனார், ஒரு வீர மறவனைப் பற்றிப் பாடியது. ஊரும் பெயரும் தெரிந்திலது. தும்பைத் திணை; தானை மறத்துறை.

வெண்குடை மதியம் மேல்நிலாத் திகழ்தரக்

கண்கூடு இறுத்த கடல்மருள் பாசறைக்

குமரிப்படை தழீஇய கூற்றுவினை ஆடவர்
தமர்பிறர் அறியா அமர்மயங்கு அழுவத்து
இறையும் பெயரும் தோற்றி நுமருள்
நாள்முறை தபுத்தீர் வம்மின்! ஈங்கெனப்
போர்மலைந் தொருசிறை நிற்ப யாவரும்
அரவுமிழ் மணியின் குறுகார்
நிரைதார் மார்பினின் கேள்வனைப் பிறரே!

வானத்தில் நிலவு ஒளிவீசிக் கொண்டிருந்தது. கடல் போன்ற பாசறையில் படை மறவர் கூடி இருந்தனர். புது வேலோடு பலர் வந்தனர். அவ்வேளை உன் கணவன் நிரைதார் மார்பினனாக உன் வேந்தனுக்குப் போரிட்டு வெற்றி பெற்றான். மேலும் 'உம்மில் வாழ்நாள் முறை தீர்ந்தவர் யாவரோ, அவரெல்லாம் இங்கே வம்மின்' என்று கூவி அழைத்து நின்றான். நாகத்தின் மணியை எவரும் துணிந்து நெருங்குவதற்கு அஞ்சுவது போல், அவனையும் நெருங்க அஞ்சி நின்றனர் பகை மறவர்.

32. பெருஞ்சித்திரனார்

புறம்: 158

முதிர மலைத் தலைவனான குமணன், தம்பி இளங்குமணன் நாடு பற்றியிருக்க இவர் காடு பற்றி இருந்தனன். அச்சமயத்தில் புலவர் பெருஞ்சித்திரனார் பரிசில் வேண்டத், தன் தலை கொய்து தம்பி கைக் கொடுத்து பொருள் பெற்றுச் செல்லுமாறு வாளை எடுத்துத் தந்தனன். அது கண்டு புலவர் பாடிய பாடல், பாடாண்திணை; வாழ்த்தியல், பரிசில் கடாஅய நிலைத்துறை

முரசுகடிப்பு இகுப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழூஉம்
பறம்பின் கோமான் பாரியும், பிறங்குமிசைக்
கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்,
காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த
மாரி ஈகை மறப்போர் மலையனும்,
ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல்
கூவினங் கண்ணிக் கொடும்பூண் எழினியும்,
ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை
அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகனும், திருந்துமொழி
மோசி பாடிய ஆயும், ஆர்வமற்று
உள்ளி வருநர் உலைவுநனி தீரத்
தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக்
கொள்ளார் ஓட்டிய நள்ளியும், எனவாங்கு
எழுவர் மாய்ந்த பின்றை அழிவரப்
பாடி வருநரும் பிறரும் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்கென விரைந்தவண்
உள்ளி வந்தனென் யானே, விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி

ஆசினிக் கவினிய பலவின் ஆர்வுற்று

முட்புற முதுகனி பெற்ற கடுவன்

துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்

அதிரா யாணர் முதிரத்துக் கிழவ!

இவண்விளங்கு சிறப்பின் இயல்தேர்க் குமண!

இசைமேந் தோன்றிய வண்மையொடு

பகைமேம் படுகநீ ஏந்திய வேலே!

பறம்பின் மலைத் தலைவன் பாரியும், கொல்லிமலை ஆண்ட ஓரியும் காரிக் குதிரை ஊர்ந்த மலையனும், எழினியும், பெருங்கல் நாடன் பேகனும், மோசி பாடிய ஆயும், இரவலர் துயர் தீர்த்த நள்ளியும் ஆகிய எழுவரும் இறந்தனர்.

அவரின்றித் துயர்படும் இரவலரின் வறுமையைப் போக்க நான் உள்ளேன் என்று நீ இருத்தலால் உன்பால் விரைந்து வந்தேன். மலைச்சாரலில் கடுவன் பலாவினைத் தான் உண்பதன்றி மந்தியையும் கையோச்சி அழைக்கும் முதிரமலைத் தலைவனே! குமணனே! உன் வேல் பகைவரை வென்று உயர்வதாக!

புறம்: 159

குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது

வாழு நாளொடு யாண்டுபல உண்மையின்

தீர்தல் செல்லாது என் உயிர்எனப் பலபுலந்து

கோல்கால் ஆகக் குறும்பல ஒதுங்கி

நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்டுயின்று

முன்றிற் போகா முதிர்வினள் யாயும்

பசந்த மேனியொடு படர்அட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள் பெரிது அழிந்து
குப்பைக் கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்து கொண்டு உப்பின்று
நீர்உலை யாக ஏற்றி மோரின்று
அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள் அறம்பழியாத்
துவ்வாள் ஆகிய என்வெய் யோளும்
என்றாங்கு இருவர் நெஞ்சமும் உவப்பக் கானவர்
கரிபுனம் மயக்கிய அகன்கண் கொல்லை
ஐவனம் வித்தி மையுறக் கவினி
ஈனல் செல்லா ஏனற்கு இழுமெனக்
கருவி வானம் தலைஇ யாங்கும்
ஈத்த நின்புகழ் ஏத்தித் தொக்கஎன்
பசிதினத் திரங்கிய ஒக்கலும் உவப்ப
உயர்ந்து ஏந்து மருப்பின் கொள்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென் உவந்துநீ
இன்புற விடுதி யாயின் சிறிது
குன்றியும் கொள்வல் கூர்வேல் குமண!
அதற்பட அருளல் வேண்டுதல் விறல்புகழ்
வசையில் விழுத்திணைப் பிறந்த
இசைமேந் தோன்றல்நிற் பாடிய யானே!

கூரிய வேலை உடைய குமணனே! மூப்படைந்த என் தாய், பிள்ளைகள் பிசைந்து உண்ண மெல்லுதலால் உலர்ந்த மார்புடன் உள்ள என் மனைவி. கீரையின் இளந்தளிரை உப்பின்றி அவித்துத் தின்றும் மாசடைந்த உடையுடன் இருக்கும் என் இல்லாள்!

என் மனைவியும் நானும் விரும்பி உன்னிடம் வந்தோம். நீ விரும்பிச் சிறிது தரினும் நான் மகிழ்வுடன் கொள்வேன். உன்னைப் பாடிய நான் இன்புறுமாறு அருள்வாயாக!

புறம்: 160

குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது

உருகெழு ஞாயிற்று ஒண்கதிர் மிசைந்த
முனிபுல் கானம் குழைப்பக் கல்லென
அதிர்குரல் ஏறொடு துளிசொரிந் தாங்குப்
பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை
அவிழ்புகு அறியா தாகலின் வாடிய
நெறிகொள் வரிக்குடர் குளிப்பத் தண்ணெனக்
குய்கொள் கொழுந்துவை நெய்யுடை அரிசில்
மதிசேர் நாண்மீன் போல நவின்ற
சிறுபொன் நன்கலம் சுற்ற இரீஇக்
கேடின் றாகப் பாடுநர் கடும்பென
அரிதுபெறு பொலங்கலம் எளிதினின் வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே!
செல்குவை யாயின் நல்குவன் பெரிதெனப்

பல்புகழ் நுவலுநர் கூற வல்விரைந்து
உள்ளம் துரப்ப வந்தனென் எள்ளூற்று
இல் உணாத்துறத்தலின் இல்மறைந்து உறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழும் சோறும் கடைஇ ஊழின்
உள்ளில் வருங்கலம் திறந்து அழக் கண்டு
மறப்புலி உரைத்தும் மதியங் காட்டியும்
நொந்தனள் ஆகி நுந்தையை உள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டு எனப் பலவும்
வினவல் ஆனா ளாகி நனவின்
அல்லல் உழப்போள் மல்லல் சிறப்பச்
செல்லாச் செல்வம் மிகுத்தனை வல்லே
விடுதல் வேண்டுவல் அத்தை படுதிரை
நீர்சூழ் நிலவரை உயரநின்
சீர்கெழு விழுப்புகழ் ஏத்துகம் பலவே

நெய்யுடை அடிசிலும் கொளுவிய துவையும் தருபவன். பொன்னா பரணங்கள் தருபவன். பெறுதற்கரிய நண்பரினும் என்னிடம் நட்புப் பாராட்டுபவன். அவனே குமணன்! அவன் பாற் செல்க!

என் வீட்டிலே சோறில்லை. என் புதல்வன் தாயின் மார்பைச் சுவைத்துப் பால் இல்லாததால் அழுவான். சோற்றுப் பானையைத் திறந்து பார்த்து ஒன்றும் இல்லாததால் அழுவான். அவனைப் புலி

வரவு சொல்லி அச்சுறுத்தியும், அம்புலி காட்டியும், அவன் தணியானாக, 'உன் தந்தையை நீ எப்படி' வெறுப்பாய் காட்டு என முகஞ் சுளித்துக் காட்ட, உண்மையிலே வருந்துபவள் என் மனைவி, அவள் வளம் பெற விரைவில் பரிசில் தந்து உதவுக. உன் புகழ் உலகின் எல்லை வரை உயர்வடைய நான் உன்னை வாழ்த்துவேன்.

புறம்: 161

குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது,

நீண்டொலி அழுவம் குறைபட முகந்துகொண்டு
ஈண்டு செலல் கொண்மூ வேண்டுவன் குழீஇப்
பெருமலை யன்ன தோன்றல் சூள் முதிர்பு
உரும் உரறு கருவியொடு பெயல்கடன் இறுத்து
வளமழை மாறிய என்றூழ்க் காலை
மன்பதை யெல்லாம் சென்றுணக் கங்கைக்
கரைபொரு மலிநீர் நிறைந்து தோன்றியாங்கு
எமக்கும் பிறர்க்கும் செம்மலை யாகலின்
அன்பின் ஆடவர் கொன்று ஆறு கவரச்
சென்றுதலை வருந அல்ல அன்பின்று
வன்கலை தெவிட்டும் அருஞ்சுரம் இறந்தோர்க்கு
இற்றை நாளொடும் யாண்டுதலைப் பெயரவெனக்
கண்பொறி போகிய கசிவொடு உரன் அழிந்து
அருந்துயர் உழக்குமென் பெருந்துன் புறுவிநின்
தாள்படு செல்வம் காண்டொறும் மருளப்

பனைமருள் தடக்கையொடு முத்துப்பட முற்றிய
உயர்மருப்பு ஏந்திய வரைமருள் நோன்பகடு
ஒளிதிகழ் ஓடை பொலிய மருங்கில்
படுமணி இரட்ட ஏறிச் செம்மாந்து
செலல்நசைஇ உற்றனென் விறல்மிகு குரிசில்
இன்மை துரப்ப இசைதர வந்துநின்
வன்மையின் தொடுத்தன் நயந்தனை கேண்மதி
வல்லினும் வல்லேன் ஆயினும் வல்லே
என் அளந்து அறிந்தனை நோக்காது சிறந்த
நின் அளந்து அறிமதி பெரும! என்றும்
வேந்தர் நாணப் பெயர்வேன் சாத்தருந்திப்
பல் பொறிக் கொண்ட ஏந்தெழில் அகலம்
மாண் இழை மகளிர் புல்லுதொறும் புகல
நாண்முரசு இரங்கும் இடனுடை வரைப்பினின்
தாணிழல் வாழ்நர் நன்கலம் மிகுப்ப
வான் அமர் உழந்தநின் தானையும்
சீர்மிகு செல்வமும் ஏத்துகம் பலவே.

மழை வறண்ட காலத்திலும் கங்கை நீர் வற்றாது உயிர்களைக் காக்கும். அதுபோல் எங்களுக்கு அருள்பவன் நீ! பரிசில் பெறக் கடத்ததற்கு அரிய சுரம் கடந்து வந்தோம். வறுமையால் என் துணைவி பெருந்துயர் பட்டு விட்டாள். அவன் வியப்படைய யானை மீது செல்லவும், பெரும் பரிசு நல்கியும் உதவுக. வறுமை பின் நின்று துரத்து உன்னை முன் நின்று காண வந்தேன். என்

அறிவின் ஆற்றலை அளந்தறியாமல் உன் வளத்தையே அளந்து உதவுக. நின் படை வன்மையும், அருட்செல்வமும் நிறைக!

புறம்: 162

இளவெளிமானைப் பெருஞ்சித்திரனார் பாடியது. வெளிமானின் தம்பி இவன். கொடை நல்கும் மனம் இல்லாதவன். இவனிடம் வந்த புலவர், அவன் பரிசில் மறுக்க, அவனைப் பாடியது.

இரவலர் புரவலை நீயும் அல்லை

புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்

இரவலர் உண்மையும் காணினி, இரவலர்க்கு

ஈவோர் உண்மையும் காணினி, நின்னூர்க்

கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த

நெடுநல் யானைஎம் பரிசில்

கடுமான் தோன்றல்! செல்வல் யானே!

விரை குதிரைத் தலைவனே! இரவலர்க்கு உதவுபவன் நீ அல்லன். இரப்போர்க்கு உதவுபவர் இல்லாது போய் விடவில்லை. இரவலரும், புரவலரும் என்றும் உண்டெடன அறிவாயாக! உன் ஊரில் காவல் மரம் வருந்த நான் கொண்டு வந்து கட்டிய உயர்ந்த யானை இது! என் பரிசில். இனி, யான் போகின்றேன். (காவல் மரத்தில் யானை கட்டுவது அவ்வரசனுக்கு அவமானச் செயலாகும்.)

புறம்: 163

பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடியது. புலவர் பரிசில் பெற்று வந்து, தம் மனையாளிடம் கூறியது.

நின்னயந்து உறைநர்க்கும்அ நீ நயந்து உறைநர்க்கும்

பன்மாண் கற்பின் கிளைமுத லோர்க்கும்

கடும்பின் கடும்பசி தீர யாழநின்

நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்

இன்னோர் என்னாது என்னொடும் சூழாது

வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்

எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே!

பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்

திருந்துவேல் குமணன் நல்கிய வளனே!

என் மனைக்கு உரியவளே! உன்னை விரும்பி வாழ்பவர்க்கும், நீ விருப்பத்தோடு வாழ்கின்ற அக்கம் பக்கத்து வீட்டாருக்கும், உன் உறவினர்களுக்கும் நம் பசி நீங்க நீண்ட காலம் குறி எதிர்ப்புக் கொடுத்தோர்க்கும், மற்றும் இன்னார் என்று கருதாது, என்னோடு கேளாது, வளமுடன் வாழலாம் என்றும் நினையாது, முதிரமலைத் தலைவனான குமணன் நல்கிய இப்பெருஞ் செல்வத்தை நீயும் வழங்குவாயாக!

புறம்: 207

இள வெளிமான் சிறிது பரிசிலே தரக் கொள்ளாது பெருஞ்சித்திரனார் பாடியது.

எழுஇனி நெஞ்சம் செல்கம்! யாரோ

பருகு அன்ன வேட்கை இல்வழி

அருகில் கண்டும் அறியார் போல

அகன்நக வாரா முகன் அழி பரிசில்

தாளி லாளர் வேளார் அல்லர்

வருகஎன வேண்டும் வரிசை யோர்க்கே

பெரிதே உலகம் பேணுநர் பலரே

மீரி முன்பின் ஆளி போல

உள்ளம் உள்ளவிந்து அடங்காது வெள்ளென

நோவா தோன்வயிற் றிரங்கி

வாயா வன்கனிக்கு உலமரு வோரே!

எம் நெஞ்சமே! எழுந்திரு. நாம் போவோம். விருப்பமுடன் தராத பரிசிலை யாம் ஏற்க மாட்டோம். எம்மை எதிர்கொண்டு வரவேற்போர் உலகில் பலர். உன் மனம் கனியாத பழம் போன்றது. உன் செயலைக் கண்டு எம் உள்ளம் அமைதியுடன் கிடவாது.

புறம் : 208

அதிகமான் நெடுமான் அஞ்சியைப் பெருஞ்சித்திரனார் பாடியது. இவன் புலவரைக் காணாது பரிசில் மட்டும் கொடுத்ததால், அதனை ஏற்றுக் கொள்ளாது பாடியது:

குன்றும் மலையும் பலபின் ஒழிய

வந்தனென் பரிசில் கொண்டனன் செலற்கென

நின்ற என் நயந்து அருளி ஈதுகொண்டு

ஈங்கனம் செல்க தான்என என்னை

யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்

காணாது ஈத்த இப்பொருட்கு யானோர்

வாணிகப் பரிசிலன் அல்லேன் பேணித்

தினையனைத் தாயினும் இனிதவர்

துணையளவு அறிந்து நல்கினர் விடினே!

பரிசில் கருதிக் குன்றும் மலையும் கடந்து வந்தோம். என்னை அன்புடன் உபசரித்து இப்பொருளைக் கொள்க என்று கூறினானா? என் திறனை எவ்வாறு அறிந்தான் இவன்? என்னைக் காணாது கொடுத்த பொருள் இது! இதனைக் கொண்டு செல்ல, யான் வாணிகப் பரிசிலன் அல்லேன். எம் தகுதியறிந்து தரும் பரிசில் தினையளவேனும் அதுவே எமக்கு இனிது. இவ்வாறு தருவது அன்று!

புறம்: 237

வெளிமானைக் காணச் சென்ற புலவர்க்கு, அவன் இறந்து விடவே, அவன் தம்பி இளவெளிமான் சிறிது பொருள் கொடுத்தனன். அப்போது பெருஞ்சித்திரனார் பாடியது:

நீடுவாழ் கென்றியான் நெடுங்கடை குறுகிப்

பாடி நின்ற பசிநாட் கண்ணே.....

கோடைக் காலத்து கொழுநிழல் ஆகிப்

பொய்த்தல் அறியா உரவோன் செவிமுதல்

வித்திய பனுவல் விளைந்தன்று நன்றுஎன

நச்சி இருந்த நசைபழுது ஆக

அட்ட குழிசி அழல் பாய்ந்தாங்கு

அளியர் தாமே ஆர்க என்னா

அறனில் கூற்றம் திறனின்று துணிய

ஊழின் உருப்ப எருக்கிய மகளிர்

வாழைப் பூவின வளைமுறி சிதற

முதுவாய் ஒக்கல் பரிசிலர் இரங்கக்

கள்ளி போகிய களரியம் பறந்தலை

வெள்வேல் விடலை சென்றுமாய்ந்தனனே!

ஆங்கது நோயின் றாக ஓங்குவரைப்

புலிபார்த்து ஒற்றிய களிற்று இரை பிழைப்பின்

எலிபார்த்து ஒற்றாது ஆகும் மலிதிரைக்

கடல்மண்டு புனலின் இழுமெனச் சென்று

நனியுடைப் பரிசில் தருகம்

எழுமதி நெஞ்சே! துணிபுமுந் துறுத்தே!

உன்னை வாழ்த்தி வந்த காலம் பொருத்தமற்றது. உன் செவியில் விதைத்த பாடல் பரிசிலாக விளையும் என்று விரும்பி இருந்த விருப்பமும் கெட்டது. சோற்றுப் பானைக்குள் கைவிட்ட போது தீ எழுந்தது போல வெளிமானைக் கொண்டு போயிற்று. புலிதனக்கு இரையாகக் களிற்றை வீழ்த்தப் பார்த்து, அது தப்பிய போது எலிமீது மாயாது! கூற்றம் நோயின்றி வாழ்வதாகுக. நெஞ்சமே! துணிவினை முன் கொண்டு எழுக!

புறம்: 238

வெளிமான் இறந்துபட, அவனை ஆர்வமுடன் காணச் சென்ற புலவர் பெருஞ்சித்திரனார் உள்ளம் நொந்து பாடிய பாடல்.

கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த

செவிசெஞ் சேவலும் பொகுவிலும் வெருவா...

வாய்வன் காக்கையும் கூகையும் கூடிப்

பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும்

காடுமுன் னினனே கட்கா முறுநன்

தொடிகழி மகளிரின் தொல்கவின் வாடிப்

பாடுநர் கடும்பும் பையென் றனவே
தோடுகொள் முரசம் கிழிந்தன கண்ணே
ஆளில், வரைபோல் யானையும் மருப்பிழந்தனவே
வெந்திறல் கூற்றம் பெரும்பேது உறுப்ப
எந்தை ஆகுதல் அதற்படல் அறியேன்
அந்தோ அளியேன் வந்தனென் மன்ற
என்னா குவர்கொல்என் துன்னி யோரே!
மாரி இரவின் மரங்கவிழ் பொழுதின்
ஆரஞர் உற்ற நெஞ்சமொடு ஓராங்குக்
கண்ணில் ஊமன் கடற்பட் டாங்கு
வரையளந்து அறியாத் திரையரு நீத்தத்து
அவல மறுசுழி மறுகலின்
தவலே நன்றுமன் தகுதியும் அதுவே

வெளிமானைத் தாழியுள் இட்டுப் புறங்காட்டை நோக்கிக் கொண்டு சென்றனர். அவன் மகளிர் போலப் பாணர் சுற்றமும் வருந்தின. கூற்றம் கொடுந்துயர் செய்யும் என்பதை அறியேன். யான் உறுதியாக நம்பி வந்தேன். என் சுற்றம் எத்தகைய துயர் படுமோ?

மழை இரவில் கடலிலே புயலில் சிக்கி மரக்கலம் கவிழக் கண்ணும் பேச்சும் அற்றவன். (ஊமன்) கரை சேரவும் வழி தெரியாது, கூச்சலிடவும் இடமின்றி அமிழ்ந்து சாவது போலத் துன்பத்திலே சுழன்று வாடுவதினும் சாதலே நன்று! அதுதான் எம் போன்றோர்க்குத் தகுதியும் ஆகும்.

33. பொருந்தில் இளங்கீரனார்

புறம்: 53

கிடங்கில், விளங்கில் என்பது போலப் பொருந்தில் என்பதும் ஓர் ஊர், தாராபுரத்திற்குச் செல்லும் வழியில் கீரனூர் என்றஊர் இன்னும் உள்ளது. கீரன் என்பது குலப் பெயர் அல்லது குடிப் பெயர். கீரன் கூட்டம் அல்லது கீரை கூட்டம் என்று இக் கூட்டத்தாரை இக்கால் அழைப்பர். பொருந்தில் என்பது தாராபுரத்திற்கு அண்மையில் இருக்கும் ஓரூர்.

முதிர்வாய் இப்பி முத்த வார்மணல்
கதிர்விடு மணியின் கண்பொரு மாடத்து
இலங்குவளை மகளிர் தெற்றி ஆடும்
விளங்குசீர் விளங்கில் விழுமம் கொன்ற
களங்கொள் யானைக் கடுமான் பொறைய!
விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்
மம்மர் நெஞ்சத்து எம்மனோர்க்கு ஒருதலை
கைம்முற் றலநின் புகழே என்றும்
ஒளியோர் பிறந்த இம் மலர்தலை உலகத்து
வாழேம் என்றலும் அரிதே, தாழாது
செறுத்த செய்யுள் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுளன் ஆயின் நன்றுமன் என்றநின்
ஆடுகொள் வரிசைக்கு ஒப்பப்
பாடுவம் மன்னால் பகைவரைக் கடப்பே!

சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறையின் விளங்கில் நகரத்தைப் பகைவர் சூழ்ந்தனர். இது கடலோரப் பகுதி. பெண்கள் மாடத்தின் மேல் தெற்றி ஆடிக் கொண்டிருப்பர். நீ வந்த பகைவரை வெற்றி கொண்டாய். உன்புகழை விரித்துச் சொல்ல முடியவில்லை. கல்வியிற் சிறந்தோர் பிறந்த இந்நாட்டில் நாமும் வாழோம் என்று போய் விடவும் முடியாது. பல் பொருள் அடக்கிய செய்யுளை விரைந்து பாடும் செந்நாவும், மிக்க அறிவும் உடைய கபிலன் இன்றிருந்தால் நல்லது' என்று கூறுகிறாய். அவரில்லாததால் நின் வெற்றியை இயன்றவரை நான் பாடுவேன். கேட்பாயாக!

34. பொன்முடியார்

புறம்: 299

பொன்முடியார் என்னும் பெண்பாற் புலவர் வாகைப் பறந்தலை என்னும் இன்றைய விசயமங்கலத்தின் கீழ் பால் மூன்று கல் தொலைவில் உள்ளதோர் ஊர். இவ்வூரினர் பொன்முடியார். இயற்பெயர் மறைந்து ஊர்ப் பெயரான் அழைக்கப்படும் புலவருள் இவரும் ஒருவர். இதே பொன்முடி பெயருடைய, சேலம் மாவட்டத்தில் புகைவண்டிச் சந்திப்பு உடைய ஊர் ஒன்றும் உள்ளது. இவன் அதிகமான் நெடுமான் அஞ்சி காலத்தவர். இவன் காலமே சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை காலமும் ஆகும். முடி பொன் போன்றிருந்ததால் அப்பெயர் பெற்றார் என்றும் கூறுவர் உளர்.

நொச்சித் திணை; குதிரை மறத்துறை

பருத்தி வேலிச் சீறூர் மன்னன்

உழுத்ததர் உண்ட ஓய்நடைப் புரவி

கடல்மண்டு தோணியின் படைமுகம் போழ

நெய்ம்மிதி அருந்திய கொய்சுவல் எருத்தின்

தண்ணடை மன்னர் தாருடைப் புரவி

அணங்குடை முருகன் கோட்டத்துக்

கலந்தொடா மகளிரின் இகழ்ந்துநின் றவ்வே.

பருத்தி வேலி சூழ் மன்னனின் குதிரையானது, கடலைக் கிழித்துச் செல்லும் தோணி போலப் பகைவர் படைமுகத்தைக் கிழித்துச் செல்ல, நெய்யிட்ட உணவை உண்ட பகை மன்னர் குதிரைகள் எல்லாம், முருகன் கோயிலிலே தூய்மையற்றார் கலந்தொட அஞ்சி ஒதுங்கி நிற்றலைப் போல, ஒதுங்கி நின்றன.

பொன்முடியார்

புறம்: 310

போரில் புண்பட்டுக் கிடந்த தன் மகனின் ஆண்மையை வியந்து ஒரு மறத்தாய் கூறுவது போல அமைந்த பாடல்.

தும்பைத் திணை; நூலிலாட்டுத் துறை

பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்

செறாஅது ஒச்சிய சிறுகோல் அஞ்சியொடு

உயவொடு வருந்தும் மனனே! இனியே

புகர்நிறங் கொண்ட களிறட்டு ஆனான்

முன்னாள் வீழ்ந்த உரவோர் மகனே!

உன்னிலன் என்னும் புண்ணொன்று அம்பு

மான்உளை அன்ன குடுமித்

தோல்மிசைக் கிடந்த புல்லண லோனே!

முன்னர் பெரும்போர் செய்து களத்திலே வீழ்ந்து பட்ட ஆண்மையாளனின் மகனன்றோ இவன்! குழந்தைப் பருவத்திலே பாலுண்ணாது முரணச் சினந்தவனைப் போலச் சிறு கோலை எடுப்பினும் அஞ்சி உண்ணும் இயல்பினன் தான்! ஆனால் இன்றோ களிறுகளைக் கொன்றும் அமையாது, போரில் மார்பகத்தில் அம்பு பட்டுக் கேடகத்தின் மேல் வீழ்ந்து கிடந்தவனை எடுத்து, 'ஐயோ! மார்பிலே அம்பு தைத்துள்ளதே?' என்று வருந்தினேன். அவனோ 'அதை யான் அறியேனே' என்றான். உரவோன் மகன் அல்லனோ அவன்!

பொன்முடியார்

புறம்: 312

உலக வாழ்வில் பலரின் கடமைகளைப் பற்றிக் கூறிய பாடல்.

வாகைத் திணை; மூதின் முல்லைத் துறை

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே!
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே!
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே!
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே!
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!

என் (தாய்) முதன்மையான கடமை, சிறந்த முறையில் பெற்று வளர்த்து வெளியே அனுப்புதல். தந்தையின் கடமை அவனைச் சான்றோன் ஆக்குதல், வேல் வடித்துத் தருதல் கொல்லனின் கடமை; நல்ல முறையில் அவனுக்குப் போர்ப் பயிற்சியும், பிறவும் அளித்தல் வேந்தனின் கடமை. இவ்வளவு கடமையும் பிறர் செய்ய, வளர்ந்து காளையான அவன், ஒளிர்கின்ற வாளேந்திப் போர்க்களத்திலே சுழன்று, அஞ்சாது நின்று வென்று, பகை மன்னர்

களிற்றினையும் கொன்று மீண்டு வெற்றியுடன் வருதல் அவன் கடமையாகும்!

35. மோசி கீரனார்

புறம்: 50

மோசி கீரனார், மோசு கீரனார் என்றும் குறிப்பிடுகின்றார்கள். இவ்வூர் (மோசியூர்) மேட்டுப் பாளையத்திற்குப் பக்கத்தில் உள்ளதாகும். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, அசதியால் முரசுக் கட்டிலில் துயின்ற இப் புலவரைக் கவரி வீசி நின்றான். இந்த இரும்பொறையே பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்துப் பாடிய (இவனைப் பற்றி) அரிசில் கிழார்க்கு நூறாயிரம் காணம் பரிசில் நல்கினான்.

இச் சேரன் ஆண்ட தலைநகர் அன்னூருக்கும் புளியம் பட்டிக்கும் இடையில் உள்ள இரும்பொறைத் தலைநகரே யாகும். மோசி கீரனாரும் அதன் மேற்கில் இருந்த ஊரினைச் சார்ந்தவர். கீரன் மரபு, கொங்கு வேளிரில் ஒன்று.

கொண்கானம் என்பது இன்றைய மைசூர் பகுதி. கொண்கானம் இன்றைய தாளவாடியை அடுத்துள்ள பகுதி. அப்பகுதித் தலைவன் கொண்கானக் கிழான். அவரையும் புலவர் மோசிகீரனார் பாடியுள்ளார். இரும்பொறை ஊருக்கு வடபால் பலமலை அடுக்கம் கடந்துள்ளதே கொண்கானம். மேற்கு மலைத் (நீலமலை) தொடர்ச்சிக்கு அப்பால் ஆண்டவர் மட்டும் சேரர் அல்லர். கீழ்ப்பாலும் கொங்கு நாடு சேரர் ஆட்சியில் இருந்த போது ஆண்டிருக்கிறார்கள்.

பாடாண் திணை; இயன்மொழித் துறை

மாசற விசித்த வார்புறு வள்பின்

மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை

ஒலிநெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும்நற் றமிழ்முழுது அறிதல்
அதனொடும் அமையாது அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடம் கமழ
இவண்இசை உடையோர்க்கு அல்லது அவணது
உயர்நிலை உலகத் துறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசில்நீ ஈங்கிது செயலே!

வீரமுரசம் கட்டிலினின்றும் நீராடக் கொண்டு செல்லப்பட்டிருந்தது. அவ்வேளை எண்ணெய் நுரை முகந்தாற் போல மெல்லிய பூவிரித்துக் கிடந்த இம்முரசு கட்டிலில் உண்மை அறியாது உறங்கிக் கிடந்தேன். நீ தமிழ் அறிந்தமையால் என்னை இருகூறு ஆக்காது உன் வீசிய வாளை மாற்றியதும் ஓரளவு பொருத்தமானதே. அத்துடன் அமையாது, நின் வலிய முழவுத் தோளால் சாமரங் கொண்டும் குளிர வீசினாய். வெற்றி பொருந்தும் தலைவனே! 'இங்கே புகழ் உடையவர்க்கு அல்லாது உயர்நிலை உலகத்து

வாழ்வு கிடையாது' என்ற உண்மையை அறிந்ததாலோ, நீ இவ்வாறு இங்கு செய்தாய்!

மோசி கீரனார்

புறம்: 154

கொண்கானங் கிழானை மோசி கீரனார் பாடியது. கொண்கானம் - கொங்கணம் - கொங்கணி என்னும் மைசூர்ப் பகுதியும் பண்டைய தமிழ்நாடே. தமிழ் வேந்தர்கள் ஆண்டிருந்தனர். கொண்கானக் கிழான் அவர்களுள் ஒருவன். அங்கு சென்ற மோசி கீரனார் அவனைப் பாடியது.

திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்

அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்

சின்னீர் வினவுவர் மாந்தர் அதுபோல்

அரசர் உழைய ராகவும், புரைதபு

வள்ளியோர்ப் படர்குவர் புலவர் அதனால்

யானும், பெற்றது ஊதியம் பேறியா தென்னேன்;

உற்றனென் ஆதலின் உள்ளி

வந் தனனே!

ஈயென இரத்தலோம் அரிதே, நீயது

நல்கினும் நல்கா யாயினும் வெல்போர்

எறிபடைக் கோடா ஆண்மை அறுவைத்

தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத்

தண்பல இழிதரும் அருவிநின்

கொண்பெருங் கானம் பாடல் எனக்கு எளிதே!

கடற்கரை செல்பவரும் வேட்கையுற்றால் அறிந்தவரைக் கண்டால் சிறிதே உண்ணு நீர் கேட்பர். அதுபோல மூவேந்தரிடத்திருந்தேனும் புலவர்கள் வள்ளல்களை நாடிச் செல்வது வழக்கம். யானோ வறுமையாளன். பெற்றது சிறிதேனும் இகழும் வழக்கம் இல்லாதவன். நின்னை எண்ணி வந்தேன். இரத்தல் அரிது! அதுகண்டு நீ பரிசில் தரினும் தராதிருப்பினும் நின் ஆண்மையையும், நின் கொண்கான நாட்டையும் பாடுதல் எனக்கு எளிதே.

மோசி கீரனார்

புறம்: 155

மோசி கீரனார், கொண்கானக் கிழானைப் பாடியது.

பாடாண் திணை; பாணாற்றுத் துறை

வணர் கோட்டுச் சீறியாழ் வாடுபுடைத் தழீஇ

உணர்வோர் யார்என் இடும்பை தீர்க்கெனக்

கிளக்கும் பாண! கேளினி, நயத்தின்

பாழ்ஊர் நெருஞ்சிப் பசலை வான்பூ

ஏர்தரு, சுடரின் எதிர்கொண்டு ஆஅங்கு

இலம்படு புலவர் மண்டை விளங்குபுகழ்க்

கொண்பெருங் கானத்துக் கிழவன்

தண்தார் அகலம் நோக்கின மலர்ந்தே.

'என்துன்பம் அறிந்து என் துயர் தீர்ப்பவர் யாவரோ?' எனச் சிறிய யாழைக் கொண்டு நயமுடன் கேட்கும் பாணனே! பாழூரின் கண் உள்ளான் கொண் கானன் அவன் நெஞ்சில் பொன் நெருஞ்சிப் பூமாலை ஒளி வீசுவது! வறுமையடைந்த யாழ்ப் புலவரின் உண்கலம் நிரப்புபவன் அவனே! அவனைச் சென்று காண்பாயாக!

மோசி கீரனார்

புறம்: 156

மோசி கீரனார், கொண்கானங் கிழானைப் பாடியது.

பாடாண் திணை; இயன்மொழித் துறை

ஒன்றுநன் குடைய பிறர்குன்றம் என்றும்

இரண்டுநன் குடைத்தே கொண்பெருங் கானம்

நச்சிச் சென்ற இரவலர் சுட்டித்

தொடுத்துணக் கிடப்பினும் கிடக்கும், அஃதான்று

நிறையருந் தானை வேந்தரைத்

திறைகொண்டு பெயர்க்குஞ் செம்மலும் உடைத்தே

வண்மையில், வலிவில் ஒரு சிறப்புடையதே பிறர் மலைகள். விரும்பிச் செல்லும் இரவலர் எமது எமது என்று கூறிட்டு உண்ண, வளம் நிறைந்த உணவு மிகுந்து கிடக்கும். அத்துடன் பகை வேந்தரை வென்று திறையும் கொணரும். இவ்வாறு இரு சிறப்பும் உடையது கொண்கானப் பெருமலை.

மோசி கீரனார்

புறம்: 186

பொதுவியல் திணை; பொருண்மொழிக் காஞ்சித்துறை

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

அதனால், யானுயிர் என்ப தறிகை

வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே!

உலக உயிர்களைக் காப்பது நெல்லும் நீரும் அன்று. பரந்த இவ்வுலகம் வேந்தின் முறையான காவற் சிறப்பாலேயே நிலைபெறுவதால், அவனே உண்மையாக உலகுக்கு உயிர் ஆவான். அதனால், வேலால் மிக்க படையுடைய வேந்தனுக்குத் தானே உலக நல்வாழ்வின் உயிர்ப்பாக விளங்க வேண்டுபவன் என உணர்ந்து நடப்பதே கடமையாகும்.

36. வீரை வெளியனார்

புறம் : 320

தர்மபுரி மாவட்டத்தில் அரூர்க்கு அருகில் விரையனூர் என்ற ஓர் உள்ளது. வெளியனார் அவ்வூரைச் சார்ந்தவர் என்பதோடு கொங்குக் கூட்ட மரபில் ஒன்றான விழிய குலத்தைச் சார்ந்தவர் என்பர். இவரை வேறு பகுதியினர் என்று கூறுவோரும் உண்டு.

வாகைத் திணை; வல்லாண் முல்லைத் துறை
முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப்
பந்தர் வேண்டாப் பலாத்தூங்கு நீழல்
கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழீஇப் பிறிதோர்
தீர்தொழில் தனிக்கலை திளைத்துவிளை யாட
இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்
கணவன் எழுதலும் அஞ்சிக் கலையே
பிணைவயின் தீர்தலும் அஞ்சி யாவதும்
இல்வழங் காமையின் கல்லென ஒலித்து
மான்அதள் பெய்த உணங்குதினை வல்சி
கானக் கோழியொடு இதல்கவர்ந் துண்டென
ஆர நெருப்பின் ஆரல் நாறத்
தடிவுஆர்ந் திட்ட முழுவள் ளூரம்
இரும்பே ரொக்கலொடு ஒருங்கினி தருந்தித்
தங்கினை சென்மோ பாண! தங்காது
வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க்கு என்றும்

அருகாது ஈயும் வண்மை

உரைசார் நெடுந்தகை ஓம்பும் ஊரே!

முற்றத்தில் பலா மரம்; அதன் மேல் முல்லைக் கொடியும், முசுண்டைக் கொடியும் அடர்ந்து படர்ந்துள்ளன. வேறு பந்தல் இல்லாது அதுவே முற்றத்தின் பந்தலாக நிழல் செய்ய, அந்நிழலில் யானை வேட்டையாடி வரும் வேட்டுவனான அவ்வீட்டின் தலைவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்.

பகல் வேளையிலும் தன் பிணை மேல் காதல் மிகுந்து அதே நினைவாக வருந்தும் கலைமான், அதனோடுங் கூடி மகிழ்ந்து திளைத்துக் கொண்டிருந்தது. அந் நிழலின் ஒரு புறத்தே, தன் கணவனை அழைக்க வந்த மனைவி, அது கண்டு, கணவன் அவற்றின் விளையாட்டால் எழுந்து விடுவானோ என அஞ்சி, மானின் சேர்க்கை கலைந்து விடக் கூடாதே எனவும் அஞ்சி, செய்வதறியாது, தான் ஓசை எழ நடத்தலும் செய்யாது, ஒரு புறமாக அமைந்து நின்றனள். அத்தகைய அருளுடைய இல்லத் தலைவியாதலின், பாணனே! நீ வருந்தாது அவன் வீடு செல்க!

சென்றால், மான் தோலின் மேல் பரப்பி வைத்திருக்கும் தினை அரிசியைக் கானக் கோழிகளும், இதலும் ஆரவாரித்துத் தின்பது போல, நீயும் உன் சுற்றத்துடன் சுட்ட இறைச்சியும், ஆரல் மீனும் ஒருங்கே கூடியிருந்து தின்று மகிழலாம். அங்கேயே தங்கிச் செல்வாயாக! மேலும் அவன் பரிசிலர்க்குப் பெருஞ் செல்வத்தையும் கொடுப்போன். அவன் ஆட்சி செய்யும் ஊர் அது! செல்க! நலம் பெறுவாயாக!

மற்றும்

இன்னும் பல புலவர்கள் கொங்குப் பகுதியைச் சேர்ந்தவர் என்று கூறுவார் உண்டு. அவர்களுள் குறுங் கோழியூர்க் கிழார், கோவூர் கிழார், ஐயூர்க் கிழார், வன்பரணர் போன்றோர் அடங்குவர். கிழார் என்பவர் வேளாளர். வேளாண் குடியினர். புலமைச் செல்வத்தைப் பெற்றதால் இவர்கள் புரவலர்களை, வள்ளல்களைப் புகழ்ந்தும், பாராட்டியும், வாழ்த்தியும் அறங்கூறியும் வாழ்ந்தவராவர்.



சங்க காலக் கொங்கு நாடு

புலவர் டாக்டர்.
இரா. வடிவேலன்

சங்க காலம் தொட்டு
கொங்கு நாட்டின் வரலாற்றை
விளக்கும் அற்புதமான நூல்